உ

ஸ்ரீ ராமஜெயம்.



சங்கிரக இராமாயணம்

ஸ்ரீ அ. நாராயணசாமி அய்யர்,
பிள்ளையார்பட்டி ஸ்ரீகற்பக வினாயகர் தேவஸ்தானம்
முன்னாள் மணியம் அவர்களால்
1905ல் முதலில் பிரசுரிக்கப்பெற்றது.

★

ஸ்ரீ அ. ராமச்சந்திர அய்யர்,
பிள்ளையார்பட்டி ஸ்ரீகற்பக வினாயகர் தேவஸ்தானம்
முன்னாள் மணியம் அவர்களால் 1971ல்
மறுபதிப்பு செய்யப்பெற்றது.

★

...ண்டர்ஸ், மதுரை-1. போன்: 30883.

உ

ஸ்ரீ ராமஜெயம்.



சங்கிரக இராமாயணம்

ஸ்ரீ அ. நாராயணசாமி அய்யர்,
பிள்ளையார்பட்டி ஸ்ரீகற்பக வினாயகர் தேவஸ்தானம்
முன்னாள் மணியம் அவர்களால்
1905ல் முதலில் பிரசுரிக்கப்பெற்றது.

ஸ்ரீ அ. ராமச்சந்திர அய்யர்,
பிள்ளையார்பட்டி ஸ்ரீகற்பக வினாயகர் தேவஸ்தானம்
முன்னாள் மணியம் அவர்களால் **1971**ல்
மறுபதிப்பு செய்யப்பெற்றது.

★

K. S. பிரிண்டர்ஸ், மதுரை-1. போன்: 30883.



உ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ சங்கிரக இராமாயணத்தின் இரண்டாம் பதிப்பு

முன்னுரை

★

பரமாத்மா அழிவற்ற வஸ்து. அதினின்று பிறந்த ஜீவாத்மாவும் அழிவற்றதுதான். ஆனால் பிரிந்த காரணத்தினால், பூமியிற் பிறந்து செய்யும் கர்மாவிற்கு ஈடாக வண்டிச் சக்கரம் போலச் சுற்றிச் சுற்றி, திரும்பத் திரும்பப் பிறப்பெடுத்து கர்ம பலன்களை அனுபவிக்கும்படி ஏற்படுகிறது. ஜீவாத்மா பரமாத்மாவிலிருந்து பிரிந்து வந்தாலும், அது பரமாத்மாவை ஆண்டவனாகக் கொண்டு அடிமையாகவே இருந்து வருகிறது நல்வினையின் பயனாகத் திரும்பவும், ஜீவன் பரமாத்மாவை அடைய நேரும்போது அதுவே ஜீவப்ரும்ப ஐக்கியமாகிறது. ஆனால் உலகில் ஜனித்த ஜீவன் தன் கர்மத்திற்குத் தக்கபடி சரீரம் எடுத்து உலக வாசனைக் கலப்பால், அதிலிருந்து கரையேறி, ஆண்டவனை அடைய வழி கிடைக்காது, புனரபி மரணம், புனரபி ஜனனம் என்ற நிலையில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பதால், அதைக் கரையேற்ற ஆண்டவன் கிருபை கொண்டு தன்னிடத்திலிருந்து கீழிறங்கி வந்து ஜீவனைக் காப்பாற்றுகிறார். இதுவே அவதாரம் என்பது.

இப்படி ஆண்டவன் எடுத்த அவதாரங்களில் ஸ்ரீராமாவதாரமும், ஸ்ரீ கிருஷ்ணாவதாரமும் விசேஷமானது. அந்த இரண்டிலும் கூட இராமாவதாரம் மிகவும் விசேஷமானது. ஏனெனில் அந்த அவதாரத்தில் சுத்தப்பிரும்மான பரம்பொருள் உலகில் தோன்றி மனிதன் தர்ம மார்க்கத்தில் எப்படி நடக்க வேண்டும், தர்மத்தை எப்படி நடத்தவேண்டும் என்பதை நன்மகனாய், உத்தம கணவனாய், அன்புச் சகோதரனாய்,

உற்ற நண்பனுய், அதர்மத்தை விலக்கும் வீரமகனுய், ஏழை பங்காளனுய் இருந்து நடத்திக் காட்டி தர்மத்தை நிலைநாட்டினுர். எனவே அந்த உத்தமனுகிய சக்ரவர்த்தி திருமகனின் சரிதம் மஹாத்மாக்களின் உள்ளங்களைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை. மஹாத்மா ஸ்ரீவால்மீகி மகரிஷியும், கம்பநாட்டாழ்வாரும், ஸ்ரீதுளசிதாசர் முதலிய பலரும் ஸ்ரீ ராமனுடைய சரிதத்தை விரிவாகவும், விளக்கமாகவும் பாடிவைத்துள்ளார்கள்.

உலகில் பிறந்து சுழலும் நரஜென்மம் கரையேறவேணுமானுல் புத்தர் மகானுடைய சரிதத்தைப் படித்து, அதன் சாரமறிந்து தெளியவேணும். அதற்கு வாய்ப்பில்லாதவர்களுக்கு ரொம்ப சுலபமாக உதவி அவர்களையும் கரையேறச் செய்வது ராமநாமமாகும். மூழ்கிக் கரையேறத் தெரியாமல் தவிக்கும் ஜீவனைக் காக்க கலங்கரை விளக்காகவும், கரையேற்றும் தோணியாகவும் இருந்து உதவுவது இராம நாமமே. இதை சத்குரு ஸ்ரீ தியாகப்பிரும்மம் அவர்கள் தம்முடைய கீர்த்தனங்கள் மூலம் நன்கு விளக்கி இருக்கிருர். தெரிந்தோ, தெரியாமலோ, கடவுள் நாமத்தை ஒரு தரம் சொன்னுலும் போதும். அந்த ஜீவன் பாபத்தினின்று விடுபட்டு பகவானை அடைகிறது என்பதற்கு "அஜாமிளன்" சரிதமே சான்ருகும்.

இவை யாவற்றையும் கருத்திற்கொண்டே எனது பிதா மஹரான நெடுவை அ. நாராயணஸ்வாமி அய்யர் அவர்களும் ஸ்ரீராமநாமத்தை உச்சரித்து நற்கதி அடைந்தார்கள். தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறவேணும் என்ற நல்லெண்ணத்திஞல் அந்த ராமநாமம் பலதடவை வரும்படியாக, இராமாயணத்தைச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் 1100 செய்யுட்களில் ஏழு காண்டங்களையும் பாடிவைத்தார்கள். வால்மீகி முனிவரும், கம்பநாட்டாழ்வாரும், ஸ்ரீதுளசிதாசரும் ஏற்கனவே ராமசரிதத்தை சுலோகமாகவும், கீர்த்தனமாகவும், விருத்தப்பாவாகவும் பாடி அனுபவித்திருக்கிருர்களே, பின் எதற்கு இந்த சங்கிரக இராமாயணம் என்ற சங்கை சிலருக்கு

எழலாம். கங்காநதி பூர்ணப் பிரவாகத்துடன் நமது நாட்டின் ஒரு பக்கம் ஓடி அப்பகுதியைச் செழிக்கவைப்பது உண்மை தான். ஆனால் அதிலிருந்து உண்டான சில கிளை நதிகளும் அந்த கங்கா ஜலத்தை வேறிடங்களுக்கும் எடுத்துச் சென்று அந்தப் பிரதேசங்களையும் செழிக்கச் செய்கிறது. அதனால் கங்கையின் மஹிமைக்கு இழுக்கு இல்லை. மாறாக அதன் பிரபாவம் அது விரஜிக்காத இடங்களுக்கும் பரவுகிறது. அதேபோல்தான் ராமாயண காவியமும், அதன் சார்பு நூல் களும். இது மஹாகவி காளிதாசனின் துணிவான முடிவாகும்.

எனது பிதாமஹர் இறைவன் திருப்பணிக்காக நெடுமரம் என்ற நெடுவை நகரை நீங்கி திருப்பத்தூருக்கும், குன்றக்குடிக் கும் இடையே உள்ள பிள்ளையார்பட்டியில் குடியேறி, ஓய்வு கண்ட நேரத்தில் இராம கதையைப் பாடியுள்ளார். அவர்கள் இராமகதையைப் பாடியது பெரிதல்ல. ஆனால் அதை அச்சிட அவர்கள் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. பண சம்பந் தப்பட்டமட்டில் தன வைசியப் பிரமுகர்கள் பலர் அதனைத் தீர்த்து வைத்தார்கள். ஆனால் அச்சக வசதி இல்லை. மதுரை யில் தான் அச்சகம் இருந்தது. ரயில், கார் போன்ற வசதி இல்லாத காலம். கட்டை வண்டி கூடக் கிடைக்காது. அந்த நிலைமையில் மதுரைக்கும், பிள்ளையார்பட்டிக்கும் இடையே சுமார் 45 மைல் தொலைவை நடந்தே — ஒரு முறையல்ல பல முறை சென்று அங்குள்ள உறவினர்கள் உதவியால் 1905-ம் ஆண்டு நல்ல முறையில் அச்சிட்டு முடித்தார்கள்.

ஷை புத்தகம் எல்லோருக்கும் இலவசமாகவே வழங்கப் பட்டது. அதைப் பாராயணம் செய்தவர்களில் கன்னியர்க்கு நல்ல இடத்தில் மணமும், தம்பதியர்க்கு நல்ல புத்திரப்பேறும், பொதுவாக எல்லோருக்கும் பிராட்டியுடன் கூடிய ஸ்ரீராமச் சந்திரன் அருட்பிரசாதமும் கிட்டியது.

தர்ம சீலர்களான கனவான்களின் திரவிய உதவியாலும், பலஉறவினர்களின் உதவியாலும் மதுரை ஸ்ரீராமகிருஷ்ணய்யர்

அவர்களின் உதவியுடன் அவருக்குரிய K. S. அச்சகத்தில் இந்த இரண்டாம் பதிப்பு நன்முறையில் அச்சிடப்பெற்று உள்ளது. ஸ்ரீ E. A. காளீஸ்வர அய்யர் அவர்களும் இதற்கு உதவியுள்ளார். இந்தக் காவியத்தை நல்ல முறையில் அச்சியற்ற பொருளுதவிய தர்மசீலர்களான பல பிரமுகர்களுக்கும், எனது உறவினர்களுக்கும், சாற்றுக்கவி கொடுத்த வித்வ சிரோன்மணிகளுக்கும் எனது இப்பெரிய வேலையில் ஒத்துழைத்த மற்றய நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இந்த இராமாயணத்தின் இறுதியில் எனது பிதாமஹர் அவர்களுடைய பூர்விக ஸ்தலமான நெடுவையில் இந்நூலாசிரியர் முன்னோர்களால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற வீர ஆஞ்சநேயர் பெயரில், இந்நூலாசிரியர் பாடியுள்ள அனுமார் பதிகத்தையும், எனது சிறிய தகப்பனார் ஸ்ரீகிருஷ்ணய்யர் பாடியுள்ள பிள்ளையார்பட்டி ஸ்ரீகற்பகவிநாயகர் பதிகத்தையும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது.

எல்லோரும் இந்நூலைப் படித்து பலன்பெறும்படி எல்லாம் வல்ல ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியையும், அனுக்கிரக தேவியாகிய சீதாபிராட்டியையும், பக்தசிகாமணியாகிய ஆஞ்சநேயரையும் எல்லா இடையூறுகளையும் நீக்கிக்காக்கும் தெய்வமான கற்பக விநாயகரையும் பிரார்த்திக்கொண்டு என் முன்னுரையை முடித்துக்கொள்கிறேன். அச்சிட உதவிய தருமசீலர்களான கனவான்களின் பெயரையும் இத்துடன் வெளியிட்டிருக்கிறேன்.

அ. ராமச்சந்திர அய்யர்,
(நாவலாசிரியர் பேரம்)
பிள்ளையார்பட்டி தேவஸ்தான
முன்னாள் மணியம்.

உ

ஸ்ரீராமஜெயம்

நன்கொடை கொடுத்தவர்கள்:-

அமருவதி புதூர் வெ. ராம. சோம. கரு. அவர்கள்	201—00
காரைக்குடி வெ. ராம. அவர்கள் பொது வரவு	151—00
காரைக்குடி க. அள. ராம. கரு. அவர்கள்	51—00
காரைக்குடி அ. மெ. அ. பழ. அவர்கள்	101—00
காரைக்குடி அ. மு. க. அவர்கள்	101—00
பி. அழகாபுரி ராம. மு. சோம. அவர்கள்	251—00
காரைக்குடி பசு. ராம. அ. அவர்கள்	101—00
காரைக்குடி சாநா. அ. சொ. அ. அவர்கள்	101—00
கண்டரமாணிக்கம் ராம. அரு. (S. P. M. மெடிக்கல் மார்ட்)	51—00
ஷை லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள்	51—00
காரைக்குடி மெ. செ. ராம. மெ. அவர்கள்	51—00
காரைக்குடி ஆரு. பள. சி. பள. அவர்கள்	51—00
பொள்ளாச்சி நா. மஹாலிங்கம் அவர்கள்	100—00
பொள்ளாச்சி ராம. மு. ராம. கரு. அவர்கள்	21—00
காரைக்குடி கரு சித. அவர்கள்	31—00
செம்பனூர் நா. சுப. கா. அவர்கள்	25—00
கோவை பி நாராயணசாமி அவர்கள்	25—00
திண்டிவனம் S. சந்தானகிருஷ்ணன் செட்டியார் அவர்கள்	50—00

ஸ்ரீ ராமஜெயம்

சிறப்புப்பாயிரம்

மதுரை தமிழ்ச்சங்க வித்வான் சோழவந்தான் மகா-௱-௱-ஸ்ரீ சண்முகம்பிள்ளையவர்களியற்றிய

நேரிசையாசிரியப்பா

சீர்திகழுந்திச் செழுங்கமலத்து
நார்திகழ்மறைதேர் நான்முகற்றந்த
கார்திகழ்மேனிக் கடவுண்மூவுலகுஞ்
சூர்திகழ்செவ்வர்செய் துயரினிற்றீர்ந்து
பேருவகைக்கடல் பெட்பினிற்றிளைப்பத்
தாருலாமார்பத் தசரதன்சேயாய்
பார்மிசைவந்தருள்பழகிற்சீர்சரித
நீர்மிசைச்சூடுநிமலவேணியனு
ரொப்பப்பிறங்குவமையில்படிமைச்
செப்பத்தனித்தவத் தெய்வவான்மீகியுங்
கலைவலார்யாவருங் கல்வியிற்பெரியனென்
றுலைவிலாதேத்து :முயர்புகழ்க்கம்பனும்
வடமொழிதென்மொழிவழங்கியபனுவல்
புடவியிற்புணரியிற் புரைதபப்பரத்தலி
னுண்ணறிவிலருந்திண்ணிதினுணர
வெண்ணியபொருளெலா நண்ணுறத்தொகுத்து
விண்ணுறுபுலவர்போன் மண்ணிறுபுலவருங்
கண்ணுறுசெவியினி லுண்ணநல்லமிழ்தினு
மினியதீஞ்சுவைத்தமிழ்த் தனியணிப்பாவா
னனியுளத்தன்பிற் கனிவுறப்பாடினன்
நீடிசைத்தமிழ்ச்சுவை நாடுறவாய்ந்துய
ரேடைதிரேற்ற பீடுயர்வையையு

மருந்தமிழ்முனிவரன் றிருந்தியகரகத்
திருந்துநல்வளங்கொள் பெருந்தண்பொருநையு
முடுத்தநன்மங்கல மடுத்தசீர்பாண்டி
வடுத்தவிர்கன்னி வளநாட்டதன்கண்
குன்றக்குடிவளர் குறைவிலாவளஞ்சேர்
குன்றக்குடியெனு மின்றமிழ்ப்பொருப்புந்
துன்பீர்வகைச் செம்பிரான்மலையு
மிருதனமாஞ்சூ ழொருதனியாரத்
தரதனமேனை நகரெலாமாக
நடுவுறுமணிபோற் படிமிசைவயங்க
நின்றசீர்குன்ற நெடுவைமாநகர்க்கண்
வென்றசீர்மறையோர் வியன்குலமோங்க
வெண்ணுவெழுதா வியன்மறைமுழுதுண
ரண்ணுசாமி யருந்தவத்துதித்தோன்
சீரார்புல மையிற்சிறந்த
நாராயணபூ சுரநாயகனே

மதுரை நேடிவ் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ

சுப்பராம ஐயரவர்கள் இயற்றியது.

கோதண்டங்கையிலேந்திக் கொடுந்தொழிலரக்கரென்னும்
பாதகர்தம்மைக்கொன்று பிருவரலொழிக்கவந்த
சீதரன்கதையைக்கம்பன் செப்பினன்விரிவாய்க்கற்றோ
ரோதுதலன்றிமற்றோ ருணர்ந்திடவரிதென்றெண்ணி
அந்தணர்குலத்தில்வந்தே யருங்கலைமுழுதுங்கற்ற
சிந்தையிற்றூயநாரா யணனென்னுஞ்செம்மல்யாரும்
விந்தையாய்க்கற்கும்வண்ணம் விருத்தமாயிரத்து நூறாய்த்
தந்தனனதற்குச்செய்யத் தகுங்கைமாறுளதோவம்மா.

மேற்படியார் மாணுக்கரும் நூலாசிரியர் மருமகனும் மதுரை ரோமன்காதோலிக் ஸ்கூல் தலைமையுபாத்தியாயருமான

எம். கோவிந்தசாமி ஐயராலியற்றப்பட்ட

நிலமண்டிலவாசிரியப்பா.

மங்கலமாகக் கங்கையுமதியுங்
கொங்கவிழ்கொன்றை தங்கியசடையுந்
தொண்டர்தங்கவலை தொலைத்திடுங்குறியாய்க்
கண்டமததிலே கறைதனைக்கொண்ட
முக்கண்மூர்த்தி முண்டகத்தானைச்
சிக்கெனச்சிரத்திற் சேர்த்திடச்சிறிது
தண்டமிழ்ச்சொல்லால் விண்டிவருளும்
வான்மீகிமுனிவர் வழுத்தியகதையைத்
தேன்மீதொழுகுந் திதிப்புறுந்தமிழிற்
கல்வியிற்பெரிய கம்பநாட்டாழ்வார்
சொல்வலிமிகவே தொகுத்துவிரிவா
யருந்தமிழ்ப்புலவரும் வருந்தியேயறியச்
செப்பினரதனைச் சிற்றறிவினரு
மொப்புடன்கூடி யூக்கமாயுணர
பாருட்சிறந்த பரதமாகண்ட
மாருறுநாட்டி லருமையதான
மாண்புறும்வழுதிய ராண்மையோடாண்ட
சேண்புரந்தானுஞ் சிறப்பலவென்னச்
சுந்தரத்தோடுஞ் செந்திருவசிக்கும்
பண்டையதான பாண்டியந்தோகைக்
கண்டையநகரெலா மன்னியவுருப்பா
மதிமுகமென்னப் பதிவுறுமதுரை
தனக்கொருதிலக மெனக்கவின்விளங்க
நின்றசீர்குன்று நெடுவைமாநகர்க்கண்
ணென்றியராகி யுயர்தவம்புரிந்து
மேம்படவாழும் வேதியர்தம்முள்
தேம்படுமணிபோற் சிறப்பதுகொண்ட

வண்ணுசாமி யண்ணலென் றுரைக்கும்
வள்ளலின் றவத்து மகவாய்வந்தோன்
றெள்ளமுதனைய திதிப்புறுந்தமிழிற்
பன்னுதற்கரிய பதப்பொருடொகுத்துக்
கன்னலின்சுவையுங் கடையெனவிளங்க
பண்ணிற்சிறந்த பலபலகவிக
ளெண்ணரும்பொழுதி லியம்பிடவல்ல
நாராயணப்பேர் நான்மறையாளன்
பாராயணமாய்ப் பயன்படுமாறும்
படிமிசையுள்ளார் பலருமெளிதாய்க்
கடினமேயின்றிக் கணத்தினிலுணரவுங்
கற்றவருடனே மற்றையரெவருந்
தெற்றெனவுணரத் தெள்ளியதாகவுஞ்
சங்கிரகமாக சங்கதிதொகுத்து
சங்கிரகராமாயணப்பேர்சாற்றி
மாதவமுனியும் மகிலவாய்நின்றிட
வாதிசேடனு நாணினுகை
மாதுவாணியு மறைவாயமர்ந்திட
பதினொருநூறுஞ் சந்தம்பலவாய்
மதிகடலமுதாய் வழங்கினனே.

திருநெல்வேலி ஜில்லா சேற்றூர் ஜமீன் சமஸ்தான வித்வான்
மகா-ள-ள-ஸ்ரீ இராமசாமிக்கவிராயரவர்களியற்றியது.

புந்திமகிழ்க்கம்பனுரை யிராமன்கதை
பொருட்சுவைசொற்சுவையறியப் புகுந்தாலந்நூ
லிந்திய லுங்கற்றவருக்கா மெனச்சொல்லாமல்
யாவருக்கும்வெளிப்படச் சுருக்கியறைந்தான்மேன்மை
தந்தையுடன் புதல்வ ரிருவருமேயண்ணு
சாமியையரென்ற பேர்தரிக்கபெற்றோ
னந்தமிகுநெடுவை நகரத்திநாரா
யணசாமியென்றுரை நாவரசரேறே.

மேற்படியாரவர்கள் குமாரரும் மதுரைத் தமிழ்ச்சங்க
வித்துவானுமான மகா-ா-ா ஸ்ரீ

எம். ஆர். கந்தசாமிக்கவிராயரவர்களியற்றியது.

*கடுவைநிகர்விழிச்சனகி காதலன் காதையைக்கம்பன் கடலாற்சூழப்
படுவையகத் தரியதமிழ்ப் பாவலர்தேர்ந் திடவுரைத்த படியாலிந்நாள்
வடுவையொழித் திடுவிருத்தப் பாவிலெளிதாய்ச்சுருக்கி வழுத்தல் செய்தா
னெடுவைநகர்வாழ் நாராயணசாமி வேதியனுநெடியோன் மாதோ.*

மதுரை ஜில்லா முறையூர் ஸ்ரீமாந்
பழ சி. சண்முகஞ்செட்டியாரவர்கள் சமுக வித்வானும்
மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான்களி லொருவரும்
ஆகிய கொட்டாம்பட்டி மகா-ா-ா-ஸ்ரீ

எம். கருப்பையாபாவலவர்களியற்றின.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

*திருவளரும் பாற்கடலிற் கருமுகில்போ லறிதுயில்கொ டிருமாறானே
தருவளரும் விண்ணுலகத் தவர்தவர்க டழைத்தோங்கத் தரும நீதி
யுருவளர வரக்கர்குழா மொழியவெழிற் கோசலைநாட் டுளவயோத்திப்
பெருவளநன் னகரரசாப் பிறங்கியசீர்ச் சரிதைதனைப்பெருமை வாய்ந்தே*

*கம்பநா டுடையவள்ளல் கடல்போல விரித்துரைத்த கவிக ளெல்லா
மிம்பர்நாட் டினிலெவர்க்கு மெளிதுபய னறிவரிதா யிருத்த னோக்கி
யும்பர்நா டனையவள நெடுவைநகர் விப்ரகுலத் துதித்தோன்றெய்வக்
கும்பனுன் குறுமுனியென் றிடக்கற்றோன் கற்றவர்கள் கூட்ட முள்ளோன்*

*அண்ணுசா மியின்றவத்தா லருணாரா யணசாமி யணிக ளோடு
பண்ணார்ந்த சொற்சுவையும் பொருட்சுவையு நனிவிளங்கப் படிப்பா ரெல்லாங்
கண்ணுகு மிதுவென்னச் சங்கிரக மாத்தொகுத்துக் கவியாத் தந்தான்
மண்ணுடர் தவப்பயனே யிதற்கென்ன கைமாறு வழங்கு வேமால்.*

வேம்பத்தூர் நிமிஷகவி சிலேடைப்புலி மகா-ா-ா-ஸ்ரீ

பிச்சுபாரதியவர்களியற்றியது.

பூமேவுதடவளஞ்சேர்நெடுவைநகர்ப் பூசுரரிற்புநிதன்வேதா
நாமேவுகலைமகடன்னருளுடையான் வான்மீகிநவின்றகாதை
தேமேவுகம்பன்விரிவாயுரைத்தானதைச் சுருக்கிச்சிறப்பதாகப்
பரமேவுதமிழுரை நாராயணசாமிக்கவிஞன் பகர்ந்தான்மாதோ.

முதுகுளத்தூர் அஷ்டாவதான வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ

மு. வ. கல்யாணசுந்தரம்பிள்ளையவர்களியற்றியது

தம்பத்தை நேர்வாகான் சானகிகா தலனிலங்கைத் தலைவற் சீறிக்
கம்பத்தை யும்புடைத்தோன் காதைதனைச் சுருக்கிவிருத் தமதாய்ச் சொற்றான்
வம்பத்தை வீறுகுய மாதர்மத னெடுவைநகர் வாழும் பூமன்
சம்பத்தை யோங்குறுநா ராயணமா லுலகுபுகழ் சாற்றமாதோ.

மதுரை அமெரிக்கன் மிஷன் ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

மகா-ா-ா-ஸ்ரீ **நாராயண ஐயரவர்கள் இயற்றியது.**

உலகுபுகழ் தருபெருமைச் சீராமன் சரிதமுயர் கம்பன் முன்னாள்
பலகவிமா லைப்பரப்பிற் பாடினன்மற் றதுதெரியும் பார நோக்கி
நிலவுபொழி னெடுவைநகர் நீண்மறையோ னாரணப்பேர் புலவர் பெம்மா
னலகவிசேர் சங்க்ரகரா மாயணமென் னுமத்தா னவிற்றி னானே.

மதுரை கவர்ன்மெண்டு டிரெயினிங் ஸ்கூல் தலைமை
உபாத்தியாயர் திருவெண்காடு மகா-ா-ா-ஸ்ரீ

சு. வேதாரண்ய சாஸ்திரியாரவர்கள் பி. ஏ. எல். டி.
இயற்றிய (மணிமாலம்)

பண்கொண்டபாடன் மறையாயிரங்கள் பலவாகவேத்து பரமன்
விண்கொண்டதேவர் துயர்தீருவ்வண்ணம் விரிஞாலம் வந்த வகையான்
கண்கொண்டராமன் கவின்காதையாருங் கனிவாயுரைக்க வெளிதா
மெண்கொண்டநூறு தசமோடுநூறு மினிதாகவாழ்க வுலகே.

பழனிசுவாமி மலையடிவாரம் மகா-ா-ா-ஸ்ரீ

சு. பெரியசாமிபண்டாரமவர்களியற்றிய

நேரிசை வெண்பா

புங்கவரைக்காக்கப் புகழ்வினிதைக் கண்ணுதித்த
தங்கமலை மார்பன் சரிதத்தைச்—சங்க்ரகமாய்ப்
பாரா சினிபிலத்துப் பாவலரேத் தப்பகர்ந்தா
னாரா யணமறையோ னன்கு

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

தற்சிறப்புப்பாயிரம்.

இந்துவைமுடித்தபெம்மா னியம்பிடவுலகமேழுஞ்
சிந்தையிலுளதென்றுன்னுச் சேய்நெடும்புவியைச்சூழத்
தந்தையைவலஞ்செய்தேமாங் கனிதரத்தனிக்கூத்தாடுஞ்
சிந்துரமுகத்தான்செம்பொற் றிருவடிதலைமேற்கொள்வாம்.

வேறு

பன்னிலத்துவிதை செந்நெலிக்குளிக ரென்னமொய்த்துவிளை பண்பினுற்
கன்னன்முத்துகழை தன்னையொத்ததனைக் காணகிலா திரதி காதல
னின்னும்வைத்தசிலையென்னின்மற்றுமுள நன்னிலப்பெருமை யென்கொலாம்
பொன்னுமுத்துமலை தன்னிலெற்றுகரை பொருணைமாநதியினாட்ரோ

வேறு.

பொன்னவிழ்கமலமாது புவனைவெண்போதாள்வைகு
மந்நகரதுவேவித்யாத் தரனமாநகரமாகும்
கன்னல்சேர்கழனிசூழுங் கலாமடமென்பாரந்த
நன்னகர்ப்பெருமைதன்னிற் சிற்சிலநவிலலுற்றும். (3)

குடதிசைநெடுமாலீசன் குணதிசைகுமரிவைகும்
வடதிசையிருவர்மைந்தன் றென்றிசைவகுத்தமைய
மடவணிசிறந்தகோயின் மறையவர்மனைகள்சூழப்
படியுளோர்புகழும்வண்ணம் படைத்தனனமரர்தச்சன் (4)

முதுமறைக்கிழவராதி முறைமுறைமாந்தர்வீதி
சதுரமாயியல்புக்கேற்பத் தனித்தணிமனைகளோடு
நிதியிருகரத்தீசான நித்தன்வாழ்கலாவையென்னும்
பதி தனில்வதிப்போர்பெற்ற பாக்யமேபாக்யமம்மா (5)

அந்தணர்மனைகளெல்லா மாரணம்பழகுமோசை
சந்ததம்வணிகரில்லந் தமனியங்கொள்வாரோசை
பைந்தொடிச்சிலம்பினோடும் பலபலகருவியோசை
மைந்தர்கள்வதுவைக்கார்க்கு மாவொலி நகரமெங்கும் (6)

செக்கர்வான்படிவத்தண்ணல் தேவியோடவனிதன்னின்
மிக்கதோர்பெருமையெல்லாம் விளம்பினனவளுமையா
தக்கதாஞ்சைவசீலந் தழைத்திடச்செய்வாயென்ன
முக்கணன்மகிழ்ந்தீசான முகத்தினலருளுமூர்த்தி (7)

ஆதியாயுரைக்கும்வர்ண மாச்ரமமகண்டாகாரச்
சோதியானனத்திருமந் துலங்குமாசார்யசீல
னீதலாதெவர்க்குமேலா மிந்திரன்பதவிக்கேற்பப்
பூதலங்காக்குந்தென்னன் புகழ்ந்தடிபணியப்பெற்றேன். (8)

கலைவலான் கருணையுள்ளான் கமலையின்னேக்குங்காரூர்
மலைவிலான் மடந்தைசெம்பொன் மலரடியுள்ளத்துள்ளா
னெலையிலாப் பெருமையுள்ளா னியம்புதற்கரியபோத
நிலையுளான் கலாவையென்னு நெடுநகராட்சியுள்ளான். (9)

அலைகடலுலகுக்கெல்லா மந்தணர்மேலாமென்ன
சிலைமலிவேந்தனுதி மூவருந்திருத்தாள்வேண்டக்
கலைமதியரவம்பூண்ட கடவுளைங்தெழுத்தேஞான
நிலையெனவருளும்வண்ண நீணிலத்துதித்தநித்தன். (10)

கோத்திரமுனிமாண்டவ்ய குலத்தினிலுயர்ந்தோன்ஞான
சாத்திரமுணர்ந்தோனெச்சு சாகைபோதாயனத்தின்
சூத்திரவான்கல்யாண சுந்தரனருள்சம்பந்த
மூர்த்தியென்றுரைக்கும்ராமச் சந்திரமுனிவனையா. (11)

வேறு

தருவி னுதனுக் கருளிய ராகவன் சரித
பெருமை யாஞ்சத கோடியைப் பேசுதற் கெளிதோ
வுருமை யாமதன் பயனுள யாவையு முணர்ந்தே
யிருமை யாந்தமிழ்க் காவியந் தருகென விசைத்தான். (12)

தேவ பாடையிற் செப்பிய யாவையுந் தேர்ந்த
நாவினுனுரை செந்தமிழ்க் காவிய நடைபோற்
பாவ லோர்புகழ் வாரெனப் பாடினேன் பதுமப்
பூவை நாயகன் சரித்திரச் சங்க்ரகம் புவிக்கே. (13)

தற்சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

★

உ
சிவமயம்

மருதூர் என்ற பிள்ளையார்பட்டி ஸ்ரீகற்பக விநாயகர் பதிகம்

இஃது பிள்ளையார்பட்டி முன்னாள் மணியம்

ப்ரும்மஸ்ரீ நாராயணசாமி அய்யரவர்கள் குமாரர்
ஸ்ரீகிருஷ்ணையரவர்களால் பாடப்பெற்றது.

சாற்றுக் கவிகள்

இந்நூலாசிரியர் மைத்துனரும் மதுரை ஸெயிண்டுமேரி
ஹைஸ்கூல் முன்னாள் தமிழ்ப் பண்டிதருமான ப்ரும்மஸ்ரீ
மு. கோவிந்தசாமி ஐயரவர்கள் இயற்றியது.

தனதனை நிகர்க்கும் கனதன வணிகர்,
மனமொழி மெய்யால் அநுதினம் ஏத்தும்
பிள்ளையார்பட்டிப் பொள்ளலங்கரத்தோன்;
உள்ளுவ எல்லாம் 'கொள்' என அளிப்போன்;
தற்பரன் ஆன கற்பக விநாயகன்;
பொற்புறும் சரணில், அற்பின் ஓர்பதிகம்
வண்தமிழாலே கண்டினும் இனிக்க,
மண்டிய சொல்லும் திண்திறற் பொருளும்
செறிதர, நெடுவை மறையவர்திலகன்,
அறுபதின் ஆண்டு மறுஅற மணியம்
செப்பும்அக் கோயில் திப்பிய வணிகர்
ஒப்புற வகித்தோன், அப்(பு)அணி சடையான்
பொன்அடி துதிப்போன்; என்னையும் அஃதை
மன்னுமாறு அறைந்தோன்; என் உயிர் மாமன்;
குணமிகு நாரா யணன் தவப்புதல்வன்;
அணிபுகழ் சேர்கிருட் டிணன்எனும் மறையோன்:
வழுஇலா ஒழுக்கமே வாய்ந்த
விழுமிய புலவன், விளம்பினன் இனிதே.

மதுரைத் தமிழ்ச் சங்கம் கலாசாலைப் போதகாசிரியர்
ப்ரும்மஸ்ரீ சு. ஹரிஹரய்யரவர்கள் இயற்றியது.

மாவிந்தம் எனப் பொருளார் வணிக மக்கள்
வழுத்து, பிள்ளைநகர்கோயில் கொண்டோன்; முந்நாள்
மேவிந்து சடைக்(கு) அணிந்தோன் மகிழும்கற்ப
வேழமுகத் தோனபதிகம் விளம்பினுனல்;
பாவிந்தை யுறப்புகலும் புலவன், காழிப்
பாலருவாயனின் சீர்கவி சிந்தாச் சொல்
கோவிந்த சாமியெனு மறையோன் அம்மான்
குமரனும், கிருஷ்ணன் எனும் குரிசில் தானே.

★

இந்நூலாசிரியர் மருமகன் காரைக்குடி
ஈஸ்வரய்யர் குமாரர் நாகசாமி ஐயர் இயற்றியது.

கன்னலும் அமுதும் கசந்திட, தமிழில்
கற்றவர் உவந்திட, மருதூர்
நன்னகர் உறையும் கற்பகக் களிற்றின்
நறுமலர்த் தாளில், ஓர் பதிகம்
பன்னினன், நெடுவைச் சாமமா மறையோன்;
பகரும்நா ராயணன் புதல்வன்,
என்உயிர் மாமன், கிருட்டிணசாமி
எனும், தமிழ்ப்புலவர் கோமானே.

★

உ

வரசித்தி விநாயகர் ஸஹாயம்

இஃது இந்நூலாசிரியர் பெண்வழிப்பேரன்

காரை நகர் E. நாகஸ்வாமி அய்யர் இயற்றியது.

அனுமார் பதிகம்—சாற்றுக்கவி.

திருமகளும் நிலமகளுஞ் சேர்ந்தவள தெய்வீக நெடுவை தள்ளிற்
பெருமைபெறு பூசுரனண்ணுச்சாமி புத்திரனும் பேச்சில் வல்லோன
குருவெறுமென்ருய்ப்பாட்டன் கோசிகளின் கோத்திரத்தன் கோபமில்லான்
தருமநெறி தவருதான் சாமகன் நாராயணஸ்வாமி யென்பான்.

வேறு. (வெண்பா)

செங்கமலத் தாயைச் சிறைவைத்த தீயோனைப்
பங்கமுறச் செய்தந்தப்பாவைக்கு—யிங்கிதமாய்
நாதனுடைய நாமம் நவின்ருழி தந்தன்று
ளேதங்கடிந்தடியேத்தி.
கஞ்சமலர்க் கண்ணனுங் காகுத்தன்ருளிணையை
நெஞ்சினிலெப்போதும் நிறுத்தியவன்—அஞ்சனையான்
தந்தமகன்ருளணியச் சாற்றிய பாககள் பத்தும்
பைந்தமிழின் பண்டாரம் பார்.

★

சங்கிரக இராமாயணத்துக்கு எழுதிய சாற்றுக்கவி.

நீர்பூத்த வுந்தியாங் கமலத்தில் வேதனைச்
செய்ய திருமார்பில் மாதைச்
செப்புமுதரத்தினில் முப்புவனமுங்கொண்டு
சீதளப் பாற்கடலிலே
கார்பூத்த மேனியன் கண்டுஞ்சுமென வெண்ணிக்
கண்டகன் தசகண்டனுங்
காசினியிலே மக்கள் முனிவரைத் தேவரைக்
கட்டப்படுத்துமெல்லை

பார்பூத்த மாநகரயோத்தியின் பார்த்திபன்
பாலனாய் வந்தி ராமன்
பாவிய ரறக்கர் தமாவினை மடுத்துலகு
பாலித்த காதை தன்னை
யோர்பூத்த நெடுவை யண்ணுச்சாமி மைந்தன்கௌ
சிககோத்திரன் சாமகன்
எனதன்னையின்றந்தை நாராயணஸ்வாமி
யியம்பினன் புலவ ரேறே.

சங்கிரக இராமாயணம்

இந்நூல் இரண்டாம் பதிப்பு வெளியிட்டகாலை புதுக்கோட்டை ஸ்ரீ மகாராஜா கல்லூரி ஒய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர் **கவிராஜ பண்டிதர் ப்ரும்மஸ்ரீ நா. கனகராஜய்யரவர்கள்** இயற்றிய சாத்துக் கவிகள்.

1. முனிமரபில் அருந்தவத்துக் காகரமாம்
கௌசிகர்தம் முறையில் வந்தான்
இனியதமிழ் அமுதமய ஆரியமாம்
இருமொழியின் ஏற்றமிக்கான்
பனிமலைவாழ் பரமனிடம், பாற்கடல்வாழ்
வரதனிடம் பக்தி பூண்டான்
கனிவுமிகு தமிழ்நடையில் இராமகதை
சங்கிரம் கவி செய்தானே.

2. கோத்திரத்து முனியாய கோசிகனூர்
தவச்சிறப்பாற் குலவும் செல்வன்
சாத்திரத்து, மறையகத்தும் இயன்றளவு
புகுந்துண்மை தகவே கண்டான்
நாத்திறத்து வான்மீகி, கம்பனெனும்
இருவருமே நயந்து வாழ்த்த
பாத்திரத்துச் சிறப்பமைய இராகவன்றன்
கதை விரித்த பனவன் ஆமே.

3. வாக்குவளம் மிகவமைந்தான் வாணிதிரு
வருளாலே வடவர் வாழ்த்த
ஊக்குமுள முளதமிழர் உருக்கமொடு
பாராட்ட உயர்ந்த பேற்றை
யாக்குதவம் பெற்றருளே பெறக்கருதும்
இதயத்தான் இயற்றும் செய்யுள்
தேக்குசுவை புலவருளே சிறந்தவரே
அறிந்துதலை சிலைப்பாரன்றே.

4. அறம்வளரும் பொருள்வணிகர் நாட்டினிலே
ஐங்கரற்கே யமைந்தகோயில்
புறம்வளர அகம்வளர நோக்குவதே
பொருளாகப் புனைந்த சேவை
திறம்வளரப்புரிந்த அண்ணுசாமியெனும்
அபிதானச்சீமான் செல்வன்
உறவினரும் புகழ்பெறச்செய், திரு. நாரா
யணசாமி உரவோன்றானே.

5. வடமொழியைத் தமிழ்ச் செய்யுளிடைப் பொருத்தி
யழகுமிக வைத்தவாக்கி
மடம்ஒழியு மனப்பண்பான் மறைநெறியின்
வழுவாத வாழ்க்கை வாழ்ந்தான்
இடமகலும் தமிழகத்தே பாண்டிநிலத்(து)
இருபொருளும் இசைந்த நாட்டில்
மடவதிபர் அரசுபுரி நகர்க்கருகே
நெடுமரத்தில்வாழ்ந் தோன்றானே.

6. புலமையினைத் தருகின்றாள் கலைமகளே,
கடவுண்மை பொலிதற்கென்றே
தலைமையினைத் தருகின்றான் ஆறுமுகன்
அத்தகைய தமிழ்மக்கட்கே
நிலைமையினை நயக்குமவர் இத்தகைய
பணிபுரிதல் நியமம் என்றே
உலகறிய விளக்கியமாத் தமிழ்ப்புலவர்
புகழ்வாழ்க உலகில் நன்றே.

உ
சிவமயம்
மயிலும், அயிலும் துணை.

காரைக்குடி ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் வித்யாசாலை
உயர்நிலைப்பள்ளி (ஒய்வு பெற்ற) தமிழாசிரியர்
ஸ்ரீ ப. மாசிலாமணித்தேசிகரவர்கள் இயற்றியன.

---

1. உலகியலுண் மைகள்பல ஊழிதொறு முறைஉறுவர்
புலமைமிகப் புலவருளம் புரைதவிர்ந்து பொருளுணர
புலவருல கும்புகழப் புரைதவிர்செம் மொருளிராமன்
நலந்தரு புண்ணியவரலா றுரியத்தி ஞனிலத்தில்,

2. பலமுறையிற் பகர்ந்ததைநாற் பதபார காவியமாத்
தலமுவக்கு மொருமுதனூல் தந்தனன்வான் மீகிமுனி
இலகுபழந் தமிழ்நூல்க ளிலுங்கதைத்து ணுக்கியலும்
நலதமிழ்நூன் மரபடுக்க நயந்துபல்லா யிரந்தமிழ்ப்பா.


3. வழங்கினன்பல் சந்தமதில் வள்ளல்கவி முடியிறையாம்
முழங்குகடல் வரைப்பின்கண் மூதறிவா னுயர்கம்பன்
புழங்குறுமூ திருமொழியிற் புலமைதிக ழந்தணன்பேர்
வழங்குறுநா ராயணநான் மறைபயிலு மினறமிழன்,

4. கொடுங்குன்ற மொடுகுன்றக் குடிவரைகள் குலவுவளம்
நெடும்புனல்சூழ் திருநகர்மா நெடுவைபுகழ் பெறத்தோன்றி
கடுகுமிடர் கடிமுதல்வன் கற்பகத்தி னடிகைதொழும்
நெடுந்திருவன் மால்,முருகன், சிவன்கழலே நினையுளத்தன்,

5. தந்தைமொழி கற்றினிய தாய்வழங்கு மொழிபயின்று
முந்தவரு மார்வமெழ மொழிபுலவர்க் கமுதமென
இந்தவுல கினிலெவர்க்கும் எழிலொடுமின் சுவைத்தாக்கித்
தந்தனன்சங் கிரகரா மாயணத்தைத் தண்ணளியான்.

(மத்தசாமரம்)

6. வான ளாவிய மானவன்சரி தத்தின் வண்சுருக் கந்தனை
தேனளாவுபாற் றீஞ்சுவைத்தரந் தேக்கித்தந்தவன் வாழிபார்
மேனி வந்தொளிர் மென்ற மிழ்வள மாட்சிமேவிட வாழியே
வான மான்மழை வாழி யன்புரு வான வன்புகழ் வாழியே.



ஸ்ரீ கற்பக விநாயகர்
பிள்ளையார்பட்டி
இராமநாதபுரம் ஜில்லா



உ

ஸ்ரீ கற்பக விநாயகர் பதிகம்.

ஸ்ரீ மகாகணபதி காப்பு.

வெண்பா

சிறப்பால், பொதுவகையால், சிந்திக்க நின்ற
திறத்தாய்க்கு ஒரு பதிகம் செப்பக்—குறித்தேற்கு
நந்தா வளம்உறும் சொல் நாஉதிக்க, பிள்ளைநகர்
தந்தா! வளமுகத்தாய்! தா!

நூல்.

1. திருமேவு பாற்கடல் இடைப்பிறந்(து) ஒளிர்இளம்
திங்கள்ஒரு கோடியென்னத்
திகழும்ஒரு கோட்டுமத வாரணமுகத்(து) இறைவ!
"ஜெய! விஜய!" என்று திருமுன்
புருகூதன் முதலாய வானவர்கள், தானவர்கள்,
பொருவில் முனிபுங்கவர் குழாம்,
பூதகணநாதர், துதிகொண்(டு) அமுதமானசம்
பூபலம் அருந்தி யருளே!
உருவாகி வீற்றிருந்(து) அருள் செய்யும் அய்யனே!
உலகமுழு(து) ஈன்று அளித்த
உமை கௌரி சங்கரி அம்மை கிருபாகரி
உத்தமி அளித்த குமரா!
சருவாதை ஒழிய, உன் இருபாதமே துணை;
கன்னல்சூழ் பிள்ளை நகரில்
கற்பாழி தனின்மேவு கற்பக விநாயகா!
கற்பனை கடந்த பொருளே!

2. நான்முகன் படைப்பிலே, தோற்றம் ஓர்எழிலே,
நரஜன்மம் எய்தல் எளிதோ?
நல்லபடி யாகவே பேரின்ப வீடதின்
ஞாங்கரில் அமைந்த(து) எனவும்,

வான்முகம் தோன்றி அழி இந்த்ரதனுஒக்கும் இவ்
வாழ்(வு) என்று நன்(கு) அறிந்தும்,
வன்மைபெறு மும்மலக் கட்டினால் மால்அறு
மனம் இவையெலா மறந்து,
பால்மணம் கமழும்வாய் மக்கள் மெய்தீண்டலும்,
பாவையரை ஆலிங்கனம்
பண்ணுவதும், இன்பமாக்கருதி, உழல் பேதையேன்
பால், கருணை செய்(து) அருளுவாய்!
கான்மலர் உகுத்த செந்தேனுறுபாயவினை
கழனிசூழ் பிள்ளைநகரில்,
கற்பாழி தனின்மேவு கற்பக விநாயகா!
கற்பனை கடந்த பொருளே!

3. வையக மலர்க்கழல்கள், உந்திவெளி வானமா,
மன்னு பேரின்ப முடியா,
வள்ளிமுகம் ஆசைகா(து)ஆக, உயிர்அனிலமா
வாரிதூ(சு)இக, மதியம்
வெய்யகதிர் விழிகளா, மேவுபொருளாகும் ஓர்
வெண்மருப்(பு) அருள்செய் முக்கண்
வேழமுகமும், பரிதிகோடி சமம் என்னஒளி
வீசு நவரத்ன முடியும்,
செய்ய திருமேனியும், துய்யஉபவீதமார்
செப்பமும், கைகள் ஐந்தும்,
சேயுடையும், மாபெருந் தொந்தியும், தாமரைச்
சேவடியுமாகி, யார்க்கும்
கையடைத் தானமா நின்றநீ, அய்யனே!
கணேசனே! பிள்ளைநகரில்
கற்பாழி தனின்மேவு கற்பக விநாயகா!
கற்பனை கடந்த பொருளே.

4. பூதரந்தனில் கோட்டு நுதியினால், பாரதம்
பொறித்தனை; மாமகதியோன்
போற்றி நைவேதித்த கனியை மதிசேகரன்,
'பூவலம் செய்தோர்க்(கு) எனச்

சோதர ளுெடிக்குளே நண்ண, மயிலேறிஞன்
    சூழ்ந்து முன்னீ கொண்டனே;
சூர்தரும் தோல்முகற் சாய்த்து, மற்(று) ஆகுவாய்த்
    தோன்ற வாகனம் ஆக்கினே;
ஆதரங்கொடுபூஜைபுரி அவ்வையார்கயிலே
    யம்பொருப்(பு) உற்று மகிழ,
ஆற்றினே; வியப்பிது என்? ஐந்தொழில்நின் சந்நிதியில்
    ஆகுமால்; எளியனேனைக்
காதரம் அடாதபடி காத்தல்நிற்(கு) அருமையோ?
    கணேசனே! பிள்ளைநகரில்
கற்பாழி தனின்மேவு கற்பக விநாயகா!
    கற்பனே கடந்த பொருளே!

5. தென்ஞுசை யிறைவன்அடு பக(டு)ஏறி எதிர்உறத்
    தேகாதி இந்தியங்கள்
செயல்ஆவி தளர்போது, "சுமுகா! நமோ, நம
    திகழ் ஏக தந்தா! கயக்
கன்ஞுயநம, தூமகேது நம, விகடநம,
    கபிலாய! நம, விநாய
காய! நம, பாலசந்த்ரா! நம, கஜத்தியக்
    காய! நம, கந்தவேளின்
முன்ஞுயவா! நம, விலம்போதராய! நம,
    முத்தான முறுவேழமா
முகவா! நமோ, வக்ரதுண்டா! நமோ, விக்ன
    மூர்த்தி, ஏரம்ப, சூர்ப்ப
கன்ஞுய நம" என்று கூற அருள் புரிகுவாய்;
    கணேசனே! பிள்ளைநகரில்
கற்பாழி தனின்மேவு கற்பக விநாயகா!
    கற்பனே கடந்த பொருளே.

6. விண் ஆதிபூதம் ஓரைந்துநீ, நாதநீ,
வேதநீ, வேதமுடிவின்
மேவுமெய்ப்பொருளுநீ என்பதை விளக்கினை;
மேருமாமலை வில்லினேன்
உண்ணுமுலைக்கு வெஞ்சாபம் கொடுத்திடலும்,
ஊங்கினில் இருந்த ஏட்டால்
உற்ற(து) இது என்ன, அவை யாவையும் எடுத்தெடுத்(து)
ஓதமிசை வீசல் நோக்கி,
நண்ணுரைவேர றுத்திட்டவேல் கந்தனை,
நந்தியைச் சபித்து, நின்னை
நாடாதெனு "மைந்த! யார்க்குமுன்னவன் ஆவை;
நம்மின் வேறல்லை; நீ என்
கண்ணுகுவாய்" என்று கூறிடப் பெற்றதால்,
கணேசனே! பிள்ளைநகரில்
கற்பாழிதனின்மேவு கற்பக விநாயகா!
கற்பனை கடந்த பொருளே!

7. 'தள்ளரிய கருமமுக்கியம்' என்பர் ஒரு சிலவர்;
'தடையற்ற ஞானமேதான்
தலையாகும்' என்பர் சிலர்; எதுவாகினும், மனந்
தகவாகின் அன்றி இலையோர்
எள்ளளவு பயனும்; என் செய்குவேன், ஏழையேன்
எயினர்கோன் பாவை பாகன்
ஏத்தும் அற்புதப்பங்கயச்சரண் சரணுகி
எய்தினேன்; கேட்டி! எந்தாய்!
வெள்ளறிவின் விடைய வெங்காட்டிடை எதேச்சையாய்
மேய்ந்து, மதமாகி, ஆசை
வெள்ளத்திலே மூழ்கி, நிலையின்றி அலையும்மன
வேழம் என்வசமாயிலை;
கள்ளமிலை அய்ய! பாசாங்கு சக்கையனே!
காத்திநீ! பிள்ளைநகரில்
கற்பாழி தனின் மேவு கற்பக விநாயகா!
கற்பனை கடந்த பொருளே.

8. "சந்தமும் ஒரு படித்தாகி, நிரக்குணமாகி,
சர்வபரி பூரணமுமாய்,
சச்சிதானந்தமே வடிவான தெய்வமே!
தமியனேன் துயர் தீர்த்திடச்
சிந்துரமுகத்(து) ஒளி பரப்பியெழு மேகமே!
செம்மலே!" என வாழ்த்திடும்
சேண் அரசன் மகிழ "உயர் யாவையும் காக்கைநம்
செயல்" என்றுணர்த்த வடிவாய்,
விந்தமலை தாழ்த்து, முனிகுண்டிகை கவிழ்ப்பவரு
விரிநீர் அருதபொன்னி
வெள்ளமோ? அன்றிநினை(து) அன்பர்முழுதும்கருணை
வெள்ளமோ? உளவு புகலாய்!
கந்தன் மாயூரகிரி கீழ்த்திசைக் கொண்டிடும்
கழனிசூழ் பிள்ளை நகரில்
கற்பாழி தனின்மேவு கற்பக விநாயகா!
கற்பனை கடந்த பொருளே!

9. வாயார வாழ்த்திநின் திருநாம நினைவாகி
மலரடி வணங்கினோர்பால்
வனகண்வெம் கூற்(று)அஞ்சுமே நவக்கோள்களும்
மற்றும்வந்(து) என் செய்வதே!
தாயாவை எவ்வுயிரையும் புரந்திடுதலால்
தகுகல்விசித்தி ஞானம்
தருதலால் தந்தையே யாவையென்று உனதருள்
சதம் என்று நம்பியுள்ளேன்
ஆயாத மூடன் என்(று) அகற்றிவிடுவாய் கொலோ!
அருணகிரிநாதர் சொன்ன
ஆரமுதம் அன்ன சொற்(கு) என் செய்வை அய்யனே
ஆழிமாப் படையை மீட்பான்
காயாவை யனையதிரு மேனிமால் பரிசிடக்
களித்தவா பிள்ளை நகரில்
கற்பாழி தனின்மேவு கற்பக விநாயகா
கற்பனை கடந்த பொருளே.

10. எல்லாமு நினது செயல் எப்பொருளுநின(து) என்ற
எண்ணமே கொள்ளவேண்டும்
இரவு பகல் எப்பொழுதும் அம்புயம் எனத்தகுநின்
இணையடியில் நினைவு வேண்டும்
நல்லார் உரைத்த சொல் கேட்டிடுதல் வேண்டும்அவர்
நட்பு மறவாமை வேண்டும்
நடலை வஞ்சனையுளோர் இடத்தில் உறவாயினும்
நாட்டா(து) இருத்தல்வேண்டும்
செல்லானநாள் ஒழித்(து) இனியேனும் நின்புகழ்
செப்ப நல்புத்திவேண்டும்
செந்தமிழ்ப்புலமை வரவேண்டும் நின் பேர்அருள்
செல்வமும்வேண்டும் அரசே!
கல்லாலில் உற்றபரன் இகலத்து விளையாடு
கணேசனே பிள்ளை நகரில்
கற்பாழி தனின்மேவு கற்பக விநாயகா
கற்பனை கடந்த பொருளே.

★

வாழ்த்து.

வாழிமறை நான்கு, மழை பொழிக, நாடெங்கும்
மேழிவளம் ஓங்கி விழாவுறுக—வாழையடி
வாழையெனத் தொண்டர்குலம் வந்திடுக பிள்ளைநகர்
வேழமுகன் தாள்வாழ்க வே.

முற்றும்.



இந்நூலாசிரியர்
ஸ்ரீ அ. நாராயணசாமி அய்யர்
பிள்ளையார்பட்டி ஸ்ரீகற்பக விநாயகர் தேவஸ்தானம்
மாஜி மணியம்

CONTENTS.

சூசீ பத்திரம்.

கடவுள் வாழ்த்து.

கணபதி காப்பு.

பொற்ருெடி சீதைநாதன் புகழ்பெறுஞ் சரிதந்தன்னைக்
கற்றறி யாதானேனுங் கமலையின் னருளினுலே
நற்றமி ழதனுற்கூற நானமும்புனுகுந் தோய்ந்த
கற்றைவார் குழலாண்மைந்தன் கணபதி காப்பதாமே.

கற்பக விநாயகர் துதி.

வேறு

தற்பரன்சரிதமீ தளக்கும்போதெலாஞ்
சொற்பதம் பொருட்சுவை துலங்குந்தொன்மைநூல்
விற்பனர் வியப்பொடு வினவச்செய்யுமா
கற்பகவைங்கரன் கமலத்தாள்களே.

திருமால் துதி.

வேறு.

தாமானை யென்றுரைத்த தனிக்கண்மானைத்
தந்திரமாய்ப் பிரிக்கநிலை தானில்லாது
போமானை விழவெறிந்த வெங்கோமானைப்
புன்மதியாற் பொருதவிடும் புயல்போல்வண்ண
மாமானைக் கொம்புபறித் தடர்ந்தபோரி
லம்மானைத் தொலைத்தானை யாடையீந்து
மாமானைக் காத்தளித்த மருதூரானை
மால்ராஜ நாரணனை வணக்கஞ்செய்வாம்.

இலக்குமி துதி.

வேறு.

குமலைமார்புயங் கோகனகப்பதத்
தமலராசனா ராயணனன்புபூண்
கமலக்கண்ணிபொன் கற்பகவல்லியாம்
விமலைபாதமெம் மெய்யுளத்தேற்றுவாம்.

கடவுள் வாழ்த்து.

கலைமகள் துதி.

வேறு.

உலகமீரேழுமீன்ற வொருவனை யுதவுமுந்தித்
தலைவனும்ராமச்சந்த்ரன் சரித்திரமிதனைக்கூற
மலரின்மேன்மலராமென்ன வதனமேற்கண்கள்பெற்ற
கலைமகள் கமலத்தாளெங் கருத்துளேயிருத்திவைப்பாம்.

ஆஞ்சநேயர் துதி.

மன்னர்கோமகனிராமன் மலர்மகட்சீதைதன்பாற்
பன்னருமாரமீந்து பரிசுநீயளிப்பாயென்ன
வன்னவள்கொடுக்கப்பூண்ட வஞ்சனைகுமரன்றாளெஞ்
சென்னியிற்சூடிராம சரித்திரஞ் செப்புவோமே.

வான்மீகர் துதி.

சீதரனுமிராகவன்றன் சிறப்புறுஞ்சரிதந்தன்னை
யாதிகாவியமாய்ச் சொன்ன வருங்கலைவல்லோனை
போதவான்மீகிதெய்வப் புலவர்கள்கோமான் செம்பொற்
பாதமாமலரைச்சூடிப் பரிவுடன்பகரலுற்றும்.

ஆழ்வார்கள் துதி.

பதுமமாமலரின்வைகும் பாவையாஞ்சனகியோடு
மதிதவிழயோத்திவந்த மாயனுமிராமனார்தன்
கதிதருஞ்சரிதங்கூறக் கார்குழற்புவிமாதர்தி
துதிபெறுமடியார்பாதத் துகளணிந்துரை செய்வொமே.

நம்மாழ்வார் துதி.

வேறு.

உமையவளுக் கரனுரைத்த ராமநாம
மூலகத்தோர் தாரகமென் றுரைப்பாரந்நா
ளிமையவரு முனிவர்களு மிசைந்துவேண்ட
வெண்ணில்லாக் கருணையொடு மிலங்கைவாழ்வோர்

கடவுள் வாழ்த்து.

தமையொழித்துங் களுக்கருள்வே னென்னவந்த
தாசரதி சரித்திரஞ்சங்க் ரகமாய்க்கூற
சமயநிலைத் தமிழ்வேத முதல்வனுன
சடகோபன் றுண்மலரெந் தலைமேற்கொள்வாம்.

அவையடக்கம்.

வேறு.

காவியமிது கன்னியர் கற்கு நூல்
பாவு ருது பயன் றிருக்காயினுந்
தேவ தாருக மானது சீர்மணப்
பூவை யர்க்கணி நாணெனப் போலுமே.
ஓது காவிய லக்கண மோர்ந்தவர்
காதுக் கென்கவி காசுள தாயினு
மாது ஜானகி வாமன் சரித்திர
மீதுமுதைக் கடைபட்ட தென்பரோ.

வேறு.

சகத்திரமெண்முன்றுகத்தக்க வான்மீகிசொன்னுன்
பகர்தமிழதனுற்கம்பன் பாடினுன்பாதியாகத்
தகுமதையைந்தோடாறு சதமெனச் சாற்றினுனென்
றிகழ்வரோவெனையிராமனிசை பெறுஞ்சரிதமன்றே.

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

ஸ்ரீ ராமஜெயம்.

சங்கிரக இராமாயணம்

நூல்

நாட்டுச் சிறப்பு.

உலகமீன்ற வொருவனை யோதருங்
கலைகள்யாவுங் கருதுதற் கெட்டிலாத்
தலைவனென்னச் சதுர்மறை சாற்றுமந்
நிலையுளானை யெந்நெஞ்சத் திருத்துவாம். (1)

வாசவன்பதி மாமறையோன்பதி
கேசவன்விடைக் கேதனன்வாழ்பதி
பேசரும்புகழ் பெற்றியுமுற்றசீர்
கோசலம்பதி நாட்டணி கூறுவாம். (2)

வேறு.

விண்ணினின்றிழியுங்காலை வெளிறியும்விரிநீர்வாரி
யுண்ணலுங்கருகுங்கொண்மூ வுலகமீரேழுமீன்ற
பண்ணமர்மொழியாளான பார்வதிதந்தையென்னு
மெண்ணரும் பெருமைவாய்ந்த விமயமீதெய்திற்றன்றே. (3)

மின்னொளிபரப்பிமாரி விலை முகில்வாய்விட்டார்த்துப்
பன்னரும்புகழினோடும் படர்ந்தது பாணிவெள்ள
மன்னியகங்கைநேரா மங்கையையீன்றநாகத்
தின்னலமடவார்க்குள்ள தெனவவைவியம்பலுற்றும். (4)

கோவையாரிதழிதூய கொழுநனைத்தழுவிக்கோடின்
மேவுகார்படர்ந்தமைக்கண் வெம்முலைமுகடுகாட்டித்
தாவுநாட்டிங்களாரத் தனிமுகம்வெளிறச்சாற்றும்
பாவைபோலிமயஞ்சூலாம் பருவமாயிலங்கிற்றன்றே. (5)

கூந்தலுங்குழையுஞ்சோரக் கொடியிடைகுழைத்துநீத்தம்
வாய்ந்தபெண்குழவிதன்னை மாதவமுனிவோரெத்தப்
பூந்தடச்சுனைநீராட்டிப் பொற்பணியாரமூட்டி
யேந்தபேர்சரயுவென்ன விமையவரியம்பலுற்றார். (6)

திருமுகங்கமலமாம்பல் செய்யவாயிணைக்கண்ணீலம்
பரவுசைவலமாங்கூந்தற் பணைமுலைளயிநீர்மென்றேண்
மருவுவேயிடையாம்வஞ்சி மாந்தளிர்நிறமாக்கொண்டு
வருசிலம்பொலிப்பச்சென்று வயலெலாம்விளையாட்டெய்தி. (7)

குயமலைக்கோவையோடுங் கொடியிடைகுழையத்தாவுங்
கயலுழைக்கண்பாலாடும் காதலைகுழைகடாங்கி
முயலுமப்புறத்தாராக்க மொழிந்திடவாரமேந்திச்
சுயம்வரமுடிக்கச்செல்லுந் தோகைபோனடந்ததன்றே. (8)

தென்னகந்தேய்ந்தசாந்த மான்மதச்சேறுபூசி
மின்னலர்முல்லையாரம் வேண்டினமருதந்தோய்ந்து
மென்னுரைமலர்க்கண்பாலை நெய்தலுமிளகநோக்கிப்
பொன்னணியாரந்தாங்கிப் புணரியைப்புணர்ந்ததன்றே. (9)

பத்தியாய்மாசித்திங்கள் பரவுமாமகத்திற்செந்நெல்
வித்தினைத்திரட்டித்தெய்வம் வேண்டினதொழுதேயானி
யத்தநாள்வித்துவீசி யாவணிமூலம்பேர்த்து
வைத்திடவினையுப்பண்ணை வளங்களைச்சிறிதுசொல்வாம் (10)

வேறு

கற்பகவைங்கரன் கமலத்தாடொழு
மற்புயமள்ளரே ரெருதின்மாட்டினர்
பற்பலமணித்திரள் பதித்தமாலையைப்
பொற்புறநிலமகள் புனைந்தபோலுமே. (11)

அலைதிரைச்சரயுவி னுற்றல்செப்புவா
ருலைமலிகொழுவினு ழுற்றவித்தெலாங்
கலைமகளுருவெனக் காட்டிக்காருறை
மலைமகளுருவென வளர்ந்தசாலியே. (12)

இடையிடைகளைபறித் தேரியுமெல்லைவா
யுடையவருருப்பெண வுற்றதாலதைப்
படைவிழியுழச்சியர் பறிக்கவஞ்சினுற்
கடைசியரென்பரோ கற்புளார்களே. (13)

பதுமனிசித்திரி பகர்ந்தசங்கினி
யிதமுறுமத்தினியென்னு நால்வகைத்
துதிபெறுநிலமறிந் தூட்டவன்னலார்
பதியமுதென்னவாம் போகமொத்ததே. (14)

சிலைமுகவிரும்பறத் திரட்டிச்செம்பொனு
மலைநிவல்போர்க்களம் வைத்துவையொழி
நெலையொருகுன்றன நிரப்பியாறிலொன்
றலைகடல்சூழ்புவி யரசர்க்காக்குவார். (15)

வேறு

அழலி லாரவி யாகுதியாக்குவார்
சுழலுநேமி தொடும்புவிநாயகர்
பழகுவாணிபர் பற்பலமாந்தரு
முழவரில்லெனினு ய்ந்திடலாகுமோ. (16)

மன்னர்க்காயினு மற்றவர்க்காயினுக்
துன்னும்வெம்பசிக் கோர்துணையாகுமோ
சொன்னமாதியாய்ச் சோடசதானமு
மன்னதானத் தளவெனலாகுமோ. (17)

சேருமில்லறந் தீர்ந்தவர்சென்றகாற்
பாருநாவி குறிஞ்சியர்பாவையு
நேருமுல்லைய ரேலமுநெய்தல்வாழ்
வாருமுத்திடு வார்பசிக்காவதோ. (18)

சேருபூப்பழந் தேன்றினைகூபமுஞ்
சாருமன்னந் தனித்தனிசாகமு
மாருநெய்தயி ராவுடைக்கீரமுங்
கோருமாமரு தத்தர்கொடுப்பரால். (19)

ஈசனேசர்க ளெய்தலுமெண்ணிலா
வாசையோடு மடிபணிந்தாங்கவர்
மாசிலாதக மண்டலமானதர்
தூசுமீந்து சுவையறிந்தூட்டுவார். (20)

ஆனகாணிக் கமரிலையாங்கவர்
தீனர்தேடித் தினமலைந்தேங்குவார்
யானழைத்திடி யாதுலருக்குநீ
யேனளித்தனை யென்றிடுகூச்சலே. (21)

வேறு

எழுவகைத்தோற்றமென்ன வியம்பியதேவர்மக்கள்
பழுதுறுவிளங்குநீர்வாழ் பறவையூர்வனமாம்பாரிற்
றழுவுதாபரங்களெல்லாந் தம்மிருவினையினாலே
முழுதுணர்மனிதராவார் முற்பிறப்பறியலாமே. (22)

மித்தையாமுலகிற்றோன்றும் விடையமைம்புலன்வீபூதி
மத்திவைகழற்காயன்ன மனநிலைவளர்சைதன்யக்
கர்த்தன்பாற்குழவியாடல் காட்டினுமனைபானையம்
வைத்ததுபோலவிண்ணோர் மாநிலத்திருப்பரன்றே. (23)

இடம்பொருளேவலென்று மயிர்க்கையினியல்புக்கேற்பத்
தடம்பணியன்னசாலை தானமூவகையீரெட்டு
மடம்படிக்கிணறுநந்த வானம்வாயுதவிவாணாட்
டிடம்பெறத்தீர்த்தவாரி செய்குவர்மனிதசென்மம். (24)

உற்றவர்க்குதவான்வேத முணர்ந்தவர்க்கிரங்கான்ஞானங்
கற்றவர்தமக்குமீரக் கைவிதிர்த்தறியாரேகைக்
கற்றைவாற்றளிரொன்றீயாக் கண்மணிகராட்டன்செவ்வாய்
பற்றிடக்கொடுக்குமந்தோ விலங்குடைப்பான்மையம்மா. (25)

இரும்பினின்றெளியைமூடு மியற்கைபோல்லோபமென்னும்
பெருந்திறற்குணத்தாலுள்ளம் பிழையுடைப்பேதையாகி
தருமவசையறியாப்பாரிற் சஞ்சரச்சவமாய்த்தோன்றுங்
குரும்பநீர்வாழுஞ்சாதிக் குணமெனக்தறிக்கலாமே. (26)

நசையுரைமாந்தர்கோட்டி நண்ணிடானலனைத்தீங்காய்
வசையுரைக்கசடர்க்கோதும் வாத்தியாய்வனசமாதி
யிசைபெறுஞ்சுகந்தங்கொள்ளா திரைச்சியையுவக்குமீரப்
பசையிலாநெஞ்சத்தானைப் பறவையென்றியம்பலாமே. (27)

தன்னிலமுணவுசெய்யான் றனிவழிநடக்கக்கூசா
னன்னிதிப்பொருட்டான்மானம் ஞானம்புன்னகையுநோக்கான்
பன்னரும்பழிக்குமஞ்சான் பாவமென்றுணரான்பாவி
தன்னையூர்வனங்களென்னச் சாற்றலாந்தரணியோர்க்கே (28)

நானெனுமகங்கண்ணேறி நடுநிலையுணரான்செய்ய
வானமும்புவியுந்தாளுய் மனவரசாக்ஷிதூண்ட
பானலமொழியராசைப் படுகுழிகுளிப்பதல்லால்
ஞானமாங்கனியைநோக்கான் ருபரநடக்கையம்மா, (29)

பொன்னிலத்தரசன்றனே பூதலமருதமாக்க
டன்னிணையாகுமென்றன் மற்றவர்தகுதியாமோ
மன்னியகுணமுமேன்மை வாழ்க்கையுமருவுஞானந்
துன்னியவறமுந்தெய்வந்தொழுதலுந்துணைகொண்டார்க்கே.

வேறு

மையளாவு வனத்தெழு மாமுகி
லையமோது நறுங்கழை நாநில
மூய்யவாரி யுரத்தெழ வும்பர்கோன்
றுய்யவார்சிலைக் கம்பெனத் தோன்றுமால். (31)

தூக்கனுன்மீ துளைத்தெழு தெங்கின்மேண்
மூக்கினுலின் முடைந்தது முன்புகீழ்
நோக்கவாழை நுணிக்குருத் தானதுப்
பாக்கியாமெனப் பஞ்சரத் தஞ்சுமால். (32)

பூகமந்தியைப் பொன்னலர் தெங்கின்மே
லுகங்கூவியிந் நாட்கரும் புண்ணாசீ
ரேகுமென்னலும் ஞண்டுட னேகுங்காற்
காகங்கூவக் கட்கங்கலங்குமால். (33)

ஆர்ந்தவான மளாவிய தெங்கின்மேற்
சேர்ந்தவோரை திகழ்ந்தகம் பத்திடை
தேர்ந்தமாதி னிதாடலுந் தென்றலா
னூர்ந்தகேதனத் தம்பமு மொக்குமே. (34)

வித்திமுத்தம் விளைத்தெழும் வேழமேற்
றத்தியேறுஞ் சசிசக ருருங்கா
லத்திநத்த மமர்பரி யாஞ்சுகக்
கர்த்தன்வேள்குடைக் காம்பெனத் தோன்றுமால். (35)

பாரின்வாழைப் பதிவளர் பாருளா
ரூரும்பாம்பிதென் றோதுவா ரென்றுகண்
சோருநீரைத் துடைத்துநின் றேழிபாற்
சேருநாளெனச் செப்புமாண் டேரையே. (36)

கன்றுணுது கனைத்திழி மேதிபா
லன்றுணுதிள வன்னத் தொடும்பெடை
துன்றுதாமரைத் தொட்டிலிற் றூங்குகாற்
றென்றலாட்டுவா தேனிசை கூட்டுமே. (37)

தண்டுலாவிய தாமரைத் தண்மலர்
விண்டவாயில் வெறியுண மேவுசேற்
கெண்டைதாவக் கிளர்த்தெழுஞ் சைவலங்
கொண்டநீர்குடைக் கோதைய ரொக்குமே. (38)

வேறு

சந்தனவனத்திலோர்வ சந்தனைச்சுமக்குமுன்னி
வந்ததையறிந்துவேடர் வந்தனர்மருதமின்னுர்
தந்தனதுவர்வாய்முத்தந் தந்தனுட்ரளஞ்சுட்ட
வுந்தினவுவர்வாயெல்லா முழவர்களீட்டமன்றே. (39)

அருந்தினைவிளைக்குநாகத் தருந்தினையளவுங்காணு
மருந்தினையிடைக்குச்செந்தேன் மாறினிதளக்கும்வானோர்
முருந்துரனகையார்செய்ய முகந்திருத்தணிகண்ணுடி
தருந்திறற்பாலையெல்லாந் தண்மலைக்கிழவரம்மா. (40)

கரும்பினைச்சிதைப்பாராலைக் கடைந்தசாறடுதேன்பாகாய்
உரும்பதத்தடைந்துவானோர் வெளவிளர்வரம்பிலாதார்
பெரும்புனலிரதம்வேட்டுப் பிஞ்ஞகனிகழ்ந்ததாழை
யரும்பவிழ் நெய்தலெல்லா மடவியர்பெருக்கமன்றே. (41)

குரவைசெய்குறிஞ்சிமாதர் குரலிசைக்குழலாமென்ன
வருசினையிளைமையீற்ற மருதமாமகளிர்பாதப்
பெருஞ்சிலம்பொலிப்பக்கேட்டுப் பெடையெனத்துருவிக்கா
தருஞ்சிறையன்னங்காமத் தடர்சுரமடைந்ததன்றே. (42)

வேறு.

அண்டர்நாயகன்மாதுலப்பருப்பதத்தாழி
யுண்டகார்பொழிநீத்தமக்கடலுடனுறவாய்த்
தண்டபாணியையின்றவன்சடைநதித்தகமை
கொண்டவாற்றிறைற்சிறந்ததுகோசலநாடு. (43)

வேறு.

அங்கவரவர்களேத்து மாலயவிலக்குமாடற்
பொங்கலும்விழாவுமேறு பொருத்தலும்புடைத்தபேரி
சங்கினமேளதாளஞ் சந்ததம்வதுவைக்கார்க்கு
மங்கலம்பொருந்திவாழுங் கோசலவளநாடம்மா. (44)

நாட்டுச்சிறப்பு முற்றுப்பெற்றது.

நகரச்சிறப்பு.

மருமலர்க்குழலினர் வதனமொப்பதாய்
முருகெழமுகையவிழ் முளரிதன்னிற்செந்
திருதவிசிருந்தவா தெளிந்தவாட்சியாய்
வருதிருநகர்வளஞ் சிலவழுத்துவாம். (1)

பொன்னியற்கோயிலும் புரிசைமாமகந்
துன்னியமானமுந் தூவிச்சோதிவான்
மின்னிடுமாளிகை விளங்கும்வீதியு
மன்னியபுவிமகண் மகுடமொக்குமே. (2)

அளவருஞ்சிகிரிவா னடர்ந்துநிற்றலாற்
கிளர்நிலவொழுகுவான் கீண்டவாயில்வாய்த்
தளர்வறநுழைதலாற் றரணியோரின்னம்
வளர்பிறைதேய்பிறை வழங்கலானதே. (3)

அந்தணர்வீதியு மரசர்மாளிகைப்
பந்தியும்வாணிபம் பரவும்வீதியுங்
கந்தமுநறும்புகை கமழுநாடகப்
பைந்தொடிவீதியாய்ப் பலவும்பாங்கரோ, (4)

வேறு.

வேதவோசையும் வேள்வியினோசையுங்
கீதவோசையுங் கிம்புரிவீணையின்
றுதவோசையு நாமஞ்செய்நாடகர்
பூதவோசையு மெங்கும்பரவுமால். (5)

துய்யயாகந் துலக்குவரோசையு
மையராரவிக் காய்வருமார்வமுஞ்
செய்யவேதஞ் சிறுவர்களோதலு
முய்யுமந்தணர் வீதியென்றேதுவாம். (6)

ஏகதந்தனெழிலிழுக் கெய்துமேற்
போகிநாகம் புகழ்பெறுங்கோட்டினுற்
சூகரத்தெயி றொன்றியபாரையெண்
ணுகமேந்துநகைப் பெமக்கென்னுமால். (7)

பந்தியிட்டபரித்திரள் பானுவா
ரந்திவெற்பிருநான்கினி லாக்கும்யாங்
குந்தியிட்டுக்குதிப்பதங்கொள்ளுமேன்
முந்துநான் குமுகூர்த்தமென்றேதுமால் (8)

செய்யவானஞ் சிதைத்தெழுஞ்சென்னியாற்
கொய்யுங்கற்பகத் தையெனக்கூவிற
ரையன்பேரன் றயில்வதொழிந்துதாழ்ந்
துய்யக்கூன்பிட ராமென்றதொட்டகம். (9)

ஆங்கடைந்தவர்க் கன்னிறமாக்குமோர்
பாங்குளாரைப் பலரெனப்பற்றுசீ
ரோங்கும்வாணிப முற்றவர்மாளிகை
தாங்குமின்னகைத் தார்மணித்தம்பமே. (10)

மழைமுகிற்குழன் மங்கையைவானுளா
ரழகெலாந்திர ளாக்கியடிமுத
லுழைகுயிற்கிளை யோதிமமுற்றசீர்
பழகிப்பின்னர் படைத்தனன்பங்கயன். (11)

வேறு.

மங்கையர்மொழியுஞ்செவ்வி மாதழும்மழையினலுந்
துங்கமாமறையோர்யாகத் தூமமுஞ்சுருதியார்ப்பு
மங்குலமுழக்கமென்ன மாமரக்குயில்களெல்லாந்
தங்களின்ஞெலியைப்பேசுந் தத்தையென்றளித்தபோலும் (12)

பொன்னணிமடவாரெல்லாம் புருவவிற்குனித்துக்காவி
மன்னியகடைக்கணம்பான் மைந்தரைமலைந்தாரென்னக்
கன்னலைக்குனித்துக்காமன் கடுஞ்சரக்கமலம்பூட்டி
யன்னவர்மலங்கச்செய்பு மமரலாதில்லையம்மா. (13)

குரும்பைமென்முலையாரெல்லாங் கோல்புடைக்குழாத்தினூடே
வரம்பிறவிளைஞராடு மலர்விழிபுதைத்துவண்ணன்
றுரையெனப்புகுதச்சீறித் தோகையர்துரத்தச்சியந்
தருசிறுகுறள்போலோடத் தந்தையர்மகிழ்ச்சிகொள்வார். (14)

மொய்த்ததோர்சீரார்செம்பொன் முடையுருட்சகடமின்றூர்
வைத்திடுந்தரளவீட்டை வரம்பிறவழித்ததென்றே
தத்தையரமுதுசீறத் தாமரைத்தடக்கணீன்ற
முத்தினைத்திரட்டிமுன்போன் மூடிவைத்தகல்வரன்றே. (15)

ஊடலுற்றெழுந்தமாதோ ருயர்சிலைக்கெதிரேநிற்கத்
தேடியங்கிழலையன்ன டிருவடியென்னத்தாழக்
கூடியசினங்களோடக் கோதையாணகைக்கக்கண்டே
யாடவர்க்கணியேறஞ்ஞ னளவிலாதுவகைகொள்வான். (16)

திரைகடற்கடந்துசெம்பொன் றேடுவதியற்கையென்ன
வுரைசெவிபுகுதாமுன்னம் பிரிந்ததாயு நகிச்சோரும்
விரைசெறிகுழலினளைத் தேற்றலும்விழித்துநீங்கள்
பொருள்கொடுவரவுமிந்நாட் பொருத்தயானரக்கியென்றுள. (17)

தன்னிழலாளன்பூணிற் றையலென் றுணர்ந்துசீறி
னென்னலிற்கவர்ந்தாயின்றுந் தொடர்ந்ததுநெயோவென்ன
தன்னடிகொண்டுதாக்கத் தாளிணைவணங்குங்காலை
யென்னடியினிதோவன்ஞ ளிணையடிதொழுவாற்கென்றுள். ()

அம்பரமடர்ந்தமானத் தாயிழையுலாவச்சந்த்ர
பிம்பமென்றடர்ந்தகாலைப் பின்னிடைகாட்டப்பேதை
வம்பவிழ்குழலைத்தோகை மயிலெனவெருவித்தன்மெய்
கம்பமுற்றகன்றுவானங் கரந்ததுகரும்பாம்பம்மா. (19)

கலவிதோய்ந்தெழுந்தமாது கலைமதிநிலவுகாந்தன்
சிலைபடரங்கைகீழற் சேலையென்றெடுக்கநோக்கி
மலைவலிபுயத்தானுள்ள மகிழ்வொடுமாதுக்கீந்த
கலைபுனைந்தமளிமீது கண்வளராடல்செய்வார். (20)

துப்பெனச்சிவந்தசெவ்வாய்த் தொண்டையோர்வடுவாத்தும்பி
யெப்பொழுதணைந்ததென்று ளிணைமுலைமகரமேரு
தொப்பருங்குடத்திறைரை யுயர்நகமதியமேய்ந்த
வப்பொழுதஃதுமென்று ளளவிலாதுவகைபூத்தார். (21)

காந்தனென்கரத்தாராடக் கருங்குழலுவிதோய்ந்த
சாந்தமுங்கழுவுவெந்நீர் தரும்புனலாறுபாய
தோய்ந்ததன்புலவுநீங்கித் தொடுகடல்கமழுமென்றுன்
மாந்தளிரனையார்தங்கண் மிகுதியைமதிக்கலாமோ. (22)

குலமயிலனையார்கொங்கை குங்குமச்சுவடுதோய்ந்த
மலைவலிவயிரத்திண்டோண் மார்பிடைக்களபத்தன்னுர்
சிலைமலிபணிகடாழ்த்துஞ் செவ்வியாய்த்தினமுஞ்செல்லும்
பலபலவினையோரென்றுற் பரிபவமெவர்க்காமம்மா. (23)

எள்ளிடைப்புகுதாக்கொங்கை யிணைபொருதிடையென்றே
கள்ளுணும்வெறியார்வண்டர் கருங்குழற்குதித்தாற்காம
வள்ளலேமுறையோவொல்லைவாருமென்றழைப்பார்போலத்
தெள்ளுநூபுரங்களார்ப்பத் தெரிவையர்பயில்வரம்மா. (24)

கோலமாமதத்தகைம்மாக் கோடெனத்திரண்டுவிம்மிச்
சாலவுமடர்ந்தகொங்கைத் தானையையிளக்கிக்காட்டக்
காலினைத்தொழுவாரென்னுர் கரங்களைப்பணிவார்வெப்பம்
பாலிதுமொழிவோமென்னப் பற்றுவாரிளமைப்பாலர். (25)

வேறு.

வாசவன்பதி மடந்தைய ரனுதினம் வருவார்
மாசிலாமணி மேடையின் மாதரை மாவி
வீசுபாரிசா தந்தனை முடித்திட விரைசேர்ப்
பூசைமான்மதக் குழம்பினைப் பூசுவர் புவியோர். (26)

திருந்துவீணைதம் மடறிஃ தஃதெனத் தெரியா
தருந்துதேனிசை பாடுவ தவரவர்க் கியற்கை
பொருந்துவிஞ்சைய மாதர்பூ பாளமும் புவியோர்
வருந்துதேவகாந் தாரியும் பழகுவ வழக்கம். (27)

என்னவிந்நகர்ப் பெருமையை யியம்புதற் கெளிதோ
வன்னமூர்தரு மாரணன் பதியணி யாவுங்
கன்னிசூடிய கடவுடன் கைலையார் கடுவாய்ப்
பன்னகத்தனிப் பாயலான் பதியெனப் பணித்தால். (28)

வேறு

மங்கைவைத்த மருமலர்மல்லிகை
சங்கைபொத்த தனியரும்பீன் றகாற்
பொங்கலிட்டுப் புதுமணவாடல்செய்
மங்கலப்பணை மாநகரெங்குமே. (29)

நகரச்சிறப்பு முற்றுப்பெற்றது.

ஆக விருத்தம் 73.

பாலகாண்டம்.

விண்ணளாவிய மாளிகை மடந்தையர் விளக்குஞ்
சுண்ணமேற்பநன் மலர்கொடு சுரர்குல மடவார்
நண்ணலாலதிற் சிறந்துள தயோத்தியந் நகருக்
கண்ணலாமச னவன்மகன் றசரத வரசன். (1)

செப்புநால்வகைச் சேனையோ டெண்டிசைச் சேனார்
சர்ப்பலோகமுஞ் செலுத்திய சக்கரத் தோனே
யிப்புவிக்கொரு கற்பகத் தருமா மிசைப்ப
வொப்புமேலிலா வேந்தர்கள் வேந்தனென் றுரைப்பார். (2)

மறையும்யாகமும் வேதியர் மனைதொறும் வழங்க
நிறைசெய்கோலினை ரளகைகயி னுதனை நிகர
வுறையுமேழிய ருழுதொழிற் பெருவுள மோங்க
வறுபதாயிர மாண்டர சாண்டிடு மந்நாள். (3)

அண்டர்மாதவ ரோதிட வேதனோ டவருங்
குண்டையூர்ந்தவ னின்னரு ளாற்கரங் குவித்து
விண்டுவைத்தொழு தரக்கர்தங் கொடுமையை விளம்பக்
கொண்டல்வண்ணனும் பொன்மலைக் கெழுந்திடக் குறித்தான்.

வேறு.

அன்னவாகனத்தோனந்தி யண்ணலாங்கடவுளாதிப்
பன்னகசயனத்தானும் பாகசாதனன்விண்ணோர்க
ளுன்னருந் தவத்தோர்வேண்ட வுளமகிழ்ந்துதயஞ்சூழ
மின்னணிபரப்புஞ்செம்பொன் மேருமாமலையில்வந்தார். (5)

அண்டர்கண்முனிவரெல்லா மபயமென் றரற்றியையா
கண்டகவரக்கர்தம்மாற் கடுந்துயரடைந்தோமென்ன
முண்டகக்கரத்தாலாற்றி முக்கணனுகந்துநோகப்
புண்டரீகக்கணனு மகிழ்ந்திவைபுகறலுற்றான். (6)

செந்திருமடந்தைநாதன் றேவர்மற்றவரைநோக்கி
யந்தவாளரக்கர்தம்மை யகற்றுவோமஞ்சவேண்டா
மிந்திரன்வாலியென்ன விரவிசுக்ரீவனென்னத்
தந்திடுந்துணைவராகத் தானங்கிட்கிந்தைதன்னில். (7)

வானவரமுசமெல்லாம் வானரப்படைகளாகச்
சேனைகாவலனுநீலன் செந்தழற்கடவுளம்ச
மானவுபேந்த்ரன்வாலி மைந்தனங்கதனுந்தந்தை
யானவன்சாம்பவானென் றமைச்சனைத்தருகவாங்கே. (8)

பொன்னுலகிதுவாமென்னப் பொலிவுறுமயோத்தியாளு
மன்னவன் றசரதன்செய் மகப்பயனடையும்வண்ணம்
பன்னகந்திகிரிசங்கம் பரிவுறுந்துணைவராக
வன்னவன்மகவாய்வந்தவ் வரக்கரையொழிப்பேனென்றான்.

இன்னவரின்றுரென்ன வெம்பிரானியம்பியீசன்
றன்னகங்குளிரநோக்கித் தற்பரானந்தமூர்த்தி
யுன்னதுகருணையல்லா லொருசெயலெவர்க்குமுண்டோ
பன்னகாபரணவென்னப் பரிந்திவைபகரலுற்றான். (10)

அஞ்சனைகுமரனென்னு மநுமனின்னமுசமாயின்
வஞ்சகவரக்கர்தம்மை மாய்ப்பதுசரதமாகு
நஞ்சுறுகளனேயென்ன நாதனுமமைதல்கண்டு
விஞ்சுபூமாரிதன்னை விண்ணவர்பொழிந்தாரம்மா. (11)

சங்கபாணியுமிவ்வாறு சாற்றியச்சபையைநோக்கி
யிங்ஙனநடந்தவெல்லாம் வெளியிடாதிருக்கவென்றே
யங்கவர்செல்லவேத்து மவரவர்க்கன்புகூறிப்
பங்கயமலர்க்கணனுங் கலுழன்மேற்பாதம்வைத்தான். (12)

தந்தையும்பதிக்குவந்தான் சாரதைக்குரைக்கலுற்றான்
கந்தரங்கறையுளானுங் காதலிகளிக்கச்சொன்னான்
நந்தணிகரத்தானுங்கே நடந்ததுநடக்கவேண்டு
மந்திரமுரைப்பக்கேட்டு மலர்மகண்மகிழ்ந்தாளம்மா (13)

சீர்பெறுமயோத்திவேந்தாந் தசரதன்சிறுவரில்லா
வோர்பெருங்குறைவாற்சிந்தை யுடைந்தவன்குலத்துக்கெல்லா
மோர்பெறுங்குரவனை வசிட்டனையிறைஞ்சியென்றன்
பார்பெறும்புதல்வரில்லாப் பாவியென்றிகழப்பட்டேன். (14)

ஆதலாலினியான்செய்யு மரசுடைப்புவியையெல்லா
மோதருங்குருவேமெய்யா யுன்றனக்களித்தேனுள்ளம்
பேதமில்லாதவானப் பிரத்தவாச்சிரமங்கொள்வே
னீதலாதெனக்குத்தேற வியம்புதற்குளதோவென்றான். (15)

காலமூன்றுணர்ந்தோன் ஞானக் கண்ணினானோக்கிமன்ன
தாலமூன்றுளவல்ல தனையரைப்பெறுவதற்த
மேலதாம்புத்ரகாம வேள்வியைவிளைத்தாலந்த
மூலமாயடைவாயென்ன மொழிந்தனன்முனிவர்கோமான். (16)

அருந்ததிகணவன் கூற வரசனுமகிழ்ந்துநோக்கி
வருந்தனியமைச்சரோடும் வகுத்தனனவரும்வேள்வி
திருந்தவச்சாலைவேண்டுந் திரவியமமைத்துவாரே
ரருந்தவர்மறையோர்வேந்தர்க் கனுப்பினன் யாகவோலை. (17)

ஒருகலைக்கோட்டுவேத வருமுனிவரன்பாலெய்து
முருகலைக்கோட்டுக்கோங்கின் முலையினர்தம்மைமூதோ
ரிருகலைக்கோட்டுளாரென் றிசைந்துவந்திருந்தான்யாகந்
தருகலைக்கோட்டியென்னத் தசரதன்மனையிற்புக்கான். (18)

காசிபன்பரத்துவாசன் கௌதமன்கலசத்துற்றான்
கோசிகன்பிரகுதூர்வாசன் குச்சன்போதாயனன்மா
வாசுலாயனந்திராகி யாயனனுபத்தம்பன்
றேசிகமுனிவோரெல்லாஞ் சேர்ந்தனரயோத்திதன்னில். (19)

பூசுரர்முனிவர்தூய புரோகிதவசிட்டன்சூழ
மாசிலாமனைவியோடு மன்னியசாலைநண்ணி
யாசிகண்மறையோர்கூற வங்குலித்தருப்பையார்ந்து
தேசிகன்மனுக்களோதத் தசரதன் செய்தான் யாகம். (20)

விண்ணவருய்யும்வண்ணம் வெந்தழற்கடவுள்பூத
வண்ணமாய்ப்பாயசத்தை மன்னன்முன் வைக்கவாங்கி
யெண்ணருமுவகையோடும் வசிட்டனையிறைஞ்சிக்கேட்கப்
பண்ணமர்மொழியாரான பன்னியர்க்களிப்பாயென்றான். (21)

கண்டதைப்பாதியாக்கிக் கௌசலைக்கீந்தான்பின்னே
பண்டுபோற்பகர்ந்துகைகை பருகிடக்கொடுத்தான்மீதத்
துண்டமுமிரண்டுகூறாய்ச் சுமத்திரைக்களித்தானவ்வா
றுண்டபின்யாகமுற்ற வுவகையோடிருந்தாரம்மா. (22)

தேசிகன்மறையோர்சேருத் துவிசனர்தேசதேச
வாசிகள்வேலைமாக்கண் மனைவியர்க்கேவல்பூண்டோர்
நேசிகளெவர்க்கும்வேண்டு நிதியங்கணல்கியான்றோ
ராசிகளுவந்துகூற வரசன்றன்னில்லம்புக்கான். (23)

வேறு.

மனைவியர்கண் மகவுடைய ராளுரென்ன
மன்னவனு மகிழ்ந்துகுரு வசிட்ட னேடு
முனதருளாற் புதல்ருவள ஞனெனென்று
ணுகந்தவனு மாங்கவருக் குரைத்த வண்ண
முனையவிழா மலர்முடித்துப் பொற்காப்பிட்டு
முதுநீராஞ் சடங்குகளு முறையே செய்தான்
பனிமொழியா ரீரைந்தாங் திங்கடன்னிற்
பாருய்ய மகவுபெறும் பருவங் கொண்டார். (24)

ஆதியாஞ் சித்திரையி னவமியோரை
யலவனுள் புனர்பூச மைங்கோ ளுச்சம்
பேதமிலா நற்ருன மற்ருேர்மேவ
பேருவகை விண்ணவர்பொன் மாரி பெய்ய
வேதியர்க ளாரணத்தின் முறையையோத
வெண்சங்கம் பேரியொடு முரசமார்ப்ப
மாதவனைத் தசரதன்செய் மகப்பேருலே
மங்கைநல்லாள் கௌசலையு மகவா யீன்ருள். (25)

பொன்னனையாள் கைகேசி மகளுய்ச்சங்கம்
பூவைசுமுத் திரைமாது புதல்வ ராகப்
பன்னகமுந் திகிரியும்வந் தவரிப்பப்
பாராளு மூத்தவனே யிராம பத்ரன்
பின்னவனே பரதன்மற் றிருவர்தம்மிற்
பெரியவனே யிலக்குவன்சத் துருக்கன் மற்ருேன்
மன்னியதோர் சனனமுதற் சடங்கோரைந்து
மக்களுக்குச் செய்தரசன் மகிழ்ச்சி கொண்டான். (26)

இப்புவியோர் பாடைகளு நீதிநூலு
மியம்பரிய கலைஞான மறுபா ஞன்கு
மொப்பில்லாக் கலைப்பொருளு முணர்ந்தபின்ன
ருபநயனத் துபதேச முடையா ராகி

செப்பரிய தனுர்வேத முழுதுங்கற்று
செருக்குதவு தெய்வமந் திரமும் பெற்றே
யெப்புவியுங் கீர்த்திபெறு மைந்தரெல்லா
மீராறு வயதினுக்குள் ளேற்றம் பெற்றார். (27)

வேறு.

தேர்பரியானையேற்றந் தெளிவுறப்பழகித்தெய்வக்
கார்முகம்பழகுங்காலை காதகிகூனிகோப
மூர்தரவிளையாட்டெய்தி யுலகமேமுண்டாமென்னப்
பேர்பெறுமிராமச்சந்த்ரன் பெரும்பதியிருக்குநாளில். (28)

தவமுனிவிசுவாமித்ரன் றசரதனிடத்தினண்ணி
யவிபெறும்யாகந்தன்னை யரக்கராற்றடைபடாது
நவமிகுஞ்சிலையிராம நாதனாற்காக்கவேண்டு
முவகையோடனுப்பாயென்ன வுலையிடுமெழுகையொத்தான்.

தகமுனிவசிட்டனுன்றன் றனையருக்குவமையுண்டோ
சுகமுறுங்கால நேர்ந்த துறவியோடனுப்பாயென்ன
வகமகிழ்ந்திராமனோடி லக்குவன் றன்னையாக்கு
மகமதுகாத்துவாவென் றியம்பினான்மன்னர்கோமான். (30)

தந்தையிவ்வாறுகூறத் தனையருந்தாதைதாளில்
வந்தனம்புரிந்தேயாசான் மலரடிதொழுதுபோற்றி
வந்தமாமுனிவன் பின்னே வனத்துளபெருமையெல்லாஞ்
சந்ததமுரைப்பக்கேட்டுச் சரயுமாநதியைக்கண்டார். (31)

அந்நதிகடந்துசெந்தே னரும்பிளமலர்கடுவப்
பொன்னவிர்த்தளிர்களோங்கும் புனிதமாவனமும்பாரு
வுன்னியுன்சகடுமூரு முயர்மலைக்கப்பாலுப்பர்
மன்னியவங்கநாட்டின் வளமெலாம்பகரலுற்றான். (32)

தக்கனும்பணியாமென்றே சம்புவையிகழ்ந்துசெய்யு
மிக்கதோர்யாகந்தன்னில் வினைவுறும்வினையினான்மூன்
றக்கனும்வெகுண்டியாக மழித்தபின்னவனுமிங்கே
தெக்கணாமூர்த்தியானான் செய்தொழிலடங்கிற்றன்றே. (33)

வானவரெல்லாங்கூடி மான்மகன் றன்னையேவப்
போனவன் மலரம்பாலே புடைத்தலும்போத நாத
னனவனுதற்கண் ணோக்க வன்லிடும்பஞ்சுபோல
மீனவன் சாம்பலானான் விண்ணவர்தொழுதாரம்மா. (34)

கருமுகில்வண்ணனதி யாவருங்கனிந்துவேண்ட
மருவிலாயாகந்தேற்றி மாறனையனங்கனுக்கிப்
பருவதராசனீன்ற பார்வதிதன்னைவேட்டுப்
பெருமையையடைந்தாரந்தப் பெற்றிசேர்வனமீதென்றான். ()

அங்கதன் பெருமையெல்லா மறைந்தபின்னவர்களோடுந்
தங்கினனுதயகாலத் தனிக்கடன் முடித்துச்சென்று
பொங்கியவடவைத்தீயைப் புகையெழத்தீய்க்குமத்தீ
யிங்குளதாகுமென்ன வியம்பிடும்வனத்திற்புக்கார். (36)

வலியுளாரெனினுமிந்த வன்சுரவருத்தந்தாங்கா
ரெலையிலாப்பிரமமந்த்ர மீங்கிவர்க்குரைப்பாமென்னத்
தலைவனுக்கோதத்தம்பி தமையனலுணர்ந்தான் விஞ்சை
பலையதிபலையாலந்தப் பாலையுங்குளிர்ந்தத்தன்றே (37)

தெள்ளியமதிவல்லோருஞ் சென்றகாற்றவனைநோக்கி
விள்ளருமடவிநேர்மை விளம்புவாயென்னவேந்தன்
வள்ளலேயிதனைய ந்நாள் வசுவனமென்பாரிப்போ
கொள்ளிவாயரக்கிகொண்ட கொடுமையையுரைப்பக்கேண்மோ

இயக்கரிற்சுகேதுவென்பா னியற்றிய தவத்தால்வந்த
கயற்கணளிரண்டைந்நூறு கரிவலியுடையாடன்மேன்
மயக்கிறற்சுந்தன்வேட்டு மாரீசன் சுவாகுவென்னும்
பயக்கருவினைகைக்கொண்ட பாலர்கடம்மைப்பெற்றாள். (39)

மலைமுனிகோபத்தீயான் மடிந்தனள் கணவனென்றே
சலங்கொண்டாளிளவலோடுந் தவத்தினுக்கிடையூறுக்க
வலைகடலுண்டான் சாப மறைந்தனரக்கராகிச்
சிலைவலான் சுமாலி தன்னைச் சேர்ந்தனள் சேயுமானர். (40)

மற்றவள்கேகசென்னு மடக்கொடி தன்னையீன்றாள்
பெற்றவன் புதல்வியோடும் பெருவரன் றருவுங்காலை
யற்றைநாண் மதிலிலங்கைக் கரசனோ தபேரனென்றே
கற்றைவார் குழலாளோடுங் கனன்றிவைகழறலுற்றான். (41)

குருமுனிபரத்துவாசன் குமரியைவிசுவசென்பான்
மருவினனவளுமீன்ற மந்திரியிவனைவெல்ல
தருமலர்க்குழலாயந்தத் தபசியைப்புணர்வாயாயின்
பெருமையும்வலியுமுள்ள பிள்ளையைப்பெறுவா யென்றான். ()

தந்தையின்னுரையின்வண்ணந் தவமுனிவிசுவன்றன்னைச்
சந்ததம்புணர்ந்துதோலாத் தசசிரன்முதலாயீன்று
ளந்தவாளரக்கனுண்மை யவனியிற்படர்ந்தாலன்ன
மந்தரப்புயத்தோயிந்த வனமெலாந்திரிகின்றாளே. (43)

தாடகையவள்பேரிந்தத் தடவனந்தன்னைக்கொண்டாள்
வாடினேம்யோகந்தன்னை மறந்தனமகத்தைவிட்டோந்
தேடருங்குணத்தோயென்னச் செப்பினன்முனிவனப்போ
கோடியவெயிற்றிற்றேய்ந்த குருதிவாயரக்கிவந்தாள். (44)

வந்ததோரரக்கிதன்னை மாதெனமலையாநின்றான்
சிந்தையைமுனிவன்றேற்றச் சீதரன்சிலைநாணேற்றி
யுந்தியபகழியொன்று லுரமழிந்துதிரவெள்ளஞ்
சிந்திடத்தரையில்விழ்ந்தா டேவருங்கவலைதீர்ந்தார். (45)

தாடகைமுடிந்தாள்விண்ணோர் தருமலர்பெய்தாராசி
பாடியமுனிவோர்தெய்வப் பகழிமந்திரங்களெல்லா
மேடவிழ்மலர்த்தார்வேந்த னிளவலுக்கருளப்பெற்றே
கோடியசிலைவல்லாருங் கோசிகனுடனேசென்றார் (46)

வானவர்தருவைமானும் வனத்திணீரரவங்கேட்டு
ஞானநாயகனேயிந்த நதிவளமுரைப்பாயென்ன
மானசமடுவிற்றோன்றும் வரநதிசரயுவோடு
மானகோமதியாறென்ன வருந்தவனுரைக்கலுற்றான். (47)

காதமுமிரண்டுசென்றார் கௌசிகநதியைக்கண்டு
மாதவமலர்வாய்ச்செந்தேன் வழிபொழில்வளமுந்தூய
சீதமாநதியின்சீருஞ் செப்புவாயென்னக்கேட்டுக்
கோதறுங்குணத்தோயென்றன் குலத்திலோர்கொற்றவேந்தன்.

குசன்வழிவழியாய்வந்த கொற்றவன்காதியீன்ற
வசையிலாக்கௌசிகன்பின் வந்தகௌசிகையாடன்னை
யிசையிருசிகனும்வேட்டாங் கிருந்தவமடைந்தானென்றே
நசைபெறப்பிரமனாலே நதிவடிவானாளென்றான். (49)

பின்னவரோடுஞ்சென்றுன் பெருவனங்கண்டுமன்னர்
மன்னவாவிதனிற்செங்கண் மாறவம்புரிந்ததென்றே
யன்னவரோடுஞ்சற்றே யகன்றொருவடவிதன்னின்
மன்னிமுனிதனின்சீரை வள்ளலேயுரைப்பேனென்றுன். (50)

காசிபன்மனைவியாகக் கன்னியாம்பருவந்தன்னி
லீசனைநோக்கிநோன்பை யியற்றியவனமீதென்றே
தேசுறுதொடையல்பூணுஞ் செருக்கிஞலிகழ்ந்தானென்றே
வாசவன்றனைத்தூர்வாசன் சபித்திடுவனமீதென்றுன். (51)

சோணமாநதியீதிந்தத் துறையினுக்கருகேதோலா
வாணவமுடையமைந்த ரடைந்திடவதிதியென்பா
டாணுவைநோக்கிச்செய்த தவத்திஞலடைந்தாளென்றே
சேணுளார்க்கருளவந்த சிறுவர்களோடுஞ்சென்றுன். (52)

பன்னருஞ்சுரும்புபாடும் பலமலர்ச்சோலைதன்னின்
மன்னிமுரிதனிலந்நாண் மாவலியாகஞ்செய்ய
வுன்னிமுனதனையும்ப ருரைத்திடவுலகேழுண்டான்
றன்னடிப்பயஞுகத் தலத்தினையடைந்தானையா. (53)

ஆதலாலிதனில்யாக மாற்றலேபுசிதமென்றுன்
சீதரன்மகிழ்ந்துசாலை செய்தனன்சரக்கூடாக
மாதவமுனிவோரெல்லா மகந்தனைத்தொடங்குங்காலைத்
தீதறத்தம்பியோடுந் திரிந்தனன்றிகிரிபோலும். (54)

துய்யமாமுனிவன்யாகந்தொடங்கிஞன் சுவாகுவோடு
மெய்யமாரீசனுங்கு மேவலும்வீரராம
னையநீயஞ்சேலென்னச் சுவாகுவையழித்தான்கண்டு
நையுநெஞ்சொடுமாரீச னனிகடலொளித்தானன்றே. (55)

கூடிஞர்மேதயாகங் குறைவறமுடித்தாராசி
பாடியமுனிவோரெல்லாம் பார்த்திபன்மகனுக்கீந்த
தேடரும்பகழியோடுஞ் சென்றனர்செறிந்தகானி
னீடியதுரைப்பக்கேட்டு நெடும்புனற்கங்கைகண்டார். (56)

வரமுனிவிசுவாமித்ரன் மன்னவன்மகனைநோக்கிச்
சுரநதிவந்தவாறுந் தொடுகடலானவாறு
வரம்பறுசகரன்மைந்தர் வானுலகடைந்தவாறும்
புரவலாகேளாயென்னப் போதனும்புகறலுற்றுன். (57)

மனுகுலக்கொழுந்தேயுங்கண் மரபிலோர்சகரனென்பான்
பனிமொழியார்களோடும் பாகசாதனனுமென்னத்
தனியரசாளுங்காலைத் தனையராயினோயாளாறைந்
தினையிருபதுநூறேற்று மெண்ணுடையாரையீன்றாள். (58)

முன்னவடனையன்மைந்தன் முடிக்குடையானென்றுன்னித்
தன்னுடன்வருகவென்று சாற்றிமற்றோரையெல்லாம்
பொன்னணியோடைபூண்ட புரவியைக்காப்பீரென்று
மன்னன்மன்னவர்கள்சூழ மகந்தனைத்தொடங்கலுற்றான். ()

திக்கெல்லாம்புகழும்வண்ணஞ் செய்திடுமசுவமேத
மிக்கதோர்யாகந்தன்னில் விடும்பரிதனைவலாரி
தக்கபாதாளந்தன்னிற் றவப்புரிகபிலர்சாலைப்
பக்கலின்மறைத்தானன்னார் பரிதனைத்தேடிச்சென்றார். (60)

சாகராளாறுபத்து சகத்திரர்தளத்தினோடு
மேகமாய்வானம்பூமி யெங்கணுந்துருவிக்காணார்
போகிவாமுலகஞ்சேரப் புவிதனையாழத்தோண்டிப்
போகலுமுனிவன்பாங்கு புரவியைச்சிற்றல்கண்டார். (61)

யாகத்தின்பரியென்றுன்னு யாவனீகவர்ந்தாய்மெய்பாம்
யோகத்திலிருப்பார்போல வொழுக்கங்கொண்டிருந்தாயெங்கள்
வாகைத்தம்மரபுமோடை வரைதல்கண்டொளித்தாயிந்த
நாகத்தின்றலத்தார்யாங்க ணலிபகைத்துணையாமென்றே. (62)

பலபலவாறுபேசிப் பாணிகொண்டேர்த்தன்றனை
நிலமிசைப்புறட்டித்தாக்கி நெட்டுடற்குருதிசோரக்
கலகமிட்டனர்களந்தக் கபிலமாமுனிவன்யோக
முலைதரவுகாந்தகால வுநந்திரனனையனுன் (63)

அந்தணர்முனிவுதாங்க லரிதரிதென்னும்வேத
மந்திரமுணராராகி மனவலிசெருக்காற்செய்யு
மந்தனைவழிபாடின்றி நின்றனர்மறையோனோக்கித்
தந்ததோர்சாபத்தீயாற் சாகரர்சாம்பரானார். (64)

மாண்டவராவியெல்லா மறலியூரடைந்துதாழக்
கீண்டியநரகத்தாழ்ந்து கிடந்தனர்மூத்தோன்சேயால்
வேண்டியயாகமுற்றி வேந்தனும்பதவிசார்ந்தான்
றோண்டியகடலுமன்னார் தொல்பெயர்துலக்கிற்றன்றே. (65)

சாகராடன்னின்மூத்தோன் றனையனுமமுசுமானென்
ரேகையாலுரைப்பாரன்று னுதவியதிலீபனீன்ற
வாகைசேர்புயத்தானுன பகீரதன்வையந்தன்னை
யேகமாய்ப்புரக்குநாளிலெழின்முனிவரனைக்கண்டான். (66)

வந்தனைவழிபாடெல்லாம் வகைவகைமுடித்தன்னுனைச்
சிந்தையின்மகிழ்ச்சியோடுஞ் செய்யவாதனத்திலேற்றி[ன்ன
முந்தவென்குலத்தோர்நோன்பான் முளரித்தாள்கண்டேனெ
வந்தணனவனைநோக்கி வரசனேகேட்பாயென்றுன். (67)

சகரன்செய்யாகமாவைச் சசிவரன்மறைத்ததாதி
சகம்புகழ்முனிவன்சாபத் தழலினுல்வெந்துநீரு
யகமுறுநரகந்தன்னைச் சாகரரடைந்ததீருப்
புகலறுமுனிவன்கூறப் புரவலன்வணங்கிச்சொல்வான் (68)

பகவனேயனையாயுன்றன் பங்கயமலர்த்தாள்கண்டோ
ரிகபரமடைவதல்லா லெண்ணமும்பெறுவாரென்பார்
மகமுனிசாபத்தீயான் மாண்டவர்க்கருள்வாயென்ன
வகமகிழ்ந்தவனைநோக்கி யந்தணனுரைக்கலுற்றுன். (69)

சீர்பெறுமிமயவேந்தன் செல்வியரிருவர்தம்மிற்
பார்வதிதன்னைவேட்டான் பசுபதிமூத்தாளென்னும்
வார்பெறுங்குழலாடுய்ய வாரியின்வடிவாய்வைகுங்
கார்பெறுந்தெய்வநாட்டிற் கங்கையென்றியம்புவாரால். (70)

பொன்னுலகதனில்வைகும் புநிதமாங்கங்கைநீரா
னுன்டைதாதைசாம்பற் கரைத்தியேலுலகம்நீங்கி
யன்னவரடைவார்முத்தி யாதலாலதனைவேண்டி
மன்னியவிதியைநோக்கி மாதவம்புரிவாயென்றுன். (71)

இந்தவாறுரைப்பக்கேட்டா னெண்ணிலாதுவகையோடு
மந்தணன்றன்னையேத்தி யரசனுமனுப்பிப்பின்னர்
மந்திரித்தலைவன்றன்னை வையகம்புரக்கச்செய்து
தந்தையினுலகாமென்னச் சாற்றுகோகன்னஞ்சார்ந்தான் ()

மாதமோர்வாதவூணய் மலர்க்கரவிரலையூன்றிப்
பாதமுமேலதாகப் பங்கயாதஆனையுன்னி
யோதுமீரைந்தூருண்டாங் குயர்தவம்புரியக்கண்டு
போதனுமுனிவர்விண்ணோர் புடைதரவுதயமானுன். (73)

அங்கவனருளைநோக்கி யடியிணையிறைஞ்சியேத்திச்
செங்கரங்குவித்துநிற்கத் தேவனுமியம்பாயென்னக்
கங்கையாலெனதுதாதை கருமம்யான்முடிக்கும்வண்ணம்
பங்கயமலரிற்றேன்றும் பரமனேயருள்வாயென்றான். (74)

அந்தணன்மகிழ்ந்தேயவ்வா றளித்தனமானலங்நீ
ரிந்தவாருலகந்தாங்கா தீசனேயணிவானந்த
நந்திநாயகனைநோக்கி நற்றவம்புரிவாயென்று
சுந்தரவாணிநாதன் சொல்லித்தன்னகரம்புக்காண். (75)

எண்ணருமுவகையோடு மீசனையேத்தியன்னான்
பண்ணியதவத்தின்றன்மை பகருதற்கெளிதோவந்தப்
புண்ணியநதியும்பொங்கிப் பூமியும்வானுமொன்றாய்
வெண்ணிறக்கடலாமென்ன வெழுந்ததுவிரைவின்வெள்ளம்.

மலையெலாந்திகிரிபோலு மரமெலாமிதப்பையாக
வலையெலாமணியுமுத்துங் கனகமுமள்ளிவீசி
சிலைமகள்வரவைநோக்கி மைத்துனிசெருக்கீதென்றே
கலைபுனைசடையிற்கொண்டான் கைலைவாழ்கடவுளம்மா (77)

அசைவறச்சடைக்குட்டங்கைக் கஞ்சினுள்போலவைகு
மிசையினுலுலகங்கங்கா தரனெனவியம்பப்பெற்று
னசைபெறுந்திலீ பன்மைந்த னற்றவப்பயனும்வண்ணந்
திசையுளோர்வானோர்சூழத் தேவியோடமலன்வந்தான் (78)

கண்டனன்கண்களாலி கலுழ்ந்திடக்கரங்கள்கூப்பி
முண்டகத்தாளில்வீழ்ந்து முறைவிறைவலஞ்செய்தேத்தி
யண்டர்கோன்மாலுங்காணு வையநின்னருளைப்பெற்றேன்
றெண்டர்போலாள்வாயென்னத் தொழுதனன்றுகையிலா
[தாய். (79)

விமலனுமகிழ்ந்துநோக்கி வேண்டியதுரைப்பாயெனன
விமயவான்புதல்விநாதா வியம்பொணுக்கருணைமூர்த்தி
யமலையாங்கங்கைநீரா லடியனேன்றுதைசாம்பற்
சுமைதனைக்கரைக்கும்வண்ணஞ் சுந்தராவருள்வாயென்றான்.

நன்றெனமகிழ்ந்துவேத நாயகன்முனிசாபத்தாற்
பொன்றுநின்றுதைக்கெல்லாம் பொருப்பிடந்தேனென்று
குன்றியினளவேதாங்குங் குவலயமென்னக்கூறித்
துன்றியசடையிற்றுங்குந் துள்ளி நீரொழுக்கிச்சொல்வான்.

பகிரதன்பின்னேசென்று பரவியநீற்றைப்போக்கிற்
சகரர்நம்மடியராவர் சனித்ததுமுதலாய்தீயும்
புகுமிடம்வரையிலுள்ள புண்ணியத்துறையின்மூழ்க
வகமுடையோருநின்பால் யாத்திரையானபேரும். (82)

கயிலையாம்வாரணசிக் கண்ணொருவிலிங்கமானேம்
பயிலுமத்தலத்தின் பாங்கர் பாருளோர்யாவரேனு
முயல்பினுன்முழுகுவோர்தம் முன்னும்பின்னேழோடேழு
வியம்பெறுமரபுள்ளோரும் விலங்கொடுபுழுவாமேனும். (83)

அங்குவேறுதகந்தோய வகத்துனைநினைந்தபேருங்
கங்கையென்றேதிமூன்று காலடிவைத்தபேருந்
தங்குநம்மடியாராகத் தந்தனம்வரமென்றோதிச்
சங்கையிற்கணங்களோடுஞ் சங்கரன்கைலைசார்ந்தான். (84)

வேறு

கங்கைநதி மங்கைவருங் காட்சியெவர் சொல்வார்
பங்கயமு கங்குமுத வாய்பரவு நீலஞ்
செங்கல்வி ழிப்பருவ தெங்கிளநீர் கொங்கை
யங்கையலை கங்கணம் வலம்புரி யலம்பும். (85)

ஆலினிலை யாமகடு வப்புசுழி கொப்பூள்
சூலுடைய சேலடி துணைச்சிலம் பொலிப்ப
பாலைநில முங்குளி ருறப்பரவை நோக்கி
சாலையரு காகவர சன்னுமுனி கண்டான். (86)

அலைகடலை யங்கைகொடே யாசமன மாக்கு
மலைமுனிவ னன்னசனு மாமுனிவன் சாலை
யெலைவரலுங் கங்கை தனை யெள்ளெனத் திரட்டிக்
கலைமுனிவ னுண்டது பகீரதனுங் கண்டான். (87)

ஓதரிய நன்மையொரு கூறுளது வேனு
மேதமுறுந் தின்மையிரு நான்கென விசைப்பா
ராதலினிப் போதமுனி யாரடி தொழாத
பாதகமி தென்றவனைப் பார்த்திபனுங் கண்டான். (88)

வேறு

போதமாமுனிவன்றாளைப் புரவலன்பணிந்துபோற்றிச்
சாதகமாந்தர்செய்யுந் தனித்தொழில்யாவுமாற்றி
மாதமாறிருந்தமாதவன் மகிழ்ந்துநோக்கி
யாதுகாரணமாய்வந்தாய் யாவையுமிசைப்பாயென்றான். (89)

அகங்குழைந்தங்கைகூப்பி யயோத்திமாநகரவேந்தன்
மகம்புரிசகரன்மைந்தன் மைந்தனின்மைந்தன்மைந்தன்
பகிரதனென்பேர்முன்னோர் பரந்தனையடையக்கங்கை
பகர்ருந்தவத்தால்வந்து பரமநின்னிதயம்புக்காள். (90)

ஆதலாலடியேன்செய்த வபசாரம்பொறுத்தியென்றன்
ருதையர்பதவிசேரத் தயைபுரிந்தனுப்பாயென்ன
மாதவன்மகிழ்ந்துகாதின் வழியதாயொழுக்கிமாதே
போதிசானவிநீயென்றே போதனுமனுப்பவந்தாள். (91)

வல்லதாயிருபால்வைகு மாந்தர்கண்மடந்தையோடுஞ்
சல்லரிதன்னிலாடை சாற்றருங்களபமாதி
யல்லெனுங்குழலார்நீட்ட வலையெனுங்கையாலேந்தி
மெல்லெனப்பேர்கக்கண்டு வேண்டியமகிழ்சிகொள்வார். (92)

ஆடுவாரனைவார்பாவ மரிகரியென்னும்வேதம்
பாடுவார்யாகமாதி பயித்திருகருமமீருய்
நீடுவார்கரையிற்செய்வோர் நினைத்தவாறருளிக்கங்கை
கூடினுள்சகரர்சாம்பற் குன்றெலாங்கரைத்துச்சென்ருள். (93)

அங்கவர்க்கெல்லாமெண்ணீ ரருத்தினுனவருமேலாஞ்
சங்கரன்பதவிசார்ந்தார் சாற்றுபாகிரதியென்ருன்
புங்கவர்கங்கையாடிப் போதலும்பூழிதோய
மங்கையாமகலிசாப மாறிமுன்வடிவாய்நின்ருள். (94)

கல்லுருமாறிச்செம்பொன் காய்புடத்தெழுந்தாலன்ன
வல்லிசேரிடையுஞ்செய்ய மாமலர்முகமுமாக
மெல்லடிநோக்கிநின்ருள் வீரனுமிவளாரென்ன
வில்லிறமடைந்தோன்றேவி யகலியாமிவள்பேரென்ருன். (95)

அருங்கலையாட்கித்தீங்க டர்ந்தவாறுரைப்பாயென்ன
பெருங்கலைமுனியிராமா கௌதமன்பேதையந்நா
ணெருங்கலைப்புனலாலைய நினைந்தவன்மனக்கண்ணேக்கிக்
கருங்கலையனையதோளான் காமன்செய்கரவென்ரேர்ந்தான் (96)

பொன்னகர்க்கிறைவன்சூதாய்ப் புணர்ந்தனனென்னப்பொங்கி
யன்னவனுடலமெல்லா மாயிரம்வடுக்கண்ணுக்கி
மின்னிடையிவளைக்கல்லாய் விதித்தனன்வினைந்தசாபந்
தன்னையுன்கமலச்செந்தா டருந்துகட்டவிர்த்ததன்றே. (97)

அன்னமென்னடையாடன்னை யனுப்பிமற்றவர்களோடும்
பொன்னகர்மிதிலைநோக்கிப் போயினர் புவனம்போற்று
மின்னலர்க்மலச்செல்வி விரும்பினள்விரைவின்வாவென்
றன்னகர்கரங்கணீட்டி யழைப்பபோற்கொடியைக்கண்டார் (98)

கொற்றவன்குமரரோடுங் கோசிகன்மிதிலைமூதூ
ருற்றனனிராசவீதி யோங்குமாமேடைமீது
சிற்றிடைச்சீதைதன்னைச் சீபதிகண்டான்மோக
முற்றவனிற்பக்கண்டு மொய்குழலவசமானாள். (99)

விண்ணவர்க்கிசைந்தவண்ணம் வேலைவிட்டேழுந்தகாலை
பண்ணமர்மொழியாடன்னைப் பிரிந்தவன்பரிவினோடு
நண்ணிடுமிதுநாளென்றே நாணமுநழுவத்தாங்கள்
கண்ணுளங்களிப்பநோக்கிக் கலந்திடுஞ்சிந்தையானார். (100)

மதிநுதன்மடந்தைகாதன் மனங்கவர்ந்துருகராம
னெதிர்முகமாகநோக்கி யிருவர்பின்னவனுஞ்சென்றான்
றுதிபெறுந்துறவோன்மாற்றந் தூதராலறிந்தானந்தப்
பதியினன்முனிவன்றாளிற் பணிந்துடனழைத்துச்சென்றான். ( )

வருமுனிவரனைச் செம்பொன்வண்ணவாதனத்திலேற்றிப்
பரிவுடன்வேந்தனர்க்ய பாத்தியமுதலாயீந்து
தருவளர்புரத்துவைகுந் தாமரைமலர்த்தாளென்றன்
பெருமனைபொருந்தப்பெற்ற பேற்றினையறியேனென்றான். (102)

மன்னவபாராயிந்த வாமனரோடுநால்வர்
சென்னெல்சேரயோத்திவேந்தன் செய்திடும்புதல்வயாக
மன்னியபயனல்வந்த மைந்தரின்மூத்தோனன
பன்னரும்புகழிராமபத்திரனிவன்பேரையா. (103)

சொல்லுவதெவனோவிந்த் தூயவன்பெருமையான்செய்
வல்லதொர்யாகம்போக்க வந்ததாடகையோரம்பாற்
சில்லெனச்சிதைந்தாளன்றி சேயிழையகலிக்கிட்ட
கல்லெனுஞ்சாபந்தன்னைக் காற்றுகள்போக்கிற்றன்றே (104)

மந்தரப்புயத்தோயுன்றன் மகடிருசனகிதன்னை
நந்தமர்கரத்திராம னறுமலர்மாலைசூட்ட
வந்தனனுன்றுசிந்தை வழுத்துவாயெனலுமன்னு
னந்தவாறெனக்குமாசை யையனேகேட்பாயென்றான். (105)

கன்னியாம்பருவந்தன்னிற் கைக்கிழங்காடுங்காலை
புன்னியதொன்றுசாபத் தொளித்ததையொருகாறன்னின்
முன்னுளவிரலாலேந்தி யெடுத்ததான்மூரிவில்லைக்
குன்னிடவளைப்போர்க்கென்னச் சுயவரங்குறித்தேனென்றான். ( )

இந்தவாறென்னவாறைந் திரட்டியாயிரம்பேரேந்தி
வந்ததோர்சிலையைராமன் மலர்க்கையால்வாங்கியூன்றி
மந்தரப்புயத்தின்றாழ வளைத்தலுமொடிந்தகாலை
யந்தரத்துலகமெல்லா மதிர்ந்தவ்வரவத்தம்மா. (107)

அவ்வவையிருந்தோரெல்லா மரசனை விரைந்துகூவி
நவ்விசீர்விழியாள்சீதை நாயகனிராமனென்று
ரவ்வகைமொழியுங்காலை யிறைவனுசையென்னு
முவ்வகைப்பகையைநீத்த முனிவனைநோக்கிச்சொல்வான் (108)

மாதவாவெம்பியீன்ற மங்கையரிருவரென்றன்
சீதையினிளையாளான சேயிழையோடுமூவ
ராதலாலவரைர்ராம னனுசருக்களிப்பேனென்னப்
போதனுமகிழ்ந்தேயோலைபு ரவலர்க்கனுப்பாயென்றான். (109)

அப்பொழுதமைச்சனெய்தி யரசனுத்திரவின்வண்ணஞ்
செப்பருமோலைதீட்டிச் சேவகரிடத்திலீந்தா
னெப்பருங்காலைக்கால்கொண் டோடினரயோத்தியாளும்
பர்ப்பதப்புயத்தான்பாதம் பணிந்தெழுந்ததனைவைத்தார். (110)

மங்கலவோலைதன்னை வாசகருரைப்பக்கேட்டுப்
பொங்கியவுவகையோடும் பூவையர்க்கறிக்கைசெய்து
மங்கவன்குலத்திற்காசா னுச்ரமமடைந்தேயன்னன
பங்கயமலர்த்தாடன்னிற் பணிந்திவைபகரலுற்றான். (111)

கோசிகமுனிவன்பின்னே குமரரையனுப்பிவைத்தேன்
மாசில்சீரிராமனம்பான் மடிந்தனளரக்கியாகம்
பூசுரர்முடித்தாரங்கே போம்பொழுதவன்காற்றூளின்
றாசியாலகலிசாபந் தொலைந்ததாஞ்சுருதியன்னும். (112)

அங்கவரோடுமந்த வருந்தவன்மிதிலையாளும்
புங்கவனிடத்திற்கூறப் பூதலம்புகழிராமன்
வங்கவெற்புடையான்வில்லை வளைத்தலுமொடியக்கண்டு
சங்கையிலுவகையோடுஞ் சனகனும்வேந்தனையா. (113)

வார்பெறுஞ்சனகியாதி மடந்தையர் நால்வர் தம்மை
யேர்பெறுமிராமனேடு மிளையவர்மாலைசூட்டச்
சீர்பெறுந்தமர்களோடுஞ் சேர்வதுமிதிலைக்கென்றே
யோர்பெருமோலைதந்தா னெப்பிலாஞானமூர்த்தி. (114)

ஆதலா லுனதுசிந்தை யனுமதியருள்வாயென்ன
வேதியன்மகிழ்ந்துமன்ன விதிவழிமதியாமென்றே
யோதியம்முகூர்த்தவோலை யுடையவர்கனுப்பாயென்ன
மாதுகோசலைமணாளன் மகிழ்ந்தவ்வாறனுப்பலுற்றான் (115)

வேறு.

மன்னர் மன்னவன் வாசகங்காண்டலுங்
கன்னல்சேர்மிதி லேசனென்கண்மணி
யென்னுஞ்சீதைக் கெழின்மணநாளிபந்
தன்னின்மேன்முர செற்றிடச்சாற்றினன். (116)

திங்கடோயுஞ் சிலைமலிமாளிகை
யெங்குமோவிய மேற்றினரெங்கணுந்
தங்குந்தோரணத் தம்பமுநாட்டியே
தெங்குவாழைக் கமுகெழிற்றேக்கினர். (117)

பந்தியாயிரத் தாயிரமாய்ப்பனி
சிந்துநீலச் சிலைமலித்தூணின்மேற்
குந்துசிங்கங் கொடிவளைநாணுத
லிந்திராகப் பசுஞ்சிலையேற்றியே. (118)

உத்தரம்வித்து ருமத்தடிக்குமேல்
வைத்தசெம்பொன் வகைவகைமேய்ந்துகீ
ழொத்தவெணபளிங் காற்றளமோதரு
முத்துமாலை முறைமுறைதூக்கியே. (119)

வானவர்க்குமிம் மாந்தர்கள்யாவர்க்குந்
தானமூவகை தந்தனன்றற்பர
மானவன்பதி யுமரன்றுகமு
மானுமென்ன வகுத்தனன்மாமயன். (120)

அங்கமாதிய ரைம்பதினல்வருந்
தங்கடங்கட ரத்தொடுமெய்தினர்
துங்கமாதவர் தொன் மறைவேதிய
ரங்கையோந்திப்பல் லாசியோடெயழுதினர். (121)

துதித்திடுமயோத்திவேந்தன் னோகையரமைச்சராதி
மதித்திடுமறையோர்சூழ வசிட்டன்மாமனைவியோடுங்
குதித்திடும்புரவித்திண்டேர் குஞ்சரங்குசைமாசெம்பொன்
பொதித்திடுஞ்சிவிகைமீது பொன்னகர்ப்புறத்தில்வந்தான் (122)

மதகரியிரண்டு நூறு வயப்பரியீரைந்நூறு
நிதிச்சுமையெடுக்குஞ்சென்னி நெளியுடலதனிரட்டி
மதியணிக்குடைகள்செய்ய வானகமறைப்பவீரொன்
பதுவகைக்கருவியீட்டம் பரவைபோன்முழக்கிவந்தார். (123)

ஆதவன்வரவையந்த வரசனுக்குரைப்பேனென்னப்
போதல்போன்மறைந்தானந்நாள் புணரியிலுதித்தாளென்ற
சோதரியுறவாச்சென்று தூயனையழைப்பேனென்னச்
சீதவான் மதியந்தோன்றச் சிறந்ததுசயிலச்சாரல். (124)

ஆடவரகலாதந்த வணங்கனாரணையக்கண்டு
கோடியசிலையினாணி குலைத்தனன்கோதைநல்லா
ளூடலாற்பனியீரத்தி லுழுவர்போன்முயன்றனன்னார்
கூடலாறகாமன் விலலைக் குஞ்சரத்தெரிந்தானன்றே. (125)

கதிரவன்வந்தானென்னக் கரியபுட்கலைந்துகூவ
குதிதரும்புரவித்திண்டேர் குஞ்சரந்திருத்தியன்னா
ரெதிரெதிர்நிறுத்தத்தாவி யெண்டிசை யதிரப்பேரி
மதிகடன்முழக்கமன்ன வந்தனனயோத்திமன்னன். (126)

இந்தவாறயோத்திமன்ன னெய்தலுமிதிலைநாதன்
சந்தமரசர்தங்க டனித்தனிவரிசையோடும்
வந்தனகரும்புதீம்பால் வார்கடற்கலந்தாலென்னச்
சிந்தையின் மகிழ்ச்சியோடுஞ் சேர்ந்தவன்றனைக்கண்டார்.

அடங்கருதுவகையோடு மவரவர்க்கன்புகூறி
மடங்கலேறனையமைந்தர் வணங்கலுமகிழ்ந்துவாழ்த்திக்
குடங்கையாலணைத்துநெஞ்சங் குளிர்ந்திடத்தழுவியந்தத்
தடங்கடநீத்தானோடுந் தசரதன்மிதிலைபுக்கான். (128)

வேறு.

மாடவீதியில் வந்தனர்மாமணி
மேடைமீதுறை மெல்லியர்சீர்முக
மோடைதன்னி லுதயனைக்கண்டுபொன்
னேடவிழ்ந்த விளமலரொத்ததே. (129)

மாலிராகவன் வந்தனனென்னவே
சேலெனும்விழி யார்சிலர்கூடினார்
சாலவானத் தமர்தினமுஞ்சசி
போலுமொத்துப் பொலிந்ததுவீதியே. (130)

துய்யமாணித் தேரினைச்சூழ்ந்திடுஞ்
செய்யமாதரின் ஞேசையைச்செப்புங்கால்
கொய்யுமாமல ரொன்றினிற்கோடியா
யெய்யும்வேடனிருகையுமெய்த்ததே. (131)

ஆடைசோர்ந்தன ரங்குலியாழியுஞ்
சூடகங்களுஞ்சிந்தினர்தொண்டைவாய்
மூடிடாது முறுவன்முகிழ்த்தகண்
ணேடுநின்றிடு மோவியமொத்தரால். (132)

சொன்னைவில்லைத் துணித்தெந்தந்தோழியைக்
கொள்ளவந்தனை கொற்றவன்யானெனத்
துள்ளும்வேலைத் துரத்திடிற்சொல்லுமாண்
பிள்ளைநீயெனப் பேதையர்பேசுவார். (133)

மானனுயிந்த வள்ளல்பின்னென்மணந்
தானுஞ்சென்றதைக் சாற்றருந்தற்பர
ஞனவனிங் கனுப்பிலானுகியே
போனதென்ன புதுமையென்ருேதினள். (134)

மங்கையேயென்றன் மால்கொள்ளிராமனைச்
செங்கண்வைத்திமை சேர்த்துறமூடினேன்
றங்குமென்மனை தன்னிலெனைவிடுத்
தெங்குநீயியம்பாதேயென்ருேதினள். (135)

இந்தவாறந்த வேந்திழையாவருந்
தந்தஞ்சிந்தை தனிலுள்ளதோதிறு
ருந்துதேரொடு மூர்வலமாகவே
வந்தியாவரு மண்டபமெய்தினர் (136)

வேறு

துங்கநவ மணியாலுந் தரளத்தாலுந்
துலங்கியதோர் மண்டபத்திற் றேகைமாரு
புங்கவனுந் தசரதனுஞ் சனகவேந்தும்
பூவலரு முனிவர்களும் புரத்துளாருந்
தங்கியதோர் சபைநடுவே தம்பியோடுந்
தாசரதிரா மச்சந்த்ர னிருந்தானப்போ
வங்கயற்கண் சனகிதனை யழைப்பாயென்ன
வாடினர் சேடியர்க ளோடினரே. (137)

ஆவலுடன் சீதைதனைப் பணிந்தாரம்மே
யரசன்மண மண்டபத்திற் கழைத்தானென்ன
பாவையர்க ளல்வரையும் பனிநீராட்டிப்
பட்டாடைவார்புனைந்து பணிகள் பூட்டிக்
காவிழிக் கஞ்சனம்வா ணுதலிற்சாந்துங்
கலவையொடு மான்மதமுங் கலந்துசாத்திச்
சேவடிமேற் பாடகம்பொற் றண்டையோடுஞ்
சிலம்பலம்பு சிற்றடிக்கீழ் செம்பஞ்சிட்டார், (138)

மாதரசி சானகிதன் னிளையாரோடு
மலர்க்கரத்தி லாரமுமாய் மடவார்சூழப்
பாதவணி நூபுரங்க ளிவளேகஞ்சப்
பாவையெனப் பணிப்பவர்போ லொலிப்பச்சென்று
சீதரனு மிராகவனுக் காரஞ்சூட்டித்
திருவதனங் கோட்டிபுறங் காட்டிநின்றாள்
கோதையர்கள் சூழ்ந்தெனது மானேநாணங்
கொண்டனையோ வென்றவர்கள் கூறலுற்றார். (139)

மஞ்சனைய மேனிரகு நாதன் பூணில்
வைரமணிச் சிலையினுன்றன் வதனம்போலு
மிஞ்சொளிசெய் நிழலதனை மின்னாரென்றே
மெல்லிழையே நாணிணைகொ லென்னச்சொல்வார்
கொஞ்சுகிளி மொழியாயுன் வதனந்தன்னைக்
குளிர்மதிய மென்றுரைப்பார் கொழுநற்கம்மா
கஞ்சமலர்க் கண்ணென்றே முகங்கொடாது
கவிழ்ந்தனையென் கண்ணேகண் மணியேயென்பார். (140)

மங்கைநல்லாய் மணவாளன் மகிழும்வண்ண
மாலொழுகு மலர்முகத்தின் வடிவங்காட்டிச்
சிங்கமெனு மிடைப்புறத்தின் னணியைக்காட்டத்
திரும்பினையோ தெள்ளமுதின் றிளரேயென்பார்
கங்குலெனுங் குழலாடன் வதனம்பார்த்துக்
கனிவாக முத்தமிட்டுக் கன்னஞ்சேர்த்து
மங்கவர்தஞ் செங்கரத்தா னெறியெடுத்து
மங்குலிதன் னெட்டியிட்டா ரன்னையன்னார். (141)

மானனையார் மூவர்களுந் தங்கடங்கண்
மனமுவந்த வரன்மகிழ்ந்தே மாலையிட்டார்
தேனமருங் குழன்மடவார் திரண்டுகூடிச்
செங்கரங்கள் கோர்த்திடச்செய் தவரைச்செம்பொன்
மானமணி யூசலின்மேல் வைத்தார்திட்டி
மாற்றியதோ ராலாத்தி வகையாய்ச்சுற்றி
யானபிற கவர்களொடு மற்றோரெல்லா
மாங்குமணி மண்டபத்தை யணுகினாரே. (142)

மன்னவனுந் தசரதனுஞ் சனகவேந்து
மற்றுமுள வரசர்களும் வந்தாராங்கு
பொன்னணிசேர் பீடமதில் ராமச்சந்த்ரன்
பூவையெனுஞ் சனகியுட னிருந்தானன்னோன்.
பின்னவனும் பரதனுமாண் டவியென்பாளும்
பேசரிய விலக்குவனூர் மிளையாம்பெண்ணுந்
துன்னுசுத கீர்த்தியுஞ்சத் துருக்கனோடுந்
துலங்கினார் மணவரைமே லிங்கினாரே. (143)

படபடெனப் புரோகிதர்க ளிரண்டுகூடிப்
படிபரப்பிப் பாலிகையும் பசும்பொற்கும்பத்
தடிபரப்புந் தானியமும் மானெய்லாச
மரித்திராட் சதைகதலி யடைக்காய்தெங்கு
வடிவுபெறுங் குலைமுடியுஞ் சமுத்தையெல்லாம்
வைத்தனர்கள் வகைவகையாய் வசிட்டனுதி
படிபுகழு முனிவர்களு மறையோரெல்லாம்
பாரித்தா ருதககும்பம் பூரித்தாரே. (144)

படிபுகழும் வசிட்டமுனி யாசியோடும்
பவித்திரமட் சதைவழங்கிப் பகருங்காலை
கடமுனிவன் முதலானோர் சாந்தியோதக்
காரிழையார் கௌரிகல் யாணம்பாடத்
துடியிடையார் நடனமிட முழவுமார்ப்புத்
தோற்கருவி முதலாய துலங்கித்தீட்டக்
கடகரியும் பரியொலியுங் கலக்கவிண்ணோர்
கணங்கொண்டார் மங்கலசோ பனம்விண்டாரே. (145)

சனகனிரு மடந்தையரைத் தானஞ்செய்தான்
சாற்றுமவன் றம்பிமக ளிருவர்தம்மை
மனமகிழ்ந்து தாரையெனுஞ் சடங்குசெய்தான்
மாமுனிவ சத்துவெனும் வசனங்கூறப்
பனிமலர்க்கண் முகமாதர் பரிந்துசூழப்
பார்த்திபர்க்குப் பார்த்திபனும் ராமநாதன்
கனிமொழியாட் சனகிதிருக் கழுத்திற்றலி
கட்டினன் முழவதிரக் கொட்டினரே. (146)

மாண்டவியைப் பரதனூர் மிளையாமாதை
மாலான விலக்குவனு மணந்தார்பின்னே
காண்டிபனுஞ் சத்துருக்கன் றிருவென்றேதுங்
கலனதனைச் சுதகீர்த்திக் கணிந்தானப்பால்
வேண்டுவன வோமமுதல் யாவுஞ்செய்து
விளையாடு மஞ்சணீ ராணபின்பு
தூண்டுபரித் தேரின்மேற் பன்னியோடுந்
துறைவந்தா ரூர்கோல முறைவந்தாரே. (147)

வேறு

ஆனகாலையி லந்தணர் பார்ப்பனர்
கானர்தீனர்பின் கண்டவர் யாவர்க்குந்
தானமீந்தவன் றன்குரு தாளிற்பொன்
சோனைமாரி யெனச்சொறிந் தானரோ. (148)

வேறு

மன்னவன்சனகவேந்தன் மடந்தையர்தமக்குநல்கும்
பன்னரும்பரிசினோடும் பரிந்தவர்வழிகொண்டேத்தத்
தன்னிகரில்லாவேந்தாந் தசரதன்றளத்தினோடு
நன்னகர் நோக்கிவந்தா னறுமலர்பொழிந்தார்விண்ணோர். ( )

பரதசத்துருக்கர்தம்மைப் பாட்டனுங்கேகயன்றன்
றிருநகர்க்கனுப்பிமற்றச் சேனையோடயோத்திநோக்கி
வரும்வழியதனிற்பிரம வருணனும் பரசிராமன்
றிருவுருவதனைக்கண்டான் றசரதன்றிகைப்பைக்கொண்டான்.

வந்தவன்ராமாவாசீர் வாதமென்றுரைக்கவையன்
மந்தரப்புயத்தோயுன்றன் மலரடிசரணமென்றான்
சிந்தையிலிரக்கமின்றிச் செய்தைபெண்கொலைநீயென்ன
வந்தவாளரக்கியென்ற னன்னையேவையாவென்றான். (151)

மருவிலாத்தந்தைசொல்லை மறுப்பதோமறையோயென்றன்
குருமொழிகடத்தனன்றோ கொற்றவாசொத்தவில்லை
யிருபிளப்பாகச்செய்தே னென்றுநீமகிழவேண்டாந்
தருவதென்றனுவைவாங்கித் தணிவுறவளைப்பாயென்றான். (152)

ஆங்கவன்சிலையினோடு மறன்வலியுரமும்வாங்கித்
தீங்கிலாத்தவமேயுங்கள் செய்கையாம்போமினென்ற
தாங்கியசிலையைமுந்நீர்த் தலைவன்பால்வைத்தயோத்தி
பூங்குழலாராலாத்தி பொருந்தன்மனையிற்புக்கான் (153)

குருமுனிவசிட்டனவ்வூர்க் கோதிலாமறையோரோடுந்
தருமனைபுகுதலென்னுஞ் சாந்தியுமுடித்தபின்னர்
பெருநிதிமழைபோற்பெய்தே யுவகையாம்பெருக்கிற்பூத்த
மருமலர்முகத்தோனாகி யிருந்தனன்மன்னர்கோமான். (154)

பாலகாண்டம் முற்றிற்று.

ஆக விருத்தம் 227.

அயோத்தியாகாண்டம்.

மாதவவசிட்டன்றன்னை மன்னவன்வணங்கியையா
வோதருங்குணத்திராம னுயர்தனித்திகிரியோச்சிப்
பூதலம்புரக்கும் வண்ணம் பொன்முடி பொருந்தச்செய்ய
வாதரமுடையவெற்குன் னனுமதியருள்வாயென்ருன். (1)

நன்றெனமகிழ்ந்துவேத நாவலனுரைப்பவேந்தன்
குன்றினுநிமிர்ந்ததோளான் குமரனையழைத்துப்பாலா
வன்றுனைப்பயந்தகாலை யடைந்தபேருவகைக்கெல்லா
மென்றதன்பயனையாங்க ளெய்துவமிணையிலாதாய் (2)

வண்ணமாஞ்சலீலந்தன்னல் வரும்பெருமுவகைநீக்கி
யண்ணலேபுவியைத்தாங்க லரியதென்றறைவாயாகி
லெண்ணியவாண்டுமாறைந் திரட்டியாயிரததோனின்று
மண்ணினைச்சுமக்கவைத்தான் மைந்தருக்கழகோவையா, (3)

கனிதனையருந்தும்வெளவால் காலபிடித்தனிற்றூங்குந்
தனிவடந்தளர்ந்தகாலை தாங்கியவிழுதுபோல
மனுமுதலாகவென்றன் வரைவரும்வழிபோனீயும்
புனைமணிமௌலிசூடிப் பொன்னகராள்வாயென்ருன். (4)

ஆதவனுதயங்கண்ட வம்புயமலராமென்னச்
சீதரனமுகத்தின்செவ்வி தசரதன்றெரிந்துசெப்ப
வேதியர்முனிவர்விண்ணோர் வேந்தருக்கறிக்கைசெய்தே
யாதியாமமைச்சனெய்தி யரசனைப்பணிந்துசொன்னன். (5)

மன்னவன்மைந்தன்றன்னை மனமுவந்தழைத்துநிற்கு
மென்னுடைமுடியைச்சூட்ட வெண்ணினேனதற்குநீயு
முன்னநங்குலத்தோர்நீதி முறையெலாம்படிப்பாயென்ன
வன்னவனுவகையோடு மந்தணனருகிற்சென்ருன். (6)

பொங்கியவுவகையோடும் புரவலனமைச்சை நோக்கி
பங்கமில்குணத்திராம பத்திரன்புவியையாளத்
துங்கமாமகுடஞ்சூட்டுஞ் சுபதினநாளைக்கென்றே
யெங்கணுந்தெரியப்பேரி யிசைத்திடவியம்பாயென்ருன். (7)

அந்நகரிருந்தோரெல்லா மளவிலாதுவகையோடும்
பொன்னணிபரப்புமாடம் புதிதெனத்துலக்கிக்காவி
சுன்னமுந்துலங்கத்தீட்டித் தொன்னகரிதுவோவென்னப்
பன்னருங்களிப்பால்வேந்தன் பன்னியர்தம்மையொத்தார். (8)

உடந்தையாமனமுங்கொண்ட வுருவுடையுயிர்க்கல்லாது
நடந்தவாறறியாதென்றே நடுங்கினர் நாகநாடர்
படர்ந்தவாளரக்காதம்மைப் பற்றறத்தொலைக்குமூழ்போய்க்
குடைந்திடக்கூனி நெஞ்சங்கொதிப்பொடுமெழுந்துபோனாள்

அப்பகலிழைத்ததீமைக் கரசெழிற்கெடுப்பேனென்ன
வொறுப்புறுமனததினேடு மேவியகூனிநோக்கி
யொப்பிலாமதியோய்ராம னுயர்முடிபுனைவானென்னச்
செப்புமுன்மகிழ்ந்துகைகை செழுமணிமாலையீந்தாள். (10)

வாங்கினள் புடலம்பூத்த மலர்விழிசிவந்தாள்கைகொண்
டோங்கினள்பாரின்மோதி யுதறினளுயிர்ப்பானெஞ்சம்
வீங்கினள்விம்மிவிம்மி மெய்படபடப்பநின்று
தாங்கொணவருத்தத்தோடுந் தையலைநோக்கிச்செல்வாள். (11)

கோதையேநன்றுநன்று கோசலைக்கேவலாளாய்ப்
போதியோவவடன்வீட்டுப் புழுக்கைக்குப்புழுக்கையானே
னீதலாற்பரதன்றன்னை யீன்றனைவளர்த்தேனென்னுன்
பேதையாய்ப்போனலந்தோ பெற்றவள்கொடுமையன்றோ. (12)

காதகிகூனியென்றன் கண்மணியிராமனன்றோ
சீதைதன்மாமிநீயோ செப்பியமொழிகேட்பாளோ
வீதெலாமபிறகுதோன்று மிப்பொழுதிணங்காயென்னப்
பேதைதன்மனமுமூழின் பின்செல்லத்துணிந்ததன்றே. (13)

விதிவழிகூனிகூற வெம்பியமனத்தாளாகிக்
கொதிதருங்குறிப்பைநோக்கிக் கோதையேமணந்தகாலை
மதிநுதற்சனகிசென்று மாமியைப்பணிந்துபின்ன
ரெதிருறவிருந்தன்னை யிறைஞ்சினளினியென்செய்யாள். (14)

பங்கயமலருக்கன்னை பாரினிலுதகமேனுஞ்
செங்கதிர்தாதையேனுஞ் சேற்றுநிவிழநதாலுண்டோ
சங்கையிற்பொருளுமீன்ற தாயிடத்திருந்தபோதுந்
தங்கையிற்றவிடுபோலத தருணத்திற்குதவாதம்மா. (15)

மங்கையேயுன்றன்வார்த்தை மன்னவன்கடந்ததுண்டோ
கங்குல்சேர்குழலாள்சீதை கணவனுமிராமனன்றே
விங்கிவையரியாதென்னே யிகழ்வுறுங்காலமென்ற
பங்குவைப்புகழ்ந்துசிந்தை பதைத்துமெய்பதறிச்சொல்வான்.

தாதியைப்புகழ்துசெய்யுந் தந்திரஞ்சொலெனவுன்பா
லோதியவரமிரண்டி லொன்றினாலீரேழாண்டு
நீதியாய்வனத்திராம னெடுந்தவம்புரியவிந்தப்
பூதலம்பரதனைப் பொற்கொடிபுகல்வாயென்றாள். (17)

கொடியதென்றுணராளாகிக் கூனியைப்புகழ்ந்துகூந்தல்
படிமிசைப்புரளச்செம்பொன் பணியெலாங்களைந்துநாளைக்
கடிமலர்த்திருவைவேகி கானகம்போவாளென்றே
மிடிமகளடைந்தாளென்னக கிடந்தனள்விசனத்தோடும். (18)

கந்தவாரணையைநீத்துக் கண்புனலொழுகப்பாரிற்
கொந்தளக்குழைகள்சோரக் கிடந்தனள்கொற்றவேந்தன்
வந்தனன்கையாற்றூக்கி மலர்முகத்துடைத்தமாதே
சிந்தையினினைந்தவற்றைச் செப்புவாய்தருவேனென்றான். (19)

மன்னவாமலையீதல்ல மற்றவர்க்கொவ்வாதல்ல
வென்னெனின்பரதனுன்ற னெழின்மணிமகுடஞ்சூடி
யிந்நகராளக்கான்போ யேழிரேழாண்டாண்ட
பின்னரிப்புவியையராமன் பெறவரமருள்வாயென்றான்.

தீமொழிசெவிபுகாமுன் செம்மலுமுயங்கிச்சோர்ந்தான்
கோமகன்றனையழைத்துக் கொற்றவனுரைத்தானென்றே
பூமியைப்பரதனுளும் பொன்முடிபொருந்தக்கானிற்
சேமமாயீரேழாண்டு சென்றுபின்வருவாயென்றாள். (21)

அவ்வுரைகேட்டகாலை யம்புயமலராமென்னச்
செவ்வியோடுவகைபொங்கத் திருவடிகொழுதுன்சேயேன்
பௌவமாம்பவத்தைப்போக்கும் படிதவம்புரிவாயென்ற
திவ்வியவசனத்தன்பைச் செப்புதற்குளரோவம்மா. (22)

இற்றையேசெல்வேனென்ன வெண்ணிலாதுவகையோடும்
பெற்றனையிடத்திற்றாழ்ந்து பெரியவனுரைத்தவண்ணம்
பற்றியவரசுபூண்பான் பரதன்யானீரேழாண்டு
நற்றவம்வனத்திற்செய்து நகரிடைவருவேனென்றான். (23)

மந்தரப்புயத்தோன்செங்கோன் மனுமுறைவழுவினாலுஞ்
சுந்தராவுனைக்கான்போகச் சொன்னதுகொடுமையென்றே
சிந்தைநொந்தழுவாடன்னைத் தேறிடமொழிந்திராமச்
சந்திரன்வருகைநோக்கிச் சுமுத்திரைதயங்கிச்சொல்வாள். (24)

பொன்னணிமகுடத்தோடு புதுமலராடையின்றி
மின்னணிதொடியல்பூண்ட மெல்லியர்கவிரிவீசா
தென்னநின்முகத்தின்செவ்வி யிந்துவைப்பழிக்கவந்தாய்
பன்னருங்குணத்தோயென்றாள் பதம்பணிந்துரைக்கலுற்றான் (25)

வேறு

ஒப்பில்லாதசிற் றன்னையுமோதரு
மப்புசூழ்புவி யாளப்பரதனைச்
செப்பிநீதவஞ் செய்திடக்கானஞ்சென்
றப்பாவேழிரண் டாண்டுபின்வாவென்றாள். (26)

காடுநாடுமென் காணியாங்காப்பதிற்
றேடுமாதவஞ் சென்னியென்றென்வுயி
னீடிலாததை யீந்தனளென்னிகர்
யீடுளாரெவர் பெற்றியுமீதென்றான். (27)

முன்னிருந்தவி லக்குவன்மூண்டெழும்
வன்னியென்ன மலர்க்கண்சிவந்திட
வென்னகாலமீ தெனறெழுந்தண்ணனுக்
கின்னலசெய்தவர்க் கென் மனந்தாழுமோ. (28)

தாயின்வாசகந் தப்பிதமாமதை
ஞாயமென்ன நயக்கும்பரதனை
பாயுமென்சரத் தாற்கொன்றுபாருளோ
ராயும்வண்ணமுன் ஞானைசெலுத்துவேன். (29)

தந்தைமூப்புள தாற்றடுமாறியே
கந்தநாறிடுங் காதலிவாய்மையைச்
சிந்தைகொண்டிந்தத் தீவினையாற்றினு
னிந்தையென்ன நினைப்பதுவோவென்றான். (30)

செய்யதம்பியைச் சீதரனோக்கியே
யையவுன்றன்முன் னூர்நிற்பராயினும்
வையகந்தனின் மாண்புளதந்தையைப்
பொய்யனுக்குதல் புத்திரர்க்காண்மையோ. (31)

மன்னுதம்பி மணிமுடிசூடினு
லென்னபின்னமக் கில்லையென்றேய்ப்பனே
முன்னர்சொன்ன மொழிப்படிகானகந்
தன்னிற்போவது தக்கதென்றேதினான் (32)

இந்தவண்ண மிராகவன்கூறலுஞ்
சிந்தையுள்ள சினங்களும்போக்கியே
யுந்தம்பின்வர வோதுமென்றேத்தியே
வந்திராமன் மலர்ப்பதம்போற்றினான். (33)

வேறு

தம்பியுந்தானுமந்தச் சானகியிருக்கைபுக்கா
ரம்புயமலர்க்கணாளு மயிர்த்திவையறிவோமென்ன
வெம்பியமனத்தினோடு மெல்லடிபணிந்துவேறு
தம்பியாலிடையூறுண்டோ தனிமுடிபுனைதற்கென்றாள். (34)

மதிநுதற்சீதைதன்னை மன்னவன்மகிழ்ந்துநோக்கி
பதியரசாளத்தம்பி பரதன்யானீரேழாண்டு
நதிநதப்புனல்களாடி நற்றவவனத்தினண்ணித்
துதிபெறவருவேனிங்கென் ரேகையேயிருப்பாயென்ருன். (35)

சொன்னதுசெவிபுகாமுன் றுணக்கமுற்றிருகண்டாரை
பன்னருமருவிபாயப் பங்கயமலர்க்கைபின்னி
மன்னியவகடுபொத்தி வாய்மொழிகுளறமன்ன
வென்னையிங்கிருத்திப்போக வெவ்வகைதுணிந்ததென்ருள். (36)

ஆங்குநீரேந்துங்காலை யந்தணர்மொழிந்தவிஞ்சை
நீங்கெனேநீங்காதென்றே நினைந்திவீரதுதானிற்க
வீங்குமைத்துறத்திஞேர்க ளென்றனையிழந்தென்ருரோ
பாங்குறமனைவிகாக்கப் பயந்தவர்மணமேன்செய்தீர். (37)

கணவனேடேகினளைக் காத்திடமுடியாக்கானில்
வணவணவிலங்கான்மாண்டா ளென்றிடும்வார்த்தைமேலோ
வுணங்கியேவீட்டிற்ருனே யொழிந்தனளென்ருன்மேலோ
விணையிலாவேந்தலேநீ யென்றனக்கிசைப்பாயென்ருள். (38)

ஏகமாயென்னைநீங்கி யேகவிப்படியைத்தாண்டிப்
போகுமுன்றெரியுமென்றன் பொன்றுதலென்ருடன்னை
யாகமுமுயிரைநீங்கி யகலுமோவருவாயென்று
தோகையையுடனேகொண்டு சுமுத்திரையடியிற்ருழ்ந்தார். (39)

வணங்கியகரத்தார்தம்மை மனங்குழைந்துவந்துவாழ்த்தி
யணங்குதன்னுதலிற்பூதி யாரியைநினைந்துசாத்தி
மணங்கமழ்குழலாளுந்தன் மைந்தனைப்புகழ்ந்துநோக்கி
யிணங்கராப்பழகுவார்போ லெண்ணமுமன்புங்கொள்வாய். (40)

தந்தையாமிராமச்சந்த்ரன் சானகிமதினிதாயாய்ச்
சிந்தையிலுணர்ந்தேயன்னுர் செப்பியவேவல்செய்து
முந்தியவண்ணன்பின்னே மொய்குழனடுவுமாக
மைந்தனேசென்றுவாவென் றனுப்பிடவவரும்வந்தார். (41)

செந்திருமகளின்பின்னே சேவகன்முன்னேராமச்
சந்திரன்வருவநோக்கித் தாங்கொணுவிரக்கத்தோடு
மந்தமாநகரத்துள்ளா ரருவியென்றெழுகுகண்ணீர்
சிந்திடத்தெருக்கடோறும் தெரிவையர்கூடிச்சொல்வார். (42)

தலைமகனிராமன்றன்னைத் தவத்துறைவனத்திற்போகக்
கலகமேசெய்தாணெஞ்சங் கல்லினுங்கொடிதோவென்பார்
சிலைமலிமௌலிசூடச் செல்லுமோபாதற்கென்பார்
மலைவலிபுயத்தான்வேந்தன் மாட்சியுமடிந்ததென்பார். (43)

மெல்லியசெம்பூஞ்சூட்ட மெல்லெனக்குழைந்தசீதை
கல்லொடுபூழிச்சூடுங் காற்படப்பொறுக்காளென்பார்
புல்லறிவுடையகைகை புதல்வனேயரசாண்டாலு
மெல்லையிற்குணத்திறைரை யேன்வனம்விடுத்தாரென்பார். (44)

மங்கையேயிலையாளென்னு மலர்மகட்சனகிபோனு
லிங்கிவண்மூத்தாளெய்தி யிருப்பதற்கையமுண்டோ
வங்குதன்குலத்தைவேரோ டரிந்திடுங்கருவிக்கைபோற்
புங்கவன்கீர்த்திபோக்கப் புகுந்தனள்பாவியென்பார். (45)

மாதருக்கரசியான கோசலைமகன்பின்னேகுஞ்
சோதரன்றன்னையீன்ற சுமுத்திரையிருக்கவிந்தப்
பாதகிதனையேன்வேட்டான் பார்த்திபன்பதடியென்பார்
சீதையைப்பிரியோம்பின்னே செல்லுவோமென்னச்சொல்வார் ()

சந்திரனுலவுவான்போற் றனிநகர்விளக்குமராமச்
சந்திரனில்லாவூரிற் றுங்களும்பொருந்தேமென்ன
வந்தமாநகரத்துள்ளா ரளவிலாவருத்தத்தோடு
வந்தவர்தம்மைத்தேற்றி வடகரைக்கங்கைகண்டான். (47)

அங்குளமுனிவோரெல்லா மரசனேவாவாவென்னச்
செங்கரமேந்தியாதி செப்பினூர்சீதையோடும்
புங்கயமலர்க்கணனும் பணிந்திருந்தவரைநோக்கிப்
புங்கவன்வரத்தாலன்னே புகன்றனளவந்தோமென்றான். (48)

மன்னவராமாவுன்றன் மரபிேனோர்பெருமைவாய்மை
தன்னையார்புகழவல்லார் தத்துவமிதுவாமென்றார்
மன்னியநதிவாய்வைகும் வங்கநாயகனுமையன்
பொன்னடிபணிந்துநெஞ்சம் புளகித்தான்புகலலுற்றான். (49)

கங்கையைக்கடத்தும்வங்கக் காரிற்றலைவனென்பேர்
புங்கவாகுகனென்பாருன் பொற்பதத்தடிமைபூண்டேன்.
செங்கயலூரேனேனுஞ் செய்தியான்கொணர்ந்தேனென்ன
வங்கதைவைத்துநின்ற வன்பனைநோக்கிச்சொல்வான். (50)

உன்னுடனைவரானே னுடலலாதுயிரொன்றேனே
மென்னவேபுகழ்ந்தான்சென்றங் கெய்துநாளிசைத்தான்பின்னே
பன்னியுந்தானுங்கங்கை படிந்ததைக்கடந்துவேத
மன்னியபரத்துவாச மாமுனிசாலைபுக்கார். (51)

போதனுமகிழ்ந்தேயாசி புரிந்தனன்புனிதரன்னோன்
பாதமும்புணிந்தாரன்னை பகர்ந்ததையுரைத்தாரப்பான்
மாதவம்வளர்க்குஞ்சித்ர மால்வரையடைந்தார்வானே
ரோதருமயோத்திதன்னி லுற்றவாறுரைக்கலுற்றாம். (52)

வேறு

சிந்தைதெளிந் தெழுந்தந்தச் செயலறிந்த வேந்தனுங்கை
செவ்வா யேந்திப்
பைந்தொடியே பாராளத் தகுதியோ பரதனுக்கப்
படிச்செய் தாலு
மைந்தனிரா மன்வனத்திற் கேகானுய் வருவியென
வதனங் கோட்டித்
தந்தமொழி தவருதான் குலத்தாளென் றுணராற்குத்
தரமே தென்றாள் (53)

உடுத்தகலை பாம்பானு யென்றிடலுங் கைகேசி
யுரக்கக் கூவி
முடித்தவினைக் கௌசலையுன் மொழிக்காளாய்ப் பரதனையு
முன்னே போக
விடுத்தனையம் முனிவனுட னேவுங்கா லுமதுடல
மெலிந்த துண்டோ
கொடுத்தவர மில்லையெனக் கூறுங்கா லுமக்கேனிக்
கொடுமை யென்றாள். (54)

அடங்காத வெகுளியெனு முடியாதா னெஞ்சம்போ
லழன்று நோக்கி
மடங்காணு மூர்வனத்தின் மாண்பறிந்தா னுவகைதனை
வழுத்தாயென்னத்
தொடங்காத வீமொழியென் றுரைத்தானைத் தொலைத்தறிந்த
துரோகி யீன்ற
விடங்காரி யென்றறியேன் வேட்டதினு லென்னுயிர்க்கும்
வினைநீ யென்றான். (55)

துரும்பமருந் திரைக்கடல்சூழ்ந் துழலும்போற் பிரிதொன்றுந்
தோன்றா னாகி
யிரும்பமரு மனத்தாடன் னில்லிழந்து தள்ளாடி
யெளியார் போலக்
கரும்பமரு மென்மொழியாட் கோசலைதன் மனையடைந்து
கதருங் காலைச்
சுரும்பமருந் தொடைமார்பா தூறுவதே னென்றெடுத்துத்
தோகை சொல்வாள். (56)

நாடிழந்து நவநிதிசேர் நகரிழந்து மனைவிதனை
நனிசீர் சேய்தன்
னோடிழந்தும் வாய்மைதனை யொழியாதா னின்குலத்தி
னொருவ னன்றோ
வீடடைந்தா னிந்தமொழி வினவுவதுங் கொடுமையென்றால்
விதியால் ராமன்
காடுறையுங் காலமதைக் கடத்துவதோ மன்றாவேன்
கவலை யென்றாள். (57)

பெண்ணரசி கோசலையா ளிவ்வண்ணம் பேசுதலும்
பெரியோ னேக்கி
கண்ணில்லா தொருமறையோன் மைந்தனையான்
கரியெனவே கடிந்தே னந்தப்
புண்ணியனு மெனைமுனிந்து பூபால நீயுமுன்றன்
புதல்வர் சோக
நண்ணியதா லுயிரிழப்பா யென்றுரைத்த சாபமிது
நங்கா யென்றான். (58)

இரவலரும் புகழ்வேந்த னிருக்கையடைந் தமைச்சனுமற்
றெவருங் கூவி
புரவலநின் குலமகனைப் பொன்னையாள் சனகியொடும்
புகறற் கெட்டாப்
பரவலருங் கானகத்தே விட்டுவந்தோம் யாங்களெனப்
பணித்த தீசக்
கரவலவன் செவிபுகலுங் குருமகன்போ லுயிரிழந்தான்
களிறே யன்னான். (59)

மைந்தர்களிங் கில்லாதா லென்செய்வா ரென்றெவரு
மருகிச் சோரக்
கந்தமலர் மென்குழலாட் கௌசலையுஞ் சுமுத்திரையுங்
கதறுங் காலை
யந்தணனு மாங்கவரைத் தேற்றிமுதற் றேவியினு
லடக்கஞ் செய்தே
சந்ததமப் பரதனுக்கங் கோலைவிடத் தெரிந்தவருந்
தளர்ச்சியானார். (60)

மன்னவன்சே யிருவர்களுங் கேகயனோ டயோத்திநகர்
வந்தா ரவ்வூர்
தன்னையிது திருவிழந்த தாமெனவே மனமுடைந்து
தன்வீ டெய்த
சொன்னமொழி சோராதான் வரம்படைத்த கைகேசி
சுதனைக் கூவி
முன்னவனைப் பெருங்கானம் போக்கினே னரசுனக்கு
முடித்தே னென்றாள். (61)

பழிபாவ முணராது பதியிழந்தா ளுரைத்தமொழி
பழுக்கக் காய்ந்த
கொழுவினிலுங் கொடியதுவாய்ச் செவிபுகலுங் குலைகுலைந்து
குருதி தோய்ந்த
விழியருவி சொரியமுகம் வியர்வொழுக வெகுளியொடு
வெருவ நோக்கி
யிழிகுலமென் றுணர்ந்தனையோ மனுவழியின் முறையறியா
யென்னச் சொல்வான். (62)

முந்தியுனைச் சேதிப்பே னென்பழியும் பின்முடிப்பேன் முகிரேய் வண்ணன்
சிந்தைமுனி வானெனவே யஞ்சிநின்றேன் சீயெனக்கை செவிசேர்த் தாங்கே
கந்தமலர்க் குழல்சோருங் கௌசலையா டன்னடிக்கீழ் காற்றே றுண்ட
சந்தமெண விழுவானைத் தளிர்க்கரத்தா லெடுத்தாற்றித் தையல் சொல்வாள். (63)

வேறு

மனுமுதலாதிவேந்தர் வரன்முறைவழுவினுலுந்
தனியரசிலலாதநாடு தயங்குமேதருமமைந்தா
வனையுரைமறுப்பாருண்டோ வாண்மையோவரசன்பூண்ட
வனைமணிமௌலிசூடி வையகமாள்வாயென்ருள். (64)

பண்ணமர்மொழியாளோடும் பாகையிலவனும்போக
மண்ணவர்மயங்கவேந்தன் மடித்திடவிளைத்தபாவம்
வண்ணமார்ந்தழலின்மூழ்கி மாய்ந்திடத்தீருமாறு
லண்ணனைக்காண்குமாசைத் தடையல்லாதில்லையம்மா. (65)

நாயகனில்லாவூரி ஞனினிப்பொருந்தேனந்தத்
தூயனையழைப்பேனென்னச் சுமந்திரன்றுறவனேடுந்
தாயருமவ்வூருள்ள சனங்களுஞ்சூழராம
னேயனும்பரதன்கங்கை நெடுங்கரைநெருங்கவந்தான். (66)

எண்ணிலாநாவாய்வேந்த னெய்தலுமிளையோனிந்த
வண்ணம்யான்பழியைத்தாங்க வைத்தனளின்ருளென்றே
கண்ணினுலருவிசோரக் கதறுவான்றன்னைத்தேற்றி
யண்ணனையழைப்பதேநல் லறமென்ருனன்பிலாழ்ந்தான் (67)

முத்திநீர்கடந்துகங்கை முடித்தவன்பதவிக்கேணி
வைத்ததாய்முனிவர்மோன மாதவம்வளர்க்குமந்தச்
சித்திரகூடந்தன்னிற் சீபதியிருக்கைக்கேகு
மத்தியிற்பரத்துவாச மாமுனிசாலைபுக்கார். (68)

முனிவனைவணங்கியன்னை மொழியினைமொழிந்தான்றன்னைக்
கனிவுறவாழ்த்தியையா கற்பனைப்படியாமென்றே
யினியவூணூட்டவுண்டங் கெழுந்தவர்சூழ்ச்செங்கை
குனிசிலைபரதன்சித்ர கூடமால்வரைக்குவந்தான் (69)

அந்தணன்வரவைநோக்கி யாடல்வெஞ்சிலையிராமும்
வந்தடிபணிந்தான்றன்னை மதிமுகங்குழைந்துவாடி
சிந்தைநொந்தழுதுவீழ்ந்த சிறுவனையெடுத்துத்தேற்றித்
தந்தையின்மரணங்கேட்டுத் தயங்கினன்புயங்கநீத்தான். (70)

குருமுனிவசிட்டன்றேற்றக் கொற்றவனபதவிசேருங்
கிரியையுமுடித்துப்பின்னர் தம்பியைக்கிளர்ந்துநோக்கித்
திருமுடிபுனையாளுகி வந்ததேன்செல்வாவென்ன
வருவியென்றெருமுகுகண்ணு னரற்றிவீழ்ந்துரைப்பதானுன். (71)

பாவிதன்வயிற்றில்வந்த பாவியேன்படருநீங்க
வாவியைவிடுதல்வேண்டு மல்லதுவிலங்கும்பேயுந்
தாவியகானஞ்சென்று தவம்புரிநதிடுதல்வேண்டுங்
காவியங்கண்ணுளோடு நீசெலக்கருமமுண்டோ (72)

தாங்கிடுஞ்சுமைவைத்தாலுந் தத்தளித்திடுவார்தம்மே
லோங்கியசிலையைவைத்தா லுய்வரோவென்னவோரா
தீங்குநீயுரைத்தாயென்னை யெழின்முடிபுனைவாயென்ற
தாங்குநீர்சுடுகையாற்ற வழன்மருந்திடுவார்போலும் (73)

பன்னியமொழிகேளாத பயலெனவெறுக்கவேண்டா
முன்னநீயுரைத்ததீய மொழியொன்றையொழியமற்ற
தென்னநீயுரைத்தமாற்றி மிகழ்ந்தனனினிவேறுண்டோ
மன்னவாவாவாவென்று மலரடிதன்னில்வீழ்ந்தான். (74)

இரங்கிவீழ்ந்தழுவான்றன்னை யெம்பிரான்கண்ணீர்சோரக்
கரங்களாலெடுத்துத்தாங்கிக் கனிவுறத்தழுவிநோக்கிச்
சுரங்கநீர்த்துறைகள்கானச் சூழலிலிருந்தபோது
மருங்குளாரென்றேநெஞ்ச மகிழ்வதுமறக்குமோதான். (75)

ஒப்புநேரில்லாத்தம்பி யொருவரையிகழவேண்டாந்
தப்புமோவிதியின்றன்மை தனையெவரறியவல்லார்
வெப்பமேன்மனத்திற்கொண்டாய்விடுவினிவிசனவேண்டாஞ்
செப்பியவீரேழாண்டு சென்றபின்வருவேனென்றான். (76)

காவலாநின்னையன்றிக் கடிநகரடையேனென்னக்
கோவலன்பரிவினோடுங் கொடுத்தபாதுகையைவங்கித்
தீவலஞ்செய்துமாள்வேன் செப்புநாளிழந்தாலென்று
நாவலனதைவேந்தாக்கி நந்திமாநகரஞ்சார்ந்தான். (77)

அயோத்தியாகாண்டம் முற்றிற்று)

ஆக விருத்தம் 304.

ஆரணியகாண்டம்.

பத்தியாயிளையோனந்தப் பாதுகைதனைவேந்தாக்கிக்
கைத்தலங்குவித்துத்தெற்கே கண்ணுமாயிருந்தானையன்
சித்திரகூடந்தன்னிற் சிறிதுநாளிருந்துபின்னே
யத்திரிமுனிவன்வைகு மாச்ரமமடைந்தானன்றே. (1)

மாதவமுனிவோரெல்லா மன்னவன்வந்தானென்றே
யோதருமுவகையோடு முற்றனருடனிராம
னுதியாய்வணங்கவன்னா ராசிகண்மொழிந்தேயையா
பாதகவரக்கராலே பயமினியில்லையென்றார். (2)

துய்த்திடுங்கனிகாய்மூலஞ் சுந்தராவிண்பாயென்று
வைத்தனரதையிராமன் மகிழ்வொடுமருந்தினன்பி
னுய்த்திடும்பதவிமூல முடலின்கூறத்துவைத
மெய்த்தவருரைப்பக்கேட்டான் மேவுவார்க்கிடமாயுள்ளான். (3)

மாதனுசூயையென்பாண் மறையவன்மனைவிசெய்ய
சீதையைமணமாதென்னச் செய்தனளவளும்ராம
நாதனைவணங்கவையன் னகைமுகமலர்ந்தான்மாத
போதனர்விடைகொண்டன்னார் புகல்வனநோக்கிவந்தார். (4)

வேறு

கொண்டல்வண்ணனுங் கோதையுந்தம்பியுந்
தண்டகாவனஞ்சார்ந்தனர் சீதையைக்
கண்டவாவிற் கவருவிராதன்றே
டுண்டமாகத்துணித்தனர் தூயரே. (5)

ஆனசன்மமரக்கனே யாயினும்
போனதிற்செய்த புண்ணியமுற்றதான்
மானிராமன் மலர்ப்பதந்தீண்டலு
ஞானமெய்தி நசைமொழிகூறுவான். (6)

எண்ணிலாத சராசரமீன்றனை
கண்ணனே கமலாசனிகாதலா
பண்ணுமென்றன் பிழைபொறுப்பாயென்றே
விண்ணுளார்தொழு மெய்ப்பதமேறினன். (7)

அங்கவன்புகழ்ந் தன்பரோடெய்தினன்
சங்கபாணியி ராகவன் சானகி
சிங்கவேறனை யாளெடுஞ்சீர்சர
பங்கமாமுனி யாச்ரமமம் பற்றினர். (8)

மூலமோன முனிவர்கள்யாவருஞ்
சீல்ராமனுக் காசிகள்செப்பினர்
சாலவானத் தரசனுஞ்சார்ந்தெமைப்
பாலனமுன் பரமென்றுபோயினர். (9)

முனிவராச்ரம மெய்திவமூவர்க்கு
மினியவாசி யியம்பினர்யாவருங்
கனிவுறத்தொழுங் கண்ணனைநோக்கியே
துனியரக்கர்தந் துன்பங்களோதினர். (10)

ஐயமாதவ மார்க்கரும்வேள்வியுஞ்
செய்யுமின்னதைத் தீங்குசெய்தேவரு
மையர்க்கர் மிலேமகி யாயினுங்
கொய்யுவேன்சிர மென்றனன்கொற்றவன். (11)

வேறு

ஓதியதோர் ரகுபதிதன் றுணையால்யோக
முயர்யாக முதலான தொருதீங்கின்றி
மாதவர்கள் செய்தனரவ் வர்னோரெல்லாம்
வந்தவர்க ளவிர்ப்பாகம் வழங்கப்பெற்றார்
சீதானு மீரைந்தாண் டிருந்தபின்னர்
செப்பரிய முனிவர்களா லனுப்பப்பெற்றுச்
சோதரனு மனைவியும்பின் வரவேஞான
சுதிட்டமுனி யாச்ரமத்தின் றுறையிற்புக்கான். (12)

கண்டனர்கண் மாதவத்தோ ரெல்லாமாங்கே
கையேந்திக் கற்பகத்தின் கன்றேவாவா
வண்டர்தமைக் காக்கவந்த வரதேயெங்க
ளருந்தவமாம் பயிர்வளர்க்கு மமுதேவாவா
புண்டரிகப் போதமருங் கண்ணாவென்றே
புகழ்ந்தவனை யுவந்தழைக்கப் புணிரிதோய்ந்த
கொண்டலெனத் திகழ்மேனி ராமச்சந்த்ரன்
குழைந்துமனங் கனிந்துகரங் குவித்துவந்தான். (13)

அகத்தடங்கா மகிழ்ச்சியொடு மறையோர்தம்மை
யணங்கிளையா னோடவனும் வணங்குங்காலை
மகத்தான வாசிதனை மொழிந்தயோத்தி
மன்னவா வமரெனவே யிருந்தானையா
ணிகத்துடனே பரத்தடைவ தெல்லாமுங்க
ளிணையடியின் றரிசனமென் றியம்பவன்னார்
சகத்திலுயர் தசரதன்செய் தவத்தால்வந்த
தாசரதி வாழியெனச் சாற்றினரே (14)

ஓதரிய முனிவர்களு மந்தவண்ண
முவந்தவனுக் கருங்கனிகா யுதவராம
நாதனுள மகிழ்ந்ததனை யருந்தித்தூய
நற்றவரோ டற்றைநா ளிருந்தேயந்த
மாதவர்கள் வழியனுப்ப வந்தான்செய்ய
வனத்திலுள புதுமைதனை வணங்கிக்கேட்குஞ்
சீதைமகிழ்ந்திடப்புகன்று னவர்களோடுஞ்
சீதரன்மா மலைமுனியாச் ரமத்தைச்சேர்ந்தான். (15)

வேறு.

தம்பிமுன்வருஞ் சானகிபின்னுமாக்
கும்பமாமுனி யாச்ரமங்கூடினு
னம்புயக்கண்ணி ராகவனந்தணர்
தம்பிரானடி தன்னைவணங்கினன். (16)

காசிலாதக னிட்டனுங்காஞ்சனத்
தேசினனும் திருவடிதாழ்ந்தனர்
மாசிலாத மலைமுனிவன்புகழ்ந்
தாசிகூறி யருகிலிருத்தினன். (17)

துய்யதம்பியுந் தோகையுநீயுமாய்
வையமின்றி வனத்தின்மலர்ப்பத
நையவந்த நடையிளைப்பாறுக
வையவென்ன வருந்தவன்கூறினன். (18)

திங்கள்சூடி திருவடிகண்டபின்
றங்குமோபெரும் பாவமத்தன்மைபோ
லிங்குதங்க ளிணையடியேத்திடு
மெங்களுக்கிளைப் பேதென்றியம்பினன். (19)

மூலங்காய்கனி மூவகைமூவகைக்
காலமோர்ந்த கடமுனியீந்தன
னீலமுண்டகண் ணேரிழையாளொடுந்
தாலமுண்டவன் றானுமருந்தினன். (20)

சேனுளார்க்கிடர் செய்யுமரக்கரை
யாணறப்பொடி யாக்கிடும்விஞ்சையுங்
காணுமத்திரங் கைத்துறைக்கம்பருத்
தூணியுங்கொடுத் தான்மலைத்தொன்முனி. (21)

இன்னுமவேண்டுவ யாவையுமீந்தவர்
தன்னிடஞ்சலத் தானத்தின்றன்மையு
மன்னுமாறு மகிழ் முனிகூறலும்
பன்னியோடவன் பாதம்வணங்கினன். (22)

வேறு.

அந்தணர்கோமான்செய்ய வடியிணைதொழுதேயன்னான்
றந்திடும்வரங்கள்பெற்றுத் தம்பியோடவனுமாதும்
வந்தனர்சடாயுவைகும் வனத்திடையவனைக்கண்டார்
சிந்தையின்மகிழ்ச்சியோடுஞ் சிறுவரைநோக்கிச்சொல்வான். ()

பாலர்காணீங்களெந்தப் பார்த்திபன்புதல்வரிந்தக்
கோலமாய்வருதற்கொத்த கொடுமையையுரைப்பீரென்னத்
தாலமும்புகழயோத்தித் தசரதன்புதல்வர்யாங்கள்
சேலெனும்விழியாளான சிற்றனைவரத்தாற்செப்ப. (24)

அண்ணலேயென்றனெம்பி யயோத்திநாடாளயானு
நண்ணியவீரேழாண்டு நனிதவமடையப்பெற்றேன்
புண்ணியமுனிவர்தங்கள் பொற்பதம்பணிந்துபோற்றி
யெண்ணியவீரைந்தாண்டா யிருந்திவண்வந்தோமென்றான். ()

மைந்தரேயெனதுநேய மன்னவன்சுகமோவென்னச்
சிந்தையிற்றளர்ச்சியோடுஞ் செப்பலுஞ்சடாயுவேந்தன்
மந்தரமசைந்தாலென்ன வாருடற்குலுங்கக்கண்ணீர்
சிந்தினதருவியோடத் தேறிடாவிசனத்தாழ்ந்தான். (26)

பொங்கியவிழிநீரோடப் புலம்பியங்கழுவான்றன்னைச்
செங்கையாலெடுத்திராமன் சிறுவரெம்போல்வார்தம்மிற்
றங்கிடுந்துயரநீக்கித் தாங்குநீதயங்கலாமோ
சங்கையிற்குணத்தோயுன்றன் றனித்துயரொழிகவென்றான். (27)

படிபுகழிராமநாதா பறவையுமனிதரென்று
முடலிருபேதமல்லா துயிரொருவுருவங்கொண்டோந்
திடமுறமனதிலெண்ணித் தேற்றினுஞ்சிநேகவாஞ்சை
தடைபடாதுருக்குதென்னச் சடாயுவுந்தளர்ந்துசொல்வான். ()

வேறு.

ஆதிசிருட்டியி னான்முகனவன்வழி வழியா
யோதுகாசிபப் பிரமனையோதரு மதிதி
மாதுதன்னொடு பன்னிருமடந்தையர் மருவிப்
பாதலம்புவி வானுளயாவையும் பயந்தான். (29)

அந்தமாதரில் வினதைதன்மைந்தனு மருணன்
கந்தநாறிடுங் கருங்குழலாம்பையைக் கலந்து
முந்தியீன்றசம் பாதியென்மூத்தவன் முன்போற்
றந்தவென்னையுஞ் சடாயுவென்றழைத்தனர் தமியேன். (30)

செருக்கினாலொரு சபதமிட்டிருவருஞ் சென்றோ
மருக்கனேரவ னெய்தலுஞ்சிறகுக ளவிந்து
தருக்கள்சூழு மயேந்திரச்சாரலைச் சார்ந்தா
னிருக்குமிவ்விடம் புநிதமென்றிங்கியா னிருந்தேன் (31

நம்பிகேளொரு நிமித்தமாய்த்தசரத னட்பா
யெம்பியானென விசைத்தனனவ்வழி யிருந்தோஞ்
சம்பராசுரன் போர்த்துணையாகினேன் சார்ந்தோர்
தம்பிமுந்திய திரமிலையென்றவன் றளர்ந்தான். (32)

வேறு.

இந்தவிதமென்றவ னியம்பலுமிராமன்
சிந்தையின் மகிழ்ந்துசில நாளினிதிருந்தான்
றொந்தகவரக்கர்தமைச் சூழ்வினைகடுண்டத்
தந்தையினுமன்புள சடாயுவிடைவந்தான், (33)

அஞ்சலிகரத்திைெடு மாங்கவனைநோக்கி
வஞ்சகநிசாசரர் வரும்வழியிதென்றே
குஞ்சரமிலங்குமலை கும்பமுனியென்னைப்
பஞ்சவடிதன்னிலிரு போவெனப்பணித்தான். (34)

கொண்டலெனவண்ணனிவை கூறலுஞ்சடாயு
புண்டரிகமென்னமுகப் பொற்பிைெடுரைப்பா
னண்டருலகத்தமரு மந்நதியீதென்ன
விண்டிடுவர்கோதா விரிப்புனலைமேலோர். (35)

அக்கரையுமிக்கரையு மைந்தருவையொக்கு
மிக்கதொருகாய்கனி விருக்கமதுகோடி
தக்கபுனலந்நதித் தடங்கரையிற்சற்றே
தெற்குளதுபஞ்சவடித் தீரமெனச்சொல்வார். (36)

அத்தலமதற்குநிக ரம்புவியிலில்லை
முத்தலையரக்கரிட ரான்முனிவர்சேரார்
சத்துருவரக்கருள தாலிவளைநீங்கா
துத்தமனேவைவகுதியென் றுேதினன்சடாயு (37)

வேறு

முதியதோர்தாதையென்னு முறைமைகொண்டவனைராமன்
மதிநுதிலிளையாளுேடு வணக்கலுமகிழ்ந்துவாழ்த்தித்
துதிபெறநெடியதூரந் தொடர்ந்துவந்தனுப்பவன்று
ரெதிரெதிர்நோக்கிநோக்கி யேகுமென்றிரங்கிச்சென்றுர் (38)

பிடியெனுநடையாளோடும் பெருவனப்பெருமையெல்லாங்
கடகளிறனையான்கையாற் காட்டிமுன்சென்றுன்பின்னே
படிபுகழிளையோன்கையிற் பகழியுந்தனுவுமேந்தித்
தடவனங்கடந்தாரக்கோ தாவிரிநதியைக்கண்டார். (39)

வேறு.

தங்குமந்நதி சானவிபோன்றதா
லிங்குதோய்ந்திடி லுய்யலாமென்னவே
பங்கயத்திருப் பாவையும்ராமனுஞ்
செங்கைகோர்த்துத் திருநதியாடினர். (40)

துய்யமாமுனி சொல்லியதூர்த்தரா
மையரக்கர் வரும்வழியுமிதே
யையபஞ்ச வடித்தலமானதாற்
செய்யதாயிடஞ் செய்யெனச்செப்பினுன். (41)

இணையிலாத விளையவனிவ்வணம்
பணையினுலும் பசுந்தழைக்கொம்பினுங்
கணையினுலுஞ் சரக்குடில்கட்டினு
னணையராவும் பாலாழியுமொத்ததே. (42)

எங்குமெந்தக் கடவுள்வந்தெய்தினு
மங்குமந்தத் தலஞ்சிறப்பாவபோ
லிங்குதம்பி யியற்றியசாலையிற்
றங்கிராமன் றனிநகரொத்ததே. (43)

அந்தவண்ண மமைத்தலுமாழிநீ
ருந்திலங்கை யரக்கராமோதரு
சிந்துரத்திர ளுக்கொருசீயம்போல்
வந்துபஞ்ச வடிக்கரைமன்னினுன். (44)

வேறு.

சிங்கவேறனையானோடு தம்பியுஞ்சீதைதானுந்
தங்கியசாலைநோக்கித் தசசிரன்றமர்களோடு
மங்குலாழரக்கர்க்கெல்லா மரும்பகைதுருவும்பொல்லாப்
பங்குவின்றூதியாகப் பாவிசூர்ப்பனகைவந்தாள். (45)

மந்தரப்புயமால்ராமன் வனசமாவதனநோக்கிச்
சிந்தையுள்ளுடைந்துகாமத் தெரிவையாய்த்திருந்தாள்வீழ்ந்து
கந்தவேளனையாய்வேவாக் காமனும்ரதியும்போல
விந்தவண்பொழிலிற்சேர்ந்தா லிணைநமக்கில்லையென்றுள். (46)

சாதியுமரபுமோராத் தபசியைத்தழுவாயென்று
னீதியோமடவாயுன்ற னெறிகுலமறியேனென்றன்
சீதையென்றுறவுக்கேற்பத் திருப்பணிசெய்யநின்றுள்
போதிநீயிளையோன்கண்டாற் புலன்படப்புடைப்பானென்றுன்.

கனிவொடுவந்தவென்னைக் கலந்திடாதிகழ்ந்தாயானுன்
மனிதரும்பழிப்பதல்லால் மாதவம்பலித்திடாது
வினைகெடும்பழிகள்சேரு மெல்லியர்மனம்பொல்லாதா
மினியெனவுரைக்கவேண்டு மென்றவளியம்பலுற்றாள். (48)

அஞ்சிறைச்சுரும்புபெண்ணு மாணுமாய்ப்பயிலுங்காலை
மிஞ்சுசூலுளதைவைத்து மேவியதேனைத்தேனூர்
கஞ்சமுங்குவிந்ததோராக் கணவனைச்சீறுங்காலை
யஞ்சியம்முனிவன்பாவ மறைந்திடவணைந்ததன்றே. (49)

முனிவன்செய்பாவமென்ன மொழிந்திடவதனைநோக்கித்
தனியிசைத்தேனேயான்செய் தப்பிதமுரைப்பாயென்னக்
கனிவுடன்றழுவவந்த காரிழையாளைச்சேரா
வினையினாலென்றகாதை விரித்துரைசெய்வேனென்றாள். (50)

மாதவப்புலத்தியன்சேய் வரமுனிவிசுவசென்பான்
காதலுற்றவளைச்சேராக் கடுந்தவம்புரிந்தானந்தப்
பாதகஞ்சுரும்புகூறப் பரிவொடுபுணர்ந்தானன்னான்
சாதியுங்குலமுஞ்செய்யுந் தவமுமேயழிந்ததுண்டோ. (51)

விரித்துரைசெய்வதென்னோ வேந்தன் சுமாலியீன்ற
பரத்தைதானெங்களன்னை பாலனுற்பத்திவேண்டிச்
சிரத்தையோடிருந்தாளந்தத் தேன்மொழிசெவிபுகாமுன்
விரத்தியைவிடுத்தேயன்னாண் மேவினான்விசுவசென்பான் (52)

பொன்னணியிலங்கைவேந்தன் புயங்கநான்கிரைந்துள்ளான்
பின்னவன்கும்பகன்னன் பேதையாமெனையுமெம்பி
தன்னையும்பயந்தாளென்றுற் றழுவுதற்கையமுண்டோ
வின்னமுங்கடத்திச்சொன்னாலிடருனக்கிழைப்பேனென்றாள்

வாதுரையரக்கிதன்னை மயிர்பிடித்திழுத்துவாளாற்
காதொடுநாசிகொங்கை களைந்தனனிளையோனந்தத்
தீதலேகுழலாளோடிச் செபமுச்சென்னியானுங்
காதகக்கரனுஞ்சேனை கடலெனத்திரட்டிவந்தார். (54)

கரிபரியோடுதிண்டேர் காற்படைகணக்கிலாது
விரிதலையரக்கிகூட்டி விடுத்தலுமவர்களாவி
யொருகணைவிழுங்குமேனு மற்றதற்கோரமென்று
துருமறச்சரங்களெல்லாந் தொடுத்திடவுளத்திற்கொண்டான்

முத்தலையரக்கனென்பான் மூவகைச்சேனையோடு
மத்தகக்கரியன்னுனை வளைத்துவநதரக்கர்செல்வத்
தத்தையைநாசியீர்ந்த தூரடாவவன்கைதன்னைக்
கத்திரிபபதுவுமன்றிக் கணைக்கிரைகொடுப்பேனென்ருன் (56)

இந்தவாறவனுஞ்சீறி யியம்பிடுமெலையிராமச்
சந்திரனைத்துத்தம்பி சனகியைக்காப்பாயென்றே
யுந்திஞன்கணைகளுழிக காலெனவொருமித்தோட
வந்தவன்சேனையோடு மறலிமாநகரம் புக்கான். (57)

அங்கிருந்தவர்களோடித் தூடணனடியில்வீழ்ந்து
தங்களைவரவேகூறித் தரையிடைவீழ்ந்தாரென்ருர்
செங்கரமறைந்துகண்கடீயெழச்சினந்துசேனை
பொங்கியகடல்போற்சூழப் போர்க்களத்தவனும்வந்தான். (58)

அத்தனுஞ்சினந்திமைப்பிற் காயிரங்கணையாயேவத்
தத்தியவிரதமெல்லாந் தவிடெனச்சிதைந்ததன்றி
யித்தரையிடம்பெருத வெண்ணருஞ்சேனையெல்லாஞ்
சுத்தமாயொழிந்தபின்பு தூடணனெதிர்ப்பதாஞன். (59)

ஆடல்வெஞ்சிலையிஞனு மரைமதிக்கணையையேவித்
தூடணன்சிரமுந்தேருந் தொலைத்திடக்கரனுந்தாவி
நாடிஞனிவனும்பொலலா நரனெனநினைந்தோரம்பைக்
கோடியசிலைகோர்த்ததயன் குனிசிலைமுறித்தானம்மா. (60)

செந்திருமடந்தைநாதன் சிலைமுறிந்திடலும்பின்னே
வந்தனன்வருணன்கண்டு மன்னவாவந்தேனந்நாட்
டந்ததோர்பரசிராமன் சாபமென்றீந்தான்வாங்கிச்
சிந்தையின் மகிழ்ச்சியோடுஞ் சிலைவளைத்தெதிரேவந்தான். (61)

ஒன்றதுகோடியாகு முயர்கணையெடுத்துவிஞ்சை
வென்றியுச்சரித்துவிட்டான் வீரரில்வீரராமன்
றுன்றியகணைமோடித் துளைத்திடச்சோரியோடும்
பொன்றினன்கரனுஞ்சேனை யவன்பினேபோயிற்றன்றே. (62)

பதுமினிசனகிதன்னைப் பார்த்திபன்மகிழ்ந்துநோக்கிச்
சதுர்விதத்தளங்கட்கெல்லாந் தலைவரிற்றலைவரான
வதிரதவரக்கன்சேனை யறுபதாயிரந்தேராருங்
கதிபெறக்கரனுமாண்டகளத்தெழில்காட்டிச்சொல்வான் (63)

அங்கவருடைமையெல்லா மலகையும்பேயும்பூண்டு
தங்கடன்னளவுக்கேற்ற தனியரசாக்ஷிபூண்டு
பொங்கியகுருதிதன்னிற் புதைபடுந்தேரிற்றாவி
யங்கதையீர்த்துத்தெப்ப மாடிடுமாடல்பாராய். (64)

இத்தகையாவியெம்மோ டிருந்தெமைவிடுத்துவீர
முத்தியையடையச்சென்றுற் றொடர்வதுமுறையமென்றே
தத்தியபோலுமந்தத் தாரணிமகளம்மானை
பத்தியாய்ச்சுற்றல்போலப் பாய்ந்திடுங்கபந்தம்பாராய் (65)

மதிநுதன்மடந்தைக்கிந்த வண்ணம்போர்க்களத்திலுள்ள
புதுமையைப்புகழ்ந்துகூறப் பூவையும்புகழ்ந்தாளைய
னெதிரிலாதிளையானோடு மிருந்தனனீர்ந்தகாதி
னுதிரமோர்மாலையென்ன வொழுகிடவரக்கிசென்றாள் (66)

வேறு

கதித்தவாட்படு நாசியும்பழுதெனக் கனன்று
கொதித்தசிந்தையி னுலையிடுபுகையனற் கொழுந்தா
யுதித்தநெட்டுயிர்ப் பொடுவழிகுருதியு முடையாள்
புதித்தமாளிகைப் பொன்னகரிலங்கையிற் புக்காள். (67)

கண்டதேவரு முனிவருங்கலங்கிடக் கதறிக்
கொண்டலூர்தரு மாளிகைக்கொலுமணிக் கோயின்
மண்டபங்களுங் குலுங்கிடவீழ்ந்தனண் மரமபோற்
றுண்டமாய்ச்செவி கண்டவிராவணன் றுடித்தான், (68)

என்னகாரண மிப்பிழைசெய்தவ ரிமையோ
ரன்னம்புள்ளெரு தூர்ந்தவராயினு மரக்கர்
மன்னவன் றிருச் செல்வியென்றுணர்விலா மதியோர்
சென்னிகொய்யிலிப் புண்மருந்தாமெனச் செறுத்தான். (69)

பிடித்தவாளொடு கண்களிற்றீயெழப் பெருவாய்
மடித்துமெய்ம் மயிர் பொடித்திடவக்கிர மாம்பற்
கடித்துவீசைக டுடித்திடக்கடையுகத் தாலங்
குடித்தருத்திர னுமெனவெகுளிகொண் டெழுந்தான். (70)

மூவராயினு நின்னுடன்போர்தர முடியாத்
தேவதேவநீ சிறியரைச்செயிப்பது திறலோ
வேவலாளரைவிட் டவனுயிர்பரிப்பதுன் னியற்கை
பாவலாவிதைத் தெளிவுறவிளங்கெனப் பணித்தான். (71)

அங்கமைச்சனே யுவந்தரியணையிருந் தருமைத்
தங்கைமாமுக நோக்கியித்தனிப்பிழை புரிந்தோ
ரெங்குளாரிதற் கேதுவும்யாதென விலங்கை
தங்குவார்க்கெலாம் வினையுறுவினையமாய்ச் சாற்றும். (72)

வேறு

அருமணிகொழிக்குங்கோதா விரிநதிக்கருகேபஞ்ச
தருவடித்தீரந்தன்னிற் றம்பியோடிருந்தானுன்றன்
றிருவடிபொடிக்கொவ்வானைச் செப்புவாரிராமனென்றே
மருமலர்க்குழலாளன்னான் மனைவியாமடந்தைக்கையா. (73)

அலரியொன்றுதயஞ்செய்ய வடரிருளுடைந்ததென்றே
மலர்தலையுலகங்கூறும் வகையினன் மருகித்தேர்ந்து
பலபலதவத்தின்பேருற் பகலிரவகலேனென்னக்
கலனெடுநானந்தாங்கிக் கார்குழலாயிற்றன்றே. (74)

காதளவோடிநீண்டு கருங்கடற்பரப்பாமென்ன
வோதரும்விடமும்பாலு முறவுகொண்டுவமைபூண்ட
தாதவிழ்கடுக்கையான்மெய் தனிக்களம்வியப்புற்றேத
மாதருக்கரசிக்கென்றே மலரயன்வகுத்தகண்ணாள். (75)

தத்தையின்மொழியையாழின் றனியிசையோடுஙகூட்டிச்
சுத்தமாந்தேனும்பாலுங் கனியுடனசலந்துதோய்த்துப்
புத்தமுதோடுஞ்சேர்த்த பூங்கொடிவசனமென்றான்
முத்தையும்பழிககுமூரன் முறுவலைமொழியலாமோ. (76)

இந்திரன்சிலையைமானு மெழிநுதற்செவிகள்காம
னுந்தியவூசலன்னு னுடைமுகங் காட்டுங்கன்னஞ்
செந்துவர்க்குமுதஞ்செவ்வாய் திருமுகங்கமலஞ்செய்ய
கந்தரங்கடைந்தசங்கங் கனமுலைக்கனகக்கும்பம். (77)

செப்பெனத்திரண்டகொங்கை சேயிழையிடைக்குநேரா
யொப்பதோவுலுத்தர்வரயி னுரையலாதில்லையாருஞ்
செப்பரும்வடிவினுள்பேர் சீதையாந்தேவரோடு
மிப்பெரும்புவியோர்போற்று மிசைக்கவளிசையாமண்ணே (78)

அண்ணகேளரம்பையென்ன வடித்தொடைமுழந்தாளம்பொன்
வண்ணமாமலவனல்லான் மற்றதற்குவமையில்லை
யெண்ணருஞ்சினைவராலே யிருகணுக்காலாமென்ன
விண்ணரும்புகழ்வாரையா விரலகள்வித்துருமமன்னே. (79)

செந்திருமகளோ நாகச் செல்வியோதெரியேனுற்
பைங்தொடிமடவாரந்தப் பைங்தொடிக்காசைகொண்டா
லிந்திரன்சசியுமன்னு ளிணையடியழகுக்கொவ்வாள்
சுந்தரப்புயத்தோயந்தத் தோகையைக்கொணர்வாயென்றாள்

பனிமொழிமடந்தைதன்னைப் பசுபதியிருக்கைதாங்குந்
தனிவரைப்புயத்தோயுன்றன் றகுதிக்கேதக்கதென்று
கனிவுடனெடுத்துவந்தேன் காவலனிளையோன்கண்டு
முனிவுறமுலையுங்காது மூக்கையும்போக்கிவிட்டான். (81)

செப்பலுஞ்சினங்கொண்டெய்துந் திருசிரன்கரன்பின்னுனே
னொப்பிலாச்சேனையோடு மொருநொடிப்பொழுதிலையா
துப்பறமடிந்தாரந்தத் தோகையைக்கொணர்வாயாகி
லப்பெரும்பழியுந்தீரு மறுந்தமூக்காகுமென்றாள். (82)

வேறு

ஓங்குசெல்வமு மோ தரும்போதமு
நீங்குகால்வரு நேரிழைமோகம்போற்
றீங்குவாசகங் கேட்டவன்செப்பலும்
பாங்கிருந்தவமைச்சன் பகருவான். (83)

கரனுஞ்சேனையு மாண்டதுகண்டுநீ
நரனென்றெண்ணிப் பகைப்பதுநன்றல
வரமும்வஞ்சக மாங்கலைமாமனுற்
சரதமாய்க்கொள றக்கதென்றேதினன். (84)

விதிகையநோக்கிய வெவ்வினையின்வழீ
மதியதாமென மந்திரிகூறலுந்
துதிசெய்தாங்கொரு தூதனைக்கூவிநீ
குதிகொண்டோடியென் மாமனைக்கொணர்கென்றான் (85)

இந்தவாசக மேவலர்கூறலும்
வந்தமாமனை மன்னவனேக்கியே
கந்தநாறுங் கருங்குழற்சானகி
யந்தராமனுக் காவதென்னுண்மையோ, (86)

என்னநீசெல்வி ணியமானுமார
யன்னவன்பிரிவா னதுகண்டியான்
சன்னியாசத் தவவடிவாகியே
கன்னியைக்கவர்வேன் கரவாலென்றான். (87)

கொடியதாக விராவணன்கூறலும்
படியில்வீழ்ந்து பதைத்தவள்பத்மனி
நெடியமால் ரகுராமனைநேர்ந்துநங்
குடிகெடும் மதிகொண்டதென்கொற்றவா. (88)

முன்னமாமுனி யாகமுகப்பிலென்
னன்னைகாய மழித்ததுமன்றியே
யென்னையோர் சரமெற்றியதெண்ணிலு
லின்னமு முடலுண்ணடுக்கெய்துதே. (89)

ஆதாலாலந்தவம்புய வல்லியை
யோதிடாதொழி யென்றலுமொப்பிலாப்
பாதகன்சினம் பற்றியதாலவன்
மாதுலன்றெரு மான்வடிவாகினன். (90)

துய்யசெம்பொன் சுடர்பெறுமேனியாய்ச்
செய்யதாள்செவி செம்மணிவண்ணமாய்த்
தையற்சானகி தன்னிடைநின்றனன்
மெய்யதாமென மெல்லிழைகூறுவாள். (91)

புங்கவன்பதி பொன்னுழையாமிதே
யிங்குவந்த தெனக்கருள்வாயென
மங்கைகூறலு மன்னவனேக்குங்கா
லங்குதம்பியீதைய மென்றேதினன். (92)

வேறு

மாயமானிதுவாமென்ன மறுத்திடுந்தம்பிக்கோதி
நாயகன்பிடிப்பேனென்ன நடந்தனனெடியதூரம்
போயபின்பிழையீதென்றே புடைத்தனன்பொய்மான்வேடப்
பேயனுஞ்சீதாவென்று பெருங்குரலரற்றிவீழ்ந்தான். (93)

கொழுந்தனைக்கூவியிந்தக் கூக்குரலறிவாயென்ன
வழிந்ததுமானேயல்லா லண்ணனுக்கிடையூறுண்டோ
செழுந்திருமாதேயென்னச் செப்பலுஞ்சினந்துகூற
வெழுந்தனன்முளரியாடன்னிணையடிதொழுதுபோனன். (94)

அங்கவன்போயபிற்றை யரக்கனுந்தபசியாகித்
திங்களொன்முகத்தாடன்பாற் சேர்ந்தனன்றுறவனென்றே
பங்கயமலர்க்கைகூப்பி நின்றனள்யாதநோக்கி
மங்கையேநீயாரிந்த வனத்திருந்தாயேனென்றான். (95)

வந்தவன்மறையோனென்ன வணங்கியகரத்தினேடுஞ்
சந்தமாரயோத்திவேந்தாந் தசரதன்றனையன்ராமச்
சந்திரன்மனைவியானித் தரணியோர்புகழுமென்றன்
றந்தையாஞ்சனகவேந்தன் சானகியென்பேரையா. (96)

சிற்றனையுரைத்தவண்ணந் திருநகரினையோற்கீந்து
மற்றொருதம்பியோடென் மணாளனும்யானுமாயிங்
குற்றனமுழைப்பினன்று ரொதுங்கினரோருத்தியாக
நிற்றனனிருங்களிங்கோர் நிமிடத்தில்வருவாரென்றாள். (97)

மதிநுதற்சனகிகூற வஞ்சகன்கைத்துமாதே
புதியமுதனையுஞ்சங்கம் புன்புனலடைந்ததென்றால்
விதிவழிவிளைந்ததேனும் வெறுப்பதுவிவேகமன்றே
நிதிதனிற்பரமன்றேழ னிகரிலாப்பெருமையுள்ளான். (98)

வானவர்கோமானன்றன் மலரடிதொழுவனென்றான்
மாநிலத்தரசராணமை வகுப்பதே முறையோன்போ
னனவனறனைநீசேர்ந்தா லரம்பையுமேவல்செய்வா
ரீனமுமிலையுர்முன்ற னெழிலினுக்கெழிலாமென்றான். (99)

துடித்துடனடுங்கிச்சீறித் துறவிநீபோபோவென்ன
முடித்தலையரக்கனுக்கா நிற்றலுமுனிந்திங்கென்பா
லடுத்துநீவருவாயாகி லாயிரஞ்சிதளாக்சென்னி
வெடித்திடக்கடவாயென்றே விடுத்தனள்கடுத்தசாபம். (100)

கனிதழறீண்டவஞ்சிக் கருவியாலெடுப்பார்போலப்
பனிமலர்க்குழலினளைப் பாரொடும்பெயர்த்தான்பேர
வனிதையுங்குழைந்துகூவ வஞ்சகனிரதத்தேற்றித்
தனிநகர்நோக்கிச்செல்லுந் தடத்தினிற்சடாயுகண்டான். (101)

கொடியெனக்குழைந்துகூவுங் கோதையைவிடுதியென்றே
பொடியெனமுடிகள்சிந்தப் புடைத்தபொற்சடாயுதன்னைக்
கடிதொருவசியான்மோதிக் கிடத்தினனரக்கன்காரபோல்
வடிபுனற்கண்ணளோடும்வஞ்சகனிலங்கைபுக்கான். (102)

காற்றுமேபுகுதாவந்தக் கடும்பொழிலசோகந்தன்னிற்
கூற்றினுங்கொடியரான வரக்கியர்கூட்டத்துள்ளே [ன்]
மாற்றமொன்றுரையாவண்ண மங்கையைச்சிறையில்வைத்தா
சாற்றருங்குணத்தோனுன தம்பியையராமன்கண்டான் (103)

வேறு

தம்பிவரக்கண்டவுடன் ருசரதியையாங்
கொம்பனையைவிட்டுவந்த கோலமேதென்றுரைக்க
வெம்பிவிழுமானுசை வேற்றுமையான்மெய்ம் மயங்கி
யம்புயக்கண்மாதுமெனை யறிந்துவாவென்றுரைத்தாள் (104)

தேற்றமனந்தேருது சேயிழையாள்செப்பு மொழி
மாற்றமனமில்லாது வந்தேன்யானென்றுரைத்தா
ஞற்றிசையும்போற்றும்ரகு நாயகனுந்தம்பியுமாய்
வீற்றிருந்தசாலைதனின் மெல்லியலைககாண்கிலரால். (105)

வாடினூர்நெஞ்ச மருகினூர்வாய்புலம்பித்
தேடினூரங்கோர் தேரின்றடங்கண்டார
கூடினூர்பேயரக்கா கொள்ளைகொண்டாரென்றுதறித்
தோடினூர்சிந்தை யுலைவாய்மெழுகானூர். (106)

தேரூர்தடத்தின்வழிச் சென்றூர்கடெவ்வரக்கன்
போராரடையாளம் புனிதருணர்ந்தோடோடிச்
சீரார்சிறகிழந்த செம்மலைமேற்செல்லுறைத
னேராய்ச்சடாயுவின்மே னெடுமாலுவீழ்ந்தழுதான். (107)

பொன்னூரனையார் புலம்பவழிவந்ததுவு
மின்னூரும்பொற்றிகிரி வேந்தனிறந்ததுவு
மொன்னூர்கள்சூழ்வனத்தி லுற்றதுவுமற்றதுவு
முன்னுலேயல்லோ மொழிந்திருந்தேனையாளே. (108)

செப்பியதோர்தம்பிநெறி செல்லாதுசிற்றறிவாற்
றப்புமான்பின்போனேன் றையற்றனையிழந்தே
னெப்பறவாயிராவணன்வா ழூரழிப்பேனுனலு
மப்பாவுனைக்காண லாகுமோவென்றழுதான். (109)

புண்டரிகக்கண்ணீர் பொழிவான்முகநோக்கி
யண்டர்பிரான்வேதா யரியரனேயானலும்
வண்டிறல்சேருழ்வினையை மாற்றுதற்குவல்லாரோ
மண்டலிகாவுன்றன் மனம்வருந்துமாறேதோ. (110)

அயனையாதையா வனுவசையாதாலும்
புயவலியாமுக்கம் பொருளுடைமைபுண்ணியனே
கயல்விழியைக்கொள்ளைகொண்டகாரரக்கர்போர்க்களத்திற்
சயமடைவாயென்றே சடாயுபரஞ்சார்ந்தனால். (111)

தந்தையுறவாயடைந்த சடாயுதனைத்தாசரதி
யிந்தனமேலேற்றி யெரியடக்கஞ்செய்ததற்பின்
வந்தனர்கள்செங்கதிரோன் மறைந்துமதிவந்திடலு
மந்தவிராவைய னடைந்ததுயராருரைப்பார். (112)

வாடினுன்றன்னை மனந்தேற்றித்தண்ணீர்க்கா
யோடினனங்கே யயோமுகியென்றோரரக்கி
நாடினுடன்னுடைய நாசிகளைந்தண்ணனிடங்
கூடினன்பேயரக்கி கோலமெலாங்கூறலுற்றான் (113)

தாங்காதுவகையொடுந் தம்பிதனைத்தாசரதி
பாங்குவாவென்றே பரிவாற்புறந்தழீஇ
யாங்கிருந்தாராதவனு மையநின்னைசைபெறும்
பூங்கொடியைக்கண்டுவந்தே னென்பானைப்போல்வந்தான். (114

பொன்னனையாள்போனவழிப் போகும்போதிற்கபந்தன்
றன்னிருக்கைக்குள்ளாகித் தாக்கினர்தாரலைபோன்
மன்னுமவன்றோளிழந்து மாதவன்றுடீண்டிடலுந்
தன்னுருவாய்நின்று தாசரதியைப்புகழ்வான். (115)

ஏற்றமுள்ளகந்தருவ னெண்கோணமாமுனியா
லாற்றலருஞ்சாபமதா லாக்கனுடலானேனைச்
சீற்றமகவான்புடைக்கச் சென்னியிழந்தென்வினையை
நாற்றிசையும்போற்றுமுன்றன் றுண்மலர்த்தாள்போக்கியதே ( )

வேண்டுவாருன்பதத்தை வேண்டித்தவம்புரிவா
ரீண்டுசெய்யுமுன்றவத்துக் கெய்துங்கடவுளுண்டோ
நீண்டோனேசெந்திருவுன் னெஞ்சிலகலாதிருக்க
வாண்டவனேதேடி யலைகுவதுங்கைதவமே. (117)

கருணைக்கெழுகடலேகமலாட்சிநாயகனே
யொருமனுயான்கூறுகிறேனுயர்சவரியாச்ரமத்துக்
கிருமிதியேபோங்களுமக் கினியசுவையீந்தனையைத்
துருவுநெறியாவுமவள் சொல்வாளென்றவன்போனுன். (118)

வேறு.

நள்ளிருளடைந்தபிற்றை நாயகனளினமாந்த
யுள்ளிநெஞ்சடைந்தாண்நம்பி யுறுதிகொண்டவனைத்தேற்ற
வள்ளலுமிலங்கைமேவ வாம்பரித்தேரோடந்தக
கள்ளர்தம்மூரிற்செல்வே னென்னச்செங்கதிரோன்வந்தான். ()

காலையாநியமமெல்லா முடித்தபின்கானந்தன்னிற்
பாலெனுமொழியாளாசை பற்றியமனமுங்கண்ணுங்
காலுமோர்வழியிற்செல்லா திளையவன்பின்னேகண்ட
கோலமாமரமும்புள்ளுங் குழைந்திடக்குரிசில்சென்றான் (120)

அருந்தவப்பயனுலாக்கை யருங்கதியடையமுத்தி
தரும்பெருங்கடவுள்வந்தா னென்னவச்சவரியோடி
விருந்தினுக்கிசைவா யென்ன மெல்லடிதொழுதுநின்ற
முருந்துரன்மூரலாளை நோக்கியேமுகுந்தன்சொல்வான். (121)

குசலமோவென்னநெஞ்சங் குளிர்தரக்குழைந்துபோற்றித்
தசரதவரசன்செய்த தவத்திருவடிவேயென்றன்
வசைபெறுமுடலோடுன்றன் மலர்ப்பதமடையவேண்டு
மிசைபெறுங்கவலையல்லா திலையென்றினையசொல்வாள். ()

துத்திடுங்கனிவாய்மூலஞ் சுவையறிந்துனக்காமென்று
பத்திரமாகவைத்தேன் பார்த்திபாநுகர்வாயென்ன
வைத்தனள்வருக்கமெல்லா மகிழ்வுறவருந்தினன்பின்
முகத்தியுங்கொடுத்தானந்த மொய்குழலிதனைச்சொல்வாள் ()

தெவ்வர்வாழிலங்கைக்கையா தனித்துநீசேரொண்ணாது
பவ்வநீந்துவரென்றாலு மிதப்பப்போர்பலகைவேண்டு
மிவ்வகைப்பகையால்வாலிக கிளையசுக்ரீவனென்பா
னவ்வகைச்சேனையோடு மதங்கனாச்ரமத்தினின்றான். (124)

மாருதியென்றுகூறும் வானரவீரனேழு
வாருதிகடக்கவல்லான் மாமலையெடுக்கவல்லா
னீருமவ்வழியேசென்று னின்னடிக்கன்பனுவான்
சேருசுக்ரீவனுலே செய்யுமமக்கென்றுசொன்னுள். (125)

ஆரணியகாண்டம் முற்றிற்று.

ஆக விருத்தம் 429.

கிட்கிந்தாகாண்டம்

மதிநுதற்சவரிசொன்ன வழிவனங்கடந்துபம்பா
நதியருகிருந்தராம னளினமாமலர்த்தாடன்னிற்
றுதிபெறுவாயுமைந்தன் ருெழுதுபின்னங்கைகூப்பிக்
கதிர்மகன்பகையைத்தீர்க்குங் கடவுளேகருணைமூர்த்தி. (1)

இந்தமாநகர்கிட்கிந்தைக் கிறைவன்சுக்ரீவற்கண்ணன்
ருெந்தவாலியின்போர்க்கஞ்சித் துறவன் மாமலையிலுள்ளா
னுந்தனுக்கடிமையாக வுறுதிகொண்டனுப்பவந்தேன்
மந்தமாருதத்தோன்மைந்தன் மாருதியடியேனென்ருன். (2)

பவனசேயுரைக்கக்கேட்டுப் பங்கயக்கண்ணிராமன்
புவனமூன் றுவந்ததம்பி புயவலிக்கிடபத்தோனு
நவவியாகரணியல்லா னுன்கிலுமவல்லோனென்று
னவனனுமானைநோக்கி யடைந்தவாறியம்பலுற்ருன். (3)

பூத்தமாமலர்சேர்வாவி புடைபெறுமயோத்தியாளும்
பார்த்திபன்றசரதேந்த்ரன் பாலர்சனுல்வர்தம்மின்
மூத்தவனிராமநாதன் மூவுலகளந்தானென்ன
வேத்துவாரெனையிலக்கு வன்னெனவியம்புவாரால். (4)

விதியுடைவலியின்கூறல் விளைந்ததென்விளம்' ல்வேண்டும்
பதியரசாளத்தம்பி பரதனுக்களித்துப்பாரின்
முதுமறைக்கிழவோர்வேள்வி முடையறமுடிக்கும்வண்ணம்
மதிநுதன்மனைவியோடு வடத்துறைவசிக்குங்காலை. (5)

மன்னுதீவினைமான்பின்னே மறைந்தனமலராளாமென்
னன்னையையெடுத்துச்சென்று ரைக்கனவ்வழியிலார்ந்த
மின்னிடைச்சவரிகூற மேவினேமீங்குநீயுன்
மன்னனுக்குரைப்பாயென்ன மலரடிதொழுதுபோனான். (6)

மாருதிவிரைனினேடி மன்னவாமயங்கவேண்டாம்
பூருவந்தனினீசெய்த புண்ணியப்பேற்றினாலே
காருரையரம்பைசேருங் கழனிசூழயோத்திவேந்தன்
பேருலகுய்யும்ராம னிலக்குவனிளையோன்பேராம். (7)

தம்பியுந்தானுமாகத் தனிவனங்கடந்துவந்த
நம்பியையடைந்தாயாயி னுன்கையுமடைவாயென்னத்
தம்பதியிழந்தசுக்ரீ வன்றனித்தளத்தினோடு
மம்புயமலர்க்கண்ராம னடியிணைதொழுதுநின்றான். (8)

அடைந்தவர்க்குவந்தேயைய னபயமீந்தருளநோக்கி
மடங்கலேறனையதம்பி மன்னவரவிருத்தியென்ன
வடங்கருமகிழ்ச்சியோடு மண்ணல்பாலிருந்தானப்போ
தடங்கடற்சயனநீத்தா னவனெடுஞ்சாற்றலுற்றான். (9)

மன்னியவயோத்திவேந்தன் மைந்தர்யாமாசிலாசிற்
றன்னையினுரையாலெம்பிக் கரசளித்தினையாளேடு
பன்னியும்யானும்பஞ்ச வடிதனிற்பயிலுங்காலை
கன்னியைக்கொள்ளைகொண்டான் கரவினாலரக்கனையா. (10)

பொய்யுழையென்றதம்பி புத்தியைமறுத்தியானு
மெய்யெனப்பிடிக்கச்சென்றேன் விதிவசமிவனுமீண்டான்
றையலையெடுத்துச்சென்ற தடத்தினிற்றடுத்தபோரிற்
கையறமுடித்தானென்றே ககபதியெனக்குச்சொன்னான் (11)

வரும்வழிதனிற்கபந்தன் வாய்புகாவண்ணந்தோளை
யிருவருந்தடிந்தோமன்னு னெழில்பெறுமுருவம்பெற்றான்
மருமலர்ச்சவரிகூற வந்தனநின்மாட்டென்ன
வுரலொடுமுழவுகூறு முவமைகொண்டவனுஞ்சொன்னான். (12)

வேறு.

முன்னமாகடல் குழப்பியவாலியென் மூத்தோன்
றன்னைநேர்ந்தவர் திறலரைபெறுவரந் தரித்தோன்
பின்னமின்றிக்கிட் கிந்தையிற்பிரிவிலா திருந்தோ
மன்னகாலையோ ரசுரனுமவனைப்போர்க்கழைத்தான். (13)

பிலம்புகுந்தவர் போர்பெறுஞ்சோரியின் பெருக்கா
லலைந்தசிந்தையா லவ்வழியடைத்தியா னகன்றேன்
மலைந்தமெய்த்துய ரோடவன்வரும்வழி மறைத்த
சலம்பொருதெனைக் கொலைசெயத்துறத்தினன்றழியேன் (14)

மதங்கமாமுனி வெகுளிகொண்டவனிவண் வருமேற்
சதங்களாத்தலை சிதறிடச்சாபமுண் டதனு
லதங்கொளாவகை யானுமற்றிவர்களு மடைந்துன்
பதங்கள்கைதொழச் செய்ததிப்பருப்பதப் பெருமை. (15)

பதியிழந்தனன் பாகமுமிழந்தனன்படைத்த
நிதியிழந்தன னேரிழையிழந்தன னெறியா
மதியிழந்தவன் பெரும்பகையொழிக்குமுன் மலர்த்தாள்
கதியிழந்தவென் செல்வநின்கருணையா மென்றான். (16)

இந்தவாறுசுக் ரீவனுமோதிடவிவன்றன்
சிந்தைதேறிடச்செய்வதுதரமெனத் திருமா
லந்தவாலியை முடித்திடுமாண்மையை யறிதற்
குந்துமோர்கணை யான்மரமேழையு மொழித்தான். (17)

அன்னகாலையி லிளையவனுண்மையை யறிலா
யென்னவோர்பெருந் துந்துபியெலும்பையுமிடக்கா
றன்னினலெடுத் தெறிந்திடத்தம்பியைத் தழுவி
யுன்னரும்பகை வாலியுமொழிவனென் றுகந்தான். (18)

தரிந்ததாமரை மலரெனுந்திருமுகக் கண்ணீர்
சொரிந்தமாதினைத் தேர்மிசைபாரொடுந் தூக்கி
வருந்தசானன னென்றனக்கன்புரை வழங்கிப்
பொருந்தப்போம்பொழு தெறிந்தனளுடைமையப்பூவை. (19)

ஆதலாலிதுவாமெனவரிமக னளித்தான்
ஞதநாதனுந் தம்பியைப்பாரென நவின்றான்
மாதர் நாயகி சேவடிதெரியுமற் றறியேன்
பாததாமரை நூபுரமிதுவெனப் பணிந்தான். (20)

வேறு

மன்னவன்ராமன்கொண்டவருத்தமியாருரைக்கவல்லார்
துன்னியவனுமானையா தூர்த்தனைத்தொலைத்தேயென்ற
னன்னையைமீட்குங்காலை யன்றுநீபிரிந்தசீராய்
மின்னிடையாளைக்காண்பாய் விடுகவுன்றுயரமென்றான் (21)

வேறு

ஆதரவா யனுமானிவ் வாறுகூற
வையன்மன மகிழ்ந்துசுக்ரீ வனைக்கண்ணோக்கிப்
பாதகனும் வாலியிடை நீபோயுள்ள
பங்குபெறும் வியாசத்தாற் பகையுண்டாக்கி
நீதனித் தவனுடனே போருடற்றி
நின்றழைக்கும் போதிலென்றன் சரத்தையேவி
யோதரிய வுன்பகையை முடிப்பேனென்றுன்ப
மொழியென்று னிதுநல்ல வழியென்றனே. (22)

ஐயனுரை வாசகந்தன் றலைமேற்கொண்டே
ஆசையுமுள் ளச்சமுமா யலைப்பச்சென்று
வெய்யவனோ டன்னையென் பாதிநாட்டை
விடுவாயேல் வினையில்லை வெறுப்பாயாகி
லையமற மறலியுல கடைவாயென்ன
வடங்காத வெகுளியொடு மதற்கோவந்தாய்
வையவுனைப் புடைப்பேனென் றங்கையோங்கி
நாடினு னிவனுமெழுந் தோடினனே. (23)

துரத்திவந்தான் வாரானேன் மானைப்போலுந்
தோகையர்தம் மனம்போலுந் துணிந்துகூவி
மரத்தருகில் வந்துநின்று மற்போரார்த்து
வரிசைதனைப் பழகிநின்றான் மறலிபோலு
முரத்தவனும் வந்திவனைப் பாய்ந்துதள்ளி
யுருமெனவே குத்திடக்கை யோங்குங்காலை
யரற்றினான் மூலமென்ற யானைபோலு
மதுகண்டா னிராமனொரு கணைகொண்டானே. (24)

வாங்கிவிடுங் கணைவிரைவாற் றிகிரிபோல
வாலிபெரு மலைவலியா மார்பிற்பாய
வோங்கியதோர் கையதனாற் பிடித்தானம்பு
மூடுறுவ மாட்டாதே யுழலுங்காலைத்
தாங்கியதோர் செம்மையினா லிராமனுமந்
தனைக்கண்டான் பிறகுமவன் றனையுங்கண்டா
னீங்கெனது முன்னில்லா தொளிந்தாயென்றே
யேசுவான் பின்னுமவன் பேசுவானே. (25)

கேட்டிலைகொல் குரங்கின்பேர் ரென்பார் பின்னுங்
கிளையுறவு மனிதருக்கெங் களுக்குமுண்டோ
வாட்டமுற மனைவிதனை யரக்கன்கொண்ட
வசைபோமோ வானரத்தை வதைத்தேனென்றாற்
கோட்டியவில் லேவுடனென் முன்னிலலாது
குறித்திடும்போ ரெம்பியுடன் புரியுங்காலை
மாட்டிலிருந் தம்புவிட நீதியுண்டோ
மறமன்றோ உரமுண்டோ மதியில்லாதாய். (26)

நாயுமறு நாயும்வாய் பொருதுங்காலை
நடுவிட்டுப் பூசையுமே ஞாயந்தீர்க்க
லாயதுபோல் வந்தாயென் னெதிரேநின்று
யாகிலுனைக் காகபலி யாகச்செய்வேன்
பேயாவீ துன்மதியோ பிறைககலாற்றாப்
பேதையிவன் சூதுணர்ந்தோ பிழையென்றுண்ணு
சாயகமென் மேல்விடுத்தா யுயிரோடேநீ
தப்பியதுன் தலையெழுத்தின் றவப்பேறுமால் (27)

மன்னவன்போ னின்றுய்போர் வீரர்க்காண்மை
வாயுரமுந் தோள்வலியு மறைந்துகூவி
என்னையுநீ வென்றுயே னுலகோரெல்லா
மிளைத்தவனென் றெனையுமுன்ற னிசையுஞ்சொல்வா
ரன்னதிலொன் றிலலாமன் மறைந்தேதானி
ரபராதி யானவெனை யழித்தாய்பாவி
யுன்னதமா முன்குலத்தோர் பெருமையெல்லா
மொருங்கழிக்கப் பிறந்தாயா னுருவாயென்றுன். (28)

ஓதிய்தோர் வாலிக்குத் தரஞ்சொல்லாம
லுற்றதுவா மென்றருட்கண் ணுகந்துநோக்கப்
போதமுள ளுய்ப்பணிந்தான் புகழ்ந்தானையா
புன்மதியா லிழைத்தபிழை பொறுப்பாயென்றுன்
காதலியைச் கவர்ந்தானென் றுரைத்தாயாகிற்
கந்தரமீ ரைந்தினையுங் களைவேனெனறன்
சோதரன்போ லங்கதனைக் காப்பாயென்றன்
றுணைவனெடும் பகையான துரைப்பேனென்றுன். (29)

ஓதரிய பாற்கடலைக் குழப்புஞ்சாலை
யொருபுறம்யான் றும்பிழுத்தே னென்னுர்தங்கள்
பாதியுரம் யானடைய வரமும்பெற்றேன்
பார்த்திருந்து மோரசுரப் பயல்வெல்வானே
வீதறியா யான்புகுந்த வழியைமுடி
யேகினு னென்றிவன்மே லெடுத்தேன்கோப
மாதலினு லுனதருளாற் காப்பாயென்றே
யறங்கொண்டான் வாலியுந்தற் பரங்கண்டானே. (30)

வேறு

தாரைவந்திரு தாமரைக்கண்கணீர்
மாரியோட மருகுறுவாடனை
நேரில்வந்துசுக் ரீவனுநின்றுயர்
தீருமென்னத்தெளிவுறச்செப்பினுன் (31)

அன்னமன்னவள் போயபின்றாங்கவன்
றன்னைச்செய்யுந் தரப்படிக்கங்கத
னென்னுமைந்த னியற்றப்பின்யாவரும்
மன்னிராமன் மலரடிபோற்றினர். (32)

சங்கபாணியுந் தம்பியை நோக்கிநீ
யிங்குளாரொடு மிந்நகர்க்கேகியே
துங்கமாமுடி சூட்டிவாவென்னலும்
புங்கவன்னினை யாமெனடும்போயினன். (33)

வேறு.

அந்தவாலியின் மைந்தனையிளவர சாக்கிச்
சுந்தரத்திரு மணிமுடிசுமந்தசுக் கிரீவன்
வந்திராகவன் சேவடிவணங்கலு மகிழ்ந்து
மந்தரப்புயா விருத்தியென்றிவ்வுரை வகுத்தான். (34)

என்னயோசனை யாதினிச்செய்வதை யியம்பு
மன்னர்மன்னனை வானர்வேந்தனும் வணங்கி
யுன்னுநின்மன வருத்தமுமரக்கன்வாழ்வுளதும்
பன்னுமுன்பனி நாள்வரும்வரையென்பகர்ந்தான். (35)

எண்ணிலாதவா னரப்படைசரருது விதனுல்
வண்ணமாமலைக் குகைகளும்வனங்களு மடைந்தா
ரண்ணலேயது முடிந்தபின்னவரொடு மடியே
னண்ணலானபின் காண்டியென்வலியென நவின்றாள். (36)

வேறு.

அன்னவனருளைத்தம்பி யறிந்தபின்னிவனை நோக்கி
மன்னவர்தாமுமந்த மமதையான்மறதிகொள்வா
ருன்னருங்குணத்தோனுள்ள முணர்ந்தவர்க்குரைப்பதுண்டோ
சொன்னநாளகலாதாயின் றுணைசெய்வார்க்குறுதியென்றான்.

அங்கவனுரைமேற்கொண்டே யண்ணலைத்தெளியவேத்திச்
செங்கரங்குவித்துப்பானு சேயன்றன்னகரஞ்சென்றான்
பங்கமில்குணத்திராமபத்திரன் றுணைவனோடுஞ்
சங்கைநாளுகமாய்நெஞ்சந் தளர்ந்தவனிருந்தானம்மா. (38)

சாதியாலறிவுகுன்றுந் தமனியக்கலசக்கொங்கை
மாதராலறமும்வாய்மை மரபுநன்னெறியுமாறு
நீதியாயுரையானுகி னிதிகளுநீங்குமாபோ
லோதியகாலமோரா திருந்தனனுதயோன்மைந்தன். (39)

அன்றவனுரைத்தநாள்சற் றகன்றிடவமலைநாதன்
கன்றியமனத்தானேனுந் தம்பியைக்கனிந்துநோக்கிப்
பொன்றியவாலிபின்னே போக்குவேன்பொருதற்காண்டி
லொன்றவனறியானீபோ யுணர்த்துமுன்னுளதையென்றான். ()

கனிமொழிமடந்தைசீதை காதலனுரைப்பக்கேட்டுப்
பணிமலர்கமலச்செந்தாட் பணிந்துகைகுவித்தன்றனைத்
தனியிடமிருத்திச்செல்லத் தயங்கிடுமனத்தோனுகிக்
குனிசிலையேந்திச்சென்றான் கொற்றவேலிளையகோமான். (41)

விரைந்தவன்வருவகண்டு விண்ணவர்மருகிச்சோரக்
கரந்துவானரங்களெல்லாங் கதவடைத்தோடக்காவின்
வரம்பெறுமனுமான்கண்டு மங்கையரைவரென்னுந்
தரம்பெறுந்தாரையோடு தந்திரமிதனைச்சொல்வான். (42)

மந்தரப்புயத்தான்கொண்ட மந்திரத்தடங்கிவிட்டான்
முந்தவர்க்குரைத்தசங்கை முடிந்ததுமுனிவிறேடுஞ்
சிந்துரத்திண்மேற்பாயுஞ் சீயம்போலிளையசெல்வன்
வந்தனனியாமிங்குய்யும் வகையுணடோவடிவேற்கண்ணாய் (43)

ஆதலாலரசன்றன்னை யழைத்தியான்வருமுன்னீபோ
யோதருங்குணத்தான்றன்னை யுபசரித்துவகையாக்கும்
போதியாம்வருவோமென்னப் போயினனனுமானந்த
மாதுதாரையுமேலக்வன் வரும்வழிமுன்னேவந்தாள். (44)

இஞ்சிவாயடைத்தகல்லை யிடித்தவனெய்துங்காலை
கஞ்சமாமலர்க்கண்சோரக் கழுத்தைமுன்கலையால்சுற்றி
வஞ்சிபோல்வந்தாடன்னை வாலியின்மனைவியென்றே
நெஞ்சகங்குழையவண்ண னெறிதனையிகழ்ந்துநின்றான். (45)

ஐயனேவருகவெங்க ளாண்டவன்சுகமோவந்த
மெய்யனேப்பிரிந்துதங்க விடுத்ததுவருஷகாலம்
செய்யதாணேகவேந்தன் செய்ததோர்கடிகைத்தாழ்வைத்
துய்யனேபொருத்தியென்னத் தோகையாளியம்புங்காலே. (46)

கொற்றவன்றன்னேவாலி குமரனேடனுமான்கூவி
அற்றவர்க்கருளிராம னன்புரைமறந்துநின்ருய்
வெற்றிவேலிளையவீரன் விரைவுமாய்வெகுளியோடு
முற்றனனினியீங்கெவ்வா றுய்யுதற்குளமோவென்ருன். (47)

கவிக்குலமகிபனெஞ்சங் கலங்கியேயவரைநோக்கிப்
புவிக்கிழுக்குளதானெஞ்சம் போக்கினேன்பொருந்தார்தம்மை
யவிக்குநப்படையையெல்லா மழைத்துடனனுப்புமென்றே
குவிக்கரத்தவர்களோடுங் குமரனேவந்துகண்டான். (48)

அடங்கருதுவகையோடு மையனேத்தழுவியேத்தி
மடங்கலேறனேயான்றன்னே மாளிகைக்கழைத்துவந்தே
யிடங்கொள்பேரணையின்மீதி லிருத்தியென்றுரைக்கநோக்கி
கடங்கராசலத்தோள்வீரன் கண்புனலொழுகச்சொல்வான். (49)

அன்னேயைச்சிறையில்வைத்த வரக்கன்வாழ்ந்திருக்கவென்றன்
முன்னவனதனற்ருரு மூலமீதிருக்கயானும்
பொன்னணிப்பலகைமீது பொருந்துமோபுகலவந்த
தென்னனின்மதங்கனைத் திருந்தவாறுணர்த்தற்கென்ருன். (50)

ஆவியுமுட லுமாங்கிங் காகினேனல்லாதில்லே
மேவியபடைகளெல்லாம் வெகுதுலேயடைந்தார்தம்மைத்
தாவியதூதர் சேர்க்கத் தாமதமையாவந்தக்
காவலனிடத்திற்செல்வோங் கடுகவேயெழுமினென்ருன். (51)

அங்கவன்சாம்பன்வாலி யாத்மசனனுமானந்தத்
துங்கனுமிளேயோன்றன்னேத் துதித்திருமருங்குமாகச்
சங்கையாம்வெள்ளபேமு தசமெனுந்தானேயோடும்
பங்கயமலர்க்கண்ராமன் பதந்தொழுதிருந்தாரன்றே. (52)

வேறு.

மாதுசீதையைத் தேடிடமந்திர மதியோ
யோதுகென் றலும் வானரபூபதி யுயர்வான்
பாதலம்புவி யேழினுந்துருவிடப் படருந்
தூதர்தங்களை விடுவனென் றுரைத்தடி தொழுதான். (53)

அன்னகாலையி லஞ்சனைபுதல்வனு மரசே
கன்னிசீதையைக் காண்பதுநொடியெனக் கருதா
தென்னயோசனை யானுமிப்படைகளு மெழுமேற்
சின்னபின்னமா யண்டமும்வெடிபடச் சிதறும். (54)

பண்டிராவணன் றேற்கொடுபோனதும் பணியுங்
கண்டதாலவ னிலங்கையைவேரொடுங் களைந்து
கொண்டுவாவெனிற் செய்குவமல்லெனிற் குறிப்பைத்
தொண்டனுமடி யேறகருள்வாயெனத் தொழுதான். (55)

ஐயமாருதி நின்பெருந்திறலெவர்க் காகுந்
துய்யசீதையைக் கவர்ந்தவன்சிரம்விழத் துணிப்பேன்
றையறன்னிலை யறிந்துவந்துரையெனச் சாற்றிச்
செய்யமாமணி மோதிரமீந்திவை செப்பும் (56)

எழுதுசித்திர மனையவள்பணிதொறு மிழைத்த
முழுதும்ரத்தினச் சிலையெலாம் பெண்ணென முளைத்தாற்
பழுதுமெத்தவென் றகற்றியன்பொழுகவென் பதத்தைத்
தொழுதுபெற்றிடு முறுதியொன்றுணாத்திடச் சொன்னன். (57)

வள்ளல்வாசகஞ் சென்னியில்வைத்தனு மானு
முள்ளமாங்கடற் பெருக்கெனவுவகைகொண் டெழுக
வெள்ளமேடச வானரவீரரும் வேந்தன்
பிள்ளையங்கதன் பின்வரத்தென்றிசை போந்தான். (58)

மரங்கள்காடுகண் மாமலைப்பெருங்குகை வாவி
சுரங்கள்சோலைகள் பாதலமெங்கணுந் துருவி
தரங்கமோதும் யேந்திரச்சாரலவந் தடைந்தே
யிரங்கும்போதுசம் பாதியுங்கேட்டிவை யிசைப்பான்.

ஐயநீங்களு மெவரிவணடைந்தது மலத்தா
னேயுஞ்சிந்தைய ரானதுமுரையென நவின்ற
துய்யதாஞ்சிற கிழந்தசம்பாதியைச் சூழ்ந்து
பையச்சாம்பவன் சுகபதிகேளெனப் பணித்தான். (60)

தாலம்போற்றிய தசரதபூபதி தனயன்
மாலிராகவன் மனையவள்சானகி யோடுஞ்
சீலனுமிளை யோனெடும்வடத்துறை சேர்ந்தான்
மூலமாதவர் வேள்வியுந்தடையற முடித்தார், (61)

மாயைபற்றின வரும்வினைமுற்றின மானபின்
போயினாரந்தப் பூவையைத்தசசிரன் புவியோ
டேயதேர்மிசை வைத்தவனேகலு மெதிர்த்து
நேயதந்தையாஞ் சடாயுவும்போரிட நேர்ந்தான். (62)

பரியழித்தனன் பாகனையொழித்தனன் பரித்தேர்
முரியக்கண்டவன் முனிந்தொருவாளினுன் மோதப்
பெரியசெம்மலை போலவன்விழுந்திடப் பெயர்ந்தே
யரிவையோடிலங் காபுரமடைந்தன னரக்கன். (63)

முன்னடந்திடு மூத்தவன்றன்னிட முடுகிப்
பின்னடந்தவ னடந்ததையுரைத்திடப் பிழையீ
தென்னவந்தனர் சாலையிற்காண்கிலா தேங்கி
யன்னமென்னடை யாடனைத்தேடிநு ரலைந்தார். (64)

புடைத்தயர்ந்த சடாயுவைக்காண்டலும் புகன்றார்
வடித்தகண்புன லொழுகிடமடந்தையை மண்ணோ
டெடுத்திராவணன் றேரொடுமிவண்வரு மெல்லைத்
தடுத்தவென்சிற கரிந்தவன்னிலங்கையைச் சார்ந்தான். (65)

துங்கநின்றுய ராறுகவிலங்கையைத் தொலைத்து
மங்கைசீதையை மீட்டுளமகிழ்வொடு மதியோ
யுங்கண்மானகர்க் கேகுமென்றுபசரிக் கோதிச்
செங்கண்மாலடி யாரபுகும்பதவியைச் சேர்ந்தான். (66)

தந்தையென்னுமோர் முறைகொடுசெய்தனர் தகன
மந்தமாசவ ரிக்கருள் புரிந்தபின் னனுப்ப
வந்தவெங்கள்சுக் கிரீவனுக்குதவியாய் வாலி
நந்தவோர்கணை விடுத்தனன்ரகுகுல நாதன். (67)

மங்கைசீதையைத் தேடிடக்காடுகண் மலைக
ளெங்கும்போயொரு குகைதனிற்புகுந்தன மிருளா
லங்கடைந்தவெந் துயரினுக்காற்றில ராகித்
துங்கனும்ரகு நாயகன்றுளிணை துதித்தோம். (68)

மின்னையன்னதா மெய்யொளிபரப்பிட விளங்குஞ்
சொன்னமென்சிலை சுயப்ரபைமடந்தையுந் தோன்றி
யென்னவிங்குநீ ரெயதியதியம்பென வெல்லாஞ்
சொன்ன பினவள் பெருமையுமுரைத்தெமைத் துதித்தாள்.

இங்கடைந்தது பிழையெனவியம்பியெம் மிருகண்
டங்குமென்றன ளிமைத்தலுமிவ்வுழிச் சார்ந்தோம்
மங்கைசீதையைக் காண்கிலோமென்பதின் மதிப்பா
மெங்களாவியை விடத்துணிந்திருந்தன மென்றுன். (70)

படித்தசாம்பவன் வாசகங்கேட்டசம் பாதி
கடுத்தசிந்தையோ டரக்கனம்மடந்தையைக் கரவா
லெடுத்தகாலையிற் றடுத்தவென்றம்பியின் னுயிரை
மடித்துப்போயினு னென்றுரைத்தவனிவை வகுத்தான். (71)

தாவல்லவர்க் கொருசதயோசனை தன்னிற்
பாவிராவணன்பதியெனுமிலங்கை கயிற் படர்ந்த
காவினீழலிற் கண்புனலொழுகிடக் கழிநா
ளோவியத்திணை யிருப்பதைப்பாருமென் றுரைத்தான். (72)

ஆயகாலையி லவரவராண்மையு மாழி
தாயும்வீரமும் சாற்றினரிலங்கையைத் தகர்ப்பான்
வாயுமைந்தனென் றேர்ந்தவன்றனைவர வழைத்துத்
தூயமந்திரித் தலைவனுஞ்சாம்பவன் சொல்வான். (73)

வேறு.

கொத்தார் பூங்குழ லஞ்சனையாள்
குமரா குழந்தை விளையாட்டின்
முத்தே கனியென் றனைகாட்டு
முன்னே பாய்ந்தாய் முளரியின்மேற்
சித்தா முலக மமரர்பிரான்
செங்கைக் குலிசந் திரணமெனி
லத்தா நின்போ லெவராவா
ரனிலாத் மசனே யனுமானே. (74)

வர்ஞ ரிரவி யுதயமுதன்
மறையும் வரையின் வரையவன்பா
ஞஞ கலையும் பின்னடந்தே
நவவியா கரணங் கற்றவனே
தேஞர் மொழியா ஞயகன்கைத்
திருவாழியு மீங் கிடப்பெற்ரு
யாஞ லெவர்க்குண் டதிகார
மனிலாத் மசனே யனுமானே. (75)

முளைக்கும் பொழுதே யயனளித்த
முரண்சேர் வலியாய் நீமுனிந்தால்
வளைக்குங் கடலுங் குழம்பாம்பொன்
மலையுந் தகர்ந்து மணலாமண்
விளைக்கும் புழுவா மிராவணனை
வேரோ டறுப்பான் விடைபெற்ரு
லளைக்குன் றரக்கர்க் கரியன்ரே
வனிலாத் மசனே யனுமானே. (76)

பேராப் பழியுஞ் சூனியமாம்
பிணியும் விடமும பேய்பூதம்
தீரா திடரு மூழ்வினையுஞ்
சேர்ந்தோர் பூதி நினைந்தணிந்தாற்
சேரா தென்ரு லுனைநேரே
தெரிசித் தார்க்கோர் தீங்குண்டோ
வாரா வமுதே யுயிர்மருந்கே
யனிலாத் மசனே யனுமானே. (77)

தன்னே ரில்லாப் பெரும்பவனன்
றன்று லுதித்த தனிநிதியே
பொன்னே மணியே நின்பெருமை
புகலற் கெளிதோ புவியீன்ற
மின்னே ரிடையா ளையகன்பால்
வேலே துயில்வான் விசுவருப
மன்னே யெடுக்கும் பெருமானே
யனிலாத் மசனே யனுமானே. (78)

மேனு ளிடும்புல் விளையாட்டில்
வேள்விக் கிடராய் விளைத்தமையாற்
கானுர் முனிவோர் வெகுண்டுணர்ந்து
கரவா யுன்றன் கால்வலியு
வானு ருருவுஞ் சானகியால்
வருமென் றுரைக்க மகிழ்ந்தாய்நீ
யானு லதுதா னிதுசமய
மனிலாத் மசனே யனுமானே. (79)

வேறு.

மந்திரித்தலைவன்சாம்ப வானிவைக்கூறராமச்
சந்திரன்பெருமைதன்னைச் சாற்றினுஞ்சாற்றொணுத
வந்தமாம்விசுவரூப மாயினனமரரெல்லாஞ்
சிந்துபூமாரியோடு மயேந்திரச்சென்னிநின்றான். (80)

கிட்கிந்தாகாண்டம் முற்றிற்று.

ஆக விருத்தம் 509.

சுந்தரகாண்டம்

உதைத்தெழும்விசையால்வானத் துடுக்களுமுதிரவண்டஞ்
சிதைத்தெழுப்ரசண்டவாதச் செருக்கொடுசென்ருன்காரிற்
புதைத்தமைநாகம்வேண்டப் புகன்றுபின்சுரதையாவி
பதைத்திடவுடலங்கீறிப் பவனசேயிலங்கைபுக்கான். (1)

ஆசையுமிலங்கையூரு மதிர்ந்திடவடக்குக்கோட்டை
வாசலிற்குதித்தான்மையார் மலையெனத்தலைகளுன்கும்
வீசுகையிருநான்கோடு மிலங்கணிவெகுளிபொங்கிப்
பூசையுஞ்சீறிவேங்கைப் புலியொடுமெதிர்ப்பதானுள். (2)

மத்தகக்கரியேறன்னுன் மலர்க்கரமடக்கிமார்பிற்
குத்தினனரக்கியாக்கை குலைதலுங்கொண்டாள்ஞானங்
கர்த்தனேபிரமசாபங் கழித்தெனக்களித்ததாளுக்
கித்தலவரக்கரொவ்வா ரென்றடிதொழுதுபோனுள். (3)

இலங்கணிதனையிராம னிராவணவேட்டையாடி
நலம்பெறக்குமரிபூசை நடத்திப்பின்னிலங்கைக்கோயிற்
றலங்களும்யாகசாலை தன்னிலும்தவத்தோர்வைகும்
பிலங்களுந்தேடிக்காணுன் பெருந்தெருமனையிற்புக்கான். (4)

கதைபழகினையோர்வேதங் கற்பவர்கானமைந்தர்
சுதைபெறுமரங்கந்தூய துறவினர்தொகையிலாத
புதையிருளனையகைம்மா புரவிகோவேறுகோகு
சிதைபெருதிருக்குஞ்சாலை யாவையுந்தேடிச்சென்ருன். (5)

சுரர்க்கமைபதியைமானுஞ் சுடர்மணிக்குடுமிதோய்ந்த
வரக்குமாளிகையுஞ்செந்தீக் கவிமனையடிசில்வீடு
மருக்குழன்மடவார்தெய்வ மாதரினரங்கசாலை
திருக்கெயிற்றரக்கியோடு செய்யபந்தடிக்குஞ்சோலை. (6)

ஆங்கெலாந்துருவிக்காணு தரக்கரோடமளிதன்னிற்
றூங்கிடுமரக்கிதன்னைத் தோகையென்றயிர்த்துநோக்கி
வாங்குநெட்டுயிர்ப்புஞ்செவ்வாய் வழிபுனலொழுகநோக்கி
யீங்கிவளரக்கியென்றே யிகழ்ந்தவனெழுந்துபோனான். (7)

காதமுமெழுநூறுன கடிநகரிலங்கைதன்னிற்
றீதரும்புகைபுகாத விடமெலாந்திரிந்துதேடிச்
சீதையைக்காணுனுகிச் செங்கரங்குவித்திராம
நாதனைப்புகழ்ந்துபோற்றி நகர்கடந்தடவிகண்டான். (8)

அனிலமும்புகாதவந்த வசோகமாவனங்களெல்லாம்
புனிதனுமனுமான்றேடும் பொழுதொருமரத்துகீழ
னனிதவம்புரிவோர்முத்தி நாதனைக்கண்டாரென்னக்
கனிமொழியாளைக்கண்டான் களிப்பெனுங்கடலிலாழ்ந்தான். (9)

மந்தமாருதத்தோன்மைந்தன் மடவரலிருக்கைநோக்கிச்
சிந்தையன்பொழுகத்தாழ்ந்து திருமகளறியும்வண்ண
மெந்தவாறுரைப்பாமென்றோர் மரமிசையிருந்தானப்போ
செந்துவரணிவாய்ச்சீதை திருசடைக்குரைக்கலுற்றாள். (10)

வேறு.

மாதரசேவல்வினையேன் மாளாதுவாழுமுயிர்க்
காதரவாமாரமுதே யம்மாதிருசடையே
பாதகமானன்வந்தென் பதியைப்பிரித்தபெருந்
தோதகத்தைச்சொன்னுற் றொலையுமோதோழியேகேள். (11)

திங்களுமீரைந்தாய்ச் சிறையிருத்துந்தீப்பாவி
தங்குமிந்தலங்கைதனைத் தாசரதிகாண்பாரோ
செங்கதிரோன்வந்தாலுஞ் செப்புவானென்செயலை
யங்கவருக்காருரைப்பா ராயிழையேயென்றழுதான். (12)

மாயமான்பின்னேயென் மன்னவனைப்போகவிட்டேன்
றூயதுணையாங்கொழுந்தன் சொன்னமொழிகேளாமல்
வாயிடும்பாற்சொல்லி வனம்விடுத்தேனிக்காவி
ஞயினடுமான்போனு னுஞ்சிறையிருந்தேன். (13)

கோதையேசொல்லுகயான் கொழுநன்றனைப்பிரிந்து
நீதியிலானூரிருந்தா னீணிலத்தாரேசாரோ
பாதகனுநாயெடுத்த பாண்டமெனமீட்காமற்
சோதரனுந்தானுமவர் தொன்னகரம்போயினரோ. (14)

என்னசெய்வேன்மின்னரசே யெங்கிழப்பேனென்னுயிரைத்
தின்னுமிந்தப்பாவியராற் செத்தொழிந்துபோனலு
மின்னுஞ்சனக னெழின்மகளாய்வந்துதிதென்
மன்னனுக்குமாலையிட்டான் மனவருத்தந்தீருமம்மா. (15)

மங்கைநல்லாய்மாதருக்குத் தெய்வமணவாள
னங்கவற்குவேண்டு மாரணங்கைவேட்டுவப்பார்
செங்கமலததாள்வலியாற் சிலையுடைமையைக்களைந்த
சங்கையறிந்தென்றனுக்குச் சாற்றினர்தாசரதி. (16)

மடக்கொடியேநின்னையல்லான் மற்றுளதோர்மாதர்களென்
னுடற்பிறப்பாமென்றுருனைப் பிரியேனென்றுரைத்தார்
விடத்துணிந்துதங்கள்பதி மேவுலரோவெவ்வினையேன்
றிடப்படவுன்றேமொழியாற் செப்பென்றன்சேயிழையாள் (17)

வேறு.

வேடுவர்வலையுட்பட்டு வெந்துயரடைந்தமான்போல்
வாடியமுகத்தாள்சீதை வருத்தமாயுரைக்கக்கேட்டே
யூடொருபெரியோரந்த வுழைப்பிணியறுத்ததென்னத்
தேடருங்குணத்தாளான திருசடைதெளியச்சொல்வாள். (18)

மங்கையர்க்கரசேயுன்றன் மனந்தளர்ந்துருகவேண்டா
மிங்குவாளரக்காதம்மை யெமபுரத்தனுப்பவிப்போ
செங்கண்மாலிராமதூதன் றெரிசனங்காண்பாயானுங்
கங்குலிற்றுயிலக்கண்ட கனவிதுவென்னச்சொல்வாள். (19)

தாமரைக்கண்ணுள்வண்டோ தரிவெறுந்தலையைச்சீவிக்
காமுறுதாலிநூலைக் கருவியாலறுக்கக்கண்டேன்
கோமகனரக்கனெண்ணெய் குஞ்சியாலவழியச்செங்கேழ்த்
தாமமும்புனைந்துதெற்கே தனிவழிநடக்கக்கண்டேன். (20)

பூவெலாங்கரிகளாயும் புரமெலாம் வெண்ணீறாயு
மேவியகுருதியாற்றின் மிதந்திடுமரக்கர்தம்மைத்
தாவியநரியுநாயுந்தனித் தனியிழுக்கவோரி
கூவவுங்கண்டேனன்றிக் கொடிமரமுறியக்கண்டேன். (21)

இன்னமும்பலவாமென்ன வேந்திழைக்கியம்புமெல்லை
மின்னியமகுடம்பத்தும் விளக்கொளிவிரிப்பமாதர்
மன்னுசாமரைகள்போட வருமிராவணனுஞ்சீதை
பொன்னடிபணிந்துகேட்டோர் பொறுக்கொணுவார்த்தை
சொன்னான். (22)

கரும்பெனமொழியும்வாயாற் கடுங்கனலுகுப்பச்சீறித்
திரும்பினன்முகம்பாராமற் றிரணமாய்நினைத்துச்செந்தீ
யரும்பியதழலைக்கீட மணுகுமோவவிழைப்புன்னாய்
விரும்பியவாறுசொன்னாய் வினையினாலழிவாயென்றாள். (23)

விக்கிப்பறகடித்துவீசை வெடவெடத்திடவாளேந்தித்
திக்குளார்நடுங்கவந்தான் றிருசடைமறுக்கநின்று
குக்குலானனத்தோர்மற்றக் குரூவியர்தம்மைக்கூவி
சக்கரைக்கலையுநீங்கள் சரிசெயுமென்றுபோனான். (24)

இன்னவாறரக்கன்சொல்லி யிலங்கையிற்சேர்ந்தானங்கே
மின்னொளியெயிறுகாட்டி விரலுகிர்விரித்துவந்து
கனனியைவளைத்தியாங்கள் கண்வளர்ந்தெழும்புமுன்னே
மன்னனைச்சேராயாகின் மடித்துயிர்குடிப்போமென்றார். (25)

வேறு.

இந்தவண்ண மியம்பியயாவரும்
பிந்திவீயும் பிணமெனத்தூக்கினார்
முந்தரக்கன் மொழிந்ததையெண்ணியே
சிந்தைநொந்துயிர் தீர்வதென்றாறினாள். (26)

ஈங்கரக்கிய ரீர்ந்துதின்பாரதைத்
தாங்கொணுதென் றுயிர்விடத்தனையைப்
பாங்குசூழ விருக்கிப்பணையின்மேற்
றூங்குபின்னலைச் சுற்றிமுறுக்கினுள். (27)

அந்தவேளையி லஞ்சனைபாலக
னுந்துகானத் தொருவழிகாண்கிலார்
சிந்தைதேறச் செழுந்துணைசேர்ந்தபோல்
வந்திராம சயமென்றுவாழ்த்தினுன். (28)

அன்புபற்றிய வாயிழைகேட்டலும்
வஃபுசொற்றநும் வஞ்சகர்வார்த்தையாற்
றுன்பமுற்ற துளைச்செவிக்காரமு
தின்பமுற்றது யாதெனவெண்ணினுள். (29)

திங்களொத்த செழுமணிக்குண்டல
மெங்கும்வெண்ணில வெய்திடவேந்திழை
பங்கயத்திருப் பாதம்பணிந்தெழுந்
தங்கைகூப்பிநின் றுனனுமானரோ. (30)

வெருண்டமானென வேவிழிநோக்கியே
மருண்டநெஞ்சினள் வாய்குளறுற்றிட
தெருண்டநாமங்கள் செப்பிச்சிறுவனு
யிருண்டகானக மெய்தினையாரென்றுள். (31)

வேறு

செந்திருவாஞ் சானகியிவ் வாறுகூறச்
சீர்த்திபெறு மயோத்திநகர் தசரதேந்த்ரன்
மைந்தனென வந்துதித்த ராமச்சந்த்ரன்
வரவிடுத்த தூதன்யா னனுமானென்பேர்
தந்தவடை யாளமொடு வந்தேனென்னச்
சாற்றலுமென் றுசரதி சுகமோவென்றுள்
சுந்தரியே நீபிரிந்த துயரினுளைந்
துகமல்லான் மற்றதெலாஞ் சுகமேயென்றுன். (32)

வாடியதோ ரிளங்கொடிக்கு மழைபோல்வந்த
மாருதியிவ் வாறுரைக்க மகிழ்ந்தாள்சீதை
வேடர்புகாக் கானகத்தி லொருபெண்வேண்ட
விண்ணுலகத் தாரமுதம் விளைந்தாற்போலுந்
தேடறிய பழம்பொருளே பரமென்றேதுஞ்
சிந்துரத்தைக் காக்கவந்த திகிரிபோலு
நீடொளிசெ திருவாழி யதனைக்கண்டா
ணிலைகொண்டா டன்மனக்கவலை விண்டாளே. (33)

செங்கதிரோன் வரவுகண்ட கமலம்போலும்
செய்யமுக மலர்ந்துதிரு வாழிதன்னைச்
சங்கலம்பு செங்கரத்தா லேந்திக்கன்னந்
தடந்தோளஞ் செவியூசற் றனித்தாலாட்டிக்
கங்குலுறை சென்னியின்மேல் வைத்தாள்காவிக்
கண்களிலே வைத்துமுத்தங் கனிவாயிட்டாள்
கொங்கையின்மேல் வைத்தணைத்தா ளூடலோடாவி
கூடினு ளனுமனைக்கொண்டாடினளே. (34)

ஆவலொடு சீதைமன துருகிவாடி
யனுமானே யிவ்விலங்கை யரக்கர்பொல்லாப்
பாவியர்க டின்றுவிடு வார்கள்கண்டாற்
பாலகனே மறைந்துனது பதிபோவென்ன
பூவலனும் ரகுபதிதன் னருளாலிந்தப்
புரத்துளரை யெமபுரத்திற் புதைப்பேனென்று
தாவியதோர் விசுவரூபத்தைக் காட்டத்
தணியென்றுண் மகனேகண் மணியென்றுளே. (35)

பழையபடி குறளுருவாய் நின்றுற்கண்டு
பத்துமுடி யிராவணனும் பற்றுனென்றே
தழையுறுதன் மனத்துறுதி யுடையாளாகிச்
சஞ்சீவி நீயுஞ்சிரஞ் சீவியாக
மழையுவரி நாளளவும் வாழ்வாயென்ன
வரங்கொடுத்து மகனேபுன் மதியான்மாய
வுழைபிறகே யனுப்பியதோர் கோபந்தீர
வோதென்றுள் சொன்னபிழை யீதென்றுளே. (36)

பேதையரா மென்றுலகோர்பேச்சும் பொய்யோ
பேதையிற் பேதையெனின் பிறர்வேறுண்டோ
வாதலினுன் மான்பிறகே போகச்செய்தே
னகந்தையுரைத் திளையவனை யனுப்பினேனிப்
பாதகன்கைக்ககப்பட்டேன் சிறையுட் பட்டேன்
பஞ்சுபடாப் பாடனைத்தும்பட்டே னென்றன்
சீதரனுக் கிழைத்தபிழை யிதுதான்றீரச்
செப்பென்ருள் செந்திருவை யொப்பென்ருளே. (37)

வேறு.

மாதுரைத்தலு மாருதிவாய்புதைத்
தோதுமோதத் தெழுந்தவொலித்திரை
மோதுமிந்நகர் முன்னுளதல்லதிப்
போதுண்டான தெனப்புடைப்பேனென்ருன். (38)

வெள்ளமேழுபத் தென்னினுமவீரர்க
ளுள்ளசேனைத் தலைவரையோதரும்
வள்ளலேவிலிவ் வஞ்சகன்வாழுமூர்
தெள்ளுபூழித் திடலெனச்செய்வரால். (39)

இத்திறத்தின ரென்றலுமேந்திழை
நைத்தசிந்தை நடுக்கமுநீங்கியா
தித்தனென்னச் செழுமணியீந்தவற்
குத்தரமிது வோதென்றுணர்த்தினுள். (40)

காகமானசயந் தனைக்காத்ததும்
பாகுமூலம்பரிக்க விராதன்விண்
ணேகலுங்கிளிக் கென்சிறுதாயர்பே
ராகுமென்ன வழைத்ததுமோதுவாய். (41)

வள்ளல்பாலொரு மாதமதற்குமே
லெள்ளளென்னுளு மிராளுனதேந்திழை
வெள்ளெலும்பைப் பெண்ணுகவிழைப்பதற்
குள்ளவிஞ்சை யுணர்தியென்றேதுவாய். (42)

இன்னுமொன்றுளதென்றனை மீட்காமற்
பொன்னகர்க்கவர் போயினும்போவைநீ
பன்னிகன்மப் பழிகழிப்பாயென்றே
துன்னுகங்கைக் கரைதனிற்சொல்லுவாய். (43)

ஈதலாது மயோத்தியிலெய்திய
போதென்மாமியர் பொன்னடிநோக்கியே
சீதைவந்தனஞ் செய்திருந்தாளென
வோதுவாயொளி யாதுரைப்பாயென்றாள். (44)

வேறு.

மாதரசிகூறுதலு மாருதியுரைப்பா
ளுதனடர்சேனையொடு நானுமிருநான்கா
யோதுபகலிங்குவரு வோமுடனிலங்கைப்
பாதகர்படுந்துயர மார்படுவர்பாராய். (45)

பிற்றையவைநிற்கசிறு பேதையொருதூத
னுற்றனனெனித்துலவி யோடினனெனுமல்
விற்றொழிலரக்கருடன் மெல்லவிளையாடி
பொற்றொடியேபோய்வருவ னென்றவனும்போனான். (46)

வடக்குமுகம்நோக்கியுயர் வான்முகடுசென்னி
படத்திசைபரப்பியெழு பாரினையளந்தோ
னெடுத்தவுருவென்னவெழுந் தெல்லையிற்படர்ந்த
தடத்தருவசோகவனந் தன்னில்வன்வந்தான். (47)

குதித்தவனெழுந்தவிசை கொண்டபெருங்காலாற்
பதித்தநிலைவேரொடு பறித்துவிண்பறந்த
மதித்தவுயர்வானமிசை வஞ்சகனையயன்
சதித்தகள மீதிலெழு புள்ளெனத்தருக்கள். (48)

தேமலரசோகவனக் காவலர்திரண்டு
தூமமிடுதீயினனி சூழ்ந்தவரையெல்லா
மேமனுலகேற்றின னிருந்தசிலரோடி
கோமகன்பதந்தொழுது கூசியிவைசொல்வார். (49)

ஆதவனெதுங்குமுன தாண்மையில்வளர்ந்த
பூதலம்விழுங்குமொரு பூதவடிவானேன்
யாதினியுரைப்பதவை யாவையுஞ்செதுக்கி
யோதமிசைவீசவு மொழிந்தவனமென்றார். (50)

அழிந்ததுவசோகவன மென்னலுமரக்கன்
பொழிந்ததுவிழிக்கனல் பொடிப்பெழவியர்த்து
வழிந்ததுவுயிர்ப்பினொடு வாய்பகருமுன்ன
மெழுந்ததுபடைக்கடலு மிறுதியிதுவென்ன. (51)

அப்பெரும்படைக் கதிபனுகியவகம்ப
னெப்பரியதம்பமிசை யுற்றவனுமானைக்
கைப்பிடியதாய்ப்பிடியுங் கடிதுகடிதென்றே
செப்பியெதிர்வந்தவனைச் சேவகனுங்கண்டான். (52)

தாண்டினனரக்கனிரு தாளையும்பிடித்து
நீண்டநிலமோதலு நிணஞ்சிதறியாவி
மாண்டிடலுமற்றவரை மத்தெனக்குழப்பக்
காண்டரியகாலனுல கந்தனையடைந்தார். (53)

வேறு.

சப்புமாலியுந் தானையுஞ்சார்ந்தபின்
னம்பிதூதனசுக் கினுனரிவில்
லம்புவாளொடு பஞ்சசேனதிபன்
வெம்பிவீய வெறுங்களமாக்கினன். (54)

அக்கணத்தினி லட்சயனும்படை
திக்கும்வானுஞ் செறிந்திடச்சென்றனன்
கக்கிரத்தங் கடலெழக்காலினுற்
செக்கெள்ளென்னத் திருநுதற்பூசினுன். (55)

மைந்தனட்சயன் மாண்டதிராவணன்
செந்தழற்கொழுந் தென்னச்செவிபுகச்
சிந்தைநொந்து சினத்தோடெழுந்தபோ
திந்த்ரசித்த னிருங்களமேறினன். (56)

தொங்கமிட்டிடுஞ் சேனைதொலைந்தபின்
வந்தவிந்திர சித்தன்வில்வாங்கியே
தந்தைசாபந் தனைவிடமாருதி
முந்தைசாப முடிவெனத்தாங்கினன். (57)

வேதன்பாசம் விசித்தபிணிப்பொடும்
வாதசேயனை வஞ்சகன்மாநகர்
வீதிதோறும் விடுத்தவனேகக்கண்
டேதநெஞ்சோ டரக்கியரேசுவார். (58)

தாவிவந்தனை தந்தையைமாமனை
யாவிகொண்டனை யந்தகனும்பெரும்
பாவியந்தப் பழிதந்துபோவெனக்
கூவியோடி யரக்கியர்கூறுவார். (59)

தொழுதுவாழும் துணைவரைத்தோன்றலைக்
கொழுநனைக்கொன்ற கூற்றக்குரங்குனைக்
கழுகுதின்றபின் காதுவந்தாலியென்
றழுதகண்ணோ டரக்கியர்சொல்லுவார். (60)

பாசங்கட்டின தாலிந்தப்பாதகன்
றேசுகுன்றின தில்லையித்தீயனை
வீசிடாது விடுத்திடி லிந்நகர்
நாசமாக்குவ னென்றுநவிலுவார். (61)

ஓங்குவாளுமற் றோர்கையிற்பாசங்கொண்
டாங்குமுன்விடுத் தஞ்சனைபாலனை
யேங்குதந்தைக் கெதிரேநிறுத்தினன்
வீங்குதோளன் வெதுப்புறநோக்கினன். (62)

காவழித்தினை காவலர்வீய்ந்திடத்
தாவுமட்சயன் றன்னையுங்கொன்றனை
மூவரஞ்சுமென் முன்னமிருந்தனை
பாவிநீயு மெவன்பகர்வாயென்றான். (63)

ஈதரக்க னியம்பலுமானவ
னுதரத்தோ டவன்முகநோக்கியே
மீதலத்தினர் வெம்பகைக்கஞ்சியே
சீதராவ பயமெனச்செப்பினர். (64)

பன்னருந்திருப் பாற்கடற்பள்ளியான்
சொன்னவண்ணமித் தொல்லுலகம்புகழ்
தென்னயோத்தித் தசரதன்சேயனு
யிந்நிலத்தவ ருய்யவந்தெய்தினன். (65)

முனிவர்மாமக முற்றவுந்தாடகை
யெனுமரக்கியை யீர்ந்ததின்பின்வரு
நனிசுவாகுவின் னுசமுஞ்சொல்லெனத்
தனிமாரீசன் றனையிங்கனுப்பினன். (66)

பட்டியாமொரு பாதகிநாசியு
மொட்டக்காது மொழிந்தவளேவலாய்த்
துட்டராங்கர தூடணர்சேனையும்
பட்டதெங்கும் பரவியதல்லவா. (67)

மாயமானென வந்தவரக்கனுந்
தூயவன்கணை யாற்றுணிபட்டந்தப்
பேயன்வீழ்ந்த பெருங்குழிதன் றரை
யாயதில்லையிப் போததைக்காணலாம். (68)

இப்பெரும்புக ழெய்தினன்யாரெனில்
செப்பருந்திருச் சீதைமணாளனு
மொப்பிலாரகு நாயகனுன்றன்மே
லப்டாவன்போ டனுப்பியதூதன்யான். (69)

வாதசேயனு மானென்பரென்னையா
னேதவந்தது மொன்றுண்டியாதெனின்
சீதையைவிடு சேவடிக்கன்புபூ
ணீதுனக்கு மிசையெனச்செப்பினன். (70)

அந்தவாசகங் கேட்டவரக்கனும்
வெந்தசெம்பென வேவிழித்தீங்கிவன்
கந்தரங்களை யென்னக்கனிட்டனும்
வந்துபாதம் வணங்கினின்றேதுவான். (71)

தூதுவந்தவன் சென்னிதுணிப்பது
நீதியன்று நிருபருக்கென்னவிப்
போதுவாலிற் புடவையைச்சுற்றித்தீ
மோதவிட்டு முடுக்கெனமூட்டினர். (72)

வாயுமைந்த னிவன்வரவோர்ந்திலாய்த்
தேயுவேயென்னச் சீதையிரங்கினு
டாயிலங்கை தகிப்பவன்றுமறை
வீயிதாமென வாலில்விளங்கினன். (73)

இந்தவண்ண மியம்பலுமேந்திழை
தந்தசாபத் தகனனுந்தாவிய
விந்தைவீடணன் மேவுமனைவிடுத்
தந்தமாநக ரெங்குமளாவினன். (74)

மைந்தனேகின வாஞ்சையும்வன்னியைத்
தந்ததோழன் றனைப்பிரியேயென
வந்தமாருதம் வாய்விடமாநக
ரந்திவானத் தரக்கெனலாயிற்றே. (75)

மாடம்வெந்திட மைந்தரைவிட்டவர்
வாடிநின்றனர் வார்குழற்றீப்பட
ராடைதன்னை யவிழ்ந்தெரிந்தங்கையான்
முடியோடினர் மொய்குழலெண்ணிலார். (76)

பாமரக்கர் பரவையின்பாணியாற்
றூழச்செய்யத் தகாதோவென்றேதிடச்
சூழுந்தீங்கந்தந் தோகையுண்ணுந்ததீ
யாழியேழெனி னுமவியாதென்றுர்: (77)

நந்தனமிருந் தாலந்தநாயகி
சிந்தைநொந்தித் தீயதிற்சேருமென்
றந்தவாலிடந் தந்ததற்காயிரம்
வந்தனமென் றரக்கியர்வாழ்த்துவார். (78)

எரியெழுந்த விலங்கைநகரமு
மருவொழிந்த வனமுமழிந்ததைக்
கரியினுலறி வானெனக்கண்புனற்
சொரியவாடி யரக்கியர்சோம்புவார் (79)

வேறு.

மழைமுகினேரிராமன் மலரடிக்கன்பூண்டார்க்
கிழையுறுங்கெடுதியுண்டோ வனலவித்தெழும்பிவந்தான்
றழைதரும்படம்போற்கண்டு வானரத்தலைவர்தாவக்
குழையிருசுடர்போல்வீசக் குதித்தனன்குன்றமீது, (80)

வந்ததோரனுமான்றன்னை வாலிசேய்மகிழ்ந்துநோக்கி
யந்தமாநகரந்தன்னி லன்னையுஞ்சுகமோவென்றான்
மந்தரப்புயத்தோய்லங்கை வளங்களும்வனத்தின்சீரும்
பிந்துறவுரைப்பேனென்று பெருமணிகாட்டிச்சொல்வான். (81)

இலங்கையென்றுரைக்குமவ்வூ ரெழுநூறுகாதமுள்ள
நிலங்களுந்தேடிக்காணே னெடுவனஞ்சென்றேனங்கே
விலங்கினமனையாரான வரக்கியர்வெகுண்டுநோக்க
கலங்கியமான்போற்சீதை கமலமாமலர்த்தாள்கண்டேன். (82)

தவமிகுராமமந்த்ரந் தனையுருச்சபித்தேனன்னார்.
சவமெனவுறங்கிவிட்டார் தசரதராமன்றூதன்
பவனசேயனுமானென்பேர் பங்கயத்தயனேடிந்த
வவனியையீன்றதாயே யஞ்சலென்றடியிற்றாழ்ந்தேன். (83)

ஐயமுந்தெளிவுந்தேரு வம்புயமடந்தைக்குள்ளங்
கையினன்கனிபோலாழி காட்டினேன்கமலக்கண்ணன்
மெய்யெனத்தெளிந்துவாங்கி வெந்துயரொழிந்தாளன்னை
செய்யமாமணியையீந்து சீபதிக்குரைப்பாயென்றாள். (84)

சீதையைத்தேடிவந்தான் செய்ததென்றிலங்கையூரா
ரோதுதற்குளதாயானுஞ் சிலவினையுஞற்றிவந்தேன்.
சூதறவுரைப்பேனந்நாள் சொன்னசுக்ரீவன்றுளா
ளுதலால்வழியிற்சொல்வே னெழுங்களென்றனுமான்சொன்னுன்.

கதிபெறநடப்போர்சொல்லுங் காதைபோற்ககனமீதே
யெதிருறுவரக்கியாவி யிழந்ததுமுதலாய்லங்கைப்
பதியெரிமுடிந்ததீருய்ப் பகர்ந்தனனுவகையோடு
மதிகடலமுதமுண்ட வானவர்க்குவமையானுர். (86)

இமைப்பினில்விரைவினேகு மேகுமென்றினிதுபேசி
யமைப்பெருநகர்கிட்கிந்தை யருகிலவ்வரசனிட்ட
சுமைப்பெறுங்கனிவாய்ச்செந்தேன் சொரிபொழிற்றுவாரபாலர்
தமைக்கடந்துவகையோடு மதுவனந்தன்னிற்புக்கார். (87)

தடைபடாதிடபம்பைங்கூடனிற்புகுந்தனையராகி
யிடைபடாதிவர்கண்முன்ன மேகினுனுமான்றென்பாற்
படைவலார்வரவுகாணுப் பார்த்திபனிரங்குமெலலை
விடைவலானனையவீரன் மெல்லடிபணிந்துசொல்வான். (88)

வேறு

கண்டேன்சனகன்குலமானைக் கடுவாயரவங்கலைமதிசய
யுண்டாலனையமுகத்தானை யுணவுன்னுணர்வாயுடையாளை
வண்டார்பொழில்சூழிலங்கைநகர் வனத்தோர்மரத்தின்வட
முகமாய்த்
தண்டாமரையாலுலகேழுந் தந்தாயெந்தாய்த்தவநிலையே. (89)

முடித்தா ரரக்கன் றிருமகடன்
முளரித் தாளின் முடிசூட்டிப்
படித்தா னவனைத் துரும்பாகப்
பழித்தாள் போனுன் பாவியுயிா
விடத்தான் றுணிந்தோர் பூஞ் செடிக்கீழ்
மேவு மளவுன் விரலாழி
கொடுத்தேன் வாங்கிக் கண்களித்தாள்
குறைதீர்ந் துவகை கொண்டாளே. (90)

மருமாமலராளொருமாதம்
வரைநீவருகாயெனின்மற்றுநாட்
பொருகாதென்றன்னுடல்வாழ்க்கை
புகல்வாயென்றேபுவிமாது
தருமாமணியீதெனவீந்தான்
சனகன்மடந்தைதளிர்க்கரம்போற்
பெருமான்வாங்கியுடல்குளிர்ந்தான்
பின்னோனுகந்தானனுமானே (91

வள்ளவிளையோன்கிட்கிந்தை மன்னற்குரைக்கவந்தபடை
வெள்ளமெழுபததனடுவில் வீரனனுமான்மெய்த்தோளிற்
கொள்ளவிளையோனங்கதன்மேற் கொண்டார்பரித்துக்கூடியலை
தள்ளுங்கடல்வாய்வடகரையிற் றளத்தோடிருந்தான்றுசரதி.

வேறு.

பரிதியின்புதல்வன்சேனை பத்தெழுவெள்ளஞ்சூழத்
திருந்தியவிளையானோடுந் திருமகனிருக்கைநோக்கிற்
கருமுகில்வண்ணன்கீரக் கடற்றுயின்றனையதொக்கும்
பெருமையையமயேந்த்ரச்சாரல் பெற்றதுசுரரால்ம்மா.

சுந்தரகாண்டம் முற்றிற்று.

ஆக விருத்தம் 602.

உயுத்தகாண்டம்.

அண்ண லும்படைக் கடலொடுங் கடற்கரை யமர்ந்தான்
விண்ண ளந்ததோ ரிலங்கையு மழிந்தமை விளம்ப
மண்ணு ளார்பொதுத் தந்தையி னுரைகொடு மயனுர்
பண்ணு மாநகர் முன்னினும் வியப்புறப் பார்த்தான் (1)

அந்த மாநக ரார்தொழ வரியணை யமர்ந்து
நொந்த சிந்தையுந் தெளிந்து முன்னோர்களை நோக்கி
மைந்த னெம்பியு மந்திரித் தலைவரு மல்லால்
வந்த யாவரும் வளவினிற் செழுமென வகுத்தான். (2)

தனித்து மந்திரித் தலைவரை நோக்கியென் றருக்க
ளனைத்து நீறுகக் குரங்குவந் திலங்கையை யழித்தாற்
செனித்த நாண்முத லிதுவரை யடைந்தவென் செருக்கே
யெனைச்ச திக்கும்வா ளரமது வாவென விசைத்தான். (3)

மறக்க ருத்தினு னுரைத்தலு மமைச்சர்தம் மனமும்
பெறத்த குந்ததும் பேசினர் தவப்பயன் பெறுக்கா
லுறக்க முற்றவ னன்மையுந் தீமையு முறைத்தா
னறத்தின் மிக்கவ னண்ணனைத் தொழுதிவை யறைவான். (4)

அண்ண கேளவன் மானிட னென்றவ மதிப்பா
யெண்ணிச் சீதையைக் கவர்ந்தனை யீசனு மாலும்
விண்ணு ளாரபகை யொழிப்பதற் கோருரு வெடுத்த
வண்ண லாமவன் றன்பகை யடைந்தவ ரழிவார். (5)

ஆத லாலவன் மலரடி பணிந்தவற் காளாய்ச்
சீதை யைக்கொடு போய்விடுவதுபெருஞ் சிறப்பாம்
பூத லந்தனி னங்குலப் பெருமையைப் புகழ்வா
ரோது மாநக ரரசழி யாதென வுரைத்தான். (6)

தம்பி கூறிய வாசகஞ் செவிபுகத் தழலார்
செம்புபாய்ந்தெனத் துடித்தவன் றீயெழச் சினந்தே
யும்ப ருந்தொழும் யானவற் கிளைப்பனென் றுரைத்தாய்
வம்பு நீயவன் ருள்விழு போவென மறுத்தான். (7)

வேறு.

நேய தம்பியை நீக்கிநி சாசரன்
கோயி லிற்புகக் கோதில்கு ணத்தின
ஞயுஞ் சிந்தையோ டந்நகர் நீங்கிச்செவ்
வாயி ராம னிருக்கையை மன்னினன். (8)

அந்த வீடண னண்ணலி ராமனை
நந்தமர் கரத்தானென்று நம்பியே
சிந்தை தேறித் திருவடி தாழ்ந்தெழுந்
தெந்தையே யெனைக் காவென் றியம்பினன். (9)

மூல மென்ன முறையிட்ட யானைமுன்
னீல மாமலை போனின்ற நேமியாய்
பாலன் கூவப் படமுடைப் பாம்பின்வா
யால முமமு தாக்கிய வையனே. (10)

தஞ்சந் தஞ்சஞ் செந்தாமரைக் கண்ணனே
யஞ்ச லஞ்ச லென் றென்றனை யாளுவாய்
கஞ்ச மாமல ராளைக் கவர்ந்தமா
வஞ்ச னேடு பிறந்தவென் வல்வினை. (11)

போக்கு வாயுன்றன் பொன்னடிக்கன்பரோ
டாக்கு வாயென்னை யாதரிப் பாயென்ற
கூக்கு ரற்செவி கொள்ளலுங் கொற்றவன்
காக்கு மன்போ டபயக்கை காட்டினன். (12)

வேறு.

வந்தவீடணனுக்கையன் மலர்க்கரமமைப்புக்கண்டு
சிந்தையிலயிர்க்கைகொண்டே சேனைகாவலரைநோக்கி
யிந்தராவணற்குத்தம்பி யரக்கனென்றகற்றவொண்ணு
திந்தவாறிவன்சீரென்றே யிருங்கடற்கடந்தான்சொல்வான் (13)

திருசடையென்னும்பெண்ணுற் சீதையினுயிரைக்காத்தான்
றருமநன்னெறிவிவேகஞ் சற்குணமுடையான்வீட்டில்
வரும்பொழுதறிந்தேனையா மங்கலச்சகுனமல்லாற்
பெருமையென்னிவனுனும் பிழைத்திவணடைந்ததென்றுன்.

மந்திரித்தலைவன்சொல்லு மாருதிமொழியுங்கேட்டு
நந்தணிகரத்தானுன நாயகனவரைநோக்கிக்
கந்தனைப்பயந்தகோமார்க் கண்டனையளித்தான்கைம்மா
சிந்துவினழுந்தாவண்ணஞ் செந்திருமார்பன்காத்தான். (15)

மற்றவைநிற்கவென்றன் மரபிலோர்சிவியென்பானுஞ்
சிற்றுடற்பறவைக்காகத் தேகமேதத்தஞ்செய்தான்
பெற்றியையுரைக்குமின்னும் பேருலகியற்கைவாழ்க்கைக்
குற்றதுவுடைந்தாரோம்ப லுறுதியெம்முடையார்க்கன்றே. (16)

ஈதலாதிவனு மென்பா லெய்தியவெளிமைநோக்கிற்
சீதநாண்மலரா்ளான சீதையைத்திருடுந்தீராப்
பாதகன்பகையால்வந்தா னென்பதுபகரல்வேண்டு
மாதலாலிவனையிங்கே யழைப்பதென்னுண்மையென்றுன். (17)

திரைகடற்கருணைவள்ளல் செப்பியமொழிகேட்டன்று
ரரைசுழலவேந்தர்க்கெல்லா மரசனேயருள்வாயென்ன
வரைதடப்புயசுக்ரீவ மன்னனையழைத்துவாவென்
றுரைத்திடவனுங்கெய்தி யுன்றனையழைத்தானென்றுன். (18)

உருகினுனுள்ளமெல்லா முததியென்றெருழுகுகண்ணீர்
பெருகிடப்பணிந்தானையா பின்னையைப்பிரித்தபாவி
வருங்குலமொழிந்தேனுன்றன் மலரடிக்கடிமைபூண்டேன்
கருமுகில்வண்ணுவென்னைக் காப்பதுன்கடமையென்றுன். (19)

கலங்கினன்முகத்தைநோக்கிக் கருணையாம்புனலாலாட்டிப்
புலங்கெடாவுடலின்வாழ்க்கை பொன்றிடாவரமுமீந்து
தலங்களீரேழினோடு சாகரமுளநாண்மட்டு
மிலங்கையையாளத்தந்தே னென்றனனெளியோர்க்கீசன் (20)

பரிவுறத்தலைவரோடும் பந்தியிலிருத்தியுன்றன்
திருநகரிலங்கைமுதூர் திதிகளுமரக்கன்செய்யுந்
தருமமுநெறியுஞ்சேனைத் தலைவரோடமைச்சர்தங்கள்
பெருமையுமுரைப்பாயென்ன வீடணன்பேசலுற்றான். (21)

வேறு.

வேலெனுமெயிற்றரா வேந்தனும்விசை
காலெனுங்கடவுளும் பகைத்தகாலையிற்
கோலியபொன்மலைக் குடுமிமூன்றினைச்
சாலவுந்தென்கடற் றன்னிற்சாய்த்தவே. (22)

நூதனமாயெழு நூறுயோசனை
காதமுமாயதைக் கற்பித்ததன்பெய
ரோதருமிலங்கையென் றுகந்தவென்றன்மு
தாதையரிருந்துபா தாளஞ்சேர்ந்தபின் (23)

மந்திரியதனிடை வைகுங்காலையிற்
பைந்தொடி ஜனகியைப் பிரித்தபாதகன்
றெருந்தமிட்டவன்றனைத் துரத்திக்கொண்டதைச்
சந்தம்விப்புறச் சமைக்கலாயினன் (24)

அலைகடலகழிவா னளாவுமிஞ்சியின்
றலைமிசைத்தினந்தினந் தவிழுமன்றியு
மெலைவருஞ்வழிமறித் திழைத்தவெண்மணிச்
சிலைசதமதியெனத் திகழுமையனே. (25)

ஏழுசுற்றதனிடை யிலங்குமாளிகை
சூழகமுறைமுறை துலங்குவீதியு
நாழிகொண்டளக்கரை நயந்தளக்கினும்
பாழியானகர்வளம் பகரற்பாலதோ. (26)

இலக்கணத்துயர்ந்தென் றியம்புபொன்னகர்
கலக்கமற்றவன்மனைக் கடையிற்காசிலாக்
குலக்கதிர்மணிச்சுவர்க் கூடங்கோவையார்
சலக்கரைக்கிணையெனச் சாற்றலொக்குமோ. (27)

புன்றொழிற்புலவரும் பொதியந்தோய்ந்திடும்
தென்றலத்தலைவனுஞ் செய்யமாமதி
யன்றலா மலர்த்தொடையாரஞ்சாத்திட
வென்றிசெய்யரியணை மேவுமாண்மையான். (28)

எழுதிசைத்தலைவரோ டெதிர்த்துப்போரிடத்
தொழுதவர்திறையொடுந் துதிக்குங்கீர்த்தியான்
மழுவணிகரத்தினன் வரையைப்பேர்த்திடும்
பொழுதவன்மகிழ்ந்தருள் சூலப்பேறினன். (29)

நீதியுமறமுநன் னெறியுநீக்கியே
யோதியகுணமெலா மொருங்குகொண்டவ
னுதியிற்பெறுவர மழியக்கோடியிற்
பாதியாமாயுளைப் பகரப்பற்றினன்.

கருமலைபயில்வன காணுமாக்கையான்
பெருமலைமருமகன் சூலப்பெற்றியான்
ஒருயுகமிரவென வுறக்கமுற்றவன்
றருமவென்முன்னவன் றம்பியென்றுளான் (31)

இந்திரசித்தனே டியம்புமைந்தரு
மந்திரிதனிலுயர் மகோதரன்புகை
சிந்தியகண்ணன்வக் சிரத்தெயிற்றனுந்
தந்தியின்வயப்பரித் தலைவர்கோடியாம். (32)

எண்ணருஞ்சேனையுண் டிதனையல்லது
வண்ணமுமுருவமும் வேறுவாய்த்ததாய்
மண்ணுளமறமெலாந் திரட்டிமான்மகன்
பண்ணினன்பகரரு மூலமாபபடை. (33)

சொன்னவன்காக் கிணையில்லைசோரனு
மன்னவன்றனக்கொரு பகையுமற்றிலை
யுன்னதுபெருங்கணை யொழிக்குமென்றுகொண்
டின்னனவுறுதியா லெண்ணந்தேறினேன். (34)

அந்தகன்கண்புகா திலங்கைக்கையநின்
சந்தெனவந்தவன் றனியனுப்பெருந்
தொநதமிட்டரக்கரைத் தொலைத்தவாண்மையை
மந்தரப்புயாசலா வழுத்தற்பாலதோ. (35)

கூசியமறலியைக் கொணர்ந்துகோட்டையின்
வாசலைக்காத்திடும் வலியிலங்கணி
யூசிடவவளுயி ரூட்டியுட்புகுந்
தாசையைத்தீர்த்திட வமருண்டாக்கினன். (36)

காவினைவேரொடுங் களைந்துவிசினன்
மேவியகாவலர் வீயவீசினன்
தாவியகம்பனைத் தளத்தின்பின்னுட
னேவினன்மறலியூர்க் கெவருமேகினர். (37)

சதுர்விதத்தளத்தொடு சம்புமாலியு
மதிகடன்முழக்கென வந்தவன்றனை
குதிபெறுங்காலினுற்குழப்பக்கண்டவர்
கதிபெறப்புல்லையுங் கவ்வியோடினர். (38)

பஞ்சசேனுதிபன் படையினேடவன்
வெஞ்சினத்தொடுமமர் விளைத்தகாலையிற்
றுஞ்சிடச்செய்தெம தூதன்மாநகர்க்
கஞ்சலிற்சுமைசுமை பிடித்தனுப்பினன். (39)

கொக்கரித்தரக்கரைக் கூவினனவன்
மக்களிலக்ஷயன் வந்தம்பேவினன்
செக்கினிலெள்ளெனத் திரிக்கமாய்ந்தவர்
கக்கியவுதிரத்தாற் கடல்சிவந்ததே (40)

இந்திரசித்தனு மிமைப்பினெய்தியே
தந்தையின்பாசத்தாற் றடுத்திராவணன்
புந்தியில்விடுத்திடப் பவனசேயனுஞ்
சிந்தையினுரத்தொடுஞ் செப்பினுனரோ. (41)

ஆதியிற்றுடகை யழிந்ததாதியாப்
பாதகக்கரனுயிர் பறித்ததீறதா
யோதினுனெனதுள முணர்ந்துதேவர்கோ
னுதனுநீயென நடுக்கமெய்தினேன். (42)

அஞ்சனைகுமரனு மவனைநோக்கியே
பஞ்சினுமெல்லடிப் பாவைசீதையை
யஞ்சனவண்ணன்பா லனுபபியாங்கவன்
றஞ்சமும்பெறுவையேற் றப்புவாயென்றான். (43)

வந்தியென்றுரைத்தவாய் கிழித்துவாளிறாற்
கந்தரங்களைவனென் றெழுந்தகாலையிற்
சந்தெனவந்தவன் றன்னைக்கொல்வது
நிந்தையதாமண்ணே நீக்குவாயென்றேன். (44)

அடங்கியசினத்தொடு மருகுநின்றிடுங்
கடங்கடர்தம்மொடு கழறினுனவர்
தடம்பெறுவாலினிற் றையலார்கடம்
புடவையைப்புனைந் தெரிபொருத்திமூட்டினார் (45)

தன்னையேசுடுந் தன்வினையென்பபோ
லென்னகமொழியமற் றெவையுநீறெழப்
பன்னருமிலங்கையைப் பாழதாக்கவே
யின்னிடைவந்திடு நிலையைத்தேறினேன். (46)

பின்னையுமமைச்சர்கள் பேசுங்காலையிற்
கன்னியைவிடுவதென் கருத்தென்றேதினே
னென்னையுமிகழ்ந்துநீ யிலங்கைவிட்டவன்
றன்னிடம்போவெனத் தாக்கித்தள்ளினுன். (47)

தாதையுமன்னையுந் தமருந்தெய்வமு
மோதருஞ்செல்வமு முயர்ந்தகீர்த்தியும்
பூதலமளந்தனைப் புகழுற்கெட்டிலா
பாதமாமலரெனப் பணிந்துகூறினன். (48)

வேறு.

அந்த விடண னுரைத்திட ராகவ னடங்காச்
சிந்தை யன்பொடு மனுமனைத் தழுவினின் றிறலுக்
கிந்த ராவணன் போலிரு நூறுளா ரெனினு
நந்து வாரெனி லொருவனே நிகரென நவின்றான். (49)

வெய்ய னுமவன் றலைவிழக் கொய்வதும் விரைசேர்
செய்ய தாமரைச் சனகியை மீட்பதுந் திரண
மைய மில்லையென் றுலுனக் காவது மழியா
துய்யு மரக்கையு மாயுளு மீந்தெனென் றுரைத்தான். (50)

வேறு

இனங்கொண்டதளத்தோடைய னிலங்கையூர்க்கெய்தும் வண்ணம்
வனங்கொண்டவுவரிவேந்தன் வழிதரவரவேயேழு
தினங்கொண்டசயனம்புன்மேற் செய்தனனவனைக்காணச்
சினங்கொண்டானகைத்தானிட்ட திரிபுரத்தீயுந்தீய. (51)

கடுஞ்சிலைகுனித்து முத்தீக் கடவுண்மந்திரத்தையேத்தி
விடுங்கணையென்றுலந்த வேலைநீ ரொழிந்ததந்நாட்
கடந்தருமுனிவனுண்ட காலையிற்ககனமுடப்
படும்புகையொலிதானுண்டோ பாதலந்தெரிந்ததல்லால். (52)

மற்றொருகணையையயன் வரிசிலைதொடுத்தவிஞ்சைப்
பெற்றியுச்சரித்துவாங்கி விடுதன்முன்பெருநீர்க்கெல்லாங்
கொற்றவன்குலைந்துகூவி கோவிந்தாநொந்தேனென்னை
முற்றிலுங்காப்பாயென்றே முளரித்தாள்வீழ்ந்துசொல்லுவான்

ஐயனேயறிந்தேனில்லை யவமதித்திருந்தேனுகில்
வெய்யதாநகரத்தாழ்வேன் மேலெனவுரைத்தல்வேண்டும்
பையராவணையாயுன்றன் படையெலாநடத்தப்பாலஞ்
செய்யவென்முதுகுதந்தேன் செய்வனசெய்வாயென்ருன். (54)

வேறு.

நீலமாங்கட லின்மலைநெட்டிபோற்
பால மாகப் பரப்புநளன்பணி
மூலமாதவன் சாபமொழிந்தது
மாலி ராமன் றிருவணைவைக்கவால் (55)

பத்துயோசனை யாம்பரப்பைந்திரு
பத்துயோசனை நீளமுமாய்ப்பக
ரத்திமெலணை செய்தனமையாவென்
றுத்தமனிடத் தங்கதனேதினன். (56)

கந்தமாமலர்க் கண்ணனுந்தம்பியு
மந்தவாறணை காண்டலுமாம்பல்வாய்
மந்தகாசம் விளைத்தனர்மாணபினு
லிந்தவண்ண மியம்பினனெம்பிரான். (57)

வேறு.

தென்னகரிலங்கையைச் செய்தகோலமுந்
துன்னலைகடறனிற் றெடுத்தபாலமு
மன்னநின்படைபெரு வலியின்மாட்சியைப்
பன்னகத்தலைவனும பகரலாகுமோ. (58)

மந்தரப்புயத்தசுக் ரீவமன்னவா
வந்தரத்தவர்வியப் படையவாக்கிய
சிந்துவினணைமிசைத் செலுத்திச்சேனையைப்
பந்திசெய்திலங்கையிற் பரப்புவாயென்ருன். (59)

நாயகனுரைத்தலு நடந்தசேனையுந்
தூயவனங்கதன் ரேளிராகவன்
வாயுவின்மகன்புய மலியயாவரும்
போயினர்சுவேலையாம் பொருப்புவைகினர். (60)

உளவரிந்திடவவ னனுப்பவூடதாய்த்
தளமிசைத்திரிந்தனன் சாரணன்சுகன்
விளைவருமாயையா ரென்றுவெம்பகைக்
கிளையவனுரைத்திட விராமன்கூறுவான். (61)

சீதையைத்திருடின திருடனும்பெரும்
பாதகன்றலையினைப் பனையின்காயெனப்
பூதலத்துருண்டிடப் புடைப்பனென்றவர்க்
கோதுவீரென்றுரைத் தோட்டுமென்றனன். (62)

வேறு.

தூயவனுரைத்தவண்ணந் துரத்தினரோடிவந்த
மாயையாருரைப்பக்கேட்டு மாலியவானுமையா
வேயெனுந்தோளினாளை விடுதியேல்வாழ்வாயென்னப்
பேயனுநகைத்துக்கோட்டைப் பெருங்கதவடைக்கச்சொன்னன்.

சுடர்பெறுமௌலியோடுந் தோள்வளைமணியுமின்னற்
கொடியெனத்திகழக்கங்குற் கொழுந்தினுமிருண்டகொண்மூ
படிமிசைநடந்தாலென்னப் பட்டுகருடனேகோட்டை
வடமுகச்சிகரிமீது வந்தனனரக்கர்கோமான். (64)

தங்கியமலைமீதையன் றளங்களையமைச்சர்தம்மை
யிங்கிவரின்னரென்று சாரணரினிதுகாட்டப்
பொங்கியவரக்கனேக்கும் பொழுதவற்கிளையோன்கண்டு
சிங்கவேறனையாய்காண்டி சீதையைக்கவர்ந்தானென்றான். (65)

கண்டனன்காமறகாய்ந்த கறைமிடற்றமலன்காட்சி
கொண்டனன்வெகுளிச்செந்தீக் கொழுந்துகக்குணில்போற்றாவி
மண்டபங்குலுங்கத்திக்கு வாரணந்திகைக்கவானோ
கண்டகவரக்கன்மீது குதித்தனன்கதிரோன்மைந்தன். (66)

மலையொடுமலைநேர்ந்தன்ன மல்லமர்பொருதகாலை
நிலமிசைச்சகடம்போலு முருட்டினுனிருதன்பூண்ட
சிலைமலிப்பணிகளெல்லாஞ் சிதறிடச்செங்கைபற்றி
யலைகடற்கடைந்தானென்னக் கடைந்தனனருக்கன்மைந்தன். ()

சினமுடனெழுந்தநார சிங்கனும்பொன்னனும்போ
லெனவவர்போர்செய்காலை யரக்கனேயிவனேமாற்றி
வனைமணிபதித்தபத்து மகுடமோடெழுந்துவள்ளல்
கனைகழன்முன்னம்வைத்தான் கருணையாலையன்சொல்வான். (68

நம்பியவெனையுநீங்கி நவிலுமுன்னரக்கன்றன்மே
லம்புபோற்பாய்ந்தாயல்லா தவன்முடிகொள்ளைகொண்டா
யெம்பிசுக்ரீவாவென்ன வியம்பினனரக்கனுங்கே
கொம்பொழிபகடுபோலக் குலைந்தவன்கோயில்புக்கான். (69)

வேறு.

படர்ந்த சேனையு மதிற்புறம் வளைந்தேயார்ப் பரித்தா
ருடைந்த சிந்தையோ டரக்கனு மிலங்கையுள் ளிருந்தான்
றொடர்ந்து போர்தரத் துணிவதுந் தொல்வினை தொலைத்தேன்
மடந்தை சீதையை விடுவது மறிவதென் மாட்சி. (70)

இன்ன தாகவி ரகுபதி யிளைஞனை நோக்கி
யன்ன வன்னினை வறிந்திடத் தூதரை யனுப்ப
முன்ன மேவிய மாருதி போமெனின் முனைவே
லன்ன வீரர்கள் வேறிலை யாமென வெண்ணும். (71)

ஆத லாலிவ னவனவ னிவனென வறியா
மேதையுந்திறல் வீரமு முடையவன் விறலோ
ரோது வாலியின் மைந்தனங் கதனெனு மொருவன்
றூது போய்வரச் செய்வதே துறையெனச் சொன்னான். (72)

கருணை நாயக னுரைத்திடக் கனிட்டனங் கதனை
வருக வென்றலும் வந்தவ னடியினை வணங்காப்
பெருமை வாலியின் மைந்தவிப் பொழுதுள பெரும்போர்க்
கொருத யாளமுண் டதுவொரு நெறியென வுரைப்பான் (73)

கன்னி சீதையைக் கவர்ந்தது பிழையெனக் கருத்தி
லுன்னி யென்னுற வுடையவ னுவதற் குளனே
துன்னி வெஞ்சமர் புரிந்திடத் துணிவனே துலங்க
வென்ன வன்னினை வறிந்துவா வென்றன னெம்மான். (74)

மதித்த வன்னிவை யுரைத்திட வங்கதன் மகிழ்ந்து
துதித்த னன்றிருத் தாளிணை தொழுதனன் றுவர்வாய்ப்
பதித்த கையொடு பின்கொடா தகன்றுபிற் பாய்ந்து
குதித்த னன்வட கோபுரக் கொடுமுடி குலுங்க. (75)

முன்ன நின்றவ ரிரிந்திட விசைகொடு முடுகி
யுந்ந கர்த்தெரு வீதியிற் செல்லமுன் னழித்தோ
னின்னம் வந்தன னென்றவர் கணவரோ டேங்கப்
பொன்ன ரித்தவி சிருந்தவன் கொலுவிடை புக்கான். (76)

கண்ட னன்னவ னேவென வரக்கனுங் கனன்று
துண்ட மேல்விரல் வைத்தனற் சொரிந்திட நோக்கிச்
சண்ட னும்புகு தாதிவ்வி லங்கையென் சபையிற்
றண்ட மன்றியு நின்றவுன் றலைதனைத் தகர்ப்பேன். (77)

முன்னம் வந்தவன் வாலெரிந் திடக்கனன் மூட்டிச்
சின்ன பின்னஞ்செய் தோட்டினேஞ் செய்வன செய்யா
தென்ன வந்தநீ யெவன்வர வெனவுரை யிலங்கை
மன்ன னென்றெமை யறிகிலை மதியிலா யென்றான். (78)

தூது வந்தவ ரெமைத்தொழு துரைப்பது சொல்லு
நீதி யென்றறி யாதநீ யிருந்தவுன் னிலைவை
யோது கண்டபி னுன்னுயி ரொழிப்பதற் குடையே
னுத லாலுரை கடிதெனத் தொடையிற்கை யறைந்தான் (79)

வேறு.

சசிபெருங்குடையாய்க்கொண்டோன் றந்தையேமுதலதாய
வுசிதமாங்கடவுளென்னு மூவருமொருவனாக
நிசிசரர்வினைவு நீக்க நீணிலத்தயோத்திவந்த
தசரதராமனுன்மேற் றயவினல் விடுத்ததூதன். (80)

இன்னமுங்கேளாய்முன்னே ரிராவணனென்பானந்நாள்
பொன்னணிமகுடமின்னச் சுந்தரப்புயங்கைகூப்பி
யுன்னியென்னிடைகூத்தாட வுளமகிழ்ந்துவகைமூட்டு
மன்னவன் வாலிமைந்த னங்கதனென்பேரென்றான். (81)

அங்கதாவாலியென்ற னருயிர்த்துணைவனை
சிங்கமோர்மனிதனம்பாற் செத்ததென்றுருகுநெஞ்ச
மிங்கிவன்றனையான்கொன்றே யெழில்பெறவுனக்குநானே
துங்கமாமகுடஞ்சூட்டித் தொல்பழியொழிப்பேனென்றான்

அங்கதனவனை நோக்கி யரக்கநீயுரைத்ததெல்லாந்
துங்கமாமிராமமந்தரந் தூர்த்தவென்செவியிற்கொள்ளா
சிங்கமென்றுரைத்தாயந்தச் சீயத்தின் குழவிக்கேற்றந்
தங்கிடக்கொடுப்பேனென்ற சம்புவைப்போலுமென்றான். (83)

மானரனென்றபேயா மனைவியையிழந்துதேடுங்
கானரனவனுக்கான கவிப்படைத்தலைவனீயும்
வானரனதனலந்த மனிதரைவியப்பாய்ச்சொன்னாய்
பானறவருந்தாநிம்பப் பழநுகர்பவர்போலென்றான். (84)

பாவியாமரக்காநின்பாற் பகருவதிரண்டுமாற்றங்
காவியங்கண்ணளான கமலையென்றுரைக்குஞ்சீதா
தேவியைவிடுதியோவத் தேவருக்கிடுக்கண்செய்யு
மாவியைவிடுதியோவீ தல்லமற்றில்லையென்றான். (85)

அரக்கனும்வெகுண்டுசீறி யருகுநின்றவரைநோக்கிக்
குரக்கினைவதையுமென்றான் கொல்லெனக்குவிந்தசேனைப்
பெருக்கமுமிலங்கைவீதிப் பிணமலைகுவியப்போந்து
வருக்கவானரங்களோடு மால்பதம்வணங்கிச்சொல்வான். (86)

தருமநின்னருளாலந்தத் தசமுகனிருக்கைசென்று
மருமலர்க்குழலாடன்னை விடுதியேல்வாழ்வாயென்றேன்
பொருமியசினத்தோடென்மேற் பூசலைவிளைத்தானென்றாற்
கருமுகில்வண்ணவுன்றன் கருணையைக்கொளற்பாலானே.

வேறு.

செவிக்கு மங்கத னுரைத்திடச் சினமெழுந் திருமால்
குவிக்குந் தாமரை மலரெனத் திருமுகக் குறிப்பாற்
கவிக்கு நாயகன் கைபுடைத் தெழுந்தனன் கடைநா
ளவிக்கும் பாற்கட லாமென வடர்ந்தவப் படைகள். (88)

ஒல்லை வாருமென் றுருமினை ரொருவரை யொருவர்
கல்லை நீரெடுந் தாருவை யாமெனக் கவிந்தா
ரெல்லுந் தாவரு மிஞ்சியை யிடித்தன ரெறிந்து
செல்லு நீர்கொளு மகழியைத் தூர்த்தனர் திடலாய். (89)

கூவி வானர ரரக்கரை யழைத்திடுங் கூச்சற்
றூவித தென்றிசை வேந்தனைத் தளத்தொடுந் தரியாப்
பாவியா மிவர் மாளுவ ராருயிர் பருக
வாவிப் போதுனக் காக்குவம் விருந்தெனன் மானும். (90)

ஆன காலையி லரக்கனுஞ் சினந்தெயி றதுக்கிச்
சேனை காவலர் வெதுப்புற நோக்கலுஞ் சிறியோ
ரூனர் நோயின ரொழிந்திட நால்வகை யுளதா
மீன ரானவி ராக்கதர் கடலென வெழுந்தார். (91)

செய்ய மாமணித் திரளிழை மகுடமுஞ் செவியா
னைய நாலுகுண்டலங்களுந் தோளணி நகைநீர்
பெய்யு மாமுகின் மின்னொடு பெயர்ந்தெனப் பெருங்கால்
வைய மேறியிராவணன் போர்க்களம் வந்தான் (92)

ஈர வாரியுங் கருங்கடற் பெருக்குமாய்க் கிளர்ந்தே
யார வாரமிட் டார்த்தன ரண்டமு மதிர்ந்து
தாரை சிந்தின தாரணி பிளந்தது தகர்ந்து
மேரு மந்தரம் குலுங்கின நாகரும் வெருண்டார். (93)

எண்டி சாமுகங் குலுங்கிடப் பல்லிய மிடித்துத்
தண்டு வாளயில் வில்லொடு சாயகந் தாக்கி
மண்டு பேரமர் விளைத்தலு மகபதி வானோர்
புண்ட ரீகவே தாவுறை புரந்தலிற் புக்கார் (94)

வேறு.

கரிபரிகோடிகோடி காற்படையரக்கர்வெள்ள
மிருவிருநூற்றிரட்டி யீரிரண்டணியதாக்கி
வரும்பெருவச்ரமுட்டி வாலியினிளையோன்கையாற்
குருதியாறுவரிபாயக் கூற்றனுலகங்கொண்டான். (95)

போர்க்குவங்தெழுந்தசேனை பொங்கியவாரிபோலக்
காக்குமேல்வாயில்வந்த விருநூறுவெள்ளங்கண்டு
ஞேக்கினனுமான்கையா னெய்யெனச்சிதறவாரித்
தாக்கினன்சிதறுகாய்போற் றுன்முகன்றரையில்வீழ்ந்தான்.

தூயமூவைந்துவெள்ள நீலனுஞ்சுடரோன்றேன்றும்
வாயிலிலிருந்தான்றன்னை வளைத்தவாளரக்கர்மாண்டு
போயினரிரண்டு நூறு வெள்ளத்தின்பிறகேபோனு
னுயிரம்வெள்ளஞ்சேனைக் கதிபதிப்ரகத்தனையா (97)

கலங்கமில்லாவிராமன் கருணையையடையாதிந்த
விலங்கைவாழரக்கரேகும் வெருவழிக்கிசைந்தவாசற்
சலங்கொள்வானரர்கோனங்க தன்பெருஞ்சமருக்காற்று
மலங்கவன்சேனைபின்சு மாரிசன்மரணமானுன். (98)

ஒதரும்படையுந்தோலா வீரருமொழிந்தாரென்னத்
தூதுவருரைப்பக்கேட்டுத் துடித்தனாலைந்துதோளின்
றுதுகுதும்பைமாலைச் சருகெனவுதிரத்தாளாச்
சூதனும்பதரச்செந்தீச் சுடர்விழிசொரியச்சொல்வான். (99)

சனகியையிழந்தபேதை தம்பியோடவனையென்றன்
குனிசிலைப்பகழிகீண்டகுருதியக்கொடியார்கொன்ற
வனைசிலைகழற்கால்வீரர் மனைவியர் நுதலிற்காண்பே
னெனவிவனவனைநோக்கி யேவுவாம்பரித்தே ரென்றுன். (100)

அந்தரமதிரத்தேர்மே லாலமோருருவாமென்ன
வந்தவவ்வரக்கன் றன்னை மாருதிவலக்கையோங்கித்
தந்தமுன் னுசித்தமார்பா தாங்குதி யென்னத்தாக்கச் [தான்.
இந்தினகரிக்கோடன்னுன் செருக்கொழிந்துணங்கித்தேர்ந்

திகைத்தவாளரக்கன்செங்கை சிலையொருபதிலுஞ்சேர்த்து
துகைத்தகாவம்புமாரி சொரிந்தெனச்சொரிந்தான்றேலா
பகைத்தவானரங்களோடப் படுகளத் துழக்கபாலி
நகைத்தவா றெனவிராம னழற்பொறிசிதறநக்கான். (102)

இளையவன் வணங்கியானே யிராவணன்றலையீரைந்துங்
களைதரவருள்வாயென்னக் கருணையானவனைநோக்கி
யுளமகிழ்ந்தொருநாட்போரி லுரமழிந்துடைந்துநெஞ்சந்
தளர்வனேற்றெளிந்துமீள விடுவையோதணியாத்தம்பி. (103)

துணைவலிவேண்டாத்தீரா வரக்கரைத் தொலைப்பாயாறு
லணையருப்படையுமன்று ராடல்வெஞ்சிலையுமாண்மைக்
கணைதரும்விரைவும்விஞ்சைக் காட்சியுங்காண்பேறுக
வினையிலாவீராயானே யெதிர்ப்பதற்கிசைவாயென்றான். (104)

செய்யவில்வளைத்துநாணின் சிரொலிசிறிதுகாட்ட
வையகங்கலங்கிற்றென்றான் மற்றதென் வகுக்கல்வேண்டுந்
துய்யபாற்கடலிலன்னான் றுயிலெழுந்திருப்பதொப்பா
யுய்யுமாருதிதன்றோண்மே லெழுந்தனனுலகமீன்றான். (105)

வானரவேந்தன்வாலி மைந்தன்மற்றவருங்கூடிச்
சோனைமாமுகிலாமென்னச் சொரிந்தனர்மரமுங்கல்லு
மானவாளரக்கனம்பா லகற்றியாங்கவரையெல்லாங்
கானகந்தீப்பட்டாற்போற் கனற்கணைபொழியக்கண்டான்.

வேறு.

கண்டனன்றிருமகன் காதினேர்தரக்
குண்டலமெனச்சிலை குனித்துக்கூர்கணை
விண்டலமதிர்தர விடுத்துமேலவர்
கண்டகவரக்கன்மெய்க் கவசம்போக்கினான். (107)

அரக்கனுஞ்சிலைவளைத் திமைப்புக்காயிர
மிரக்கமற்றவனென வேவையேவினு
னரக்கெனுநிறத்துடை யலரிபூத்தெனக்
குரக்கினத்தவருடற் குருதியாக்கினான். (108)

தூயவனொருசரந் தொடவிராவண
னுயிரம்பரியொடும் பாகனுவியும்
போயினதுபபலம் பொருந்துருவகைத்
தீயினுங்கொடுங்கணை விடுத்துத்தேக்கினன். (109)

மதித்தவன்விடுமுனை வளிமாமணி
பொதித்தபொன்முடியொடு நாணும்போக்கினன்
விதிர்த்தகையிருபதும் விழுதுபோல்விழக்
குதித்தனனிலத்திடைக் கூனிநின்றனன். (110)

கருணைநாயகன் காண்டலுஞ்செப்புவா
னொருவனுய்நில மூன்றினைக்காண்டிடபம்
வெருவிடாதிரு வென்சரம்விட்டிடே
னிருமைவாழ்க்கைக் கிதுவிழுக்கென்பரால். (111)

ஏறிவந்த விரதமுஞ்சேனையந்
நூறுவெள்ளமும போனபின்னேநிலங்
கீறிநின்றனை கேட்பதற்குத்தரங்
கூறுகென்னக் குவிதலைமீட்கிலாய். (112)

பத்துவாயும் படைத்தனைபாவியா
பத்துவாயிற் பகருதற்கொன்றிலை
யத்தவாழ்வு மறந்துறந்தாலவர்
செத்தபோதி னுயிர்த்துணைசேருமோ. (113)

காளைவீரருஞ் சேனையுங்காற்றினுற்
பூளைபோல்விழப் பேரட்டனைவீரமு
மாளும்வேந்தர்க் கறந்துணையல்லது
வாளும்வேலும் வரமுமென்வெல்லுமோ. (114)

வேதமாயிரங் கற்றனைமேம்படு
சாதிதன்னிற் சனித்தனை தன்குல
மாதையன்றி மறுமனையாசைமா
பாதகமென் றறிந்திலைபாமரா. (115)

முன்புநாக மெடுத்ததென்முக்கணு
னன்பிலாது முனிந்தவனுமெனி
லுன்புதல்வர்செய் யுத்துருமைக்குமி
யென்புகாண்ப தரிதெனவெண்ணிலாய். (116)

இன்னமுமொன் றியம்புவன்யாதெனிற்
பொன்னிலங்கை புரக்கவிபீடணன்
சொன்னவேவற் றொழில்செய்துமும்பருக்
கின்னல்செய்யுமுன் னெண்ணமுநீக்குவாய். (117)

கன்னிசீதையைக் காவற்சிறைவிடுத்
தென்னைத்தாழ்ந்திவ ரேவலுங்கேட்பையேன்
மன்னிப்பேனென்றன் வார்த்தைமறுத்தியே
லுன்னைத்தென்புலத் தோர்கண்டுவப்பரால். (118)

தோளைநோக்கிய துன்மதிவிட்டெதி
ராளைநோக்கியென் னுண்மையுநோக்குவாய்
மாளவுன்றன் மனமிருந்தாலும்போய்
நாளைவாவென் றியம்பினனுயகன். (119)

வேறு.

கோலமணி முடியிழந்து மார்பெட்டானைக்
கொம்பிழந்து குடையிழந்து கொண்மூவார்ப்பாஞ்
சாலநெடு முரசிழந்து படையிழந்து
தாவுபரித் தேரிழந்து தள்ளமாடி

நீலநிற மேனியெல்லாங் குருதிபோர்ப்ப
நெடுந்தடத்திற் சுவடொழுகு நிணங்கள் சிந்த
வோலமிடு மரக்கியர்மார் புடைப்பச்சென்றான்
வுயர்கயிலை வரையெடுத்த வுரங்கொடோளான். (120)

புக்கவனுந் தனிக்கோயிற் புறத்தைச்சேர்ந்தான்
பொற்கொடியார் முட்டியழப் பெண்கள்கூவ
மக்கண்மரு மக்களழ வமைச்சரேங்க
மாலியவான் முகமறைந்து வாய்விட்டார்ப்பத்

தக்கபுன னீ ராட்டித் தவிசிட்டேற்றிச்
சரமுழுத புண்ணுறத் தைலஞ்சாத்த
விக்கிநெடு மூச்செறிந்து பாட்டனேடே
விளைத்ததுவு மிளைத்ததுவும் விளம்பலுற்ருன். (121)

அழியாத விலங்கைதனைத் திருநீருக்கி
யரக்கரையும் படுபாதி யவித்துப்போன
பழிகாரன் ருேள்பொலிய வந்தான்றன்னைப்
பரமபதத் தலைவனெனப் பகராவண்ண

மிழிவாக மானிடனென் றுரைத்தபாவ
மிதுவல்லா திமையவரு மிசைநாட்டாருந்
தொழுவாழ்வுங் கொடியரசு மிழந்தேனுன்றன்
சொற்கேளாத் தோடமெனத் தொடுத்துச்சொல்வான்.

அனற்படையு மழைக்கணையு முகாந்தகாலத்
தனிலழுமாஞ் சரம்விடுத்தே ஞற்ருதோடிக்
கனமுதிரக் கடல்குதர வுடுக்கடயக்
ககனமும்வெண் புகைபடரக் கலங்கவானோர்

வனசரரும் வெருவிவிழுந் தலறியோட
மானிடரு நிலைபதற மலைந்தேனென்ருன்
மனவலியுந் துணைவலியு மென்னுமீசன்
மாட்சியரு ளாட்சியில்லா மனிதர்க்கையா. (123)

பேரான வாலிதனைப் புடைத்தானுண்மை
பேசுவதோ வவனருளாற் பிழைத்துவந்தேன்
காராருஞ் சரவலியா னிளையோனென்பர்ன்
கவிப்படையிற் சீயம்போற் களத்திலென்ற

னேராக நின்ருனை நினைத்தாலின்னு
நெடுமூச்சு மெய்பதைப்பு நீங்காதென்ருன்
போராகி லெமபுரத்திற் புகுவேனேதோ
பொருதாது விட்டதுமென் பூசைக்கென்ருன். (124)

உலகெலா மொருங்கழிக்கு மொருவன்ராம
னுற்றசண்டைக் குடைந்ததினு லுருகேனென்ற
னலகுபெறும் புஷ்டாங்கங் குலையப்பற்றி
யலைகடலின் மந்தரம்போ லலைத்தாரன்றிப்
புலபலவாம் பரிபவம்வா னரங்கள்செய்யப்
பார்த்திருந்தார் வானவரென் பாட்டாவென்றே
கலகலெனக் கண்களினீ ரருவியோடக்
கன்றிழந்த பசுபோலக் கதறிச்சொல்வான், (125)

வேறு.

ஓதரிய குணத்தானு மிளையவனும் பஞ்சவடி யுயர்காவைகும்
போதவரைக் காண்கிலிந்தப் பொல்லாங்கும் புகழழிவும் பொருந்தும்வண்ணஞ்
சீதைதனைக் கொண்டுவரச் சிந்திக்கே னுங்கவர்தந்திறலைசெப்பு
மாதுலனை நிந்தித்த புன்மதியா லிந்தவினை வளர்ந்ததென்றான்·

புந்திநைந்து புலம்பியபேரனைத்
தந்திவண்ணத் தடங்கையிற்றுங்கியே
யிந்தவாழ்வு மிசையுங்கெடாதர
விந்தமாதவன் பால்விடுவாயென்றான். (127)

அந்தவேளை யரக்கரையாணற
வுந்துமூழ்வினை யுற்றதுபோல்பவன்
மந்திரத்தலை யானமகோதர
னிந்தவண்ண மிராவணற்கோதுவான். (128)

தாழிலாப்பிர தாபலங்கேஸ்வரா
வூழின்வாறு நடப்பதுவுள்ளதாஞ்
சூழுமொன்றைத் தொடர்ந்தவர்தோற்பரே
லேழொடேழு தலைமுறைக்கேச்சன்றே. (129)

எடுத்தகாய மிழப்பது வெங்கணுந்
தொடுத்தவாசகங் கேட்டிலசூரரும்
பிடித்ததொன்றை விடாரெனுமபெற்றிதான்
மடித்தபோதவர் மாட்சியுமாளுமோ. (130)

தேங்குமா னிடர் சேனையைத்தேய்த்துயிர்
வாங்குவேனொரு வாய்க்குப்பத்தாதென்றே
தூங்குமுன்றன் றுணைவனைத் தூண்டிநீ
யேங்கிடாதெழுப் பாயென்றியம்பினான். (131)

காலமோரு மதியெனக்கட்டுரை
யாலரக்க னபீட்டமடைந்தவர்
போலமைச்சன் புகழைப்புகழ்ந்தனு
கூலத்தம்பி துயிலெழக்கூறினான். (132)

வேறு.

தூங்கியதோர் கும்பகன்னன் றன்னைமுன்னே
தொலைப்பதறகி ராவணனும் தூதரோடே
யீங்கெனது தம்பிதனை யெழுப்புமென்று
னைமதூத ரிவனுளு மின்றைக்கென்றே

பாங்குவந்தாற் போலவருங் கையாற்றட்டிப்
பதினெட்டுக் கருவியுமார்ப் பரித்தாராவி
நீங்கியவ ருடல்வரும்போ லசைந்துமெல்ல
நெடுங்கண்ணை விழித்தெழுந்தா னிகரில்லாதான். (133)

வேறு

இந்தவிதம் வருத்தத்தாற் றுயிலெழுந்த கும்பகன்ன
னீரைந் நூறு
வந்தசக டத்தூணு மதுக்குடங்க ளாயிரமும்
வைத்தார் வாங்கிச்

சிந்தைகளித் துண்டபிற கண்ணனுரை செவிபுகலுஞ்
சீதை யென்னும்
பைந்தொடியா ளிநதாகர் பாழாமென் றயன்விதித்த
படியீ தையா. (134)

கேடுவரும் வழிநோக்கி மதியெதிர்சென் றழைத்துவருங்
கெடுதல் போலக்
காடுறையும் பெண்பழியைக் கொண்டுவந்தாய் தம்பியுரை
கடிந்து சொன்னாய்
நீடுபகை நெருங்கியபோ திவையுரைப்ப தழகன்று
நீயே யுன்றன்
பாடறிவா யல்லாதுன் பரிதாபம் யான்பாரேன்
பணிநீ யென்றான். (135)

ஆங்கவனைத் தொழுதெழுந்தா னுயிரம்பேய் பூண்டுநில
மதிரத் தேர்மேற்
றூங்கியகைச் சூலமொடும் வந்தவனைத் தாசரதி
தனித்து நோக்கி
யோங்கலுரு வுற்றானை யுரைத்தியென வீடணனு
முலக மீன்ற
பூங்கொடியைப் பிரித்தானுக் கிளையவனென் முன்னவனும்
புகழின் மிக்கான் (136)

உம்பருல கங்கலங்கு முலையாத மலைகுலங்கு
முறங்கா வாழித்
தம்பமுறு மிதுவெல்லாஞ் சதுர்முகனு லளித்தவரந்
தனையல் லாது
சம்புவிற தானேக்கித் தவம்புரிந்து பெருஞ்சூலந்
தாங்கப் பெற்ற
கும்பகன்ன னிவனென்றான் கொற்றவர்க்குக் கொற்றவனுங்
கூற லுற்றான். (137)

பருப்பதம்போ லுறுப்பறக்கத் தரிப்பேனு னீயிரங்கிப்
பதறு வண்ணந்
திருப்புவவன் கேளானேற் றெளிந்துவாவென் றுரைப்பத்
திகையா தோடி
விருப்பமொடு மரக்கர்படைக் கடல்கடந்து வீழ்ந்தானை
வியந்து நோக்கி
மருப்பொலியுந் தாரானை யேனிழந்தாய் தம்பியென்ன
மதியீ தென்றான். (138)

வேறு

அன்பொழுகக் கும்பகன்ன னுரைப்பக்கேட்டா
னருவியெனக் கண்களிணீ ரரும்பவண்ணே
முன்புசொலிப் பகையாளி யாறுனென்ற
மொழிக்கொருவன் யான் பிறந்தேன் முகிரேய்வண்ண
வன்பழியைச் சுமப்பதூஉம் மரபுக்கொவ்வா
மாதரசைச் சிறைவிடுத்து வாழ்வாயென்ற
வென்பிழையா விலங்கைநக ரிழந்தேனுன்ற
னிணையடியே தஞ்சமென விரங்கிச்சொல்வான். (139)

நீயறியா ஞானநெறி யறிந்தேனில்லை
ரகுபதியோ நெடுமாலா நிகரில்லாத
சாயகமுந் தவம்புரிந்த தரக்கராவி
தனைப்பருகப் பெறுவரத்தாற் சமைந்ததண்ணே
தூயவனைச் சேர்ந்தவருக் கிகத்தின்வாழ்வுந்
துறக்கநில முந்தருவான் றுணையைநீங்கித்
தீயவனே டிறப்பதினு லுண்டோவுன்றன்
திருவுளத்துக் கறியாதொ சிறியேன்செப்பல் (140)

மானபிரானுனையறிந்த பொழுதேயுன்றன்
மனமறிவா யென்றனுப்ப வந்தேனீமா
ஞானபிரா னவனடியை வணங்காயிந்த
நன்னிலத்தை நீயாள நசையேயல்லால்
வானபிரா னிகழாது முன்போலுன்றன்
மலரடிக்கே யாட்படுவார் வாவாவென்ற
கானபிரான் முகநோக்கிக் கும்பகன்னன்
கனிந்தொழுகு சிந்தையொடுங் கழறலுற்றான். (141)

வேறு.

நீயிவையுரைத்ததெல்லா நிச்சயநெறியாம்ஞான
மாயதுவானுல்ப்ராத்ரு துரோகமாமதனின்மிக்க
நேயமாயிருந்தானுண்டு நெருங்கியபகையைச்சேர்ந்தா
னுயகத்ரோகந்தீர்க்கும் ரவுரவநரகமன்றே. (142)

வள்ளலிராமனுந்தன் வடிக்கணைக்கொருவன்றப்பி
வின்ளருமிலங்கைதன்னில் வீய்ந்தவர்க்கெல்லாநீயே
யெள்ளுநீரிறைப்பாயென்றே யிறப்பதுதுணிந்தேயென்ற
னுள்ளமுங்குளிர்ந்தேனுன்னை யொறுப்பனோவுணராத்தம்பி.

சஞ்சலமனதில்வேண்டாஞ் சாகரம்பொங்கினாலுந்
தஞ்சமென்றவரைக்காப்பான் றன்னைநீபிரியாதையா
பஞ்சையாங்குரங்கையெல்லாம் படுகளத்தவித்திராமன்
கஞ்சமாமலர்த்தாள்சேர்வேன் கற்பனையிதுதரனென்றான். (144)

தம்பியைத்தழுவித்தேற்றித் தசரதராமநாத
னம்புயமலர்த்தாள்சேவைக் கடைதியென்றனுப்பவன்று
னம்பியைத்தொழுதானங்கே நடந்ததுமுனரத்தானையன்
வெம்பியவீரரோடுஞ் சண்டையைவிளைப்பீரென்றான். (145)

வேறு.

குதித்தெ ழுந்தனர் வானர வீரர்கள் கூடிப்
பதித்த கல்லொடு மரங்களும் வீசியார்ப் பரித்தார்
மதித்த கும்பகன் னன்படை வீரர்கண் மலரோன்
விதித்த நாளென விருசத வெள்ளமும் வீய்ந்தார். (146)

கும்ப கன்னன்மெய் குலைந்திடச் சரமழை பொழிந்த
தம்பி மேற்கதை யவன்விட வங்கதன் றாவி
யெம்பி ரான்சிலை யொடித்தென வொடித்துமுன் னெறிந்தான்
வெம்பி வானர வேந்தனை யரக்கனும் விசித்தான். (147)

அந்த வேளையி லங்கத னீலன்மற் றவரும்
சிந்து கல்லினு லாக்கன்மெய்ம் மறந்துகை திகைத்தான்
றந்த மங்கையா றுசியுஞ் செவியுங்கத் தரித்து
வந்தி ராகவ னடிக்கெதிர் வைத்திட மகிழ்ந்தான். (148)

துண்ட முந்துளைச் செவிகளும் பழுதுறத் துணித்த
வண்ட னோடவன் படைகளு மிமைப்பினின் மரணங்
கண்ட தேவரும் வியப்புறும் பெரும்புகழ் காதும்
விண்ட நாசியு மாமென வரக்கனும் விளித்தான். (149)

திங்கள் சூடினு னருளிய சூலங்கை சேர்த்து
சிங்க நாதமிட் டெறிந்தனன் றேவருந் திகைப்ப
மங்கு லுங்குள மறுகிட வான்முக டளவா
யெங்கும் வெண்புகை படர்ந்திடப் பார்கொதிப் பெடுப்ப (150)

அலகு மூவிலே காருக புத்திய மாதி
நிலைகொ டுஞ்சுடர்க் கொழுந்துக வந்தது நிலையா
துலையு நெஞ்சொடு வானர ரோடின ரொருவன்
மலைவில் லானென நின்றனன் மனுகுல மகிபன். (151)

வந்த மாப்படை நாயக னுமென வணங்கி
நந்து சேர்விர சாநதி தோய்ந்துமன் னுகத்
தெந்தை பாலது போயது யாவரு மெழுந்தா
ரீந்து வாமென சிலையிழுத் தொருகணை யெறிந்தான். (152)

தொடுத்த சாயக மரக்கனைத் தோளொடுந் துணித்து
விடுத்த கையையோர் கையினு லெடுத்தவன் வெகுண்டே
யடித்த கையையு மறுத்தன னுங்கவ னதிர
விடுத்த கால்களை வீழ்த்தின னொருகணைக் கிரையாய். (153)

கண்ட மாமுடன் மந்தரச் குழவிபோற் களத்தி
லுண்டு ருண்டவன் வானரப் படைகளை யுழப்பக்
கண்ட நாயகன் வியப்புடைந் தொருகணை கடவி
முண்ட முமசை யாவகை யறைந்தனன் முளைபோல். (154)

இந்த வாறசை யாவகை யிருத்தலு மெழில்வை
குந்த வாசலைக் காவல்கொண் டிடப்பெறு முணர்வு
வந்த தாலொரு வாரணம் போலிவன் வாய்விட்
டெந்த னுயக விணையடிக் கபயமென் றிசைத்தான். (155)

வேறு.

நோக்கிமையாதுநோக்கி நுகர்வொழித்துளத்திற்கேற்ப
தாக்கியபுலன்களோடு மனந்தநாள றிவாங்கண்ணுற்
பார்க்குமாதவருக்கெட்டாப் பரம் பரமானவுன்னைத்
தூக்கமுமுணவுநீங்காத் துணைவனேவுணரவல்லேன். (156)

உந்தன்மூதாதையன்றோ வுடலையோர்பறவைக்காக
வந்தவேடுவனுக்கீந்தான் மரபினைவளர்க்குமன்று
விந்தவீடணனைக்காப்பர யென்முகத்திமுக்கைவானோர்
நிந்தியாவண்ணஞ்செய்வாய் நெடிய வாசரணமென்றான் (157)

அன்பினாலுருகிச்சிந்தை யருவியென்றெழுதுகண்ணா
னின் பமாயுரைப்பக்கேட்டே யினிதுளமகிழ்ந்துநோக்கி
யென்பெரும்பதவிதந்தே னேகெனத்திருத்தேர்மீது
தென்புலத்தவர்கைகூப்பச் சென்றுதன்னிலைமைசேர்ந்தான். ()

துண்டமாய்க்கிடந்தோன்சென்னி துணித்தொருகணையாற்றூக்கி
யண்டருங்கடலில்வீழ்த்தா னையனுங்கரக்கனிங்கே
முண்டகக்கரத்தாளோடு மொழிந்திடமுனிந்தாடன்பாற்
கண்டகமருத்தன் றன்னைச் சனகனுய்க்காட்டக்கண்டாள் (159)

சாலமென்றறியாள்வஞ்சி தந்தையென்றிரங்குங்காலை
சேலமர்விழியாளான திருசடைதெளியச்செய்தாள்
காலனூரடைந்தான்கும்ப கன்னனென்றுரைக்கச்சாய்ந்த
தாலமாமரம்போல்வீழ்ந்து தயங்கினனிலங்கைவேந்தன். (160)

ஓடினன்களத்திலன்று னுருப்பறிந்தொழிந்ததெல்லாந்
தேடினன் கண்டான்றம்பி திருமுகமதனைக்காணான்
வாடினன்கண்ணீர்சோர மலையின்மேன்மலைபோல்வீழ்ந்து
மூடினனெழுந்தான்செந்திக் கடன்முறைமுடியச்செய்தான். (161)

தொல்லைவாசகம்பொய்யாமோ தொடர்வினைதோன்றுமென்ன
வல்லலையழைப் ச்சென்ற காலையிலடைந்தேனந்தோ
வல்லவன்கும்பகன்னன் மாண்டபின்வாழ்க்கைவேண்டே
னில்லறந்துறப்பே னென்ன வெழுந்தனனிலங்கைக்கீசன். (162)

வேறு

உடைந்தசிந்தை யரக்கனுக்குற்றதாய்
திடஞ்சொல்லாக மகோதரன்செப்பினன்
விடந்தலைக்கொளும் வெம்படையோடவ
னிடஞ்சென்றிந்திர சித்தனியம்புவான். (163)

அரியதந்தையைச் செற்றவனுருயி
ரொருநொடிப்பி லுரகக்கணைக்கிரை
பருகச்செய்தப் பகைமுடித்தையயான்
வருவன்கரண்டிநீ யென்றுவணங்கினுன். (164)

மைந்தனிம்மொழி கூறலுமானவ
னைந்தசிந்தை நடுக்கமுநீங்கினுன்,
றந்திதேர்பரி தானைகள்சூழ்தர
வந்தவாளதி காயன்வணங்கினுன். (165)

ஐயநின் றுய ராற்றுகவாங்கவ
ருய்யுமாறெவை யுன்பகையுற்றதால்
வையமேழினே டெய்தினுமானிடர்
னையமோதி நகர்வருவேனென்றுன். (166)

இந்தவாறதி காயனியம்பலுஞ்
சிந்தைதேறித் தசமுகன்செப்பினுன்
றந்தைதாளிணை தாழ்ந்துதளத்தொடு
மந்தமீதென் றமர்க்களமேறினுன். (167)

எண்ணிலாக்கரி யோடவனெய்தலு
மண்ணின்மோதி மடித்தனன்மாருதி
யண்ணறம்பி யரக்கனைப்போக்கினுன்
விண்ணுளாருமுய்ந் தோமெனமேவினுர். (168)

மைந்தனுமதி காயன்மடிந்ததை
வந்துதூதர் வழங்கிடமாரிபோற்
சிந்திவாய்விட் டழுதனன்சேயனைத்
தந்ததாளிய மாலைதயங்கினுள். (169)

வேறு.

இந்திரசித்தனென்பா னிகூநூறுவெள்ளந்தன்னை
யுந்தினுனுகாந்தகாலத் துவரியென்றுரைப்பவந்தார்
மந்தரப்புயத்தான்வாலி மைந்தனேடெழுந்தசேனை
சிந்துரக்கிரியுநாகச் சிலம்பும்போற்செறிந்ததன்றே. (170)

தருமமுமறமுமென்னச் சாகரமிரண்டாமென்ன
விருதிறப்படையுநேர்ந்தா ரெறிந்தனர்சிலையும்வாளுங்
கருமுகில்பொழிந்தாலென்னக் ககனமுங்கடலுந்தூர்ப்ப
வொருவரோடொருவர்மற்போ ருதிரநீரொழுகச்செய்தார். (171)

அங்கவர்படையிற்பாதி யழித்தனனனிலமைந்தன்
செங்கதிருதயமென்னச் சேமத்தேர் பலவுஞ்சூழச்
சிங்கமாயிரங்கள் பூண்ட தேரின்மேலரக்கன்சேயாம்
வெங்கணனிந்த்ரசித்தன் வெஞ்சமர்க்களத்தில்வந்தான். (172)

கண்டனன்வாயுமைந்தன் கடவுதேரிருத்தியந்த
வண்டரைமிரட்டுமுன்ற னுண்மையையறிவேன்முட்டி
கொண்டனன்றுங்குகென்னக் கொடியவன்வெகுண்டுகோடி
திண்டிறற்கணையைவிட்டான் றிசைத்தனன்றிகையாவீரன் ()

கலைதெளிந்தெழுந்தான்றேண்மேற்கார்முகில்வண்ணனம்பிக்
கிளையவனெழுந்தான்சேனை யெழுபதுவெள்ளத்தோடும்
வளைந்தனன்கடலைமற்றோர் வாரிபோலரக்கன்றன்னைக்
களங்கறையுடையானென்னக் கனலுகநகைத்துக்கண்டான். ()

விசையுடனனுமான்றுவ மேலவர்தொழுதார்மெல்ல
வசைவுறுதிருந்தகாலை யாவருமறியமாட்டார்
திசைதொறுந்திகிரியென்னத் திரிந்தனன்றிலத்தைச்செக்கான்
மிசைவபோலரக்கர்தம்மைப் பெருங்களத்தரைத்தான்பின்னோன்

அரக்கனும்வெகுண்டுசீறி யங்கியாத்திரத்தைவிட்டான்
றிரைக்கடல்வடவைச்செந்தீத் திரளெனவளைப்பக்கண்டு
குரக்கினத்தலைவரஞ்சக் குடதிசைக்குரியவேந்தன்
சரக்கணைமாரிபெய்தான் சாகரமடைத்தான்றம்பி. (176)

இந்திரன் கணையைவிட்டா னிளையவனதனைமாற்றிச்
சந்திரமுகநாராசஞ் சதம்விடத்தருக்காற்பாவி
பந்தியாய் நூறு நூறு பகழியாற்றடுத்தாள்வாயு
மைந்தனுலரக்கன்சேனை மண்ணுறமடிந்ததன்றே. (177)

கொதித்தவன்சிலையிற்கோடி கோர்த்தனன்குரக்குவெள்ளம்
விதித்தநாளிதுவாமென்ன வீழ்ந்தனர்வெகுண்டுதம்பி
மதித்தவாத்திரங்களாலே மழையெனப்பொழிந்தான்கண்டு
துதித்தவல்லரக்கனீயே சுந்தரவில்லியென்றான். (178)

பெருமழைபொழிந்தாலென்ன் விளையவன்பெய்யுமம்பா
னிருதருஞ்சேமத்தேரு மொழிந்தவன்நிலத்திற்றாவிக்
கரவுடைமனத்தோனாகிக் கானிலங்கீறிநின்றான்
பரிதியுங்கடலிலாழ்ந்தான் படர்ந்ததுகங்குலம்மா, (179)

நீசனுந்தெளிந்துகொண்மூ நிலத்திடைமறைந்துநாக
பாசமாங்கணையைவிட்டான் படர்ந்ததுவிடத்தீசிந்த
மாசிலாதிளவலோடு வானரப்படைகளெல்லாந்
தேசிலாராகிவீழ்ந்தார் செயமுரசார்ப்பச்சென்றார். (80)

உன்னருந்துயரத்தாழ்ந்த வீடணனுடைந்தசிந்தை
தன்னொடும்புலம்பியோடித் தசரதிதாளில்வீழ்ந்தே
யுன்னுடைத்துணைவனோடுங் கவிப்படையொருங்குவீழப்
பன்னகக்கணையைவிட்டான் பாவிபாழரக்கனென்றான் (181)

அண்ணலுந்திடுக்கிட்டேங்கி யங்கியாத்திரத்தையேந்திப்
பண்ணமர்களத்தில்வந்தான் சேனையின் படுக்கைகண்டா
னெண்ணருங்குணத்தோனான விளையவன் றன்னைத்தாங்கி
விண்ணருமருகிச்சோரப் புலம்பினான்விதியையென்றான். (182)

வேறு.

அண்டர் நாயக னாரண நாயக னருள்சேர்
தொண்டர் நாயகன் றுணைவனுக் கிரங்கிடுந் துறையிற்
புண்ட ரீகனு மிவனெனப் பூணிருள் பொடிப்படச்
சண்ட மாருதக் காலெனத் தரணிதத் தளிப்ப. (183)

அந்த நாளையி லருளிய தினமென வறிந்த
சிந்தை யாலவன் றரிசனத் துறையொடுஞ் சிறகா
லுந்து காற்பட வுரகமு நிலைகெட வோடி
வந்தி ராகவன் சேவடி வணங்கினன் வயினன். (184)

அயிலெ னும்மெயிற் றரவமாம் பெரும்பகை யகன்று
வெயில்வி டுங்கலை மதியெனத் திருமுகம் விளங்கத்
துயிலெ ழுந்தவ ராயினர் வானவர் துதித்தார்
வயின் தேயனை நோக்கினன் ரகுகுல மகிபன். (185)

முன்னம் வாரணங் கூவவென் றேண்மிசை முளறி
தன்னை யொத்தது தணிகிலாத் தனிப்பதத் தரசே
பன்னும் வானவர்க்காயினும் படிபொடிப் படிய
வென்ன யான்பிழை செய்தன னிசைத்தியென் றிசைத்தான் ()

உவணன் கூறலு முபசரித் தனுப்பின னுரவோன்
பவன சேயொடும் வானர ரார்க்கவப் பதியோ
னிவண டைந்ததுங் கேட்டவன் மகனொடு மியம்ப
னவனு நாளையோர் கணையினு லழிப்பனென் றகன்றான் (187)

முருகுதாமங் கருகிடமுன்னதா
யருகிருந்த வமைச்சரை நோக்கியே
யிருவர்மானிட ரீசற்குரங்குயிர்
பருகவல்லவ ரில்லையிப்பந்தியில். (188)

வேறு.

அஞ்சும்வானவர்க் காண்மையின்மிக்கரா
யெஞ்செவிக்கினி தாகவியம்பியே
வஞ்சகத்துயிர் வாழ்க்கையரல்லது
வெஞ்சமர்க்கெழு வீரர்களோவென்றான். (189)

மாய்ந்த சிந்தை யரக்கள்சொல் வாசக
மாய்ந்த சிந்தை யமைச்சர் செவிக்கெலாங்
காய்ந்த செம்பு கருவிடைப் புக்கெனத்
தீய்ந்த சிந்தையோ டின்னன செப்புவார். (190)

இன்றி ராம னிலக்குவ னெண்ணருங்
குன்ற மன்ன குரங்கையுங் கொன்றுமோர்
வென்று நின்னிடை மேவுவ மல்லது
பொன்றி னும்புகழெனப் போயினர். (191)

பின்னவரிலங்கைமூதூர் பிரிந்ததென்றெழுந்தசேனே
தன்னெடுமமைச்சர்வெம்போர் தருமபெருங்களத்தில்வந்தா
ருன்னருமரக்கர்தம்மை யொருகணைக்கிரையாய்ச்செய்வே
னென்னவன்றபப்பியோடுங் கவிப்படையெழுந்ததன்றே (192)

கல்லொடுமரமும்வீசிக் கவிப்படையரக்கர் தம்மைச்
சில்லெனச்சிதைத்தாரன்னூர் திரண்டுவில்வளைத்துவாங்கிப்
பல்லுகங்குரங்குமந்தி மார்பிடைப்பரப்புமவாளி
சல்லடைக்கண்களாக்கிச் சாகரங்குளித்ததன்றே. (193)

அக்கினிகேதுவென்னு மமைச்சனையிளை யோன்கொன்றுன்
றக்கதோர்வச்ரதந்த னிடபனுற்றரையில்வீழ்ந்தான்
கக்கியவுதிரத்தோடு மாலியுநீலன்கையாற்
புக்கனன்பிசாசனென்பான் பனசனுற்போகாவூரில். (194)

சூரியகேதுதன்னைச் சூரியன் புதல்வன்கொன்றுன்
மாருதிகையாற்றூமக் கண்ணனும்வாலிசேயாற்
போரிலில்வீரனென்னும் புகழ்பெறும்பக்கன்போனு
னூரியனூறுவெள்ள மரக்கரையவித்தானன்றே. (195)

தெள்ளியமதிவல்லோருஞ் சேனைகளிரண்டு நூறு
வெள்ளமும்போயிற்றென்ன மிஞ்சினுரோடிவெந்த
கொள்ளிபோலரக்கன்காதிற் குரைத்தனர்கொடியோன்மாற்
விள்ளலுஞ்சேனையைந்து வெள்ளமோடவனும்வந்தான் (196)

வந்தவன்றபப்பியென்னுங் கரன் மகன் மகராக்கன்னென்
றந்தையைத்தலைமூன்றனைத் தூடணன்றனையுங்கொன்ற
விந்தமானிடர்கடமமை யிப்பொழுதென்கைவாளாற்
கந்தரங்களைந்துன்பாத கமலத்தில்வைப்பேனென்றுன். (197)

ஆங்கவன்மகிழ்ந்துசேனை யையிருகோடிதன்னைப்
போங்களென்றனுப்பவன்னூர் புடைதரவிலங்கைப்பூமி
நீங்கியதென்னவந்தார் நெடுங்கடல் வளைந்தாலன்ன
வோங்கியவாளிமேனுேடு முருமெனநகைத்துநின்றுன். (198)

செந்திருமடந்தைநாதன் சினத்தொடுமனுமான்மீது
வந்தனனிளையகோமான் வானரவேந்தனுகித்
தொந்தவானரங்களெல்லாஞ் சொரிந்தகன்மாரியென்னச்
சிந்தினுரரக்கன் சேனை செயலறமடிந்ததன்றே. (199)

படைக்கதிபதிரத் தாக்கன் னனன்கையாற்பாரில்வீழ்ந்தான்
முடுக்கினில்வந்தசிங்க முகன்றனைப் பனசன்கொன்றான்
வடுக்கணுள்கணவனம்பான் மாண்டனன்மகரக்கண்ணன்
றிடுக்கிடவரக்கன்காதிற் செப்பினுர்தப்பிவந்தோர். (200)

வேறு.

வீய்ந்த வாறத சேடர் விளம்பலுந்
தீய்ந்த நெஞ்சொடுஞ் சேயனுக் கொதினு
ழுய்ந்த வேதத் தயனபடை யால்வர்
மாய்ந்த வாசங் கேட்டு மகிழ்வையால். (201)

என்ன விந்திர சித்த னியம்பலு
மன்ன வன்றுய ரப்பொழு தாறினுன்
றுன்னுஞ் சேனைத் துணைவலித் தேரொடு
மன்னும் போர்க்களம் வந்தனன் வஞ்சகன். (202)

சிங்க மாயிரம் பூட்டிய தேரின்மேற்
புங்க வன்பகை யானவன் போதலுந்
தங்கும் வாளனு மானெதிர் தாவியே
யிங்கு நில்லுநீ நில்லென வேசினுன். (203)

தீய னிந்திர சித்தன் சிரித்திமைக்
காயி ரங்கணை யாக விடுத்தனன்
வாயு சேயன் மலைத்திட வானர
நாய கன்றளத் தோடெதிர் நண்ணினுன். (204)

ஆங்கி லக்குவ னங்கத னுண்மையால்
வீங்கு தோளின்மேன் மேவினுன் வெற்பொடு
மோங்க னேர்ந்தன வுற்றன் ரும்பரு
மேங்கி ராம செயவிஞ்சை யேத்தினுர். (205)

மலைகள் வெந்தன வார்கடல் வற்றின
வெள்ளம யங்கின வெண்டிசை வாழிப
மூலையு நெஞ்சொடு மும்பர்க ளுந்தியார்
மலரின் வந்தவன் மாநகர் மன்னினர். (206)

வந்த பானு மறையும் வரையினுந்
தந்த போர்வலி சாற்றுதற் பாலதோ
நொந்த ரக்க னிலங்கையை நோக்கியே
பிந்தி வீயப் பிழைத்தேனென் றோடினன். (207)

புக்கி யேபணிந் தையநின் புத்திர
னுக்க மானிடர் சண்டைவிட் டோடுங்கா
லெக்கி னன்றனை யெட்டில ராய்மனம்
வெக்கி னரவர் வீரர்க ளோவென்றார். (208)

ஆதவனளக்கர்புக்கா னரக்கனுமிலங்கைபுக்கான்
பூதலமுழுதுங்கங்குல் புதைந்ததுபுவனம்போற்று
மாதவன் கவசநீக்கி மகிழ்வுடனிருந்தான்மற்றோ
ரோதருமுவகையோடு முலாவினருவந்துநின்றார். (209)

அலமுறுமனத்தனாகி யமைச்சனோடுரைத்தானன்னாள்
கலகஞ்செய்திளைக்கச்செய்வேன் காண்மினென்றெழுந்துபோ
[னான்
பலவகைச்சேனையோடும் படுகளத்தகம்பன் வந்தான்
மலைவலிபுயத்தொருன மாருதியவனைக்கண்டான். (210)

முன்னமோர்கும்பகன்னன் முடிந்தபோதெறிந்ததண்டந்
தன்னையோர்கையாலேந்தித் தாக்கினன்சிதறுகாய்போற்
பன்னரும்படையின்பின்னே யகம்பனும்பரமாநந்த
மன்னியவனுமான்கையான் மறலிமாநகரம்புக்கான். (211)

மலக்குரம்பையினோர்தொந்தி மகோதரன் மகவான்போலக்
கொலைக்களத்ததனில்வந்தான் குரங்குகள்வெருவியோட
கலக்கமுற்றனுமானுதி கரந்தனர்காமனென்ன
மலக்கமுற்றிளையோனின்றான் வஞ்சகனிலங்கைபுக்கான். (212)

நஞ்செனும்படரையெல்லாம் படைத்தவன்னடுவொன்றில்லா
வஞ்சகனிந்த்ரசித்தன் வான்முகின்மறைந்துநோக்கிச்
செஞ்சிலேவளைத்துப்பிர்ம தேவனத்திரத்தையன்னுன்
விஞ்சையுச்சரித்துவிட்டான் விண்ணரூமறுகிச்சோர்ந்தார்.

எண்டிசையுலகமீன்ற விரணியகருப்பன்சாபம்
பண்டமரொருவனீங்கப் பற்றியபகுவாயென்னத்
தண்டுழாய்மௌலியாதி யரவருந்தரையில்வீழ்ந்தார்
கண்டகனிந்த்ரசித்தன் களிப்பொடுமிலங்கைசென்ருன் (214)

அப்பனேப்பணிந்தேயுன்ற னரும்பகையொழித்தேனென்னச்
செப்பலுமவனேவாழ்த்திச் செயமுரசார்ப்பச்சொன்ன
னிப்பெருந்துயரிலாழ்ந்த விளங்கொடிசனகிதன்னே
யொப்பருந்தேர்மேலேற்றி யுறுகளங்காட்டுமென்ருன். (215)

கண்டனள் கமலமென்னும் கண்கணீரருவிபாய
முண்டகக்கரங்களுவை முகத்தறைந்துருகிவாடும்
வண்டமர்குழலாடன்னேத் திருசடைமாதுதேற்றக்
கண்டகவரக்கிசூழுங் கடுஞ்சிறைக்காவற்புக்காள். (216)

அயன்படைமறுக்கலாற்ரு தனேவருமகத்திலாவி
செயலறக்கிடந்தார்வாத சேயனுந்திடுக்கமெய்தி
துயில்வர்போற்கிடந்தான்வேறு துணையில்லாத்துயரிலாழ்ந்த
தயசிரற்கிளையோன்றேடி யனுமனேத்தடவிக்கண்டான். (217)

அளவருமாற்றலானு மரக்கர்கோமானேயைய
னிளையவனிருக்கையாதென் றியம்பலுமிசைவல்லானுங்
களமிசைத்துருவுங்காலேக் கவிப்படைக்களத்தினூடே
மௌவருமரவங்கேட்டுச் சாம்பவன்வினவலுற்ருன். (218)

இந்தவாறிவரையாரென் றியம்பலுமிலங்கைநீங்கி
வந்தவனென்ருனேயா மாருதிசுகமோ வென்ன
வெந்தையையிளையோன்றன்னே யெண்ணிடாதியம்புநல்ல
விந்தைசாம்பவனேயென்ருன்மேல்வரும்வினயஞ்சொல்வான் ()

அஞ்சனைகுமரனிப்போ தரக்கனுலிறந்தோர்க்கெல்லாஞ்
சஞ்சிவிமருந்தாலாவி தருவனென்றுரைத்தான்றந்தை
பஞ்சகமறிந்தான்சோகம் பரிகரித்தையாவந்த
விஞ்சையையுரைப்பாயென்னச் சாம்பவன்விளம்பலுற்ருன்.

உம்பருக்கரிதாமந்த வோடதிநான்கிலேயொன்
றம்பினுலழிந்தகாய மாற்றுமற்றதிலிரண்டு
நம்ப மூனுதிரமாதி நரம்புமாமற்றதொன்று
வெம்பியவாவிசேர்க்கும் வீய்ந்தவரெழுவாரையா (221)

வாடைசேரிடங்களுள்ள மரங்களுமரணமாகா
வாடகவரைக்குமப்பா லரன்பதிககருகேசென்றுற்
பூடுளமலையாமந்தப் புதுமையாருரைக்கவல்லா
ராடியதிகிரிசூழு மதற்கடையாளமையா. (222

இற்றையபொழுதுபோமுன் னியம்பியகரணிநான்கும்
பெற்றமேலிறப்பாரில்லை பெரும்பகைக்கிளைப்போமில்லை
யுற்றவாறுனக்கம்போதி யுருவளவாகுமொன்பான்
கற்றவாவனிலமைந்தா காப்பதுன்கடமையென்ருன். (223)

வேறு.

வாய்ந்த சாம்வ னுரைத்திட வடதிசைக் கனுமான்
பாய்ந்த கரல்விசை யாரெடுத் துரைப்பவர் பதுவாய்
தோய்ந்த பல்லுடைப் டணிப்பகை திகிரியூழ் சொரிகா
லாய்ந்த சிந்தையின் விரைவினும் விரைவென வறைவார்; (224)

சென்னி தாழ்ந்திடச் சிறகெனக் கரங்களசெப் படைப்ப
வுன்னி நின்றுதைத் தெழுந்தனன் கால்விசைக் குலைந்து
பன்ன கங்களு மரங்களும் வழிவிடும் பரிசாய்ப்
பொன்ன கர்பெருங கேசரி யாறெடும் போனுன். (225)

என்ன வொன்பதி னுயிரம் யோசனை யிமயந்
தன்னை யுநவச கத்திரத் தேமமுந் தாண்டி
யன்ன தாமள வாகிய நிடதமு மகன்று
பொன்னு மால்வரை கடந்தன னிமைப்பெனும் பொழுதில்

வெள்ளி யங்கிரி தொழுதன னுமைக்கவன் விளம்ப
வள்ளன் மாதவன் பதியிது வாமென வணங்கித்
தெள்ளு நீலமால் வரைகடந் தலரியாற் றிகைத்தா
னுள்ள தாமிது வுதயமாங் கிரியென வுவந்தான். (227)

பெரிய சக்கரஞ் சுழன்றது போனதின் பின்ன
ரருமருந்தினைத் துருவினு னறிந்திலா னாகி
யெருது தும்பொடுந் தரிபெயர்த் தெனவிசித் தெழுந்தான்
பொருவில் வாலியு மரக்கனும்போன் றதப்பொருப்பே. (228)

தக்க மாந்தாகைக் கனியெனத் தடவரை தாங்கி
யெக்கித் தென்றிசை வரவரக் கரணியி லெழுங்கால்
புக்க நல்லவர்க் கெய்திய தீங்குபோற் பூமன்
மிக்க சாபந்தொ லைந்திட யாவரும் விழித்தார். (229)

வேறு.

விழுந்தவானரங்களாவி வீய்ந்திடாதுறக்கநீங்கி
யெழுந்தவாறெழுந்தாரைய னீங்கிதென்புதுமையென்றான்
வழிந்தபேரன்பினோடு சாம்பவன்வகுத்தானப்போ
செழுந்தருமலையைவாயு சேயனுங்களத்தில்வைத்தான். (230)

மட்டிலாதுவகையோடும் வந்தமாருதியையவாழ்த்தித்
துட்டராமரக்கர்க்காமேற் றோர்ப்பரோதுறவேர்ச்கூறப்
பட்டதோர் கரணிநான்கும் பதனமிட்டதனைமுன்போ
விட்டுவாவென்றானேழோ டேழினுமெதிரியில்லான். (231)

எண்ணறுதெழுந்தசேனை யிலங்கையிற்கலகமிட்டார்
புண்ணறுமகனைக்கூவி பொன்றினார்பிழைத்தாரென்றான்,
விண்ணருமருளும்வண்ண விஞ்சையான் மாயாசீதைப்
பெணணெனப்படைத்துவீசிப்பெரும்பகையொழிப்பேனென்
றான்.

தீர்த்தனிங்குரைத்தவண்ணந் திருமலையதனைவாலாற்
கோர்த்தனன் சுழற்றிவீசிக் குணிலெனவெறிந்தான்முன்னம்
பேர்த்தவாறடைந்தபிற்றைப் பெருங்களம்வருவான்முன்னந்
தூர்த்தனுமாயாசீதை சுரிகுழல்பிடித்துவந்தான். (233)

கஞ்சமென்முகங்கள்வாடக் கண்கணீரருவியோட
வஞ்சியாமிடைதள்ளாட மலர்க்கரப்பிணிப்பினோடுந்
தஞ்சமென்றடியிற்றாழத் தருகிடாதிழுத்துவந்தா
னஞ்சனைகுமரன்கண்டா னவனிடைசிறுத்திச்சொல்வான். (234)

சனகியைவிடுவாயென்றுற் றலைகொய்வனிலங்கைவேந்தன்
மனைவியையிழந்திராமன் மாநகர்க்கடையாலிந்த
வினையினாலெளியோரெல்லாம் வீய்ந்துயிரிழக்கரதன்னார்
நினைவறவிவனைகொன்று னெறியிதனில்லையென்றான். (235)

வணங்கியகரத்தினோடு மாருதியவனைவாழ்த்தி
யணங்குடைப்பழிபொல்லாதே யுழியுமேயரசராண்மை
மணங்கமழ்குழலாடன்னை விடுதியேல்வாய்மைகாண்டி
கணமுனதூரிற்றங்கேங் கரப்பதுன்கடமையென்றான். (236)

அரக்கனுநகைத்திலங்கைக் கதிபன்றன்னுண்மைக்கஞ்சி
சுரர்க்கிடம்புவிபாதாளந் தனிலெவர்தொழுதிடாதா
ரிரக்கமுற்றினிவிட்டாலு மெங்ஙனேயிருந்துவாழ்வான்
குரக்கினமதனாலென்றன் குறிப்பறியாதுசொன்னாய். (237)

விதிமகன்றவத்தில்வந்த விசுவசின்புதல்வன்விண்டோய்
மதிதவழிலங்கைவேந்தன் மற்றிவண்மரணங்கேட்டுக்
கொதிதரமுனியுமுன்னீ ராமனைக்கொடுபோயன்னான்
பதிதனிலொளிப்பாயாகி லுன் துணைப்பயனீதென்றான். (238)

வாதசேயினிதுகூற மறுத்தவன்மாயையென்னுஞ்
சீதையைசிறுத்திலங்கைச் செல்வமுஞ்சீருநீங்கிப்
போதியோராமனாசை போனதோவென்னவாளான்
மோதினன்சென்னிவேறாய் முறிந்துடல்விழுந்ததன்றே. (239)

பாதகனவனைநோக்கிப் பதியரசுரிமைநீக்கித்
தீதருவனத்திலோட்டுந் திருடரையொருங்குகொல்வேன்
பேதையாமிராமன்றன்னைப் பெரும்பதிபுரக்கச்சொல்வா
யீதலாதுதவியுண்டோ வேதமென்றெழுந்துபோனான். (240)

வேறு.

மாயாவியிந்த்ரசித்தன் வஞ்சகமென்றோராமற்
றுயாகுஞ்சீதையென்றே தயங்கியேமாருதியுங்
காயாம்புவண்ணன் களிப்படையக்கண்டுரைத்த
வாயாலோசொல்வேன் மாதாவேயென்றழுதான். (241)

ஆடினுருயிர்க்கா மருமருந்தென்றுவலுடன்
றேடினனற்றுவிழுஞ் சென்னியுடல்காணுமல்
வாடினனேயோ மறைத்துவிட்டானென்றவன்பா
லோடினன்காற்றே றுண்டமரம்போல்வீழ்ந்தான். (242)

பாரில்விழுந்த பவனகுமார னெழுந்தே
யாரியனே யென்னசொல்வே னேயோவெனக் கதறி
மாரியெனக் கண்ணீர் வழிந்தொழுக மாதரசை
யீருவே னென்றிழுத்துக் கொண்டுவந்தா னிந்த்ரசித்தன். (243)

பீலியர்கைப் பட்டலறும் பெண்மான்போற் பேதையுழன்
றோலமிட நாயடியே னுரைத்தமொழி கேளாமற்
சேலமருங் கண்ணளைச் சென்னிதுணித் தேமறைத்துக்
கோலமருத் தம்பியர்மேற் கொதித்தெழுந்தான் கொற்றவனே

இந்தவா றென்ன வியம்பினன் மாருதியு
மந்தமா லிராம னடைந்ததுய ராருரைப்பார்
விந்தை யெனத்தம்பி வெகுண்டெழுந்தான் வீடணனுஞ்
சிந்தை தெளிந்தாருத சீபதிக்குச் செப்பலுற்றான். (245)

செந்தழலாஞ் சானகியைத் தீண்டுவரோ தீண்டினகை
வெந்திடா துண்டோ வேதமொழி பொய்யாமோ
வந்தநாண் மானுருவா லறிந்திலையோ வையாநீ
மந்திரத்தா லிந்த்ரசித்தன் மாயையிது வாகுமென்றான். (246)

தொண்டனிவ் வாறோதத் துயரொழிந்தான் மாருதியும்
வண்டுருவா யோடி மாதரசை நோக்கிவந்தா
னண்டர்பிரான் செப்பொன் னடிபணிந்தெ னன்னைதனைக்
கண்டேன் வனச்சிறையிற் கார்காலத் தம்புயம்போல். (247)

பஞ்சுபட ரோவியம்போற் பார்த்துவந்தே னென்னவையன்
சஞ்சலங் கடீர்ந்தான் சமர்க்குரிய செய்யுமென்றான்
றஞ்சமென வந்தடைந்தோன் றசரதி தாடொழுது
வஞ்சகத்தா லிந்த்ரசித்தன் மகம்புரியு மாறுரைப்பான். (248)

வேறு.

ஒப்பில் லாதகோ தண்டமும் வாளியு முடையாய்
செயபும் யாவொரு வினையமும் யாதெனிற் செயயுந்
தப்பி லாமகக் கலைவழி நிகும்பலை சமைத்தா
லப்பு வண்ணன்முக் கண்ணனும் போர்தர வஞ்சும். (249)

நிம்பமாதியாய்த் தயிலமும் லாஜ்மா னெய்யுரு
சம்புசூடிய தாகுயா யெண்ணிரு சமுத்துங்
கொம்பு மேதியுந் தகருங்கோக் குலங்களுங் குவித்து
வெம்பி யாகமும் விளைத்திட விழைத்தது விரகால். (250)

செயபு மாமக முடிவினி லாரமுற் றேவன்
வைய முந்தனி வில்லொடு படைகளும் வழங்கி
னைய கொண்டவர்க் கெவர்பொர வல்லவ ரந்தத்
துய்ய யாகமுந் துலக்கினு னிராவணன் றேன்றல். (251)

என்னவீடண னுரைத்திடக் கேட்டலு மினையோன்
றன்னை நோக்கியன் றகத்தியன் றனிவரத் தளித்த
பன்ன ரும்படைத் தூணியும் வில்லையும் பரிவா
யன்ன வன்கொடுத் துறுதியும் விளம்பிட வகன்றான். (252)

பொங்கு பாற்கட லாமெனச் சேனையும் புரமுன்
றங்கெ ரித்தவ னிவனெனத் தம்பியு மனுமான்
பங்க மிற்குண வீடணன் பின்செலப் பகுவாய்ச்
சிங்க நாதமிட் டவன்மகச் சாலையிற் சேர்ந்தான் (253)

இளைய தந்தையைக் காண்டலுஞ் சினந்தவ னெழுந்து
கிளையொ டுங்குல மொழித்திடப் பிறந்தனை கெடுவா
யுளவி யம்பியுன் னுயிர்கொடு திரிவதி லொருசா
ணளவி டுங்கயி றில்லையோ பாவியென் றறைந்தான். (254)

கொடிய விந்திர சித்தனை வீடணன் கூவி
யடிமை கொண்டவன் மூவரி லொருவனென் றறியாய்
கடிம லர்த்திருச் சனகியைச் சிறையிடுங் கடுந்தீ
சுடுவ தற்கவ னருளெனுந் துணையலா துளதோ. (255)

எட்டி வந்திடும் பகைதனக் கொதுங்குவ ரெவருங்
கிட்டி வந்தபின் னுவது கேட்பது கிரியை
முட்டி யுங்குனி யாதபுன் மதிகொளு மூடன்
றுட்ட மைந்தரைப் பெற்றவன் குலமெவண் டுலங்கும். (25?)

பல்லு டைப்பனென் றரக்கனை மாருதி பழிந்தான்
கல்லெ டுப்பவ னீயென வரக்கன்கொக் கரித்தான்
வில்லெ டுப்பவன் தசரதி யவன்கையால் வீய்ந்தே
ரெல்ல வர்க்குங்கல் லெடுப்பவன் வீடண னென்றான். (257)

பகரும் யாகமும் பாதியி லதிலெழும் பரித்தேர்
சிகர முங்கெட யாவரும் பெய்தனர் சிறுநீர்
தகரு மேதியுந் தரிகெட குண்டமுந் தகர
நிகரில் லாதவில் விளையவ னுடைவ னேர்ந்தான். (268)

எடுத்த காலையி லென்றதில் விஞ்சையை யியற்றித்
தொடுத்த காலையீ ரைந்துள தாமதைத் தொடுத்து
விடுத்த காலையி லாயிரத் தாயிரம் விளைப்போர்க்
கடுத்த காலையிற் கோடியாங் கணைகள்விட் டறுத்தான். (259)

இந்த வாரிளை யோன்விடும் பகழியா லிளைத்து
நொந்த தாலரக் கன்னிலங் காபுரி நுழைந்தான்
றந்தை பாலினிச் சீதையை விடுவது தடுத்தா
னந்து மென்னுயிர் வார்கணைக் கிரையென நவின்றான். (260)

சினந்தி ராவணன் கண்பொறி சிதறிடச் சிரித்தே
யனந்த னைவிடு வாயெனச் சொன்னநாக் கறுப்பே
னினங்கள் போயென விலங்கையு மழிந்தபின் னெனும்யான்
வனங்கொண் டாலென மாண்டபின் னதுவென வகுத்தான்.

அனத்த காலமு நெருங்கின துனக்கினி யாறு
லுனக்கி யான்செயு முத்தர கிரியையொன் றுளதை
யெனக்கு நீயிடு வாயென வெறுத்தவ னேகிக்
குனித்த வில்லினிற் சரமழையாமைனக் கொழித்தான் (262)

ககன மூடின கானகந் தீய்ந்தன கதிரோன்
றிகை மருண்டனன் கடலெலாம் வரண்டன தேவ
ருகமு டிந்தநா ளிதுவென வுடைந்தன ருடுக்க
டகைபொ ருதுலைந் துதிர்ந்தன விவன்விடுஞ் சரத்தால் (263)

கொண்டல் வண்ணனுக் கிளையவ னெடுஞ்சிலை குனித்தே
யெண்டி சாமுகங் குலுங்கிடப் பகழியை யிணைத்துக்
கண்ட யாவருங் கலங்கிடக் காரெனப் பொழிந்தா
னண்ட ரும்வெருண் டந்தணனுலகுசென் றடைந்தார். (64)

மந்த ரத்தொடு மந்தர மலையென மலைந்தார்
தந்த மத்தமுஞ் சலித்திட விருவருந் தளர்ந்தார்
சிந்து வைப்பெருங் கதிரவன் சேர்ந்திடுந் தருணம்
வந்து மொய்த்தன னூழ்வினைப் பயனெனும் வலியோன். (265)

வன்னி வாளியை யெடுத்தனன் விஞ்சையை மறந்தா
னென்னி ராகவ னறநெறி யுள்ளவ னென்னின்
கன்னி சானகி கமலையே யென்னினிக் கணத்தி
லுன்னி ராவணன் மகன் றலை யொழிக்கவென் றுதிர்த்தான்.

வினைகொண் டோடின வேளைபின் னேவின விப்போன்
முனையிற் றுவினன் முரண்படை யிராவணன் மூத்த
தனய னைத்தலை விழும்படி யறுத்தது தனித்தே
னனைம லர்ப்பெரு மழையெனப் பொழிந்தனர் நாகர். (267)

வேறு.

இளவரசிந்த்ரசித்த னிலக்குவன்கணையேறுண்டு
களமிசைமடிந்தானென்னக் கேட்டலுங்காய்ந்தபாண்டத்
துளநவநீதமென்ன வுருகினன்மறுகிநெஞ்ச
மளவருந்துயரத்தோடு மரற்றினரக்கர்கோமான். (268)

அப்பனேமகனேயென்ற ருயிர்க்குயிரே நீதான்
செப்பியமறுத்தேனென்றே சிறுவனுன்மரணங்கொண்டா
யிப்புவியாளவல்லோரெவரினியிலங்கைவாழ்வுஞ்
சொப்பனமாயிற்றந்தோ துணைவலிவேண்டாத்தோன்றல் (269)

தத்தையேபோ லுமுன்றன் மனைவியர்தயங்கிச்சோரப்
புத்திரவாஞ்சைதன்னைப்பொருக்கிலாள்புலம்பவாவி
வைத்திருந்தேனேயென்னை மாநிலம்பழிப்பதன்றிப்
பித்தனை யிகழ்வார்போலப் பேதையரெவருஞ்சொல்வார். (270)

கயிலையுநகுவதல்லாற் கண்முகிழ்த்தகலப்போகும்
வெயிலவன்றேரிலங்கை வீதியில்விடுவான்விண்ணோர்
பயிலும்போதெல்லாங்கூவிப் பரிபவமுரைப்பாரிவ்வூர்க்
கயல்விழிமடவார்நீட்டுங் காலையுமடக்காரையா. (271)

செய்யதாமுகமுந்தோளுஞ் செருக்குறமொழியும்வாயும்
மெய்யுமேவுறனையாயுன்றன் செவ்வியுமென்றுகாண்பேன்
வையகம்புகழிலங்கை வாழ்க்கையும்வேண்டேனின்னோ
டையனேவந்தேன்வந்தேனென் றரற்றினனரக்கர்கோமான்

மாதருக்கரசிவண்டோ தரிமகன்மரணங்கேட்டுப்
பாதலமதிரப்பார்மேல் வீழ்ந்துயிர்பதைக்கு மெல்லைத்
தாதியரெடுத்துத்தேற்றத் தாமரைக்கரங்கணொந்து
மோதினண்மார்புநைய முறைமுறைபுலம்பலுற்றாள் (273)

மனைவியர்மருகிச்சோர மன்னவன்மாண்டுவீழ
வெனைத்துயர்க்கடலிலாழ்த்தி யிறந்தையோவிளையாவீரா
புனைமலிமெளலிசூட்டிப் பொன்னகராளவல்லா
ருனையலாதொருவருண்டோ வுணர்வறியாதுமாண்டாய்

ஏங்கினளெழுந்தாளோடி யிராவணனடியில்வீழ்ந்தா
டாங்கொணவருத்தத்தோடுந் தசசிரனவளைநோக்கி
மாங்குயிலனையவுன்றன் மருமகன்மனதுதேற
வாங்கவள்போலுமுன்னை யாக்குவனென்றான். (275)

இந்தவாறரக்கன்கூற வேந்திழைமனையிற்புக்கா
ளந்தமாநகரங்காப்போர்க் காண்படைத்துணையில்லாதுத்
தந்துவின்மடவாராக்கத் தென்றிசைத்தருமன்விட்ட
சந்தெனவமைச்சர்க்கெல்லாந் தலைமகோதரனும்வந்தான். (276)

வீய்ந்தவரொழியமற்றோர் விதவையருறவோரெல்லா
மாய்ந்தவன்றுயரமாற்ற மன்னனையடைந்தாரப்போ
வாய்ந்தவன்படையும்வாழ்வு மொருங்குறமாயும்வண்ணந்
தீய்ந்தநெஞ்சரக்கன்றன்னை மகோதரன்றெளியச்சொல்வான்

தலைக்குமேலெழுந்தவெள்ளஞ் சாணெடுமுழமாறுலென்
னிலக்கணச்குமரன்மாண்ட பிறகெவற்றுன்றனுசை
மலக்கமேன்கொண்டாயந்த மருவலர்மரணநாளைக்
கொலைக்களங்காண்பாயாகிற் றிருமிக்கொடுமையென்றான்.

சண்டனைத்துகைக்குமாற்றற் றுரகையளவிட்டாலு
மெண்டராதிளையோன்மூல பலமெனவியம்புமந்தத்
தண்டினைப்பொருதவிட்டாற் சதிசெயவாரடியிற்றுழந்த
வண்டருந்துதிப்பாரென்று னவனதையழையுமென்றான். ( )

அத்தகையாய்புற்றிச லளவுமாயரிமாசெந்நாய்
கத்தவமுகமுஞ்செங்கேழ்க் கனலெழச்சிவந்தகண்ணு
ரத்தியையடுக்கித்தட்டி யடையெனவீக்குந்தோளார்
கத்தியமுகிலைத்தண்ணீர்க் கருவியென்றெடுக்குங்கையார். ( )

செஞ்சுடர்க்கொழுந்தாங்குஞ்சி திருக்குடையெயிற்றின்மின்னன்
மஞ்செனக்கருத்தமெய்யர் வாள்பரிசெடுத்தகையார்
கொஞ்சமுமிரக்கமில்லார் கொடுமையிற்கொடுமைகொண்டார்
நஞ்செனத்திரண்டுவெம்போர் நாடியக்களத்தில்வந்தார். (281)

வாடினார்குரங்குவீரர் வார்கடல்கடந்துபோனு
ரோடினன்வாலிமைந்த னுபசரித்தழைத்துவந்தா
னடல்வெஞ்சிலையிராம னுசுகமழையாய்ப்பெய்து
மூடினன்பிதிராவண்ண மோகனத்திரத்தைத்தொட்டான். ()

அவரவர்கண்ணுக்கெல்லா மம்புயமலர்க்கண்ராம
னிவனவனென்னமோதி யிறந்தனரெம்மானெய்யு
நவமிகுங்கணையான்மூன்று நாளிலுமுடியாதன்னூர்க்
குவமையாரவர்கள்கையா லொழிந்தனர்முகூர்த்தந்தன்னில்.

வேறு

இந்தவித மூலபல முடிந்த போதே
யினியரக்கன் மறுநாளி லிறப்பா னென்னச்
சந்ததமு மகிழ்ந்துபல முனிவோ ரெல்லாந்
தவத்துறையு மகத்தழலுந் தவிரா தென்றூர்
பைந்தொடியோ டிந்திரனும் வானோர் சூழப்
பல்லியங்க ளிசைபரப்பப் பவனி வந்தான்
றந்தையரு ளாலவன்றே ரோட்டுஞ் சூதன்
றனை ராமன் சந்நிதிபோய்ச் சார்வா யென்றான். (284)

மன்னவனுஞ் சுக்ரீவ னிளையோன் சாம்பன்
வாயுசுத னங்கதனோ டவனும் வந்தா
னென்னவிதன் மரலாறென் றெவருங்கேட்க
வீரமில்லா திவர்களும்பா தலத்தோ ரென்றன்
முன்னவனுங் கும்பகன்னன் படையிவ் வூழி
முடிந்தாலு முடியாதார் முடிந்தா ரென்று
பன்னரிய படுகளத்தின் சீரை யெல்லாம்
பாருமென்றே வீடணனும் பகரு வானே. (285)

வேறு.

தேர்பெறும்பிணத்தில்யானைச் சென்னியையேற்றிச் செத்த
பேர்பெறும்மீசைதன்னைப் பிடுங்கிப்புல்லுறு காய்ப்பெய்து
வார்பெறுங்குடலைத்தாம்பாய் வளைத்ததையிழுத்துத்தெங்கின்
கூர்பெறுங்கவந்தமோதுங் குட்டிப்பேயாடல்பாரீர். (286)

அங்கொருபுதுமைபாரு மறுபடுமிபத்தின்சென்னி
தங்கியகரிக்கிரண்டு தலையுமாய்த்தறித்தமுண்டந்
தொங்கியநரம்பும்விம்மித் துடித்ததன்றோளிற்றுவ
பங்குவாய்த்தலையில்லாத பாகனைப்போலுமையா. (287)

கயத்தணிமணியையெல்லாங் கைக்கிசைத்தாளமாக்கிப்
புயத்தவர்குடலைவெண்பூப் புனைபெறுந்தாமம்பூண்டு
சயத்தசரதியிராமா சயஞ்சயமென்றுகொட்டி
வியப்புறவலகையாடும் விந்தையைப்பாருமென்றான். (288)

பற்பலவினிதுபேசிப் படுகளமதனை நீங்கித்
தற்பரனுமிராமன் சந்நிதியிருந்தாரங்கே
யற்பராந்தூதரோடி யரக்கனைவணங்கியையா
முற்பலமானமூல பலமெலாமுடிந்ததென்றார். (289)

முக்கணன்வரமுநானே முற்றுமூவுலகுக்கெல்லா
மிக்கனுமிராமனென்றே விளங்குவதென்னலன்றித்
தக்கவர்பெரியோர்மற்றோர் சாற்றியபோதுமென்பே
ரொக்கவுமுரைப்பாரென்ன வுவகையோடெழுந்துபோனான்.

புனிதரோடிச்செய்ய பூந்துகிலுடுத்திப்பூதி
வினையுடன்மறையச்சாத்தி வேண்டியகடுக்கைபூண்டு
பனிமதிச்சடையான்செம்பொற் பதமலரர்ச்சித்தேத்தி
யெனையினியாள்வாயென்ன வெழுந்தவன்கோயில்புக்கான். (291)

தருசுவையோடுமுண்டி தமர்களோடருந்திப்பன்னீர்
பரிமளந்திமிர்ந்துசெம்பொற் பணியரைதிருந்துபாகு
கருகியவுடலமூடுங் கவசமும்வளையும்பூட்டிப்
பரிதியீரைந்தாமென்னப் பதிமணிமகுடம்வைத்தான். (292)

இடைக்கசைவரைந்துமேதைக் கிடுதுளையிருக்கிக்கைவாள்
புடைக்கிசைசொருகிப்போதூர் நாந்தகம்புரத்திற்றாங்க
வடிக்கணையடைத்ததூணி வாட்படைமோதும்வண்ணம்
பிடித்திடும்பரிசுமல்லர் பிணித்தனர்பெரியதோண்மேல். (293)

சத்தமாதொழித்தொருத்தி தவிழ்புயம்பொலியத்தும்பைக்
கொத்தையும்புட்டிற்கூடுங் கோதையும்விரலிற்கோர்த்து
தத்தியகபந்தவீரத் தண்டையுந்தாளிற்பூட்டி
முத்தனைத்தொழுதோன்றன்னை முனிந்தவன்போலும்வந்தான்

வெஞ்சமர்க்கெழுந்தானென்னத் தூதுவர்விரைவிஞேடி
யஞ்சிஞரொளித்தார்நோய ரபரரைத்திரட்டியையா
துஞ்சிஞரொழிந்தவெள்ள மிருநூறுதொகையாச்சென்ருர்
நெஞ்சினுள்ளடங்காஞகிச் சிரித்தனனிருதர்கோமான். (295)

பத்தியாயிரண்டைந்நூறு பரிபூனபவளத்தேரைச்
சுத்திசெய்தூபமாதி சோடசந்துலக்கச்சுற்றி
மூத்தியாத்திரைக்குவேண்டு மூவகைத்தானஞ்செய்து
மத்தனைப்புகழ்ந்துதேர்மேல் வைகிஞன்மறலியோடும். (296)

மனைவியரழுதுபின்னே வழிவிடக்கழுகுமுன்னே
யினமொடுநரியுநாயு மிருபுறமிறங்கிச்செல்லக்
கனமதுகுருதியோடுங் கன்மழைபொழியக்கால
னனையதுச்சகுனத்தோடு மமர்க்களத்தரக்கன்வந்தான். (297)

புடைத்தனர்பேரிமேளம் பூதலமதிரக்காலக்
கடைக்கடன்முழக்கமன்னக் களத்திடைமுழங்கவேலை
யடைத்தவானரங்களார்த்தா ரமரர்கோனனுப்பவந்த
படைக்கலனிரத்தத்தோடும் பாகனையிராமன்கண்டான். (298)

கோதையும்புட்டிற்கூடுங் கோர்த்தனன்விரல்கடோறும்
போதுறைமடந்தைவைகு மார்பினிற்கவசமபூட்டித்
தாதகுதும்பைமாலைத் தனிப் புயத்திலங்கச்சாத்திப்
பூதலமளந்தகாலிற் பூட்டிஞன்வீரகண்டை. (299)

வற்கலையுடைவிசித்து வைரவாளணிந்துவானோர்
பொற்கலைநிகர்த்ததோளி லப்பருத் தூணிபூட்டி
விற்கலையுரைத்தவண்ணம் வெம்படைகருச்சத்தண்ட
முற்கலையுகாந்தகால வுருத்திரனுருவங்கொண்டான் (300)

இந்திரனிரதந்தன்னை யிதயங்கொண்டருச்சிததேத்திச்
சுந்தரப்பாதம்வைததான் றுதித்தனாதொழுதுவிணவோர்
துந்துபிமுழக்கஞ்செய்யத் துறவர்களாசிகூற
வந்தனன்களத்துலேழு வையமுண்டுமிழ்ந்தவாயான். (301)

வேறு.

மதித்த வானகந் தழுவிய விரதமோ டிரத
மெதிர்த்த காலையின் மந்தர மிமயமென் றிலங்கக்
கொதித்த சிந்தைம கோதரன் கொடுஞ்சிலை குனித்துப்
பதித்த வம்பொடு மரக்கனைப் பணிந்திவை பகர்வன் (302)

உனக்கு முன்னெழி யாதுயிர் பிழைக்குலுன் கூத்தி
தனக்கு மைந்தனென் றழையென வுரைப்பவர் தரமபோ
லெனக்கு முன்னுனை மானிடர் கணைக்கிடா தென்போர்
முனைப்ப யன்றனை யறிந்தபின் றுடுகென மூண்டான். (303)

மடித்த வாயொடு மரக்கனு நெடுஞ்சிலை வளைத்து
விடுத்த சாயகம் பெருமழை யாமென விளைத்தான்
றடுத்த வானரர் கல்லொடு மரங்களுந் தாக்கி
யுடைத்த னர்பரித் தேரொடு பாகனு மொழிந்தான். (304)

அன்ன வன்மறு தேர்மிசை மேவியார்ப் பரித்துத்
துன்னும் வானரப் படைகளை நிலைகெடத் துணித்தான்
கன்னல் வெஞ்சிலை யான்றிருத் தாதையின் கணையான்
முன்னம் வேந்தனுக் கிடமமைப் பரனென முடிந்தான். (0)

வேறு.

ஒதருமதித்தலை மகோதரனெழிந்த
போதெனதிலங்கைநக ராள்வதுபொருந்தேன்
கூதலுடன்முற்றுறக் குளித்தவருக்குண்டோ
பாதகர்கொலைப்படரும் பார்ப்பதிலையென்றான். (.06)

மத்தனிவைகேட்ட லு மகிழ்ந்து ரிவாகை
கைத்தலமெடுத்துடைகனைத்தொலிகவிப்பச்
சத்தாவசத்தியுள தாமெனத்தனித்தே
ரத்தனிரதத்தைவல மாக்கியதுகண்டான். (307)

உச்சிரவமச்சமுற வூருபரித்தேரை
யெச்சமறவசுவகதி மந்திரமியற்றி
யச்சுதன்மகிழ்ந்தருள மாதலியுமாங்கே
துச்சனிரதத்தையிடஞ் சூழ்தரவிடுத்தான். (308)

விண்ணுயரமேலுயரும் வேலனையகண்ணுர்
வண்ணமணியப்மனை வழங்குவதைமானு
மண்ணிடுெடுவெண்டிசை மதிக்குமொருமத்தாய்க்
கண்ணெளிமழுங்கசுழற் காலடியுமொக்கும். (309)

கஞ்சமுகக்கண்ணனொரு கார்முகம்வளைத்தே
செஞ்சலில்வடிக்கணை யெறிந்திடவரக்கர்
துஞ்சினதுகண்டவன் றெடுத்தகணைமூட
வஞ்சினகவிப்படைக ளாழ்கடற்கடந்தார். (310)

மாருதிசினங்தொரு மரத்தடியெடுத்துத்
தேரிநெடுபாய்பரிபன் னூற்றையுஞ்சிதைத்தா
னூருமறுதேரிலவ னேறியொருகோடி
மாரியொடுகால்படரும் வண்ணமாய்விடுத்தான். (311)

வல்லரியையொத்ததிறன் மாருதியினங்கஞ்
சல்லரியையொத்துட றவிப்புறுதலானுன்
ல்லரிகுலத்திறைவ னங்கதன்பகைத்துப்
புல்லறிவரக்கனொடு போர்பொருதுமெல்லை. (312)

முண்டகவரக்கன்சிலை மூன்றினுடனேழுங்
குண்டலமெனத்தலைகுவிந்திடவளைத்துக்
கொண்டலொருகோடியொரு காலையிற்குவிந்து
மண்டுபெருமாரியென வார்கணை பொழிந்தான். (313)

அட்டதிசைநாகரு மதிர்ந்திடவரக்கன்
விட்ட கணையாலிவர் மெலிந்தனர்களென்றே
துட்டனிவனென்றவன் றுணுக்கிடவிலங்கை
சுட்டவன்புயத்திளைய துங்கனுமெதிர்த்தான். (314

மந்திரமொழிந்துதிரு வன்னிமுகவாளி
சிந்தினனரக்கனது தீப்பொறிதெரிப்ப
வந்திதையறிந்திளைய வள்ளன்மழைவாளி
யுந்தினனெருங்குபொழி யூழிமழையொப்ப. (315)

மன்னுமிளையோனரை மதிக்கணைவிடுத்தே
யுன்னியொடுவையமொரு நூற்றையுமொழித்தா
னன்னவன்வெகுண்டுதொடை மீதினிலறைந்து
சின்னவனெனப்பொருத நீங்கெனநகைத்தான். (316)

ஆயிரர்பகிர்பிரிவ தாயிரமரக்கன்
றீயினுங்கொடுங்கணை தெரித்தனனிமைப்பி
னுயகன்றனக்கிளைய நம்பியொருகோடி
சாயகம்விடுத்தவை தடுத்ததவன்கண்டான். (317)

வேறு.

வண்டனுமிவனுமற்றோர் வகையினுன்மாளானென்னச்
சண்டனையுதைத்தோன் சூலந் தனையெடுத்தருச்சித்தேத்திக்
கண்டனனிளையானேடுங் கான்மகனசலப்போனுன்
கொண்டலைநிகர்த்தமேனிக் கொற்றவனதற்குநேர்ந்தான். ()

சண்டமாருதமாமென்னச் சரமழைபொழிந்தானீல
கண்டனூர்படையையேந்திக் கடிதிராவணனும்விட்டா
னண்டமும்வெடிப்பச்சீறி யனலெனவரும்போதால
முண்டவள்ப்ரணவநாம முச்சரித்தவனுய்நின்றான். (319)

வந்ததோர்சூலமன்னை மலரடி வணங்கியேத்தி
யந்தரம்பொலியப்போன தறிந்தனனரக்கருங்குந்
தந்தையுமரனுமாலு மின்னனச்சாற்றுந்தம்பி
புந்தியைப்புகழ்ந்தானை பன் பொன்னடிக்கன்புபூண்டான். (320)

தாங்கியசிலையிலையன் மதிக்கணைவிடுத்துத்தாலந்
தூங்கியக்குலேக்காயென்னத் துணித்திடக்கிளைத்தவெல்லா
மாங்குகத்தரிக்கச்சென்னி யமர்க்களமிலங்கையாழிப்
பாங்கெலாங்கிடந்திராமன் பதத்தினுக்கபயங்கூறும். (321)

கண்டனன்சுவர்க்கவாசக் காவலனுகுஞானங்
கொண்டனனரக்கனிங்கே குரைகடலமுதகும்ப
முண்டனனுடைந்தாலன்றி யொழிந்திடானென்னுமுண்மை
விண்டனன்றாமனேடு வீடணனென்னும்வேந்தன். (322)

முன்னவனுரைத்தவண்ண முடித்திடுங்கருணைமூர்த்தி
ன்னிகரில்லாப்பிர்ம சாயகம்விடுத்தான்யாரு
முன்னருமாராபிற்ருக்க வுடைந்தசகலசமன்று
னன்னகரிலங்கைநீக்கி வைகுந்தநாடுபுக்கான். (323)

வரிசிலைநிமிர்த்துக்கோதை வாட்படைக்கூடுநீக்கித்
திருமகனிருந்தான்றிட்டி சீலை கற்பூர தீபம்
வருகவிக்கரசன்காட்டி மலரடிபணங்கினானோர்
மருமலர்பொழிந்தார்சங்க மாதமிழ்முழக்கஞ்செய்தான். (324)

அண்டரும்புகழ்ந்தாராசி யருந்தவர்மொழிந்தாரன்போ
டெண்டிசைத்தலைவரெல்லா மேத்திநரீரொன்பாறு
மண்டுதோற்கருவியெல்லா மறந்திடுமகிழ்ச்சிதன்னை
முண்டகக்கரத்தாளோடுந் திருச்சடைமொழிந்தாளன்றே. (325)

மன்னிலங்கைக்கோமான் மடிந்தானெனத்தூதர்
சொன்னவுடன்பார்கிழியத் தோகைமயில்போல்விழுந்தா
ளென்னசெய்வேனென்றலறி யேங்கினளைத்தமைந்து
கன்னியரில்வண்டோ தரிபெண்ணுங்கற்புடையாள். (326)

ஓடினடோகைவிரித் தோடுமயிலோதிமம்போற்
றேடினுடன்கணவன் செத்தவுடன்மேல்விழுந்து
வாடினள்கையு மலர்முகமுங்கொப்பளிப்பச்
சாபுரளோகோகோ தார்வேந்தே யென்றழுதாள். (327)

கோத்கிரத்தாலேற்றகுடி கூத்தியராற்றழுந்தகுடி
மாத்திரையாளென்றேது மைத்துனரைப்போக்கடித்தாய்
பார்த்திபனேயென்னையுமப் பாவிபோலாககரு
நாத்திவினைக்காளாய் நடுக்களத்திற்றூங்கினையோ. (328)

பிள்ளையையும்பேரனையு மற்றுமுள்ளபேர்களையுங்
கொள்ளைகொண்டகூற்றனுனைக் கூப்பிட்டாற்கொற்றவனே
விள்ளுவதென்பேதையொடு மீண்டுவரேனென்றுரைத்து
தள்ளியெனை முன்னே தனிப்போகநீதியுண்டோ. (329)

செத்துநீர்போனவிடஞ் செய்யுமொருயாகாதி
நித்தியமாங்கிருத்தியங்க ணித்தனடப்பூசனைக்குஞ்
சுத்தமாய்ப்பத்தியுமாய்த் துறையறிந்துசெய்வதற்குப்
பத்தினியான்வேண்டாவோ பார்த்திபனேயென்றழுதாள்.

கூப்பிட்டாற்கேளாதோ கூற்றனுலகாதாளி
பாப்பிட்டசொல்லித்தன்மேற் பாசமறந்தனையோ
காப்பிட்டநாண்முதலாய்க் கண்டறியாக்கண்கலக்கத்
தாப்பிட்டேன்றென்னிலங்கைக் காதிபனேயென்றழுதாள்.

சோாடிமுந்தமான்போலத் துஞ்சினான்றன்னருகிற்
கூடியதோர்பேயிரியக் கூவினாள்பூங்கொடியா
டேடரியதன்மதினி செய்யகுரற்கேட்டுமுகம்
வாடினன்கண்ணீர் மாரியெனப்பெய்யலுற்றான். (332)

சாங்கொண்டதிவ்விசனத் தாழ்வானைத்தாசரதி
பாங்குவாவென்றிருத்திப் பலவாயுபசரித்து
நீங்சரியாச்சோதரனு னேர்ந்ததுதானென்றாலு
மாங்கவர்தன்றாழ்வினையை யார்தடுப்பாராதிபனே. (333)

மாண்டார்க்குப்பின்னிருந்தோர் மறுமைக்குதவி செய்ய
வேண்டுவாரெண்ணீர் விடுவதென்பார்மேலோர்க
வேண்டமுதகண்ணீரா லென்னமெரிக்கடனை
யீண்டுசெய்துவாவென் றியம்பினனெம்பெருமான் (334)

தாசரதிகூறுதலுஞ் சாபனங்கதனுடனே
ப றையைநீங்கிப் படுகளத்துக்கோடிவந்தான்
மீசுரரு வேதாவு மெச்சுமுனைதாண்மையும்பெண்
ணைையினுற்போச்சோ வண்ணாவேயென்றழுதான். (335)

இந்த்ரசித்தேநீயிறைக்கு மேற்றமுள்ளவெண்ணிலை
மந்திரத்தான்யான்புரிய வைத்தபோமான்மகனே
யந்தரமாயென்னைவிட்டே யண்ணனுடனீசேர்ந்த
தந்திரமோவையா தராட்டியேயென்றழுதான். (336)

வேறு.

தரிக்கரிய பெருந்துயரத் துழன்று சிந்தை
தயங்கியதோர் வீடணனைத் தழுவிச் சாம்பன்
றிருக்கரத்தா லெடுத்தணைத்துக் கண்ணீர் மாற்றித்
தேற்றினன் றெளிந்தவனுஞ் செய்ய வேண்டு

முருக்கமுள்ள வபரவிதி முடித்தா னவ்வூ
ருளவரக்கர் புடைசூழ வுற்றான் ராமன்
மருக்கமலத் தாள்பணிந்தான் சனகி தன்னை
வரவழைக்கு முத்தரவின் றருள்வா யென்றான். (337)

மாதவனும் ராமச்சந்த்ர னனுமான் றன்னை
மனக்கண்ணா னோக்குதலு மனம்போற் றாவி
பாதகரா மரக்கியர்கண் டந்நாள் வந்த
பழிகாரக் குரங்கிதென் றேப தறியோட

சீதைதி நச் சந்நிதிபோய் ராம கார்யஞ்
செயமென்றான் செந்திருவே யெழுவா யென்றான்
மாதுதிருச் சடைபிறகாய் முன்னே வாயு
மைந்தனுமாய வரநடுவே வனிதை வந்தாள். (338)

வந்ததொரு சானகியைக் கண்டான் செல்வி
மாதவத்தோர் சிறைப்படுவார்க் கிலையென் றையச்
சிந்தைதனை முகக்குறிப்பா லவனு நோக்கிச்
செந்தழலை யிளையவனாற் சேர்க்கச் செய்தா

ளந்தரத்துத் தேவர்முனி வோர்கள் காண
வதிற்குதித்தா ளக்கினியு மன்போடந்தச்
செந்திருவாஞ் சானகியைக் கமலத் தேந்திச்
செங்கணமா லிராமனுடன் சேர்த்துச் சொல்வான்.

வேறு

செய்யபத்தரை மாற்றுள்ளசெம்பொன்னை
யையவெம்புடத் தாரிடுவார்கொலோ
துய்யவாயிரத் தெட்டுளதாமிதற்
கையமென்ன வழுக்கென்னவாண்டவா. (340)

எப்பூமாதரு மேத்திடுந்தெய்வமா
மொப்பில்லாதவ ளோர்சற்றுயிர்ப்பிறு
லப்புவைச்சுடு மானதென்னங்கமும்
வெப்பமுற்றது வேந்தேயென்றேதினுன். (341)

இந்தவாறெரித் தேவனியம்பலும்
வந்தமாதவ ராசிவழங்கினூர்
கந்தமாமலர்க் கற்பகநாட்டருஞ்
சிந்தினூர்மறை யோனிவைசெப்புவான். (342)

வேறு.

பணமா யிரநா கணைபாற் கடலு
மிணையா னதிலா தவைகுந் தமெனக்
கணமா தவர்வா னவர்கா ரியமாய்
வணமா தொடயோத் தியில்வந்தவனே. (343)

தூயா மலர்க்கண் டுணைசே ரளவும்
வியா தநுவே முலகும் வியமா
மீயா னநிசா சரீ டெனவோ
மாயா வடிவா யினைமா தவனே.

பொன்னூர் கமலத் துறைபூங் கொடியென்
றுன்னு துளரு முளரென் றுளமோ
வன்னூர் கவலைத் தடமீட் டவரை
யென்னுந் துயரத் தெரியாழ்த் துவதே. (345)

தனியர் முலக முழலத் தகுநீ
நனிமா யையினு னலியத் தகுமோ
வினிமா தவமு மறமு மிலையாற்
கனிவாய்ச் சனகி கமலா பதியே. (346)

உலநா னவனு முலகத் தருவின்
பலவா முயிரும் பரிவும் பகையா
நிலையா கியதத் துவநீ யலவோ
சிலைவா னுதற்செந் திருநாயகனே. (743)

வேறு.

அந்தணன்புகழ்ந்துபோனு னயிடைத்தசரதேந்த்ரன்
வந்தனன்வணங்கிநின்ற மைந்தரைத்தழுவிவாழ்த்தி
யெந்தனுர்குலமோடுன்னை யீன்றவன்குலமீடேற்றுஞ்
செந்திருவனையாயென்று சீதையைப்புகழ்ந்துசொன்னுன் (348)

மனுகுலக்கொழுந்தேயையா மாநகரடைந்துவாகு
புனைமணிமௌலிசூடிப் பொன்னகராள்வாயென்னக்
கனிவுறவாழ்த்திவேந்தன் கைவல்யமடைந்தானிங்கே
கனைகழற்குமரன்சேனை கணக்கிடுமென்னச்சொன்னுன் (349)

வானரத்தலைவனுன வசந்தனைக்கும்பகன்ன
னுனறப்பிழிந்தசோரித் திலகமாயொழிந்தானென்ன
மானவனனுமான்றுவி மறையவனுலகத்தெய்திப்
போனவன்றன்னைமீட்டான் புகழ்ந்தனன்பூமிநாதன். (350)

புங்கவனிளையோன்றன்னைப் புகழ்ந்துவீடணனுக்கிப்போ
துங்கமாமகுடஞ்சூட்டித் தொன்னகர்வலஞ்செய்தன்னுன்
சிங்கவாதனத்திலேறச் செய்துவாவென்றுனப்போ
பொங்கியவுவகையோடும பொன்னகரிலங்கைபுக்கார். (351)

வேதியர்முனிவோர்வேத விதிப்படிமுடித்தார்கும்பஞ்
சாதகமறையோரன்னுன் றலைமிசைச்சொரிந்தார்தம்பி
தாதுகுதொடையல்பூட்டித் தனிமுடிபதித்தான்பேரி
மோதினுரிலங்கைவானேர் பதியெனமுழங்கிற்றம்மா. (352)

உயுத்தகாண்டம்முற்றிற்று.

ஆக விருத்தம்954.

மீட்சிகாண்டம்

பொன்னகரிலங்கைவேந்தன் புனிதமாமுனிவர்விண்ணோர்
மன்னன் சுக்ரீவனாதி வானரத்தலைவர்சூழ
மின்னிடைச்சனகிதம்பி யிருபுறமேவராமன்
மன்னுவிமானமீது வடதிசைநோக்கிவந்தான். (1)

மன்னகசயனத்தண்ணல் பங்கயத்தணங்கைநோக்கி
மன்னுசீரலைவாய்ச்செவ்வேள் வாள்பதிமலைவில்லானு
மின்னிடையுமையாடன்னை வேட்டதிவ்விடத்தினுமங
கன்னியாகுமரியென்றே காட்டினன்கமலக்கையால். (2)

மாகடல்கடக்கும்வண்ணம் வழிதரத்தருப்பைமீது
யோகமாயேழுநாளிங் குறைந்தனனுவரிவேந்த
னாகழுங்கருகச்செந்தீ யனற்கணைவிடுத்தேனந்தச்
சாகரவேந்தனென்னைச் சரண்பெறுந்தலமீதென்றான். (3)

தத்தியவலையிற்சங்கத் தரளமுமணியுந்தாவும்
ரத்னாகரமுமேலா மகோததியிரண்டுங்கூடு
மித்தனுக்கோடிகண்டா ரெண்ணிலாப்பாவநோயும்
பித்தமுமலடுநீங்கிப் பெரும்புகழ்ச்செல்வராவார். (4)

என்னுடைமுதியதாதைக் கீசனாரளித்தங்கை
தன்னிடைமூழ்கியிருந்தச் சாகரந்தன்னைக்கண்டாற்
கன்னியைவதைத்தலாதி கருமமாம்பாதகங்கள்
வன்னிவாய்ப்பருத்திபோலா மிதன்வரம்வடிவேற்கண்ணாய்.

இதுவைரவன்றன் றீர்த்த மிதுவெரிக்கடவுளர்த்த
முதுமறைக்கிழவன்யாக முடித்ததித்தலமாமென்று
லெதுவிதற்கிணையேயாகு மிங்குள்ளகூபந்தன்னைச்
சதுர்மறைபுகழுமல்லான் மற்றெவர்சாற்றவல்லார். (6)

கோடியாந்தீர்த்தமெல்லாங் கூடினகோடிதீர்த்த
மாடினூர்தமக்குப்பின்னே யயன்படைப்பில்லையென்று
லீடிலாச்சர்வதீர்த்த மென்பதிப்பெருமைகூற
கோடிநாளாகுமென்றன் கொற்றவர்புகழுங்கோமான். (7)

வேறு.

ஓதரிய சேதுவின்மா காத்மந் தன்னை
யொப்பில்லாச் சானகியோ டுரைத்தான் பின்னே
மாதவனும் வசிட்டமுனி யவனை நோக்கி
வாமனு மனுகுலத்தோர் மகிபா லங்கைப்
பாதகனு மரக்கனெனும் பிரம பீசப்
பழிகழிக்க விலிங்கமிங்கே ப்ரதிட்டை செய்தாற்
பூதலத்தோர் தொழுவாருற் பவத்தை நீக்கிப்
புண்ணியர்ா யுலகடைவார் புநிதா வென்றன். (8)

குலகுருவாம் வசிட்டமுனி கூறக் கேட்டான்
குரவனிரு தாள்பணிந்தென் குலத்தோர்க்கெல்லா
நலமுதவு மனுமுகிலே நன்று மென்ன
நனிதளத்தோ டிறங்கியனு மானை நோக்கி
யிலகுமிரு மதையிலிங்கங் கொடுவா வென்ன
வேகினனிங்கிமைப்பி லிமையோர் தச்சன்
கலைமுறையே திருநகரோ டால யத்தைக்
கற்பித்தான் கண்டுமுனி கழற லுற்றன். (9)

பூதலத்திற் சோதியுரு வாமி லிங்கம்
புவியுதக மனலனிலம் புகழ்சேர் வான
மீதலது சுயம்புபிர திட்டை யென்று
மிமையவர்கண் மக்களிராக் கதரா லேத்து
மாதலம்பின் னூதனமென் றுரைப்பா ரென்றன்
மறைமுதலி யருணேக்க மல்லா தில்லை
யாதலினு லதன்பூசை பரார்த்த மாகு
மான்மார்த்த பூஜைவிதி யறைவே னென்றன். (10)

ஓதரிய தவம்வேள்வி யுதக மாட
லொண்டொடியார் முதலாய வுதவுந் தானத்
தீததிக மல்லாது மேறு னிந்நா
ளியற்றுபழி பாதகங்க டீரச் செய்யு
மாதலிற்றெ சிவபூசை யெவற்று மேலா
மகத்துணையும் பரத்துணையு மதுவே யாகுஞ்
சோதியுரு வாகியதோ ரிலிங்க பேதஞ்
சொல்லுவே னதன்பலனுந் துலங்க வென்றான். (11)

நவமணியுஞ் சிலைநான்கு முலோகத் தெட்டு
நாலைந்தாந் தாருவினி னம்பன் ரூப
மவனிபுகழ் மிருத்துகையி ரண்டாமையா
வதுவன்றி யறன்முதலாய்ப் பதின்மூன் றான
சிவவுருவ விலிங்கமதைக் கணமென் றோதுந்
திரமாகும் பாணலிங்க மெதினு மேலா
முவமையில்லாச் சூதலிங்க மதினு மேலா
முத்தமனே யிதன்பெருமை யுரைப்பே னென்றான். (12)

சோதியுரு வாகியதோ ரக்கந் தன்னிற்
சொல்லரிய பூசையினு லெல்லாஞ் சித்தி
பூதியினு லிகவாழ்க்கை யாவுஞ் சேரும்
பூவுறுதி யன்னத்தாற் பூமி கூடு
மோதரிய கோமயநோய் பகைதண் டூல
மொழித்துவிடு மாயுளினை யுதவுஞ் சந்த
மேதினியோர் புகழ்வாழ்க்கை கூர்ச்ச பூசை
மெலிந்தவுடற் பூரித்து விளங்கு மாவே (13)

தவமுதவும் வீடுதவு மணலின் பூசை
தனியுடலிற் கெடுதியெல்லாந் தவிர்க்கும் வெல்லம்
நவநீத மகிழ்ச்சிதருந் தான்ய லாப
நதிக்கரைமண் டாருநவ மணிபொன் னுதி
சிவவுருவாஞ் சிலையிலிங்க பூசைக் கென்றுஞ்
செப்பரிய முவுருவாம் பாண லிங்க
மவனிதனிற் பூசிப்போ ரடையும் பேறை
யனந்தனு லறைவதற்கு மடங்கா தென்றான். (14)

வேறு.

சம்புமாகாத்மந்தன்னைச் சாற்றினன்முனிவோரெல்லாந்து
கும்பமுந்திருத்தியாகக் குண்டவேதிகையும்வைத்துச்
செம்பொன்பாலிகைக்குவேண்டுந் திரவியஞ்சமுத்துஞ்சேர்த்து
நம்பனைப்ரதிட்டைசெய்யு நாழிகைநேர்ந்ததென்றா. (15)

மாருதிவரவுதாழ வரமுனிவசிட்டன்சொல்லாற்
றாரணிபுகழிராமன் சைகவிலிங்கந்தன்னைப்
பூரணப்ர திட்டைசெய்து புனிதநீர்சொரிந்தானப்போ
வாரஞ்சியின்மாலிங்கம் வைத்தவன்வணங்கிநின்றான் (16)

மன்னவனவனைநோக்கி மனமகிழ்ந்துவந்துவாழத்தி
முன்னதாயுனதிலிங்கப் பூசனைமுடிப்பாரென்ன
வன்னதைப்ர திட்டைசெய்தானகத்தியனனுமலிங்க
மென்னவும்ராமலிங்க மென்னவுமியம்பலுற்றான், (17)

ஆனதோர்தைலமாதி யாங்கதிற்சொரிந்தானப்போ
வானவருவந்துதந்த வரநதிப்பெருநீராட்டி
நானமுஞ்சாந்துஞ்சாத்தி நறும்புகையாதியீரெட்
டானதின்பிறகுநீராஞ் சனமெடுத்துபசரித்தார். (18)

ஆடினாரிருந்தோரெல்லா மரகராவென்னவேதம்
பாடினார்முனிவோரெல்லாம் பழமுனியாசிகூற
நாடியவானோரெல்லா நறுமலரெடுத்துத்தூவத்
தேடருங்கைலைநாதன் பதியெனச்சிறந்ததம்மா. (19)

சீர்பெறும்பதியிலாதி சேதுராமேசமூர்த்தி
பார்புகழிராமலிங்கம் பருவதவர்த்தனியாம்
பேர்பெறும்புவியிலுழி பெயரினும்பேராதென்னர்
வோர்குருமுனிவன்சொன்ன னத்துவென்றுரைத்தார்மற்றோ

அந்தமாநகரினண்மூன் றிருந்தபின்னவர்சளோடும்
வந்தனன்முனிவன்காட்டத் தேவிமாநகரம்வந்தான்
மந்தனேமுதலதாய நவக்ரகமனுவைத்தேத்திச்
சிந்துவினருகேதானஞ் செய்துதன்னகர்க்குச்சென்றான். (21)

மந்தரப்புயத்திராமன் வரும்வழிதன்னில்வைகு
மந்தணர்சிடர்க்கோது மாரணம்பழகுங்காலைச்
சந்தமுணர்ந்துதங்க டனிமொழிமறந்துதாவுஞ்
செந்துவர்ப்பதுவாய்க்கிள்ளை வனமெலாம்வேதஞ்செப்பும் (22)

அடும்பகைதணியாவேங்கை யாவொடும்பழகித்தாங்க
ளிடுஞ்சிறுகுருளையுன்னி யிரங்கிவந்திடக்கன்றேடிக்
கொடும்பசித்திறத்தான்மாறிக் குடித்திடக்கொடுக்கக்கண்டு
தடஞ்சிலையொடித்தான்கேட்கத் தவமுனிசாற்றலுற்றான் (23)

பகையொழிந்துயிர்கள்வாழும் பாண்டிநாட்டதன்கண்மேலோர்
புகழ்பெறுங்கூடலாதி புண்ணியத்தலமீரேழாஞ்
செகமகிழிளசையாதி திருப்பதிநவமாமின்னு
மகதலமுளதாமந்த மான்மியமுரைப்பேனென்றான். (24)

தத்துவமுணர்ந்தோன்றன்னைத் தசரதிதனையன்கேட்கப்
பைத்தலையரவந்தாங்கும் பார்வருமுன்னேபின்னே
வுத்தரகோசமங்கை யென்னவிவ்வுலகம்போற்று
மித்தலப்பெருமையென்று னிராகவனிறைஞ்சிச்சென்றான் (25)

இப்பதிகண்டதேவி யிருக்கையென்றுரைத்ததாலம்
முப்புரமெரித்தவீசன் சுயம்புவாய்முளைத்தமூர்த்தி
யொப்பறுமரசன்வேண்ட வும்பர்பொன்மாரிபெய்ய
செப்புபொன்மாரியீசன் சிலைநுதல்பெரியாளென்றான். (26)

வல்லவர்புகழ்பொன்மாத்தூர் வளருமைநூற்றியீசைன்
மெல்லிழைப்பிரகதாம்பாண் மேவியபதியாமிந்த
வெல்லைசூழ்புவிகளெல்லா மிரணியத்தொழிலாமென்றாற்
சொல்லுதற்கையமுண்டோ துறக்கநாடிதுவாமென்றே (27)

இந்திரன்பதியைமானு மிலுப்பையாந்தருவினீழற்
சுந்தரவல்லிநாதன் சுயம்பிரகாசமூர்த்தி
நந்தெயிறுளவாய்வெங்கண் ஞமலிநாயகனும்வைகு
மிந்தமாநகரங்காண்பா யென்றலுமிறைஞ்சிச்சென்றான். (28)

திதிசுதரமருக்காற்று ததிதிசேய்தெளிந்து கூடி
கதிமுதற்சுந்தரேசக் கடவுளேகாவாயென்ன
மதிநுதலங்கயற்கண் மடந்தையாலருளப்பெற்ற
பதியிதைத்தேவிகோட்டையென்பதுபரமாவென்றான். (29)

காரைமாநகரமென்னுங் கனகமாநகரந்தன்னை
யாரியன்வியந்துகூறி யமலைகொப்புடையாளன்பர்
தாரணிபுகழ்வாணீபத் தனஞ்சயன்றனக்காவீசன்
வாரணியுமைமீனாட்சி சுந்தரன்வடிவாய்வந்தான். (30)

நீதிசேர்வணிகமாக்க ணிறைந்திடுமவையிலையன்
மாதுலனாகிவந்து மருமகனணிந்தபொற்பூண்
மேதகுகாரைநேருங் குடிவளம்விளம்பியென்று
ஞதலாலிவ்வூர்நாம மஃதெனவிளங்கிற்றன்றே. (31)

வேறு.

களப மாதரின் றுணைமுலை பருகிடக் கலிங்க
மிளகி டாதிரு மாந்தவ ரிணையடி யிறைஞ்சி
யுளம கிழ்ந்தகங் குழைதர நெகிழ்தலு முவகைக்
